### தமிழகத்தில்

# விஜயநகர ஆட்சி

## கி.பி. 1336 - 1530



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 499

# தமிழகத்தில்
# விஜயநகர ஆட்சி
## (கி.பி. 1336 - 1530)

முனைவர் அ. சிங்காரவேல்,
இணைப்பேராசிரியர் வரலாற்றுத்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி-24.

COMPLIMENTARY COPY

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
**சரசுவதி மகால் நூலகம்**
தஞ்சாவூர் - 613 009.

2007 விலை ரூ.70/-

# நூல்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | தமிழகத்தில் விஜய நகர ஆட்சி |
| பதிப்பாசிரியர் | : | முனைவர் அ. சிங்காரவேல் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால நூலகம், தஞ்சாவூர் |
| வெளியீட்டு எண் | : | 499 |
| மொழி | : | தமிழ் |
| பதிபபு | : | முதல் பதிப்பு |
| வெளியீடு | : | 2007 |
| தாள் | : | டி.என்.பி.எல். 17.8 கி |
| நூல அளவு | | 24 x 14 செ.மீ |
| பக்கங்கள் | : | 180 + viii |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | . | சரசுவதி மகால் நூலக ஒளியச்சகம் |
| புத்தகக் கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | தமிழக வரலாறு |
| பகுப்பு | : | V4418 P7 |
| விலை | : | ரூ.70-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வத்தை அள்ளித்தந்து கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிகளின் கருவூலமாகவும், பன்மொழி நூற்களைத் தன்னகத்தேக் கொண்டு பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளபபரியது.

இநநூலகத்தின் முக்கிய நோக்கம் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம், சிற்பம் போன்ற அரிய சுவடிகளைப பதிப்பித்து அச்சு நூலாக்கி மக்கட்குப் பயன்படச் செயதலேயாகும்.

'தமிழகத்தில் விஜயநகர ஆட்சி' (கி.பி.1336-1530) எனும் இந்நூல் இந்நூலகத்தில் 1989-ல் திட்டப்பணியாக இப்பதிப்பாசிரியரான முனைவர் அ. சிங்காரவேலன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து ஆணைகளிடப்பட்டதாகும். பதிப்பாசிரியர் தன் பணியை முடித்தபின் 2001-ல் இந்நூலை ஆய்வு செயத வரலாற்றறிஞர் பேராசிரியர் திரு. எம். எஸ். கோவிநதசாமி அவர்கள் இந்நூலில் சில குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் களைந்தபின் வெளியிடலாம் எனத் தெரிவித்திருந்தார். பதிப்பாசிரியருக்கு இக்குறைகள் சுட்டிக்காட்டபபட்டன. அவர்கள் தற்போது குறைகள் நிறைவு செய்யபடடபின் நூலைத் தந்துள்ளார்கள். இருப்பினும் இந்நூல் தஞசாவூர் அரண்மனையிலுள்ள தொல்லியல் அலுவலருக்கு மீண்டும் சரிபார்த்தலுககாக அனுப்பப்படடது. அவர் இநநூலைப் பதிப்பிக்கலாம் எனப் பரிந்துரை செய்துள்ளார்கள்.

இந்நூல் இந்நூலகச் சான்றாவணங்களின் அடிப்படையிலும் பிற ஆவணங்களின் துணையோடும் எழுதப்பட்டுள்ளது. இந்நூலில் விஜயநகர மன்னாகளின் திறமை, வீரம், ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளாவில் சில பகுதிகளை தம் ஆதிக்கத்திற்கும், ஆளுமைக்கும் கொண்டு வந்த செயல்பாடுகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. மேலும், விஜய நகர ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகளின் ஏற்றமும் அவை நிருவாகத்திற்கு உறுதுணையாக நின்ற சிறபபும கூறபபட்டுள்ளது. இதே போன்று, சமூக சமய நிலையும சார்ந்த பொறையுடைமையும் தெரிவிக்கபபடடுள்ளது.

ஆசிரியர் அரிதின் முயன்று விஜய நகர ஆட்சியின் ஆரம்ப கால வரலாறு, அரசியல் மாற்றம், திருவுடை மன்னர்கள் நிருவாகம், சமூகம், சமயம், பொருளாதாரம, இலக்கியம் மறறும் கலைகள் போன்ற தலைப்புகளில் பல செய்திகளைத் தெரிவததுள்ளாாகள். கிருஷ்ண தேவராயா, தென்னகத்தில் பல கோயில்களுக்குச் சென்று வழிப்பட்ட செய்தியும், அளித்த கொடைகளும், மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயததிறகுப் பொன் அளிததது போன்ற சுவையான செய்திகளும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலில் வரும் செய்திகளுக்கு ஆதாரமாக இராபர்ட் சீவலின் 'மறந்துபோன பேரரசு' நூலும் பாதர் கீராஸ், சேலிடூர் ஆகியோர் விஜய நகர ஆட்சி குறித்து எழுதிய நூல்களும் பேராசிரியா வெங்கட்டரமனய்யா, கிருஷ்ணசாமி அய்யாஙகாா, நீலகண்ட சாஸ்திரி, டி.வி. மகாலிஙகம் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் தந்துள்ள செய்திகளிலிருந்தும் பல மேற்கோள்கள் சுட்டிக்காட்டப் பட்டிருககின்றன. பதிப்பாசிரியரின இவவரிய முயற்சிக்கு என் இனிய வாழ்த்துகள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) ஆகிய திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும, இந்நூல் கணினி அச்சில் வெளிவரப பணியாறறிய கணினிப் பிரிவினர் அனைவருக்கும் எனது பாராட்டுதலகளைத் தெரிவித்துக் கொளகிறேன்.

தஞ்சாவூர்,
6.6 .2007

**சா. விஜயராஜ் குமார்,** இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
மற்றும்
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.



45,

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | என்னுரை | .. | 1 |
| 2. | ஆரம்பகால வரலாறு | .. | 8 |
| 3. | அரசியல் | .. | 21 |
| 4. | கிருஷ்ணதேவராயர் | .. | 61 |
| 5. | நிர்வாகம் | .. | 77 |
| 6. | சமூகம் | .. | 98 |
| 7. | சமயம் | .. | 109 |
| 8. | பொருளாதாரம் | .. | 123 |
| 9. | இலக்கியம் | .. | 138 |
| 10. | கலைகள் | .. | 148 |
| 11. | முடிவுரை | .. | 165 |
| 12. | பிற்சேர்க்கை | .. | 171 |
| 13. | துணை நூற்பட்டியல் | .. | 173 |
| 14. | பொருட் குறிப்பகராதி | .. | 178 |

# என்னுரை

தமிழகததில விஜயநகர ஆடசி (கி.பி. 1336 – 1530 வரை) என்ற இநநூல், தஞ்சையை ஆட்சி செயத மராட்டிய மன்னன பெயரில பழமபெரும வரலாற்று முக்கியததுவம பெற்றுத திகழும சரபோஜியின சரசுவதி மகால் நூலகத்தில் ஓராண்டு முழுநேர ஆய்வாளராக இருநது உருவாககிய ஆய்வு நூலாகும் என்பதைக கூறிககொளவதில பெருமகிழ்ச்சியடைகிறேன் இநநூல பெருமபாலும இந்நூலகததில கிடைதத சான்றுகளின் அடிப்படையில எழுதப்பபட்டுளளது எனபதும குறிப்பிடத்தககது.

இந்நூல ஏறததாழ இருநூறு ஆணடுககால வரலாற்றைத தாஙகியுளளது. குறிப்பாக விஜயநகரததோடு ஏற்பட்ட தமிழகத் தொடாபு ஆரமபகால முதல் படிபபடியாக எடுத்துரைககப்படடுளளது. தமிழகததில விஜயநகர ஆடசி அமைய வேணடிய காரணம், சூழ்நிலை போன்றவறறைபபறறியும், முகமதியாகளின் தொடர்புபற்றியும், குறிககப்படடுள்ளது. விஜயநகரததின தமிழக ஆட்சியாளாகளின், சமூக, சமயநிலைகள் பொருளாதாரம், இலககியம மற்றும கடடக்கலை பறறி பல்வேறு தலைப்புககளில ஆழமாகவும், சுருககமாகவும கூறபபடடுளளது மேலும இவவாடசியினால தமிழகததில் ஏற்படட மாறறம, எழுசசி, தாககம, விளைவுகள போனறவை விளககபபடடுளளன. இசசூழநிலை ஆட்சி மாறறததினால ஏறபடககூடிய விளைவுகளைபபற்றிக கூறுவதால் ஆட்சியாளாகளுககும, நிாவாகிகளுககும, வருஙகாலத தலைமுறையினருககும அரசியல மாறறம எனபது அடிப்படை மாற்றஙகளை சமூகததில ஏற்படுததும தனமையுடையது எனற அறிவின ஆழததை உணாததக கூடியதாகவும இநநூல் அமைநதுளளது. இநநூல் மேலும பல ஆயவுகளைத தொடாவதறகான வழி வகைகளையும தாஙகியுளளது. எனவே ஆயவாளாகள, ஆசிரியாகள போன்றோர் விரிவான ஆயவுகளை மேற்கொள்ள இது ஒரு படியாக அமையும எனபதில எனககுச சநதேகமிலலை.

இநத நூல இநதிய அரசின் பணபாட்டுத துறையின் நலகையுடன் வெளிவருவதால் அததுறையினருககு நனறி கூறுவதில மகிழகிறேன்

இனறு இநநூல ஒரு ஆயவுநூலாக சிறப்பாக வெளிவருவதறகு என்னை முழுநேர ஆயவாளராக அமாததிய அன்றைய சரசுவதி மகால் நூலக இயக்குநர் முனைவா. மு. சதாசிவம அவாகளுககும நனறி கூறிககொளகிறேன.

இநத ஆய்வுநூல் வெளிவருவதற்கு அனுமதி வழங்கி அணிந்துரை வழஙகிய இந்த ஆயவுமையத்தின் இயக்குநரும தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவருமான உயர்திரு. சா. விஜயராஜ்குமார், இ.ஆ.ப., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக கொளகிறேன்.

இநத ஆய்வேடு ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுககு முன்பாகச் செயயப்பட்ட போதும இந்நூலின் தேவையையும, ஆயவின் தரததையும உணாந்து இந்த ஆய்வேடு ஒரு சிறநத நூலாக வெளிவரவேணடும் என்று கருதி வெளியிட முன்வநத நிர்வாக அலுவலா உயாதிரு. சாமி. சிவஞானம அவர்களுககும எனது நன்றியைக் கூறிககொளவதில் மனமகிழ்வடைகிறேன்

இநதப பணியில எனககு உறற சகோதரனாக இருநது என்னுடைய ஆய்வுச் சுமைகளைப் பகிர்ந்துகொண்டு தனனுடைய மோடி ஆவணததுறையில் கிடைதத சில வரலாற்றுச் செய்திகளையும அளிதது, இந்நூலின் பிழை திருததத்திலும ஒததுழைப்பு நல்கிய எனது நண்பர்கள் முனைவா இராக. விவேகானநத கோபால் மறறும பேரா. எஸ். நந்தீஸவரன் அவர்களுக்கும எனது நன்றியைத தெரிவிததுக கொளகிறேன.

குறிப்பாக, இவ்வாய்வேட்டினை நுண்ணாயவு செய்த அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள வரலாறறுப் பேராசிரியா முனைவா எம்.எஸ். கோவிந்தசாமி அவாகள் அளிதத ஆலோசனைகளுக்கும, நூலின் பல பகுதிகளைத திருத்திட உதவியும், வெளியிடுவதற்கான நுண்ணாய்வு அறிக்கையும அளித்த முனைவர் தி. சுபபிரமணியன் அவர்களின் ஊக்கததிறகும எனது நனறியைத் தெரிவிததுக கொளகிறேன.

தஞ்சாவூர், **அ. சிங்காரவேல்.**



# Abbreviations

| | | |
|---|---|---|
| **ARE** | : | Annual Report on Indian Epigraphy |
| **A.S.R.** | : | Archaeological Survey Report |
| **C.P.** | : | Copper Plate Inscription |
| **E.I.** | : | Epigraphia Indica |
| **E.d.** | : | Edited |
| **E.I.C.** | . | Encyclopaedia of Indian Culture |
| **E.R.** | : | Epigraphical Annual Reports made by Govt of Madras |
| **G.T.** | . | Inscriptions of the Devasthanam Collection from Sri Govindarajaswami's Temple in Tirupati |
| **H.I.S.I.** | | Historical Inscriptions of South India. |
| **I.A.** | : | Indian Antiquary |
| **I.H.Q.** | . | Indian Historical Quarterly |
| **MER** | . | Madras Epigraphical Report |
| **OSIH** | : | Outlines of South Indian History |
| **S.I.I.** | | South Indian Inscriptions |
| **TDI** | : | Tirupati Devasthanam Inscriptions |
| **T.T.** | | Inscriptions of the Devasthanam collection from Sri Venkatesvara's Temple at Tirumalai |
| **Vol** | | Volume |

# முன்னுரை

தமிழக வரலாற்றில் இடைக்காலம் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. ஏனென்றால் தமிழகம் மிகப்பழமை வாய்ந்த மற்றும் பலம் வாய்ந்த ஆட்சியாளர்களான பல்லவர்கள், சோழர்கள், சேரர்கள், பாண்டியர்கள் போன்றோர்களால் ஆளப்பட்டுள்ளது. இவர்களுடைய பலதுறைச் சாதனைகளை விவரிக்க வரலாற்றாயவாளாகளுக்கு வார்த்தைகள் இலலையெனக் கூறலாம். இந்து சமயத்தையும், தர்மத்தையும், சமூகத்தையும், பண்பாட்டையும் இசுலாமியரிடமிருந்து காத்த இவர்களது உழைப்பு வரலாற்றில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளது. குறிப்பாக சமய இயக்கம் ஒரு மாபெரும் இயக்கமாகத் திகழ்ந்தகாலம். இவாகளைத் தொடர்ந்து இந்திய வரலாற்றில் கி பி. 14ஆம் நூற்றாண்டின் மத்திய காலததில் இந்துமத தர்மத்தையும், நிறுவணங்களையும் போற்றிப் பாதுகாக்க தெனனிந்தியாவில் விஜயநகர ஆட்சி ஏற்படுததப்பட்டது. இந்தியாவை இரணடாகப் பிரிக்கும் துங்க பததிரை நதியின் தென்கரையில் விஜயநகரம் என்ற பேரூரை தலைநகராகக் கொணடு சங்கமா எனபவரின் ஐந்து புதல்வர்களால் கி.பி. 1336 இல் இவ்வாடசி நிறுவப்படடது. எனினும் அரிகரன், புக்கன் எனற மூதத புதல்வர்களே இப்பணியில் பெரும் பங்காற்றினா. ஆட்சியின் ஆரம்பகாலக் கடடங்களில் படடமேறிய முதலாம் அரிகரனுக்கு நாலா பக்கங்களிலும் அயலாரின் அச்சுறுத்தலகளும், தொல்லைகளும் ஏற்பட்டாலும அவற்றைத் திறமையுடன் முறியடித்து ஆட்சிக்கு அடித்தளம் அமைததான். பேரரசன் முதலாம் புக்கன் தமிழகததில் தமது ஆட்சியை நிறுவ விரும்பினான். மேலும் முகமதியர்களின் படையெடுப்பால நலிவுற்று, பொலிவிழந்து கிடந்த தமிழகத்தை வீறு கொள்ளச் செய்ய விரும்பினான். இவ்வாறு விஜயநகர அரசர்களின திறமையாலும், வீரத்தாலும் ஆந்திரம், கர்நாடகம், தமிழ்நாடு, கேரளாவின் ஒரு சில பகுதிகள் இவாகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதிகளாக விளங்கின.

'தமிழகத்தில் விஜயநகர ஆட்சி' என்பது இவ்வாய்வின் நோககமாக இருந்தாலும் அதன் ஆரம்பகால வரலாறறைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். கர்நாடகா மாநிலத்தில ஹம்பி என்பதே விஜயநகரமெனபபடடது. அது பேரரசின் தலைநகராக விளங்கியது. இவ்வாடசி நான்கு வமிசங்களால் ஆளப்பட்டது. அவற்றில் முதலாவதாக சங்கம வமிசம் கி.பி. 1346 முதல் கி.பி. 1485 வரையிலும், இரண்டாவதாக சாளுவ வமிசம் கி.பி. 1485 முதல் கி.பி. 1503 வரையிலும், மூன்றாவதாக துளுவ வமிசம் கி.பி. 1503 முதல் கி.பி. 1570 வரையிலும், இறுதியாக அர வீட்டு வமிசம கி பி 1570 முதல் கி.பி. 1644 வரையிலும் ஆட்சி செய்தன. இவ்வாட்சி ஏறக்குறைய முந்நூறு ஆணடுகள் நீடிததது எனலாம். விஜய நகர ஆட்சி பரந்து விரிந்து கிடநததால் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுச் சிறப்புடன் ஆட்சி செய்தனர் என்றால் அது மிகையாகாது. உள்ளாட்சி அமைப்புகளின் வெற்றியினால்தான் ஆட்சி நீடித்துப் பரவலாக்கப்பட்டது. இவ்வாட்சியினால் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் என்ன என்பது இவ்வாய்வில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பேரரசு, மத்திய ஆட்சி என்றும் அதன் நிர்வாகத் தலைவன் பேரரசன் என்றும் அவனுக்கு ஆலோசனை கூறவும் உதவிடவும் மந்திரிகள் குழுவும் இவர்களின் திட்டங்களைச் செயலாக்க செயலகம் என்ற அலுவலகமும் செயல்பட்டது. பேரரசு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களோ அல்லது உறவினர்களோ, பேரரசனின் விசுவாசத்தைப் பெற்றவர்களோ அவ்வாட்சிப் பகுதியின் தலைமைப்பொறுப்பை 'மகாமண்டலேசுவரர்கள்' என்ற பெயரில நிர்வகிததனர். இவர்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு மத்திய அரசுடன் ஒத்துழைக்க வலியுறுத்தப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகள பற்றியும் அதன் செயல்பாடுகள் எங்ஙனம் ஒரு நிர்வாகத்திற்கு அரணாக அமைந்திருந்தன என்பன பற்றியும் இவ்வாய்வில் விரித்துக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாய்வில் சமூக, சமய நிலை பற்றிக் கூறுவதுடன் முகமதிய ஆட்சியால் ஏற்பட்ட சிக்கல்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

*முன் செய்த ஆயவு நூல்கள் :* விஜய நகரப் பேரரசின் வரலாறு எண்ணற்ற அறிஞர்களைத் தன்பால கவர்ந்திழுத்த வரலாறு ஆகும். பல வரலாற்று அறிஞாகள் வெளிநாட்டைச் சோந்தவர்களேயாயினும், நம் நாட்டவரும் விஜய நகரப் பேரரசின் வரலாற்றைத துருவித் துருவி ஆராய்ந்துள்ளனர்.

விஜய நகர ஆட்சியின் தோற்றம், அரசியல்நிலை அது வளர்ந்த விதம், பல கலைகளின் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், சமுதாய மாற்றங்கள் அனைத்தையும் பட்டியலிட்டு அறிஞர்கள் ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வுகளின் மூலம் அற்புதமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இராபர்ட் சீவலின், 'மறந்துபோன பேரரசு' ஒரு அற்புதமான முதன்மை நூலாகும். பாதர்கீராஸ், சேலிடூர் ஆகியோர் விஜயநகர அரசியலையும், சமுதாயத்தைப் பற்றியும் நூல்கள் எழுதியுள்ளனர். பேராசிரியர் வெங்கட்டரமணய்யா விஜயநகர வரலாற்றின் மீது செய்த ஆய்வுநூல் மிகச் சிறந்த நூலாகும். எனினும் தெலுங்கு மொழிச் சான்றுகளின் அடிப்படையில் செய்த ஆய்வு நூல்கள் இவற்றிற்கு முன்னோடிகளாகத் திகழ்கின்றன.

கிருஷ்ணசாமி அய்யங்கார், நீலகண்ட சாஸ்திரி, டி.வி. மகாலிங்கம் ஆகியோர் பல்வேறு தலைப்புகளிலே விஜய நகர வரலாற்றை எழுதியுள்ளனர். அவை புதுப் புதுச் செய்திகளை வரலாற்று ஆய்விற்கு ஆதாரமாக அளிக்கின்றன. பேராசிரியர், எ. கிருஷ்ணசாமியின் 'விஜயநகர காலத்துத் தமிழக நிலை' மற்றொரு சிறந்த நூலாகும். தமிழக வரலாற்றை மட்டும் சிறப்பாக ஆய்வு செய்து எழுதாமல் விஜய நகரப் பேரரசு முழுவதையும் ஆய்வு செய்கின்ற நூல்களே அதிகம். சில வரலாற்று அறிஞர்கள் முழுக் கவனத்தையும் அரசியல் செய்திகளிலேயும் அல்லது பொருளியல் செய்திகளிலேயும் செலுத்தியுள்ளனர். வேறு சில அறிஞர்கள் விஜய நகர மன்னர்களின் சமய நிலை பற்றி மட்டும் ஆய்வு செய்துள்ளனர். மற்றும் சிலர் கலை இலக்கிய வரலாறு குறித்து நூல்கள் பல எழுதியுள்ளனர். (இவையாவும் துணைநூல்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன) பேராசிரியர். எ. கிருஷ்ணசாமியின் நூல் விஜயநகர கால தமிழகத்தின் வரலாற்றை ஆய்வு செய்த போதிலும் அவருடைய சிந்தனையும் கவனமும் அரசியல் செய்திகளில் மிகுதியாகச் செலுத்தப்பட்டுள்ளது. தமிழகம் விஜய நகர மன்னர்களின் காலத்தில் பல்வேறு துறைகளில் என்னென்ன மாற்றங்களைப் பெற்றது என்பதை கி.பி. 1336 முதல் கி.பி. 1530 வரை ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளின் வரலாற்றை ஆய்வதே இவ்வாய்வு நூலின் முக்கிய நோக்கமாகும்.

*சான்றுகள்:* எந்த ஒரு ஆய்விற்கும் சான்றுகள் முதன்மையிடத்தை வகிக்கின்றன. சான்றுகளை இரு வகையாகப் பிரிக்கலாம். அவை

முறையே முதன்மைச் சான்றுகள், மற்றும் இரண்டாம் தரச் சான்றுகள். முதன்மைச் சான்றுகள்தான் ஆய்வின் முடிவை அறுதியிட்டுக் காட்டும் சான்றுகளாகும். இதன் அடிப்படையில் சொல்லப்படும் செய்திகள் ஆய்விற்கு அடித்தளமாக அமைகின்றன. இவை ஆய்வு செய்யும் காலத்திய அல்லது சமகாலத்திய, சான்றுகளாக இருப்பதனால்தான் அவை முதன்மைச் சான்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இசசான்றுகளை ஐந்து வகையாகப் பிரிக்கலாம். அவை முறையே கல்வெட்டுகள், இலக்கியங்கள், குறிப்பிட்ட காலத்தில் இந்தியாவில் பயணம் செய்த வெளிநாட்டவரின் குறிப்புகள், நாணயங்கள், நினைவுச் சின்னங்கள் போன்றவைகளாகும். இவற்றில் கல்வெட்டுகள் மிக முக்கியமான பங்கை வகிக்கின்றன. செப்பேடுகளும் கல்வெட்டுகளும் தமிழக மெங்கும் விஜய நகர மன்னர்களின் காலத்தில் அவர்களால் வெளியிடப்பட்டன. இவை தரும் செய்திகள் தமிழக வரலாற்றைத் தெள்ளத் தெளிவாக அறிய உதவுகின்றன. இக்கல்வெட்டுகள் தென்னிந்தியக் கல்வெட்டுகள், எபிகிராபிகா இண்டிகா, எபிகிராபிகா கர்னாடிகா, திருப்பதி திருமலை தேவஸ்தானக் கல்வெட்டுகள் போன்ற தலைப்பில் வெளியாகியுள்ளன. விஜய நகர கால முதன்மை வரலாற்றுச் செய்திகளை இவை அளிக்கின்றன.

இலக்கியச் சான்றுகள் என்பது கல்வெட்டிற்கு அடுத்த படியாக உள்ள மிக முக்கியமான சான்றாகும். விஜய நகர மன்னர்கள் கல்வியையும் கற்றோரையும் ஆதரித்துப் போற்றி வந்தனர். இது அவர்களுடைய அரசவைப் புலவர்களையும், கல்வியாளர்களையும் ஈர்த்தது. இப்புலவர்கள் எழுதிய நூல்கள் விஜயநகர கால அரசியல்நிலை, மக்களின் வாழ்க்கை முறை, பொருளாதாரச் சிறப்பியல்புகள் போன்ற பல்வேறு துறையின் செய்திகளை எடுத்து இயம்புகின்றன. தெலுங்கு, கனனட மொழி இலக்கியங்கள் பெரிதும் ஆதரிக்கப்பட்டன. அதனால் அம்மொழி இலக்கியங்கள் விஜய நகர அரசியலைப் படம் பிடித்துக்காட்டுகின்றன. எனவேதான் இலக்கியங்களைக் காலத்தின் கண்ணாடி என்று கூறுவர். விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் எழுதிய 'ஆமுக்த மால்யத' என்ற நூல் அரசியலையும், மக்களின் வாழ்க்கை பற்றிய செய்திகளையும் கூறும் நல்லதொரு இலக்கியச் சான்றாகும். விஜயநகர வரலாற்றுக்கு அழியாப்புகழை ஏற்படுத்திய குமார கம்பணாவின் மனைவி கங்காதேவி

என்பவரின் படைப்பாகிய 'மதுரா விஜயம்' என்ற நூல், தமிழகம் விஜய நகரின் கீழ்கொண்டு வரப்பட்டதைத் தெளிவாக்குகிறது. மேலும் தென்னகத்தில் ஆட்சி செய்த முகமதியர்களின் கொடுங்கோலாட்சி பற்றியும், குமார கம்பணாவின் படையெடுப்பு பற்றியும் அறிய உதவும் சிறந்த நூலாக விளங்குகிறது. இது தவிர 'இராம பூதயம்', 'சாணாவ பூதயம்' ஆகிய வடமொழி நூல்கள் தமிழகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. விஜயநகர காலத் தமிழறிஞர் சிலரும் போற்றப்பட்டனர். தத்துவப் பிரகாச சுவாமிகளின் தத்துவப் பிரகாசம், அன்னகால அய்யனின் 'இரு சமய விளக்கம்' ஞானப்பிரகாச தேசிகரின் 'கஞ்சிக்கலம்பகம்' ஆகிய நூல்கள் இலக்கியத்திற்கு இன்பம் சேர்த்ததுடன் அல்லாமல் விஜயநகர மன்னர்களின் காலத்தில் தமிழகத்தின் சமயநிலையைக் காட்டுகின்றன.

*வெளிநாட்டவர் குறிப்பு :* தமிழகம் தொல்காப்பியர் காலத்தே மிகவும் பண்பட்ட வரலாற்று மரபைப் பெற்றிருந்ததை நாம் பல்வேறு குறிப்புகளின் மூலம் உணரலாம். தமிழகம் மிகத் தொன்மையான வரலாற்றுச் சிறப்பை பெற்று இருந்ததால் கடல் வழியால் வெளிநாட்டு உறவும், வர்த்தகம், கலாச்சாரப் பண்பாடும் அயலவர்களின் உறவுக்கு அடிப்படையாக அமைந்திருந்தது. சங்ககாலம் தொட்டு தமிழகம் வெளிநாட்டினரை ஈர்த்து வந்தது என்ற செய்தியை அறிய முடிகிறது. புகாரில் யவனர்கள் பெருமளவில் இருந்ததைச் சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன. விஜய நகர மன்னர்களின் காலத்தில் தென்னிந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த பல வெளிநாட்டு அறிஞர்கள் தாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எழுத்தில் விட்டுச் சென்று இருக்கிறார்கள். நிக்கலோ காண்டி என்ற வெனிஷியா நாட்டறிஞர் இரண்டாம் தேவராயர் காலத்தில் கி.பி. 1420 இல் - விஜய நகரப் பேரரசு முழுவதும் சுற்றி பார்த்த இவர் மிக அருமையாக அரிய செய்திகளைத் தெரிவித்துள்ளார். பாரசீக நாட்டை சேர்ந்த அப்துல்ரசாக் என்பவர் இந்தக் காலகட்டத்தில் விஜயம் செய்து சமயம் சம்பந்தமான செய்திகளைத் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக விஜயநகரத்தில் ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படும் மகாநவமி விழா பற்றி விவரித்துக் கூறுகின்றார். டோமிங்கோ பைசும், நியுனீஸ்சும் கிருஷ்ண தேவராயர் காலத்தில் நிலவிய அரசியல், சமயநிலை, விழாக்கள் போன்றவற்றைக் கூறுவதோடு அல்லாமல் விஜய நகரம் தோற்றுவித்த

வரலாறு பற்றியும் குறிப்பிடுகின்றனர். பார்போசா என்ற அறிஞர் சமுதாயத்தில் நிலவிய பழக்க வழக்கங்கள் மற்றும் பெண்களின் நிலை பற்றியும் முக்கியமாக சதி பற்றியும் சிறப்பான செய்திகளைத் தெரிவித்துள்ளது வரலாற்று உண்மைகளை விருப்பு, வெறுப்பின்றி விளக்கமாக அறிந்து கொள்ள உதவக் கூடிய சான்றுகளாக அமைந்துள்ளன.

*நாணயங்கள் :* விஜயநகர மன்னர்கள் மற்றைய மன்னர்களைப் போலவே தங்கம், வெள்ளி, மற்றும் செம்பு நாணயங்களை வெளியிட்டுள்ளனர். ஒரு பொருளை விலை நிர்ணயம் செய்வதற்கும், பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் நாணயங்கள் தேவைப்பட்டன. அவற்றை அரசர்கள் தங்கள் நாட்டின் செல்வச் செழிப்பிற்கு ஏற்றார்போல் மேற்கண்ட உலோகங்களில் வெளியிட்டனர். வராகன், பெர்தாப், பணம் போன்ற மூன்று வகை நாணயங்கள் இருந்ததாகப் பாரசீக வெளிநாட்டறிஞர் அப்துர் ரசாக் குறிப்பிடுகிறார். நாணயங்களின் இரு பக்கங்களிலும் எருது, யானை மற்றும் இந்துத் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் மற்றவகை சான்றுகளைப் போல் பெருமளவில் செய்திகளைக் கூறாவிடினும் அரிய செய்திகளைத் துல்லியமாக எடுத்துரைக்கின்றன. விஜயநகர மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலிருந்து மக்களின் பொருளாதாரச் செழிப்பினை அறிய முடிகிறது. மேலும் நாணயங்களில் பொறிக்கப்பட்ட பல்வேறு கடவுள்களின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் நிலவிய சமயப் பொறையுடமையையும் அறியலாம்.

*நினைவுச் சின்னங்கள் :* கோவில் கட்டும் பணி விஜய நகர மன்னர்களால் தமிழகம் முழுவதும் மிகவும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டது. கோயில் கட்டடக்கலையின முன்னோடிகளான பல்லவர் மற்றும் சோழர்களைப் பின்பற்றி பல்வேறு அற்புதமான கோயில்கள் கட்டப்பட்டன. இவர்களது கோயில் கடட அமைப்புகளும், சிற்பங்களும், ஓவியங்களும் பல்வேறு செய்திகளைத் தன்னகத்தே அடக்கி அநுநுட்பம் தெரிந்தவர்களுக்கே தெளிவு படுத்துபவையாக அமைநதுள்ளன. இவற்றை நுணணாய்வு செய்வதன் மூலம் தமிழகததிலிருந்த சமயநிலை பற்றியும், கோயில் பாணி பற்றியும்

சமயத் தொடர்பான தொழில்கள் பற்றியும் அரிய செய்திகள் தெரிய வருகின்றன. விஜயநகர மன்னர்களின் காலத்தில் தமிழகம் கலைகளில் அடைந்திருந்த உன்னத நிலையை இநத நினைவுச் சின்னங்கள் எடுத்துக் கூறுகின்றன. இன்றும் தமிழகம் முழுவதும் இருந்து வருகின்ற விஜயநகர மன்னர்களால் கட்டுவிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட கோயில்கள், அவர்களது சமயப் பொறையுடமைக் கொள்கையைத் தெளிவு படுத்துகின்றன. சைவம், வைணவம், சமணம், புத்தமதம், கிருத்தவம் மற்றும் முகமதிய மதம் ஆகியவை ஒன்றோடு ஒன்று இணையாக வளர்ந்து ஓங்கியதை இக்கோயில்களும், கட்டடங்களும், சிற்பங்களும், ஓவியங்களும் தெளிவாகக் காட்டுகின்றன.

ஆய்வுக்கு உறுதுணையாக இருக்கும் மற்றொரு சான்று இரண்டாம் நிலைச் (Secondary) சான்றுகள் என்று கூறப்படும் அச்சு நூல்கள், தினசரி பத்திரிக்கைகள். வார மற்றும் மாத இதழ்கள் போன்றவைகளாகும். இவ்வகைச் சான்றுகள் ஆய்வு செய்யும் காலத்தை ஒட்டி வெளி வந்தவைகளாகவோ அல்லது சமகாலத்து நூல்களாகவோ அல்லது பின்னாளைய ஆய்வினாலோ செய்திகளை தெரிந்து கொள்ளும் விதத்திலோ வெளிவந்த நூல்கள் பெரிதும் உதவியாக இருக்கின்றன. ஒரு ஆய்விற்கோ அலலது ஒரு செய்தியை நூல்வடிவிலோ எடுத்துரைப்பதற்குச் சான்றுகளின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். மேலே கூறியவாறு இவ்விருவகைச் சான்று அடிப்படையில் இந்நூல் எழுதப்பட்டுளளது.

# 2.

## ஆரம்பகால வரலாறு

விஜயநகர ஆட்சியின் மூலவாகளாக (கர்த்தாக்களாக) விளங்கிய அரிகரன், புக்கன் என்ற இரு சகோதரர்களும் ஒயசாளர்களின் கீழ் குறுநில மன்னனாக இருந்த சங்கமா என்பவனின் புதல்வர்களாவர். இவர்கள் ஆரம்ப காலத்தில வாரங்கல்லைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட காலததில் மன்னன் பிரதாபருத்திர தேவரிடம் அமைச்சராகவும், கருவூலகக் கர்த்தாவாகவும் முறையே பணியில் இருந்தனர்.[1]

*அத்தியாயங்கள் பற்றிய குறிப்பு:* கருத்துக்களை எளிதில் புரிந்து கொள்ளவும் முறையாகத் தெரிந்துகொள்ளவும் சிறு சிறு தலைப்புகளைக் தொகுத்து அததியாயங்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட செய்தியையோ, குறிப்பையோ, தெரிந்து கொள்ள இந்த முறையே மிகவும் உதவும். 'தமிழகத்தில் விஜய நகர ஆட்சி' என்று கூறப்படும். இததலைப்பு சுமார் இரு ஆண்டுகள் ஆய்வு செய்து பல்வேறு தலைப்புகளில் செய்திகளை உள்ளடக்கி எழுதபபட்டுள்ளது. இது பதினொன்று அத்தியாயங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

முதல அத்தியாயமே முன்னுரையாகும், இவ்வத்தியாயததில் ஆய்வு முக்கியத்துவம் பற்றியும் இவ்வாயவின் அவசியம் பற்றியும் ஆராயப்படடுள்ளது. இவ்வாயவிற்கு முன் இத்தலைப்பை ஒட்டியோ, அலலது இச்செயதிகளையோ அலலது கருத்துக்களையோ ஆங்காங்கே வலியுறுத்தி முன்பு வெளிவந்த ஆய்வு நூலகளைப் பற்றியும் தெரிவிக்கபபட்டுள்ளது மேலும் இததலைபபிறகு ஒடடி எழுதப்பட்ட அறிஞர் பெருமககளின நூலகள பற்றிய சிறு குறிப்பும் சேர்க்கப்படடுள்ளது. மேலும் இததலைப்பிற்குத துணை நினற சான்றுகள எவை, எவை எந்த வகையில இவ்வாயவிற்கு துணை செயதன எனபது பற்றியும் இதில் தெரிவிக்கபபடடுள்ளது.

1 Robert Swell "A Forgotten Empire" P 21

அடுத்த அத்தியாயமான இரண்டாவது அத்தியாயத்தில் விஜய நகர வரலாற்றின் ஆரம்ப கால நிலையும் அது எவ்வாறு நிறுவப்பட்டது என்பது பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் விஜயநகர அரசு தென்னகத்தில் நிறுவப்படுவதற்கு முன் அங்கு நிலவிய அரசியல் சூழ்நிலையைப் பற்றியும் விஜய நகர அரசு அமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இப்பகுதியில் பாண்டிய நாட்டில் இருந்த அரசியல் வாரிசுரிமைப்போர் பற்றியும் அவற்றால் பாண்டியநாடு கைமாறிய விதமும் அதன் விளைவுகளையும் குறிப்பாகத் தென்னிந்தியாவின் மீது முகமதியர்கள் மேற்கொண்ட படையெடுப்புகளின் தாக்கம் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது அத்தியாயத்தில் விஜய நகர அரசியல் வரலாறு குறித்து எழுதப்பட்டுள்ளது. விஜய நகர ஆட்சி நிறுவுவதற்குக் காரணமாக இருந்த சங்கம வமிசத்தில் தோன்றிய முதலாம் அரிகரன் முதற்கொண்டு தொடர்ந்து ஆண்டு வந்த முதலாம் புக்கன், இரண்டாம் அரிகரன, முதலாம் தேவராயன், இரண்டாம தேவராயன் ஆகிய மன்னர்களின் காலத்தில் நிகழ்ந்த அரசியல் மற்றும் படையெடுப்புச் செய்திகளைக் கூறுகிறது. முதல் வமிசத்தைச் சேர்ந்த மன்னர்கள் மட்டுமில்லாமல், சாளுவ மற்றும் துளுவ வமிசத்தைச் சேர்ந்த மன்னா் பெருமக்கள், விஜய நகர அரசு தமிழகத்தில் நிலைபெற ஆற்றிய அரசியல் பெரும்பணியை எடுத்துக் கூறுகிறது.

நான்காவது அத்தியாயமாக அமைந்துள்ளதுதான் கிருஷ்ணதேவராயர் என்ற தலைப்பாகும். விஜயநகர ஆட்சியாளர்களிலேயே குறிப்பிடத்தக்கவர் கிருஷ்ணதேவராயர் என்றால் அது மிகையாகாது. சிறந்த போர்ப் படைத தளபதி, உயர்ந்த இராஜ தந்திரி, தலைசிறந்த ஆட்சியாளர், பரந்த கல்வி ஞானம் உடையவர், கலைகளைப் போற்றிய வள்ளல், தெய்வ பக்தி சான்றவர், சமயப் பொறையுடையவர் என்று பல்வேறு தலைப்புக்களிலே அவரது ஆற்றலை வெளிப்படுத்துகிறது. ஆட்சி செவ்வனே நடைபெற வேண்டுமானால் ஆட்சியாளர்கள் சிறந்த பொருளாதாரக் கொள்கையை உடையவர்களாக இருககவேண்டும் அவ்வகையில கிருஷ்தேவராயர் சிறந்த பொருளாதாரச் சிநதனையாளர் இவருடைய இருபது ஆணடுகால நல்லாட்சியினால்தான் விஜய நகர ஆட்சி வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது என்பன விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஐந்தாவது அத்தியாயம் ஆட்சி முறையின் இயல்புகளையும் அதன் கூறுகளையும் எடுத்துரைக்கிறது. அரசின் தலைவனான மன்னன் முதற்கொண்டு கடைநிலை ஊழியன் வரை இருந்த ஆட்சி அமைப்பைச் சீர்தூக்கிப் பார்க்கிறது. மத்திய ஆடசி, அவ்வாட்சியின் தலைவனான மன்னன், அவனுக்கு உறுதுணையாக ஆட்சி செவ்வனே நடைபெற ஆலோசனை கூற மந்திரிகளும் மத்திய ஆட்சியின் செயல்திட்டங்களைச் செயல்படுத்தும் செயலகமும் செயல்பட்ட செய்தி கூறப்படுகிறது. மேலும் பேரரசின் செலவிற்கு வருவாயைத் தேடித்தந்த வருவாய்த் துறையின் ஆதாரங்கள், வரி விதிப்பு முறை, வசூல்முறை, தள்ளுபடி முறை, செலவுகள் போன்றவை பற்றியும், சட்ட திட்டங்களைச் செயல்படுத்த நீதி மன்றங்களும் அவற்றின் செயல்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. பேரரசைக் கட்டிக்காக்கவும் அமைதி ஏற்படுத்தவும் செயல்பட்ட இராணுவம் பற்றியும் செய்திகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும் மத்திய ஆட்சிக்கு அடுத்த நிலையில் செயல்பட்ட மாகாண ஆட்சி அதன் செயல்பாடுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக சபா, ஊர் மற்றும் ஆயகர் முறை பற்றியும் கூறப்பட்டுள்ளது.

அடுத்த அத்தியாயத்தில் சமூக நிலை பற்றி விளக்கப்படுகிறது. சமூகத்தில் சாதி, சமய வேறுபாட்டினால் மக்களிடையே ஏற்பட்ட சமூக ஏற்றத்தாழ்வுகள் சமுதாயத்தில் நிலவி வந்த பிறப்பு அடிப்படையிலான பிரிவுகள் என்பன இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

ஏழாவது அத்தியாயத்தில் சமயம் தழைக்க அவர்கள் மேற்கொண்ட பணிகள் பற்றியும் இவற்றின் மூலமாக இவ்வரசு மக்கள் மனத்தில் எங்ஙனம் ஒரு நீங்கா இடததைப் பெற்றது என்பன கூறப்படடுள்ளன.

எட்டாவது அத்தியாயத்தில் பொருளாதார நிலை பற்றியும் மக்களின் வாழ்க்கைத் தரம் செல்வச் செழிப்பு பற்றியும் பேசப்படுகிறது. நாடெங்கும் பல்வேறு தொழில்கள் மன்னனின் ஆதரவாலும் புதிய தொழில் நுட்ப வல்லுனர்களின் திறமையாலும் செழித்தோங்கின. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் பெருகிப் பல்வேறு வாணிபக் குழுக்கள் தோன்ற வழி செய்தது. நாணயங்களின் வெளியீடு நாட்டின் பொருளாதாரத்தைச் சீர் செய்தன. நாணயங்கள பல்வேறு உலோகங்களில் வெளியிடப்பட்டன.

நாணயங்களின் இரு பக்கங்களிலும் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவை சமயக் கொள்கையையும் அரசின் பொருளாதார நிலையையும் எடுத்துரைக்கின்றன.

ஒன்பதாவது அத்தியாயம் இலக்கிய, பன்மொழி பற்றியது. இது பல்வேறு கலைகளின் வளர்ச்சி மேம்பாட்டைக் கூறுகிறது. சோழ மன்னர்களுக்குப் பின் தமிழகத்தை ஒரே அரசின் கீழ் ஆட்சி செய்த விஜயநகர மன்னர்கள் கலை மற்றும் இலக்கியக் காவலர்களாகச் செயல்பட்டனர். இவ்வரலாற்றுப் பகுதி முழுமைக்கும் காணப்படும் ஒரு சிறப்பு இயல்பு கலைகளுக்கு மன்னர்கள் அளித்த ஆதரவாகும்.

பத்தாவது அத்தியாயம் கலைகள் என்ற தலைப்பைக் கொண்டுள்ளது. மேலும் சிறு, சிறு தலைப்புகளில் செய்திகள் விவரிக்கப்பட்டுள்ளது. எந்த ஒரு ஆட்சி அரசியலுக்கும், சமூகத்திற்கும் சிறப்பினை அளிப்பது அப்போதைய கலைகளின் வளர்ச்சியே என்பதை இங்கு காணலாம். கலைவளர்ச்சி எவ்வாறு நாகரீக பண்பாட்டை வெளிப்படுத்துகிறது ? மேலும் மக்களின் கலையார்வம் தொண்டு போன்றன விளக்கப்பட்டுள்ளது.

பதினொன்றாவது அத்தியாயமும் இறுதி அத்தியாயமுமாகிய முடிவுரை விஜயநகர காலத்தில் பல்வேறு துறைகளில் நிலவிய சிறப்பு இயல்புகளைப் பட்டியலிட்டு, விஜயநகரத்தின் சிறப்பம்சத்திற்குரிய காரணங்களைச் சுருங்கக் கூறுகிறது. இவ்வரசு கி.பி. 1323 இல் டில்லி சுல்தானியப் படையெடுபபால் அடிமைப் படுததப்பட்டதால் சங்கமரின் புதல்வாகள் அங்கிருந்து ஒரு சிறு படையுடன் தப்பி அணி கொண்டி பகுதியை ஆட்சி செய்த ஆடசியாளர்களுடன் சோந்து கொண்டனர். இவர்களையும் டில்லி சுல்தான்கள் முறியடித்ததால் இரு சகோதரர்களும் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே இவர்களைக் கட்டாய மதமாற்றம செய்தனா. பின்பு இவர்களின் திறமையை உணர்ந்து நன்கு பயன்படுத்திக் கொள்ளும் பொருடடு பிரச்சனைகளைச் சமாளிக்க அணிகொண்டியின் கவர்னர்களாக முகமது துக்ளக்கினால் நியமனம் செய்து அனுப்பப்பட்டனர்.[2] ஆனால் அணிகொண்டி திரும்பிய

2 Ed Nayak H M & Gopal, B R "South Indian Studies" P 664

சகோதரர்கள் ஒரு சுதந்திர அரசு ஏற்படுத்தும் நோக்குடன் 'அறிவும் ஆற்றலும் மதியும் நுட்பமும் கொண்டவர்கள் எவரும் சாதனைகள் மூலம் வரலாறு படைப்பார்கள்' என்ற தத்துவத்தை மறந்துவிடவில்லை. எனினும் இவர்களது எண்ணமும்செயலும் ஈடேரவும் சிருங்கேரி விதத்தியாரண்ய முனிவரின் உற்சாகத்தாலும் அவரின் கோட்பாடுகளாலும் ஈர்க்கப்பட்டு, துங்கபத்திரையின் தென்கரையில் விஜயநகரத்தில் ஒரு சுதந்திர அரசை அமைத்தனர். இதுவே விஜயநகரப் பேரரசின் தலைநகராக அமைநதது.[3]

விஜயநகர ஆட்சியைச் சங்கமரின் புதல்வர்கள் ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் யாவை? அப்போது தென்னாட்டில் அரசியல் சூழ்நிலை எப்படி அமைநதிருந்து? என்பனவற்றை நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும். குறிப்பாக, தமிழ்நாட்டில் அரசியல் சூழ்நிலை எப்படி முகமதியர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தது என்பதை இங்கே குறிப்பிடடாக வேண்டும். கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில பாரத நாட்டின் வடக்கே டில்லியை தலைநகராகக் கொண்டு முகமதிய ஆட்சி ஜலாலுதின் கிலஜியின் தலைமையின் கீழ் நடைபெற்று வந்தது. இவரது மருமகன் அலாவுதின் கில்ஜி ஆடசியைக் கைப்பற்றும் எண்ணத்தில் தன் வலிமையை வளாத்துக் கொள்ளும் பொருட்டு நடத்திய படையெடுப்பே முகமதிய தென்னகப் படையெடுப்புகளில் முந்தியதாகும். அவ்வாறு படையெடுக்கும்போது தென்னாட்டில் நான்கு முக்கிய அரசுகள் ஆட்சி புரிந்தன.

அவற்றுள் வடமேற்கில் யாதவர்களின் அரசு தேவகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு இராமச்சந்திர தேவர் (கி.பி. 1271 முதல் கி.பி. 1309 வரை) என்ற மன்னர் தலைமையிலும்[4] வடகிழக்கில் காகத்திய அரசு வாரங்கல்லைத் தலைமையிடமாகக் கொணடு இரண்டாம் பிரதாப ருத்திரர் (கி.பி. 1292 முதல் கி.பி. 1342 வரை ) என்ற மன்னர் தலைமையிலும் மைசூர்ப் பகுதி துவார சமுத்திரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளன் தலைமையின் கீழும் இருந்தன.

3 Venkata Ramanappa, M N. "Outlines of South Indian History" P 155

4. பேராசிரியர் அறுவர் சொற்பொழிவுகள் தமிழக வரலாறு. ப. 47

தென்கோடியிலுள்ள பாண்டிய நாட்டில் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு குலசேகர பாண்டியனும், (கி.பி. 1268 முதல கி.பி. 1308 வரை) அவனுக்குப் பின் அவனது புதல்வர்களான சுந்தர பாண்டியனும், வீர பாண்டியனும் ஆட்சியைக் கைப்பற்றுவதில் கருத்து வேறுபாடு கொண்டு வாரிசுரிமைப் போரில் ஈடுபடடிருந்த காலச் சூழ்நிலைதான் தமிழகம் அயலாரின் ஆட்சிக்கு அடிப்பணியக் காரணமாக அமைந்தது.

*யாதவர் மற்றும் காகத்திய நாட்டின் நிலை :* முகமதியர்களின் தென்னகப் படையெடுப்புகளில் முந்தியதாகிய அலாவுதின் கில்ஜியின் யாதவ நாட்டுப் படையெடுப்பு குறிப்பிடத்தக்கது. அலாவுதின் தேவகிரியைத தாக்கிய தருணம் இராமச்சந்திர தேவர் என்பவர் ஆட்சி செய்து கொண்டிருந்தார். முகமதியப்படையை எதிர்கொள்ள முடியாத இராமச்சந்திரதேவா முகமதியர்களுடன் ஓர் உடன்படிக்கை செயதுகொண்டு, அதன்படி எலிச்பூர் மாவட்டத்தைத் தாரை வார்த்துக் கொடுத்தும், சகலமான பொன் பொருளைக் கொடுத்தும் முகமதிய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டார். வெற்றியுடன் டில்லி திரும்பிய அலாவுதின் ஜலாலுதினை அரச பதவியினின்றும் அகற்றிவிட்டு, டில்லியின் ஏக சுல்தானாக முடிசூட்டிக் கொண்டார். ஆனால் பின்பு யாதவர்கள், உடன்படிக்கையின்படி கப்பம் கட்டத் தவறியதாலும் அலாவுதினின் எதிரியான குஜராத் மன்னனுக்கும் அவனது புதல்விக்கும் தங்கள் நாட்டில் தஞ்சமளித்ததாலும் கி.பி. 1302 இல் ஒரு பெரும் படையைத் தனது படைத்தலைவன் மாலிக்காபூரின் தலைமையின் கீழ் அனுப்பினான்.[5] அப்படை யாதவ அரசைத் தாக்கி இராமச்சந்திரனையும் அவரது புதல்வனையும் கைது செய்து டில்லி கொண்டு சென்றது. ஆனால அலாவுதின் அவர்களை மன்னித்து, மீண்டும் உடன்படிக்கையின் படி நடநதுகொள்ள அனுமதி நல்கினார்.[6] அதன்பின் கி.பி. 1316 இல் தேவகிரி டில்லி சுல்தானியத்துடன் சேர்க்கப்பட்டது. காகத்திய அரசை

5 "Vijayanagar City of Victory" P 7

6. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி 2 ப. 9

வாரங்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு இரண்டாம் பிரதாபருத்திரர் என்ற மன்னன் ஆண்டு வந்தான். ஆனால் கி.பி. 1316 இல் சுல்தான் அலாவுதீன் இறந்தபிறகு ஆங்காங்கு குழப்பங்களும் ஒற்றுமையின்மையும் நிகழ்ந்தன. அதனால் காகத்திய அரசும் உடன்படிக்கையின்படி கப்பம் கட்டத் தவறி சுதந்திர அரசாக ஆட்சி செய்தது. ஆனால் அலாவுதீனுக்குப் பின் ஆட்சிக்கு வந்த முபாரக் கில்ஜி தனது படைத்தளபதி குஸ்ருகானை காகத்திய அரசின் மீது படையெடுக்க ஏவினான. படை காகத்திய அரசை முற்றுகையிட்டு மீண்டும் கப்பம் கட்டவும் உடன்படிக்கையின்படி சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்கவும் ஒப்புக் கொள்ளச் செயதது.

*ஒய்சாள நாட்டின் நிலை :* யாதவர்களின் தேவகிரி அரசும், காகத்தியர்களின் வாரங்கல் அரசும் மேற்கண்டவாறு முகமதிய ஆட்சிக்கு உட்பட்டது. மேலும் தெற்கே ஆட்சி செய்த ஒய்சாளர்களின் அரசையும், பாண்டியர்களின் அரசையும் வெல்லத்திட்டம் தீட்டி கி.பி. 1310 இல் படைத்தளபதி மாலிக்காபூரின் தலைமையின் கீழ் ஒய்சாள நாட்டை அடைந்தது. அப்போது அங்கு ஆட்சியாளனாக இருந்தவன் மூன்றாம் வல்லாளன் என்ற வீரம் செறிந்த மன்னனாவான்.[7] ஆனால் மூன்றாம் வல்லாளன் தெறகில் உள்ள அரசுகளைப் பிடிக்கும் எண்ணம் மேலோங்க வழி நெடுகிலும் உள்ள ஊர்களைச் சூரையாடி மதுரை செல்வதற்குள், முகமதியப் படை தலைநகர் துவார சமுதத்திரத்தில் முகாமிட்டிருப்பதை அறிநது, தன்படையெடுப்பை முடித்துக்கொண்டு திரும்பினான் தலைநகர். ஆனால் முகமதியர்களின் பெரும் படையை எதிர்கொள்ள முடியாத வல்லாளன் பெரும் பொருளுடன் கைது செய்யப்பட்டு டிலலிக்கு அனுப்பப்பட்டான். இருப்பினும் சுல்தான் அவனை மன்னித்து விடுதலை செய்தான். மூன்றாம் வல்லாளனும் சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டான்.

*பாண்டிய நாட்டின் நிலைமையும் முகமதிய ஆதிக்கமும் :* பாண்டிய நாடடில் சடையவர்மன் முதலாவது சுந்தரபாண்டியனுக்குப்பின்

7 Robert Sewell, "The Historical Inscriptions of South India" P 176

குலசேகரபாண்டியன் என்பவன் அரசு கட்டிலேறினான். இவன் பாண்டிய அரசுக்குப் பகைவர்களாக இருந்த ஒயசாளர்களையும் சோழர்களையும் ஒடுக்கும் நோக்கோடு இராமனாதனையும், மூன்றாம் இராஜராஜனையும் வென்று ஒய்சாளர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தமிழகப் பகுதிகளையும் சோழநாட்டின் சில ஆட்சிப் பகுதிகளையும் பாண்டியப் பேரரசுடன் இணைத்தான். இவன் காலத்தில் இத்தாலி நாட்டிலிருந்து பாண்டிய நாட்டிற்கு வருகைபுரிந்த மார்க்கபோலோ என்ற அறிஞர் குலசேகரின் ஆட்சியின் மாட்சிமையைப் பற்றியும் அவனுக்குப்பின் வந்தவர்களின் திறமையின்மையால பாண்டியப் பேரரசு வீழ்ச்சியடையத் தலைபட்டதையும் தனது பயணநூலில் குறிப்பிட்டுள்ளார்.

- குலசேகரப் பாண்டியனுக்கு சுந்தர பாண்டியன், வீர பாண்டியன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்களில் தலைமகன் சுந்தரபாண்டியன் பட்டத்து இராணியாகிய கோப்பெருந்தேவியின் மகனாவான்.[8] பின்னவனான வீரபாண்டியன் காதற் கிழத்திக்குப் பிறந்தவன். வீரபாண்டியன் வீரம் செறிந்தவனாகவும், திறமை மிக்கவனாகவும் இருந்ததால் குலசேகர பாண்டியன் அவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான். இச்செயலால் வெறுப்புற்ற மூத்தமகன் சுந்தரபாண்டியன் தந்தையைக் கொன்று விடவே,[9] பாண்டிய நாட்டில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது.[10] அதன் விளைவாக பாண்டி நாட்டின் ஒரு பகுதியைச் சுந்தர பாண்டியன் மதுரையில் இருந்து கொண்டும் வீரபாண்டியன் திருச்சிராப்பள்ளி, உறையூர் போன்ற பாண்டிய நாட்டின் மற்றொரு பகுதியிலிருந்து கொண்டு தனித்தனியே ஆட்சி செய்தனர்.

பாண்டிய நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள அண்டை நாட்டு ஆட்சியாளர்கள் தக்க தருணம் பார்த்து நின்றனர். அச்சமயம் வீரபாண்டியன் கேரளநாட்டு மன்னனும் தீவிரப்போர் வீரனுமான இரவிவர்மனின் உதவியை நாடவே அவனும் ஒத்துக் கொண்டு சுந்தரபாண்டியனைத் தோற்கடித்துத் தமிழகத்தில் நுழைந்து காஞ்சிபுரம் வரை படையெடுத்தான்.

8 Robert Sewell, The Historical Inscriptions of South India" P 176

9 Opcit P 96

10. பரந்தாமனார், அ.கி. திருமலை நாயக்க வரலாறு. ப. 16



நான்கு அரசுகள்
தேவகிரி, வாரங்கல்
துவாரசமுத்திரம்
மதுரை
நர்மதை
தப்தி
எலிச்பூர்
தேவகிரி
தேவகிரி யாதவர்கள் அரசு
கோதாவரி
வாரங்கல்
காகதீய அரசு
வேங்கி
விஜயநகரம்
ஹொய்சள அரசு
துவாரசமுத்திரம்
சென்னை
வங்காளக் குடாகடல்
தஞ்சை
திருச்சி
பாண்டிய நாடு
மதுரை
திருவனந்தபுரம்
இந்துப் பேராழி
இலங்கை

வீரபாண்டியனுக்கு இரவிவர்மன் உதவி செய்ததால், சுந்தர பாண்டியனும், ஒய்சாளர்களை வென்று தலைநகர் துவாரசமுத்திரத்தில் தங்கியிருந்த மாலிக்காபூரின் உதவியை நாடித் தூது அனுப்பினான். மாலிக்காபூரும் பாண்டிய நாட்டின் மீது போர் தொடுக்கத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்ததால் இதுவே தக்க தருணமாக நினைததான்.

இச்சூழ்நிலையில் மாலிக்காபூருடன் மூன்றாம் வல்லாளனும் சேர்ந்த பெரும்படை பாண்டிய நாட்டை நோக்கிப் புறப்பட்டது. முதலில் சோழ நாடடையடைநது உறையூரைத் தாக்கினர். ஆனால் சிதறிக் கிடநத சிற்றரசர்கள் ஒன்று சேர்ந்தும் பயன் அளிக்காததால் மேலும் முன்னேறி சீரங்கம் கோயிலைத் தாக்கிச் சிதைத்தனர். பின் மதுரை நோக்கிச் சென்ற படை வழி நெடுகிலும் இருந்த இந்து ஆலயங்களைத் தரை மட்டமாக்கிச் சென்றது. ஆனால் வீரபாண்டியன் முகமதியப்படையின் செயலகளையும், அட்டூழியங்களையும் அறிந்து அச்சம் கொண்டு முகமதியப்படையை எதிர்கொள்ள முடியாமல் காட்டினுள் ஒளிந்து கொண்டான். அதனால் அகப்பட்ட யானை, குதிரைப்படைகளையும் பெரும் பொருளையும் சூறையாடினான்.[11] பின்பு தன்னை உதவிக்கு அழைத்த சுந்தரபாண்டியனை எதிர் கொள்ளப் படை புறப்பட்டது. ஆனால் மாலிக்காபூரின் செயல்களை உணர்ந்த சுந்தர பாண்டியன் ஒளிந்து கொண்டதால், இராமேஸ்வரம் வரை சென்ற மாலிக்காபூர் அங்கு தங்களது வெற்றியின் நினைவாக நினைவுச்சின்னம் ஒன்றைக் கட்டினான். இதற்கிடையில் சுந்தரபாண்டியனின் மாமன் விக்கிரம பாண்டியன் முகம்மதியப்படையைத் தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணததில் ஒரு பெரும்படையைத் திரட்டிக் கொண்டு மாலிக்காபூரைத் தோற்கடித்தான். தோல்வியுற்ற மாலிக்காபூா டிலலிக்குத் திரும்பினான்.[12]

இதற்கிடையே கி.பி. 1316 இல அலாவுதீன் இறந்ததும சந்தர்ப்பததை நழுவவிடாமல மாலிக்காபூர் அரியணையேறினான். ஆயினும் சொற்ப காலததிலேயே கொல்லப்பட்டு அலாவுதீன் மகன் முபாரக்ஷா டில்லியின சுல்தானானான். தெனபகுதியில் ஏற்பட்ட குழப்பத்தை அடக்க தளபதி குஸ்ருகானை கி.பி 1317 இல் மதுரைக்கு அனுப்பினான். ஆனால் வெற்றி

11 Robert Sewell, “The Historical Inscriptions of South India” P 176

12. பிள்ளை கே.கே. தென் இந்திய வரலாறு தொகுதி, 2 ப. 10

பெறாமல் சுல்தான் பதவியைப் பிடிப்பதற்குத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்தான். எனவே படைவீரர்கள் அவனை விலங்கிட்டு டில்லி கொணடு சென்றனர். ஆனால் குஸ்ருகான் சுல்தான் முபாரக்ஷாவைக் கொன்றுவிட்டு, டில்லியின சுல்தானாக முடிசூட்டிக்கொண்டான். ஆனால் சிறிது காலத்திற்குள்ளாகவே கி.பி. 1320இல் கியாசுதின என்பவன் சுல்தான் பதவியைப் பெற்றான். இவன் இந்தியாவை ஒரு குடையின் கீழ் கொண்டு வரத் திடடமிட்டு, கி.பி. 1323ல் தனது மகன் உலுக்கானை பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கப் பணிததான். அப்போது பாண்டிய நாடடில் ஆட்சி புரிந்த பராக்கிரம பாண்டியன் முகமதியப் படையுடன் வீரததுடன் போராடினாலும் பாண்டியநாடு டில்லி சுல்தான் ஆட்சியில் இருபத்து மூன்றாவது மாநிலமாக இணைந்தது.

வெற்றி பெற்ற உலுக்கான் டில்லி சென்றதும் பதவியில் ஆசை கொண்டு தனது தந்தையைக் கொன்றுவிட்டு முகமமதுபின் துக்ளக் என்ற பெயரோடு டில்லியின ஏக சுல்தானாக முடிசூடடிக் கொண்டான். முகமதிய ஆட்சியுடன் இணைந்து விட்ட மதுரையை ஆட்சி செய்ய ஜலாலுதின் அசன்ஷா என்பவனைப் பிரதிநிதியாக நியமித்தான். முகமதியர்களின் கொடுங்கோலாட்சியாலும், பாரபட்சமுற்ற தன்மையினாலும் வெறுப்புறற மக்களும் ஆங்காங்கே ஆண்ட மன்னர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டதால் நிலைமையை டில்லி சுல்தான்களால் கட்டுப்படுத்த முடியாமையால் அவர்கள் தங்கள் சுதந்திரத்தைப பிரகடனப்படுத்தினர். மேலும் டில்லி சுல்தானகளின் பிரதிநிதியாக மதுரையை ஆண்ட ஜலாலுதின் அசன்ஷாவும் கி.பி. 1335 இல் முழு உரிமை பெற்ற சுல்தானாகப் பிரகடனப்படுத்திக் கொணடான்.[13] மேலும் அதனைச் செயலாக்கும் விதத்தில் தன் பொற்காசுகளையும், வெள்ளிக் காசுகளையும் வெளியிட்டான். அதன்பின் உடௌஜி, குத்புதின், கியாஸ் உதின் தாமகன்ஷா, நாசிர்உதின், அடிலஷா பக்ருதின் முபாரக்ஷா, அலாவுதின் சிக்கநதர்ஷா என்போர் மதுரை சுல்தானகளாக ஆடசி செய்தனர்.

13 முகமமது துகளககினால வெளியிடபபடட நாணயஙகளுள கி பி 1334 ஆம ஆணடு பொறிக்கபபடடதே கடைசி யாணடினதாக உள்ளதாலும, அஷனஷா கி பி 1335 ஆம ஆணடு முதனமுதலாகத தனது நாணயததினை வெளியிடடுளளதாலும அஷனஷா கி பி 1335 ஆம ஆணடு மதுரைச சுலதானாகப பதவியேறறான எனபதுறுதி ம இராச சேகர தஙகமணி பாண்டியா வரலாறு (முதல பாகம) ப 578



தென்னிந்தியா-1300-1500
76
80
84
20
16
12
8
பாமினி சுல்தானிய அரசு
பீடார்
குல்பர்கா
விஜயபுரி
முதுகல்
இராய்ச்சூர்
கடகம்
வால்டேர்
விசாகப்பட்டினம்
கொண்டபள்ளி
வணவாசி
கோவா
விஜயநகரம்
கம்பிலி
அதோனி
பங்காபூர்
குத்தி
பெனுகொண்டா
உதயகிரி
கோகர்ணம்
ஹோனவார்
நெல்லூர்
துவாரசமுத்திரம்
திருப்பதி
சந்திரகிரி
பழவேற்காடு
யாதவராயர் நாடு
சிருங்கேரி
மேல்கோட்டை
சென்னை
வேலூர்
மங்களூர்
சம்புவராயர் நாடு
கண்ணனூர்
கொங்கு நாடு
படைவீடு
கள்ளிக்கோட்டை
சுல்தானிய அரசு
கொச்சி
மதுரை
தென்காசி
பாண்டியர் நாடு
திருவனந்தபுரம்
இலங்கை
இந்துப் பேராழி
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்

கர்நாடகத்தில் ஒய்சாள மன்னர்கள் துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். ஆயினும் அவர்கள் அமைதியாக ஆட்சி செய்ய முடியவில்லை. எனவே டில்லி சுல்தான்களின் தென்னிந்தியப் படையெடுப்பால பாதிக்கப்பட்ட ஒயசாள மன்னர்கள் தங்கள் தலைநகரத்தைத் துவார சமுத்திரத்திலிருந்து தொண்டை மண்டலத்தில் திருவண்ணாமலைக்கு மாற்றிக் கொண்டனர். திருவண்ணாமலையிலிருநது ஆட்சி செய்த ஒய்சாளர்கள், சோழ மன்னர்களுடன் நட்பு கொண்டனர். முகமதியர்களின் தொல்லையால் இடமாற்றம் பெற்ற மூன்றாம் வல்லாளன் அவர்களின்பால் கடும் கோபம் கொண்டு அவர்களை வீழ்தத நாள் பார்த்துக் கொண்டிருந்தான். எனவே ஒரு பெரும் படையுடன் மதுரைமீது போர் தொடுக்கத் திட்டம் தீட்டி, படை புறப்பட்டது. படை சோழ நாட்டில் புகுநது காவிரிக் கரையில கண்ணனூர்க் குப்பம் என்ற இடத்தில முகாமிட்டிருந்தது. இச்செயலை உணர்ந்த மதுரை சுல்தான் கியாசுதின் 6000 போர் வீரர்களுடன் கண்ணனூர்க் குப்பத்தை அடைந்தான். மிகத் திறமையுடன் போரிட்ட மூன்றாம் வல்லாளனுக்கு ஆரம்பத்தில் வெற்றி கிட்டினாலும் தொடர்ந்து போரிட்டத்தில் ஒய்சாளப் படை தோற்கடிக்கப்பட்டு மூன்றாம் வல்லாளன் கொல்லப்பட்டான். இதுவே கி.பி. 1342 இல் நடந்த கண்ணனூர்க் குப்பம் போர் எனப்பட்டது.[14] பின்பு நான்காம் வல்லாளன் என்பவன் தன் தந்தைக்குபின் ஒய்சாள மன்னனாக முடிசூட்டிக்கொணடான். நலிவுற்ற ஒய்சாள அரசு இந்தத் திறமையற்ற மன்னனின் கீழ மேலும் தாழவுற்றது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி ஒய்சாளர்களின் கீழ் இருந்த பல சிற்றரசுகள் தங்களின் சுதந்திரத்தைப பிரகடனப்படுத்திக் கொணடன. ஒய்சாளர்களின் கீழ் சிற்றரசாக இருந்த விஜய நகர அரசும் இவ்வாயப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு சுதந்திர அரசை அமைதததது.

14 Venkata Ramanappa, M.N "Outlines of South Indian History"P 157

# 3.

# அரசியல்

கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்திய வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு தனியிடத்தைப் பெற்றிருப்பதுதான் விஜயநகர வரலாற்றின் முக்கியத்துவமாகும். ஏனெனில தமிழகத்தில் அயலாரின் ஊடுருவலால் பாதிக்கப்பட்டிருந்த தமிழ்ச் சமுதாயததையும், இநது சமயத்தையும் பாதுகாத்து நிலைப்படுத்தி, கலை, பண்பாடுகளை எனறும் அழியாமல் மேன்மைபபடுத்தி வாழ்வாங்கு வாழ விததிட்ட வீரவேந்தர்களின் சாதனைகள்தான் விஜயநகர வரலாற்றில் மலர்ந்துள்ளன. தென்னாட்டிலிருந்த அரசியல் நிலையின் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மதுரையில் முகமதிய ஆட்சியாளர்களின் சமயக்கொடுமைகளாலும், வரிக் கொடுமைகளினாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த மக்களிடையே இநது சமயக் கோடடுபாடுகள் பரவி, மக்களின் ஒருமித்த ஒற்றுமைக்கு உறுதுணையாக இருந்த கால கட்டத்திலதான் விஜயநகர ஆட்சி தமிழகம் முழுமைக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

தென்னாட்டில் கர்நாடகாவில் துவார சமுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த ஒய்சாளர்களிடம் அதிகாரிகளாகவும் சிற்றரசர்களாகவும் அரிகரனும் புக்கனும் இருந்தனர். கி.பி. 1342இல் ஒய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளனுக்கும் மதுரை சுல்தான் கியாசுதினுக்கும் நடைபெற்ற கண்ணனூர் குப்பம் போரில் மூன்றாம் வல்லாளன் கொல்லப்பட்டான். பின் அவனது மகன் நான்காம் வல்லாளன் பட்டத்திற்கு வந்தான். எனினும் சிறிது காலத்தில் இறந்தான. எனவே கி.பி. 1346இல் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலையைப் பயன்படுத்தி ஆங்காங்கே புரட்சியும், பூசல்களும் நிலவின. அரிகரனும், புக்கனும் தாங்கள் ஒய்சாள வாரிசு என்று அறிவித்து, விஜயநகரப் பேரரசினை அமைத்தனர்[1]

*முதலாம் அரிகரன் (கி.பி. 1336 - 1356) :* விஜயநகரின் முதல் வமிசமான சங்கம வமிசத்தில் தோன்றிய முதலாம் அரிகரன் விஜயநகர

1 I H Q Vol IX P 530

ஆட்சியை ஏற்படுத்திய போது அவனுடைய நான்கு சகோதரர்களும் அவ்வாட்சிக்கு உறுதுணையாக இருந்தனர். எனினும் அப்போது நாலா பக்கங்களிலும் அயலாரின் அச்சுறுத்தல்களும் தொல்லைகளும் எழுந்ததால் அவர்களை ஒடுக்கப் போரிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் தமிழகமெங்கும் ஆட்சியை விரிவுபடுத்த போரை ஒரு சந்தர்ப்பமாகப் பயனபடுத்திக் கொண்டனர். ஆட்சியின் விரிவாக்கச் செயல் திட்டங்களில் சிறப்புடன் செயல்பட்ட அரிகரன் தனது தனித்துவத்தை வெளிபபடுத்தும் பொருட்டு மகாராஜாதிராஜா என்ற பட்டத்தைச் சூட்டிக் கொஙண்டான். மேலும் பலநீண்டகால திட்டத்துடன் நிரநதரமான நல்லாட்சியை ஏற்படுததிச் செயல் திட்டங்களை உருவாக்கினான்.

*கோமல் மானியம் :* இம்மானியம் விஜயநகர மனனன் முதலாம் அரிகரனால் வெளியிடப்பட்டதாகும். இது தொடர்பான செப்பேடு, மாயவரம் தாலுக்கா, கோமல் என்னும் சிறறூரில் கணடெடுக்கப்பட்டதால் இபபெயரைப் பெறுகிறது. சிதைந்த நிலையில் உள்ள இச்செப்பேடு முழுமையாகக் கிடைக்காவிட்டாலும் கடைசிப்பகுதி இப்போது கிடைக்கிறது. இம்மானியத்தின்படி சித்தமூர் என்ற கிராமம் சில பிராமணர்களுக்கு வழங்கபபட்ட செய்தியைக் கூறுகிறது. இம்மானியத்தின் முக்கியத்துவம் என்னவெனில முதலாம் அரிகரன் காலத்தில் தமிழகத்தில் விஜயநகர மன்னர்கள் மேற்கொண்ட படையெடுப்பைக் கூறுகிறது. கண்ணனூர் குப்பம் போரில் ஒய்சாளர்கள் பெற்ற தோல்வியைத் தாங்கள் பெற்றதாக சங்கம சகோதரர் எண்ணினா. மேலும் இப்போருக்குப் பின் பழிக்குப் பழி வாங்கக் காத்துக் கொண்டிருந்தனர். எனவே அரிகரன தனது சகோதரன் முதலாம் புக்கனின் தலைமையின்கீழ ஒரு பெரும் படையை மதுரை சுலதான்களை வீழ்த்த அனுபபினான். அபபோதுதான் இந்த கோமல் மானியம் என்ற செபபேடு வெளியிடப்பட்டதாகக கூறுகின்றனர். எனவே குமார கம்பணா மேற்கொணட தமிழகப் படையெடுப்புக்கு இது முன்னோடியாக அமைந்துள்ளது.

இவ்வாறு விரிவாக்கம் செய்யப்பட்ட அரசிற்குப் பொருளாதாரச சிக்கல்கள் வந்தடைந்தன. அவற்றைக் களைய இரு திட்டஙகளை மேற்கொணடான். அவ்வாறு விவசாயிகளை ஊக்குவித்துக் காடுகளை

அழித்து, அவற்றை விளைநிலங்களாகவும், தரிசு நிலங்களைப் பயிர்த்தொழிலுக்கு உகந்ததாக மாற்றவும் நடவடிக்கை மேறகொண்டான் சலுகை அடிப்படையில் நிலங்களைக் குத்தகைககு விட வழிவகை மேற்கொண்டு விளைச்சலைப பெருக்கிப் பொருளாதாரத்தை மேம்படுத்தினான்.[2] அரசாங்கம் செவ்வனே செயல்பட நீதி மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளை நியமித்து வரிவசூல் செய்யபபட்டது. மாகாண ஆட்சி உத்வேகத்துடன் சிறப்பாக நடைபெற அதிகாரிகள் பல்வேறு துறையின் கீழ் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களை மாகாண ஆளுநர்கள் கண்காணித்து வந்தனர். கி.பி. 1342க்குப் பின் ஒயசாளர்களின் நிலை சரிந்ததால் அவர்களின் ஆட்சிப் பகுதியைத் தங்களது அரசுடன் இணைத்துக் கொண்டனர்.

*முதலாம் புக்கன் (கி.பி. 1344 - 1377) :* முதலாம் அரிகரனுக்குப்பின் அவனது சகோதரன் முதலாம் புக்கன் விஜயநகர ஆட்சியாளனாக முடிசூட்டிக் கொரண்டான். எனினும் தனது சகோதரனின் ஆட்சிக் காலத்திலேயே நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தப்பட்ட செய்திகளை உறுதி செய்யும் கல்வெட்டுச்சாசனங்கள் கிடைக்கின்றன. நிர்வாக அனுபவமும், திறமையும், பெற்றிருந்ததால் மாகாணப் பொறுப்புகளை முழுமையுடன் நிர்வகிக்க அதிகாரம் பெற்றிருந்தான். சங்கமரின் ஐந்து புதல்வர்களும் ஒற்றுமையுடனும், ஒத்துழைப்புடனும் விஜயநகர ஆட்சியை விரிவுபடுத்தி நிர்வகித்த போதிலும் அவாகளது புதல்வாகளின் ஒற்றுமையின்மையால் அரசிற்குச் சில இடற்பாடுகள் நேர்ந்தன. எனவே அவர்களை நிர்வாகப் பொறுப்பிலிருந்து அகற்றிவிட்டு தனது புதல்வர்களை நியமித்தான். அவ்வாறு வீரம் செறிந்த தன் மகன் குமார கம்பணாவை முலபாகல் மாகாணத்தில முதல் ஆட்சியாளராக நியமித்தான். வடபகுதியிலுள்ள பிரதேசங்களைப் புக்கனும், தென்பகுதிப் பிரதேசங்களை குமார கம்பணாவும் வென்று பேரரசை வலுப்படுத்தினர். எனினும் முதலாம் புக்கன் மதுரை சுலதான்களை ஒழிக்க கி.பி. 1344 ஆம் ஆண்டிற்கும் கி.பி. 1356 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் படையெடுப்பை

2 O S I H P 158

மேற்கொண்ட செய்தியை கோமல் மானியம் கூறுகிறது. வரலாற்றறிஞர் சாம்சி சிராஜ் அபிக் கூற்றின்படி முதலாம் புக்கன் மதுரைமீது படையெடுத்து சுல்தானைச சிறைப்பிடித்து மதுரையையும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளையும் பேரரசுடன் இணைத்து தன் ஆடசியின் கீழ்க்கொண்டு வந்தான். இந்த வெற்றிகரமான படையெடுப்பின் விளைவாக முகமதியர்களின் மதுரை ஆட்சிக்குத் தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. விஜயநகர மன்னர்கள் தமிழகத்தில் மேற்கொண்ட முதல படையெடுப்பு இது என்று சொன்னால் அது மிகையாகாது. பின்னாளில் நடைபெற்ற குமார கம்பணாவின் தமிழகப் படையெடுப்புக்கும், தமிழகம் விஜய நகர மன்னர்களின் ஆட்சியின் கீழ் வருவதற்கும் இது தூண்டுதலாக அமைந்திருந்தது.

தனது ஆட்சிக் காலததிலேயே - முல்பாகல் மாகாணத்தின் ஆட்சியாளனாக இருந்த தன் மகன குமார கம்பணா கி.பி. 1374இல் இன்னுயிர் நீத்ததால (கம்பணாவின் சாதனைகள் தனித் தலைபபில் விளக்கப்பட்டுள்ளன) தனது மற்றொரு மகனான இரண்டாம் அரிகரனை அம்மாகாணத்தின் ஆட்சியாளனாக நியமித்தான். எனினும் கி.பி. 1377 இல் முதலாம் புக்கன் விண்ணுலகை எய்தினான். புக்கன் திறமை வாய்ந்த நல்லாட்சியாளன் அவனுடைய ஆட்சிக் காலத்தில்தான் விஜய நகர ஆட்சி விரிவுபடுததப்பட்டது. மேலும் இந்து மதமும், அதன் கோட்பாடுகளும் காப்பாறறப்படடன. ஆனால் மறற மதஙகளையும் வெறுக்கவில்லை. மேலுமு சமயப்பொறையுடமைத் தத்துவத்தை மேற்கொண்டதற்குச் சான்றாக சிரவண பெல்கோலா கல்வெட்டு உள்ளது. சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் இடையே நடைபெறறு வந்த கருததுச் சிக்கல்களையும், வேறுபாடுகளையும களைந்து சமாதானப்படுத்தினான் எனறு கூறுகிறது. எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படைத தத்துவத்தை உணர்த்தும் பொருட்டு அவரவர்களின் விருப்பப்படி நடந்து கொள்ள உத்திரவாதம் அளிக்கப்பட்டது. அவ்வாறு உத்திரவாதம் செய்யபபடட சான்றுகளின் நகல்கள் முக்கிய இடஙகளில் வைததுப பேணபபட்டன. யூதா, கிருத்தவர், முகமதியர் போன்ற அனைதது மதச்சாாபாளர்களும இராயர்களை மதக் காப்பாளர்களாகக் கருதினர்.[3] மேலும் புக்கன் ஒரு தர்ம குணம் படைதத நலலாட்சியாளன்

3 O S I H P 162 Ed Nayak, H M & Gopal B R. "South Indian Studies" P 107

என்பதற்குச் சான்றாக அந்தியூர் என்ற கிராமம், அக்கோயிலில் ஊழியம் செய்த பிராமணர்களுக்குச் சர்வமானியமாகக் கொடுக்கப்பட்டதை தென்னிந்தியக் கல்வெட்டுச் சான்று கூறுகிறது.[4]

*குமார கம்பணா :* குமார கம்பணா, விஜய நகர வரலாற்றில், தன் தந்தை முதலாம் புக்கனின ஆட்சிக் காலத்திலேயே தமிழகத்தின் முதல் விஜய நகர மகாமண்டலேசுவரனாக நியமிக்கப்பட்டான்.[5] கம்பணாவின் பணியும், ஆட்சியும் விஜயநகர வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில, அவன் ஒரு தலை சிறந்த படைத்தளபதி மட்டுமல்லாமல் நிர்வாகத் திறனையும் ஒருங்கே பெற்ற ஆட்சியாளனாவான். தனது ஆட்சிக் காலத்தில் பழம்பெருமை வாய்ந்த மதங்களைக் கட்டிக் காபபதிலும், கோயில்களைப் பாதுகாத்து அதன் நிர்வாகத்தின் சீரமைப்பிற்கும் இவனது பணி தேவையான ஒன்றாயிற்று எனச் சரித்திர ஆவணங்களும், கல்வெட்டுச் சான்றுகளும் கூறுகின்றன. மதுரையில இருந்து கொண்டு ஆட்சி செய்த சுல்தான்களின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்ட முதலாம் புக்கன் விரும்பினான். அதே நேரத்தில், தொண்டை மண்டலத்தில் படை வீட்டில் சிற்றரசாகளாக இருந்த சம்புவராயர்கள் வலிமை பெற்று வருவதையும் புக்கன் விரும்பவில்லை. எனவே மதுரையில ஆண்ட சுல்தான்களை வேரறுக்கவும் சம்புவராயர்களை அடக்கி ஒடுக்கவும் முல்பாகல் இராஜியத்தில் மகாமண்டலேசுவரராக ஆண்டு வந்த தன் மகன் கம்பணாவைப் படையுடன் செல்லப் பணித்தான்.[6] இந்தச சூழ்நிலையில் கம்பணாவின் மிக முக்கிய குறிக்கோளாக இருந்தவை இந்துமததததைக் காப்பதிலும், சுல்தானியத தாக்குதலால நிலைகுலைவு ஏற்பட்ட கோயில்களை புனரமைத்துச் சட்டம், ஒழுங்கு அமைதியைப் பேணிக் காக்கவும் பேரார்வம் காட்டினான்.[7] முகமதியர் சமய வெறியால் இந்துக்களின் தெய்வமாகிய பசுக்களைக் கொன்றும், நுண்கலைகளைச்

4 S I I Vol III Part I P 1271
5 Sastri, K N "A History of South India" P 276
6 Krishnaswamy, Dr A " The Tamil Country under Vijayanagar" P 41
ARE No 267 of 1919
7 Krishnaswamy Iyengar S. "Sources of Vijayanagar Histroy" P 2

சிதைத்தும, தெய்வ விக்ரகங்களை உடைத்தும் சிதைவு செய்த ஆடசியைக் கம்பணா தன் பெரு முயறசியாலும், அவர்தம் திறமை வாய்ந்த போர்த் தளபதிகளாலும், ஆற்றலும், அறிவும் செறிந்த நிர்வாகிகளாலும் வென்று தமிழகம் புததுயிா பெறறுச் சமூக கலாசசார, பொருளாதார சமயச் சீர்திருத்தங்கள் மேன்மையடைய முன் மாதிரியாகத திகழ்ந்தவனாவான்.

ஆற்றல் மிக்க கம்பணா விஜய நகர ஆட்சியை விரிவுபடுத்தும் எணணத்தோடு பல உத்திகளை மேற்கொண்டு பல போர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அவற்றில சம்புவராயர்களுடன் நடந்த போரும், மதுரை சுல்தான்களுடன் நடநத போரும் முக்கியமானவையாகும். இவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளாக, கம்பணாவின் மனைவி கங்காதேவியின படைபபாகிய 'மதுரா விஜயம்' என்ற நூலும், அக்காலத்திய கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன. குறிப்பாக, கம்பணாவின் தமிழக ஆட்சி பறறி ஆங்காங்கு கிடைத்த 132 கல்வெட்டுகள் ஆதாரமாக அமைந்திருக்கின்றன.

*மதுரா விஜயத்தில் கம்பணா :* விஜய நகர அரசின் இரண்டாவது ஆட்சியாளனாகத் திகழ்ந்த முதலாம் புக்கன் பெரும் வீரனான தன் மகன் கம்பணாவிற்குத் 'தொண்டை மண்டலத்தில் 'படைவீடு' எனும் பகுதியை ஆடசி புரிநது வந்த குறுநில மன்னர்களான சம்புவராயர்களை வீழ்த்தினால், மதுரை சுலதானகளை வீழ்த்துவது எளிது' என்று அறிவுரை நல்கியதாக மதுரா விஜயததில் செய்தி காணப்படுகிறது. பல்வேறு வல்லுனர்களைக் கொண்டு கல்வி பயிற்றுவித்துத் திறமையுடன் திகழ்ந்த கம்பணாவை தனது ஆட்சிக் காலத்திலேயே முல்பாகல் இராஜியத்தின் முதல் விஜய நகர மகாமண்டலேசுவரனாக நியமித்தான்[8] தன் தந்தையின கட்டளையை ஏற்று யானைப்படை, குதிரைப்படையுடன் கன்னட தேசத்தைக் கடந்து சம்புவராயர்களை வெல்ல, பாலாற்றுக் கரையை அடைந்தபோது ஏற்பட்ட புழுதித தூசுகளால் பாலாற்றுத் தணணீரே கருமை நிறமாயிற்று; இது பாாப்பதறகு சம்புவராயாகளைத் தோற்கடிததததைப் போன்றிருந்ததென்று மதுரா விஜயததில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

8. பன்னீர் செல்வம் ஏ.டி.எம் 'சம்புவராயர்கள்' ப. 66

சம்புவராயர்களைப் பற்றிய வரலாறு மற்றும் அவர்களைப் பற்றிய தடயங்கள், செய்திகள், அவர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய பகுதிகளில் கிடைத்திட்ட செய்திகளின் வாயிலாக அறிய முடிகிறது. சம்புவராயர்கள், சாம்புகுளா என்னும் முதல் வமிசத்தைச் சோந்த செங்கீனி குடும்பத்து ஒய்மாநாட்டவாகளென்று கூறப்படுகிறது. இவர்களுக்குப் பல பட்டப் பெயர்கள் உள. அவை, நாலாயிரவன், அம்மையப்பன், அடிமல்லன், அதியாந்தன் எனபனவாகும். இவர்கள் சோழர்களின் ஆட்சியிலே படைவீரர்களாகவும், படைத்தளபதிகளாகவும் இருந்து சாதனைகள் புரிந்து போர் நுணுக்கங்களைப் பெற்றதனால் சம்புவராயர்கள் பல பட்டங்களைப் பெற்றனா. சம்புவராயர்கள் பாண்டியர்களின் மேலாண்மையின் கீழ் கி.பி. 1264 முதல் கி.பி. 1310 வரை அதாவது குலசேகர பாண்டியனது வீழ்ச்சி வரை குறுநில மன்னர்களாக இருந்தனா. கி.பி.1310இல் மதுரையில் நடந்த வாரிசுரிமைப் போரைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, தனியாட்சி அமைக்க முற்பட்டனா. மேலும் இந்நிகழ்ச்சிக்கு அடித்தளமாக டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக்காபூர் தலைமையில் முகமதியப் படையெடுப்பு மதுரையில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டது. எனவே, இந்நிகழ்ச்சிகளைச் சந்தா்ப்பமாகப் பயன்படுத்தி வட ஆற்காடு, தென்ஆற்காடு, செங்கல்பட்டு பகுதிகளை உள்ளடக்கி திருவண்ணாமலைக்கு அருகில் விருஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு படைவீடு இராஜியத்தை அமைததனா. இவ்வாட்சியின் வித்தகா்களான வென்றுமான் கொண்ட சம்புவராயன், இராஜ நாராயண சம்புவராயன் என்ற இருவரும் விஜய நகர மேலாண்மையை எதிர்த்து வந்தனா.

*படைவீடு இராஜியம் :* தொண்டை மண்டலத்தில் ஆட்சி புரிந்த பல்வேறு குறுநில மன்னர்களில் சம்புவராயர்களும் ஒருவா. வட ஆற்காடு மாவட்டத்தில் போளூா அருகே உள்ள படைவீடு என்ற இடத்தைத் தங்களின் கோட்டையாகவும், தலைமையிடமாகவும் கொண்டு சம்புவராயர்கள் ஆடசி செய்தனா. வீரசம்பன் சம்புவராயன, மற்றும் வென்றுமான் கொண்ட சம்புவராயன் ஆட்சிக் காலத்தில் படைவீடு மிகவும் சக்தி வாய்ந்த சுதந்திரச் சிற்றரசாகச் செயல்பட ஆரம்பித்தது. சம்புவராயர்களின் ஆட்சிக்கு விததகராக இருந்தவன இராஜ கம்பீர சம்புவராயன் என்பவனாவான்.



குமாரகம்பணனின் படையெடுப்பு
76
80
16
16
முல்பாகல்
சந்திரகிரி
திருப்பதி
சென்னை
வீரிஞ்சிபுரம்
வேலூர்
காஞ்சிபுரம்
படைவீடு
திருவண்ணாமலை
12
அரபிக் கடல்
கொங்குநாடு
கண்ணனூர்
சிதம்பரம்
ஸ்ரீரங்கம்
வங்காளக் குடாக்கடல்
மதுரை
இராமேச்சுரம்
இலங்கை
8
8
இந்துப் பேராழி
76
80

இவனுடைய ஆட்சிக் காலத்தில்தான் தொண்டை மண்டலம் இராஜ கம்பீர இராஜீயம் என்று அழைக்கப்பட்டது. இவனுக்குபபின் கி.பி. 1322 இல் வென்றுமான் கொண்ட சம்புவராயன் எனபவன் ஆட்சியாளனாகப பட்டமேற்றான். இவனுடைய ஆட்சிகாலத்தில்தான் சம்புவராயாகளின் ஆட்சி புகழுடன் விளங்கிற்று. இவனுக்குப்பின் புதல்வன் இராஜ நாராயண சம்புவராயன் (1338 - 1366) வரை ஆட்சி செய்தான். இவனுடைய ஆட்சி காலத்தில்தான் விஜய நகர ஆட்சியாளன் குமார கம்பணா படையெடுத்தான். இராஜ நாராயணின ஆட்சிப் பரப்பைப் பற்றியும், படையெடுப்பைப் பற்றியும் தெரிந்து கொள்ள தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் கிடைத்த எண்பத்து ஒன்பது கல்வெட்டுச் சான்றுகளினினறும் அறியலாம்.[9]

விஜய நகர மன்னாகள் தென்னகம் முழுவதும் விஜய நகர ஆட்சியை நிறுவ முனைந்தபோது எதிர்ப்பட்ட இரு தடைக்கற்கள், படைவீட்டையாண்ட இந்துச் சிற்றரசர்களான சம்புவராயர்களும், மதுரையை ஆண்ட முகமதியச் சுல்தான்களும் ஆவர். தெனனிந்தியா முழுமைக்கும் இந்துப் பேரரசை நிறுவ முனைநத போது அங்கே முகமதிய ஆதிக்கத்திற்கு இடமில்லை, அதை அகற்ற வேண்டியது தலையாய கடமையாயிற்று. இவற்றில் படைவீட்டை ஆண்ட சம்புவராயர்கள் இந்துச் சிற்றரசர்களே; அவர்களை வெல்ல வேண்டிய நிர்பந்தம் என்ன என்று ஆராயும்போது, மதுரைச் சுல்தான்கள் மீது படையெடுத்துச் செல்லுங்கால் சுதந்திரமான சம்புவராயர்கள் ஒருவேளை தங்களை பினனிருந்து தாக்கக்கூடும் என்று அஞ்சி முதலில் சம்புவராயாகளை குமார கம்பணா தோற்கடித்தான். பின்பு மதுரையில் முகமதிய ஆதிக்கமும் முற்றுப் பெற்று இந்துக்களுடைய ஆடசி நிலவியது.

*கம்பணாவின் படையெடுப்பு :* டில்லி சுல்தான் அலாவுதீன் காலத்திலிருந்து தொடர்ந்து நடைபெற்ற தாக்குதலால், தென்னிந்தியாவை ஆண்ட அரச வமிசங்களுக்குச் சொல்லொண்ணாத் துன்பங்கள் உண்டாயின. முகமதியப் படையெடுப்பால் தென்னிந்தியக் கலை, கலாச்சாரப், பண்பாடு சீரழிந்து, முகமதிய ஆதிக்கம் மேலோங்கி நின்றது.

9 Krishnaswamy Iyengar S "South India and her Mohammadan Invaders" P 117

இதற்கு முடிவு கட்ட ஒய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளன் முனைந்து படையெடுப்பை மேற்கொண்டான். படை சோம நாட்டில் புகுந்து காவிரிக் கரையை அடைந்து கண்ணனூர் குப்பம் என்ற இடத்தில் முகாமிட்டிருந்தது. இதையறிந்த மதுரை சுல்தான் கியாசுதின் ஒரு பெரும் படையுடன் ஒய்சாளப் படையைத் தாக்கினான். ஆனால் முதல் கட்டத் தாக்குதலில் ஒய்சாளர்களுக்கு வெற்றி கிட்டினாலும் தொடர்ந்து நடந்த தாக்குதலால் தாக்குப்பிடிக்க முடியாத மூன்றாம் வல்லாளன், தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். எனவே முகமதிய ஆதிக்கம் மேன்மேலும் வளர இது முகமதியர்களுக்குச் சாதகமாக அமைந்தது.

கி.பி. 1336 இல் ஹம்பியில் தோற்றுவிக்கப்பட்ட விஜயநகர அரசின் முதன்மையான குறிக்கோள் இந்து தர்மத்தையும், இந்து மதத்தையும் போற்றிக் காப்பதாகும். தென்னாட்டில் முகமதிய ஆட்சியை அகற்றி தங்கள் ஆட்சியை நிலை நாட்ட அம்மன்னர்கள் விரும்பினர். ஆட்சி நிறுவிய நாள் முதற்கொண்டு இதுவே அவர்களின் தலையாய குறிக்கோளாக அமைந்தது. கி.பி. 1342இல் நடைபெற்ற கண்ணனூர்க் குப்பம் போரில் ஒய்சாள மன்னன் மூன்றாம் வல்லாளன் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டதைத் தாங்கள் பெற்ற தோல்வியாகவே கருதினர். எனவே, முகமதிய ஆடசியை ஒழிக்க முதலாம் புக்கன் ஆட்சிக் காலத்திலேயே முயறசி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் முகமதிய ஆதிக்கத்தை முற்றிலுமாக ஒழிக்க முடியவில்லை. ஆதலால், முதலாம் புக்கன் முல்பாகல் இராஜியத்தின் மகாமண்டலேசுவரனாக இருந்த தன்வீரமைந்தன் கம்பணாவை மதுரை மீது படையெடுக்கப் பணித்தான். அதற்கு முன, தொண்டை மணடலத்தில் மிகவும் பலம் பொருந்திய சுதநதிரச் சிற்றரசர்களாயிருந்த சம்புவராயர்களை அடக்க வேண்டியது அவசியமாயிற்று. ஏனெனில் ஒருவேளை அவர்கள் மதுரை சுலதானகளுடன் கூட்டு சேர்நது கொள்வார்கள் என்று அஞ்சியோ அல்லது தங்களைப் பின்னிருந்து தாக்குவார்கள் என்று கருதியோ முதலில் சம்புவராயாகள் மீது படையெடுததான்.

போா நிர்வாக உதவிககாக சாளுவ மங்கு, கோபணன், சோமப்பன், கோவிந்தராசர், கண்டாரகுளி, மாரயய நாயக்கர் போன்றவர்களைத் தென்னக படையெடுப்பில உதவிக்காக அழைததுச் செனறான். இதற்கு

முன்னமே, விஜய நகர மன்னர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழகத்தின் பல பகுதிகளைத் தங்கள் வசம் கொண்டு வந்தனர். கம்பணனும் அவன் மகன் வீரசாயனும் தொண்டை மண்டலத்தின் வடபகுதியைத் தங்களாட்சிக்கு உடபடுத்தினர். செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரியில் திருபாலைவனம் என்னும் இடத்தில் கிடைக்கும் சாயனன் மற்றும் இராஜநாராயண சம்புவராயன் முதலியோர் கல்வெட்டுக்கள் இதற்குச் சான்றுகளாகும்.[10]

முதலாம் புக்கனின் வாழ்த்துடன் தன் தலைமையிடமான முல்பாகலில் இருந்து புறப்பட்ட பெரும்படையில் திறமை மிகுந்த யானைப் படையும், குதிரைப் படையும், விற்படையும் இருந்தன. இப்படை ஆந்திர மாவட்டங்களைக் கடந்து பாலாற்றின் கரையை அடைய ஐந்து அல்லது ஆறு நாட்கள் பிடித்தன. சம்புவராயர்களும் தங்களை எதிர்நோக்கி வந்த படையைச் சமாளிக்க ஆயத்தமாக இருந்தனர். இவ்விரு படைகளும் இரண்டு வெறி பிடித்த யானைகள் போல் பாலாற்றின் கரையில் உள்ள சம்புவராயர்களின் தலைமையிடமான விருஞ்சிபுரத்தில் மோதிக் கொண்டன. இதன் விளைவாக ஏற்பட்ட கடும்போரில் சம்புவராயர்களின் படைகள் புறமுதுகிட்டு ஓடி படைவீட்டில் இருந்த கோட்டைகருள் பாதுகாப்பிற்காக தங்கின. கம்பணாவின் படைகளும் முற்றுகையிட்டுத் தாக்கின. முற்றுகையின் கடுமையைத் தாளாத சிற்றரசன் இராஜ நாராயண சம்புவராயன் தன் படையுடன் கோட்டையை விட்டு வெளியே வந்து போரிட்டு மடிந்தான்.[11] வெற்றி பெற்ற கம்பணா தொண்டை மண்டலத்தை விஜயநகரப் பேரரசுடன் இணைத்தான். சம்புவராயர்களின் அரசு தனி இராஜியமாக 'படை வீடு இராஜியம்' என்ற பெயரில் விஜய நகரப் பேரரசின் கீழ் வந்தது. இப்புதிய இராஜியத்தை கம்பணா காஞ்சிபுரத்திலிருந்து ஆண்டு வந்தான். இவ்வெற்றியின் நினைவாக, அருகிலிருந்த குளத்தூரில் ஒரு கோபுரத்தைக் கட்டினான். கம்பணா தன் தளபதி மாரய்ய நாயக்கன் சம்புவராயர்களைத் தோற்கடித்ததால் அவ்வெற்றியைப் போற்றும் விதத்திலும், மகிழ்விக்கும் பொருட்டும் அன்னமங்கல பற்று என்ற கிராமத்தைக் கொடையாகக் கொடுத்தான்.

10 ARE No 377 of 1929

11 ARE No 18 of 1899, Thiruvenkata Chari, “Madura Vijayam” PP 32-36

தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் கி.பி. 1366இல் கம்பணாவின் ஆட்சியின் கீழ் வந்தன.[12]

சம்புவராயர்களின் மீது பெற்ற வெற்றிக்குப் பின் கம்பணா தன் கவனததை மதுரைச் சுல்தான்கள் மீது திருப்பினான். காஞ்சிபுரத்தில் கம்பணா தங்கியிருந்தபோது ஒரு கனவு கண்டதாகவும், அக்கனவில் தோன்றிய பெண் மதுரைச் சுல்தான்களின் ஆட்சியில் மக்கள் படும் துன்பத்தை எடுத்துரைத்ததாகவும் சொல்லப்படுகிறது. கங்கா தேவியின் படைப்பாகிய மதுரா விஜயத்தில் சுல்தானகளின் அடாவடி ஆட்சியில், மக்கள் பட்ட துன்பங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார். வேத மந்திரங்கள் இனிமையாக ஒலித்த இல்லஙகளில் கூச்சலும் குழப்பமும் மலிந்தன. பெண்களும், பிராமணாகளும் துன்புறுத்தப்பட்டனர். இந்துக்களின் புனிதச் சின்னமான 'பசு' வதை செய்யப்படடது. இச்செயல்கள் இந்து மக்களுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்சசுவதாக இருந்தது. தாமிர பரணியாறு ரத்த ஆறாக ஓடியது. அந்த அளவிறகுத் தமிழ் மக்கள் முகமதியர்களின் ஆட்சியில் இனனலுற்றனர் என்று அவ்விலக்கியத்தில் கூறபபடுகிறது.

பின் குமார கம்பணா கி.பி. 1372இல் பெரும்படையுடன் மதுரைக்குப் படையெடுத்துச் செல்லுங்கால், முகமதியப் படையை சீரங்கத்திற்கு அருகில் சமயபுரத்தில சந்தித்துத் தோல்வியைத் தழுவச் செய்தது மட்டுமலலாமல கண்ணனூாக் குப்பம் என்ற பகுதியைக் கை கொணடவுடன், மேலும் முனனேறி மதுரை வரை பல போர்களைச் சந்தித்தான். இறுதியாக. மதுரையை ஆட்சி செய்த சுல்தான அலாவுதீன் சிக்கந்தா ஷாவை தீரமுடன போரிடடுத் தோற்கடித்துப புறமுதுகிட்டு ஓடச் செய்து, மதுரையையும் விஜய நகரின ஒரு பகுதியாக இணைத்துக் கொண்டான்.

பேரரசுடன் தென்னாட்டை இணைபபது மட்டும் கம்பணாவின் குறிக்கோளாக இல்லை. மாறாக, இநது மதம புததுயிர் பெறுவதறகும், முகமதியத் தாக்குதலால் சின்னாபின்னமாக்கப்படட கோயில்களைப்

12 ARE No 243 of 1919, ARE NO 693 of 1904, ARE No 246 of 1913

புனரமைப்பு செய்வதற்கும் ஏற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டான். இரண்டாவது, பாண்டியப் பேரரசுக்குப் பிறகு திருப்பணி செய்யப்படாத முகமதியத் தாக்குதலுக்கு உட்பட்ட சீரங்கம், கண்ணனூர், சிதம்பரம், மதுரைக் கோயில்களைப் பழைய நிலையில் சீரமைக்கும் பொருட்டு, திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, வழிபாட்டு முறைகள் செவ்வனே நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில கண்ணனூர் என்பது ஒய்சாளர்களின் முந்தய தலைநகராக இருந்தது. அங்கு வீரசோமேஸ்வரா என்ற ஆட்சியாளன் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் மத்தியில் போசலீஸ்வரம் உடையார் கோயிலைக் கட்டினான். ஆனால், இக்கோயில் முகமதியர்களின் தென்னகப் படையெடுப்பின் போது சேதப்படுத்தப்பட்டது மட்டுமல்லாது மசூதியாகவும் மாற்றப்பட்டது. இக்கோயில் வளாகச் சுவர்க் கற்களை, முகமதியர்கள் கோட்டையமைக்கப் பயன்படுத்தினர்.[13] ஆனால் குமாரகம்பணாவின் தென்னகப் படையெடுப்பின் விளைவாக அம்மசூதியை மீண்டும் பழைய நிலைக்குக் கோயிலாகப் புதுப்பிக்கத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது.

*கம்பணாவின் பணிகள் :* தென்னிந்தியக் கோயில்கள் பழங்காலம் தொட்டே இந்துக்களின் கலாச்சாரத்தைப் பாதுகாக்கும் காப்பகங்களாக இருந்தன என்பதில் அய்யமில்லை. குறிப்பாக, சோழர்கள் காலம் தொடங்கி நாயக்கர், மராட்டியர் காலங்களிலும் இந்நிலை தொடர்ந்து வந்தது. மேலும், கல்வி போதிக்குமிடமாகவும், கலாச்சாரத்தை வளர்க்கும் இடமாகவும் வங்கிகள், மருத்துவமனைகள், மக்களின் அன்றாடத் தேவைக்குப் பயன்படும் பொருள்களை விநியோகிக்குமிடமாகவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமிடமாகவும் கலைகளைப் போதிக்குமிடமாகவும், ஆட்சியாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் போன்றோர் போற்றுமிடமாகவும் அரசின் அனைத்து துறை நிர்வாகமும் கோயில்களிலே நடைபெற்றன.[14]

13. ARE No 1936-37 P 80
14 Singaravel A " Socio-Cultural History of Thanjavur District as revealed by Tamil Literature P 157

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தென்னிந்திய ஆட்சியாளர்களின் ஒற்றுமையின்மையையும் பலவீனத்தையும் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி டில்லியை ஆண்ட சுல்தான்கள் படையெடுத்தனர். இப்படையெடுபபின் விளைவாக, மதுரையை ஆண்ட பாண்டியப் பேரரசை வீழ்த்தி விடடு மதுரையைத தலைநகராகக் கொண்டு சுல்தான்களின் ஆடசி நிறுவப்பட்டது. மேலும் இதன் விளைவாக ஆதிக்க வெறியும், சமயவெறியும் பிடித்த முகமதியர்கள் படையெடுத்துச் செல்லுங்கால் தென்பட்ட அனைத்து இந்துக கோயிலகளையும் சின்னாபின்னமாககினர். விக்ரகங்கள் சிதைக்கபபட்டன. ஆனால் கோயில் தன்னிலை இழந்து நிர்வாகத்தில் பிரச்சினைகளும் சச்சரவுகளும் தலைதூக்கின. இந்த நிர்வாகச் சீர்கேடைச் சீர்திருத்தம் செய்ய, விஜய நகர ஆட்சியாளர்கள் மேற்கொண்ட தெனனிந்தியப் படையெடுப்பு இதற்கு முற்றுப்புள்ளி வைத்தது. குறிப்பாக குமார கம்பணா ஆற்றிய பணிகள் போற்றுவதற்குரியன. முகமதியப் படையெடுப்பால் அழிவுபட்ட கோயில்களைச் செப்பனிடடு, இந்துக் கலாச்சார மேம்பாட்டிற்கு விஜய நகரம் புத்துயிர் ஊட்டியது. மேலும் புதிய கோயில்களும், கோபுரங்களும் கட்டப்பட்டன. கோயில் நிர்வாகம் சிறப்பாகச் செயல்பட அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வறக்கட்டளைக்குப் பலதரப்பட்ட கொடைகள் வழங்கியும், நிரந்தரமாக அரசின் வருவாயில் ஒரு பகுதியைக் கொடுத்தும் அறக்கட்டளையைச் செழிப்பாக்கினர். கம்பணாவின் ஆக்கபூர்வமான சட்ட திட்டங்கள் மக்களுக்குச் சென்றடையும் விதத்தில் அவனது நிர்வாகிகள் இருநதனர். பல கோயில்களின் நிர்வாகிகள் மாற்றப்பட்டுப் புதிய திறமை வாய்ந்த நம்பிக்கைக்கு உரிய நிர்வாகிகள் பதவியில் அமர்த்தப்பட்டனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் கருணாகரதாசன், அழகிய திருச்சிற்றம் பலமுடையான் என்பார் கோயிலின் பொறுப்பான பணியில் அமர்த்தப்பட்டனர்.[15]

குமார கம்பணாவின் தென்னக ஆட்சியில் அவன் ஆற்றிய சிறப்பு வாய்ந்த பணிகளையும் கோயில்களுக்குக் கொடுத்த பல கொடைகளையும் கல்வெட்டுகளின துணை கொண்டு ஆராயலாம். அவற்றுள, புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி தாலுக்காவில உள்ள பொன்பட்டி

15 Sathiyanatha Aiyar, R "History of the Nayaks of Madura" P.4

கிராமத்துக் கல்வெட்டு வீற்றிருந்த பெருமாள் சாமிக்கு வழங்கப்பட்ட அறக்கொடைகளை வகைப்படுத்தும் சான்றாக அமைகிறது. மேலும், நவம்பர் 1365ஆம் ஆண்டு ஆவணம் ஒன்று, விஜயராகவப் பெருமாள் சாமிக்குப் பொன், பொருள் கொடையாகக் கொடுத்ததைப் புலப்படுத்துகிறது.[16]

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள சிவன் கோயிலுக்கு 'உமையாளந்த' என்னும் கிராமம் இனாமாகக் கொடுக்கப்பட்டது. அக்கிராமத்தில் விதிக்கப்பட்ட பல்வேறு வரிகளின் மூலம் கிடைத்த தொகை கோயிலின் நிர்வாகத்திற்காகவும், அங்கு நிரந்தரமாக ஒளிவிளக்கு எரியவும் உதவியது. வட ஆற்காடு மாவட்டம் மாடப்பாக்கம் என்னும் ஊரிலிருந்து எடுக்கப்பட்ட கி.பி.1911ஆம் ஆண்டைய 3246ஆம் கல்வெட்டு ஒன்று கம்பணா கோயில் நிர்வாகிகளுக்கு ஆணையிட்ட ஒரு சான்றை நமக்கு வெளிப்படுத்துகிறது. அக்கிராம வரிகள் சர்வமானியமாகக் கோயிலுக்கு வழங்கப்பட்டன. கி.பி. 1362 டிசம்பர் 19 தேதியிட்ட தென்னாற்காடு மாவட்டம் திருக்கோயிலில் எடுக்கப்பட்ட கல்வெட்டு இனாம் நிலங்கள் தேவராஜ பட்டார் என்ற கோயில் பூசாரிக்கு வழங்கப்பட்டதைக் குறிக்கிறது.

கி.பி. 1922ஆம் ஆண்டு எண் 40 திருவாமத்தூர்க் கல்வெட்டு வயளிநல்லூர் கிராம நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டு அவற்றின வருவாய் கோயிலின் நலப் பணிகளுக்கும், திருவிழாக்கள் கொண்டாடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. மேலும் செஞ்சி தாலுக்காவில் திருவடிக்குன்று என்ற கோயில் நிலங்களுக்கு, நிலவரி செலுத்துவதினின்றும் விலக்களிக்கப்பட்டதாக ஓர் ஆணை குறிப்பிடுகிறது. கி.பி. 1373இல் கோயமபுததூர் மாவட்டம், சடயம்பாளையம் ஆவணம் கம்பணா தனது ஆட்சிக் காலத்தில் ஆவுடைய ராஜா என்பவர் திருநாகேசுவருமுடைய நாயனாா கோயிலைப் புதுப்பித்ததாகவும் அக்கோயில் முகமதியர் தாக்குதலால் சிதைவுபட்டது என்றும் குறிப்பிடுகிறது. கங்காதேவி தனது மதுரா விஜயத்தில மதுரை சுலதானை வீழ்த்தவும் [17] முகமதிய ஆதிக்கத்தால் சிதையுண்ட சிதம்பரம், திருவானைக்காவல், சீரங்கம், மதுரைக் கோயில்களில் மீண்டும் திருப்பணி

16 Robert sewell, "Historical Inscriptions of South India" P 192
17 Madura Vijayam Canto IV

செய்து வழக்கமான பூசைகள் நடைபெறவும், வழி வகுத்தான்[18] என்று கூறுகிறார்.

*கோயில் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு:* கோயில் ஊழியர்களிடையே சில பிரச்சினைகள் இருந்தன. அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் தேவரடியார்கள், பதியிலார், இட பதியிலார் போன்றோர். வென்றுமான் கொண்ட சம்புவராயர் ஆட்சிக்காலத்தில் அவனது நிர்வாகத் திறமையின்மையாலும், சீர் கேடுகளாலும் பல கோயில் நிர்வாகிகள் பதவி விலகினர். பல ஊழியர்கள் இறந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. எனவே, இச்சீர்கேடுகளைக் களைவதற்கு வென்றுமான் கொண்ட சம்புவராயருக்குப பின் கி.பி. 1339 முதல் கி.பி. 1363 வரை ஆட்சி செய்த இராஜ நாராயண சம்புவராயன் தனது ஐந்தாவது ஆட்சி ஆண்டில் ஓர் விசாரணைக் குழு அமைத்தான். அது அங்கு நிலவிய பல்வேறு சீர்கேடுகளையும், முறைகேடுகளையும், ஊழியாகளின் மனக் குமுறலையும், அவர்களின வேலைப் பளுவையும், வேலைப் பாங்கையும் அவர்கள் பதவி உயர்வை வரிசைப்படுத்தவும் திட்டம் தீட்டியது. மேலும் அக்குழு திருவொற்றியூர் கோயில் வியாக்ரண மண்டபத்தில் கூடியபோது, மகேஸ்வரர்கள், கோயில் தக்காாகள், நாட்டார், கணக்காளர்கள், கைகோளார் போன்ற ஊழியர்கள் அக்குழுவிடம் முறையிட்டுப் பிரச்சினைகளைத் தீர்ததுக் கொண்டனர். அவ்வாறு கோயில் நிர்வாகத்தில் பதியிலார்களுக்கு உதவியாக இட பதியிலார் இருக்க ஆணையிடப்பட்டது. மேலும் தேவரடியார்கள் என்பார் சிறு, சிறு வேலையினின்றும் விலக்களிப்பட்டு பதியிலார்களின் வேலையைக் கவனிக்க ஆணையிடபபட்டது இடப்பதியிலார் என்பார் கோயில்களில் நடைபெறும் விழாக்களில் நடனமாட ஆணையிடப்பட்டது. இராஜ நாராயண சம்புவராயன் காலத்தில் அமைக்கப்பட்ட விசாரணைககுழு பதியிலாா தேவரடியார்களின் பதவியுயர்வை சரியாக முறைப்படுத்தாததால் அக்குழுவின செயலபாடுகளில அவர்களுக்கு நாட்டமில்லை. இருந்தபோதிலும் இவை காலப்போக்கில் பிரசசினைகளைச் சரிவர

18 Robert Sewell " Historical Inscriptions of South India" P 198 ARE No 18 of 1899 and 55 of 1892


தென்னிந்தியாவின்மீது
இஸ்லாமியப் படையெழுச்சிகள்
மாலிக்கபூர் —— முகம்மதுதுக்ளக்
எலிச்பூர்
தேவகிரி
யாதவ அரசு
காகதீய நாடு
வாரங்கல்
துவாரசமுத்திரம்
விரிஞ்சிபுரம்
ஹொய்சள அரசு
தஞ்சாவூர்
திருச்சிராப்பள்ளி
மதுரை
இராமேசுவரம்
பாண்டியர் நாடு
இந்தியப் பெருங்கடல்
இலங்கை
வீரதுல்(வீரதவளப்பட்டினம்)

தீர்க்காமையினால், அக்குழுவின் பரிந்துரைகள் ஊழியர்களின் பிரச்சினைகளைக் களையவில்லை. இப்பிரச்சினைகள் பற்றி கம்பணாவின் 1369ஆம் ஆணடுக் கல்வெட்டு தெளிவாகக் குறிப்பிடுகிறது. எனவே கம்பணா தனது நிதியதிகாரி வித்தாப்பரை பிரச்சினைகளைத் தீர்க்க விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டான். கி.பி. 1370ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கோயில் ஊழியர்கள் கொங்கராயர் தலைமையிலும் வியாக்கர்ண மண்டபத்தில் கூடி, பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதாகக் குறிக்கிறது.[19] இருந்தபோதிலும், கம்பணா, வித்தாபரின் தீர்ப்பு திருப்தியளிக்காததால் புதிய அதிகாரியை நியமித்து அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டான்.

தமிழகத்தில் முதல் மகாமண்டலேசுவரராக பதவியேற்ற குமார கம்பணா நிர்வாகத்தில் சீர்திருத்தம் கொண்டு வருவதற்கும், செம்மைப்படுத்துவதற்கும் பல்வேறு அதிகாரிகளை நியமனம் செய்து அவ்வதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தமிழகம் முழுமைக்கும் விஜய நகர ஆட்சி ஏற்படுவதற்கும் செழிப்படைவதற்கும் காரணமாக இருநதான். அவ்வாறு நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் குறிப்பிடத்தக்கவர்கள். மகாபிரதானி, தன்னாயகர், பொருளாளர், ஓலைநாயகம் - அடைப்பம், கஙகாணி, சுவாமி துரோக் காண்டன் போன்றோராவர்.

*சோமப்ப தன்னாயகர்:* இவர் குமார கம்பணாவின் ஆரம்ப காலம் தொட்டே தமிழகத்தின் நிர்வாகத்தில் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால் மகாபிரதானி, தன்னாயகர் போன்ற பொறுப்புகளைக் கவனித்து வந்தார். இவர் ஒரு அரசு அலுவலராக மட்டும் இலலாமல் மன்னர்களைப் போல் கோயில்களுக்குக் கொடை வழங்கிய வள்ளலாகவும் இருந்து கிராமத்தைக் கொடையாக கொடுத்ததை செப்டம்பர் 24, 1352 தேதியிட்ட திருவண்ணாமலைக்கு அருகிலுள்ள ஆய்வுக் கல்வெட்டு குறிபபிடுகிறது. தென்பெண்ணையாற்றின் வடகரையில் அமைந்துள்ள சோமநாதபுரம் என்னும் கோயில நிர்வாகம் சீராக நடைபெற, கோயிலுக்கும், மதச் சார்புடைய நிறுவனஙகளுக்கும் கொடுக்கப்படும் நிதியையும், கொடையையும் அன்பளிப்பையும் கண்காணிப்பவர்களாக மகா பிரதானிகள் செயல்பட்டனர்.

19 ARE NO 195 OF 1912

தென்னாற்காடு மாவட்டம் திட்டைக்குடி கல்வெட்டு, அத்தியூர் கிராமத்தை மகாபிரதானி என்பவர் கொடையாகக் கொடுத்த செய்தியைக் கூறுகிறது.[20] கி.பி.1361ஆம் ஆண்டு அச்சிறுபாக்கம் ஆவணம், காந்திபுரத்தில் செயல்பட்டு வந்த ஒரு தர்ம சத்திரத்திற்குக் கொடையாக நிலம் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது. இதை வழங்கியவர்கள் சோமப்பா என்பவரும், கோப்பனார் என்பவருமாவர்.[21]

கி.பி. 1363இல் கம்பணா தனது அதிகாரி சோமப்பாவிற்கு வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பிரதேசம் கிராமத்துக் கோயிலுக்கு சர்வமானிய நிலம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். மகாபிரதானி எனும் அலுவலர் அரசின் ஆணையை வழக்கத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தினார். ஊழியர்களின் நலன்கள் பேணப்பட்டு அவர்களுக்குத் தனித்தனி இருப்பிடங்கள் ஒதுக்கப்பட்டு அவர்களது பணிபோற்றப்பட்டு வந்தது. மேலும் ஆங்காங்கே கிடைத்த கல்வெட்டுகள் கோயில்களுக்காகவும் அவற்றின் திருப்பணிக்காகவும் நில அன்பளிப்புகள், பணம், மேலும் சில கிராமங்களின் வரிகள் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது.

பேராசிரியர் திருவேங்கடாச்சாரி, சோமப்பாவைப பற்றிக் குறிப்பிடும்போது அவர் ஒரு வடமொழிப் பண்டிதர் என்றும், கோயில் திருப்பணிகளில் ஈடுபாடு கொண்டவரென்றும் முல்பாகல் என்னுமிடத்தில் ஒரு சோமநாத ஆலயத்தைச கட்டியது மட்டுமல்லாமல் அவற்றின் திருப்பணிக்கும், செயல்பாட்டுக்கும் அறக்கட்டளைகளை அமைத்துக் கொடை பல வழங்கியதாகவும் கூறுகிறார். மேலும் கோலார் என்னுமிடத்தில் உள்ள கல்வெட்டு இவரது பணியைப் பற்றியும் அறநெறி உள்ளம் பற்றியும் நிர்வாகச் சீர்திருத்தம் பற்றியும் அவரின் தொண்டுள்ளம் பற்றியும், சேவை மனப்பான்மை பற்றியும் கம்பணாவின் அமைச்சராக இருந்த போது மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் விரிவாகப் புகழ்ந்துரைக்கிறது.

20 ARE NO 13 of 1903
21 ARE NO 250 of 1901

*கண்டாரகுளி மாரய்ய நாயக்கர் :* இவர் சோமப்ப நன்னாயகரின் புதல்வராவார். கம்பணாவின் நிர்வாகத்தில் மிக முக்கிய அதிகாரியாகச் செயல்பட்ட இவர், போர்ப்படைத் தளபதியுமாவார்.[22] விஜய நகர ஆட்சி தென்னகத்தில் பரவத் தடையாக முகமதியர்கள் மட்டுமல்ல, ஆங்காங்கே இருந்த இந்து அரசுகளும் எதிர்ப்பு தெரிவித்ததால அவர்களையும் வெல்ல வேணடியிருந்தது. விஜய நகர நாயக்கர்களுக்கும் சம்புவராயர்களுக்கு மிடையே நடைபெறற போரில் விஜய நகரப்படை இராஜ நாராயணச் சம்புவராயனைத் தோற்கடித்து அவர்களது கோட்டையாகிய இராஜ கம்பீரன் மலையை முற்றுகையிட்டது. விஜய நகர ஆட்சி, தொண்டை மண்டலத்தில் பரவ வழிவகுக்க முக்கிய காரணமாக இருந்த தளபதி கண்டாரகுளி மாரய்ய நாயக்கருக்கு 'அண்ண மங்கள பற்று' எனும் கிராமத்தைக் கொடையாகக் கொடுத்தது மட்டுமலலாமல் 'ஆரிய ஆரணழித்த' என்ற சிறப்புப் பட்டமும் அளித்துப் போற்றப்பட்டான்.[23]

வட ஆறகாடு மாவட்டம், மாடம்பாக்கம் எனும் இடத்திலிருந்து கிடைத்த கல்வெட்டு அழகு தமிழில் பத்துப்பத்து வரிகளாக அமைந்துள்ளது. இது சோழ, பாண்டிய மன்னர்களுடைய மெய்கீர்த்திகளுக்குச் சமமாகக் கருதப்படுகிறது. மிகமுக்கிய அதிகாரிகளைப் பற்றியும், முன்னணித் தலைவர்களைப் பறறியும் குறிப்பிடும் கல்வெட்டு கண்டார குளி மாரய்ய நாயக்கரின் திறமையையும், சேவையையும், பாராட்டிக் குறிப்பிடுகிறது. அதனைக் கீழே காணலாம்.

1. பூமேவு தாரளகம் பூண்டகத் திருமடந்தை தாமேவு மாலை புனை மார்பில் சிறந்திலங்க
2. சென்ற திசை வென்றுவரச் செயமடந்தை தோள்மேவ வென்றிபுனை
3. மேவலர்கள் அடி வணங்க மேகமலி வளகிரியம் உலகு புகழ் வாரிக்கார் புக்கணனும்
4. காலமுகில போல் வழங்கு கம்பணனும் கொண்டாட மண்டலீகர் அடிபரவ யாப்புவர் வளம்பாட

22 ARE NO 267 OF 1919
23 ARE NO 255 OF 1935

5. கண்டவர்கள் மனமகிழ காசியனியும் கலிதீரச் சம்பனரண் பலவழித்துச் சம்பணையும் கைக்கொண்டு

6. வெம்பரியை மேற்கொண்டு வெரும் உலகு தும்பறுத்து தனக்குநிகர் தானாக சோமய்ய தன்னயகன் மனங்களிக்க

7. மண்புரந்த மாரப்பன் முறைமை நெறிதவறாத மூவராய கண்டன் கரைமலியும் வேல்தடக்கை கனைகழல் கண்டாரகுளி

8. கருணைவழி முதலாகக் காணியாகப் பெற்ற அருணமனை மதிள் புடைசூழ் அண்ணமங்கலப் பற்றில்

9. வாளாண்ட நெடுமாலயன் அவ்வானவர் கோன் வந்திறைஞ்சும் குழந்தை வளம்பதியீசர் கோலமலர்த்தாள் வணங்கி

10. கண்ட கோபுரம்கண்டு கைதொழுவார் அண்டராகுவார் அனைவரும் தொழுவே [24]

மேற்கூறப்பட்ட கல்வெட்டுக் குறிப்பிலிருந்து முதலாம் புக்கரும், குமார கம்பணாவும் பாராட்டும் படியான கண்டார குளி மாரய்ய நாயக்கர், இராஜ நாராயண சம்பூவராயனைத் தோற்கடித்து, சிறைபிடித்து அவர்களின் கோட்டையாகிய இராஜ கம்பீரன் மலையை முற்றுகையிட்டு, தொண்டை மண்டலத்தில் விஜயநகர ஆட்சியைத் தழுவச் செய்த படைத்தளபதி மாரய்ய நாயக்கருக்கு கம்பணா, மூவராய கண்டன் எனும் பட்டத்தை அளித்துப் பாராட்டியதையும் அவனது தந்தை சோமப்ப தன்னாயகர் அவனை வரவேற்றுப் புகழ்ந்ததையும் அறிகிறோம். மேலும், குழந்தையாண்டார் கோயிலின் இரண்டாவது பிரகாரத்தில், கி.பி. 1363 இல் சம்புவராயரைத் தோற்கடித்து அதன் நினைவாகக் கோபுரம் கட்டிப் புகழ்மாலையணிந்ததும் அறியப்படுகின்றன.

1928 ஆம் ஆண்டு 236 ஆம் நாளினதான அக்காலக் கல்வெட்டு ஒன்று கண்டார குளி மாரய்ய நாயக்கர் தனது தந்தை சோமப்ப் தன்னாயகரை நினைவுபடுத்தும் பொருட்டும் தந்தையின்பால் கொண்ட அன்பிற்காகவும், மதிப்பிற்காகவும், தந்தையின் பெயரிலேயே சோமப்ப தன்னாயக சதுர்வேதி மங்கலம் என்ற சர்வ மானிய கிராமத்தை

24 ARE NO 268 of 1919

## இரண்டாம் ஹரிஹரர் ஆட்சியில் விஜயநகரப் பேரரசு ராஜ்யங்கள்.
(உத்தேசமானது)



COMPLIMENTARY COPY

ஏற்படுத்தினார் என்று கூறுகிறது. அதுவே தற்போது தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் தாலுக்காவில் சட்டம்பாடி எனும் பெயருடன் விளங்கி வருகிறது. மேலும் இக்கிராமத்தை 42 பங்காகப் பிரித்து இரண்டு பங்கை அக்கோயிலுக்கும் மீதமுள்ள 40 பங்கை 40 பிராமணர்களுக்கும் பங்கிட்டு வழங்க ஆணையிட்டதாகக் குறிப்பிடுகிறது. மேலும், திருக்கோயிலூர் ஆவணக் குறிப்பேடு அக்கோயிலின் தக்கார்கள் மாரய்ய நாயக்கரின் பல்வேறு கொடைகளை நினைவுபடுத்தும் நோக்கோடு ஒரு தென்னந்தோப்பை வழங்கினார். அவர் ஒரு சிறந்த போர்வீரர் மட்டுமல்லாது, படைத்தளபதியாகவும், இரக்ககுணம் படைத்த பண்பாளராகவும் விளங்கினார்.

*அனிகொண்டி வித்தாபர்:* குமார கம்பணாவின் மூன்றாவது முக்கிய அதிகாரியாவார். இவர் 'அனிகொண்டி' என்ற ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட பார்ப்பன சமுதாயத்தைச் சேர்ந்த அப்பாராசு என்பவரின் மைந்தராவர். [25] நிதி அதிகாரியாகச் செயல்பட்ட இவரை சிததூர் மாவட்டம் கூர்மாயி எனும் இடத்தில் காணப்படும் (செப்டம்பர் 8. 1361 ஆம் ஆண்டு) கல்வெட்டு சோமப்ப உடையார் பிரதானியாகவும் வித்தாபர் பண்டாரி நிதியதிகாரியாகவும் பணியாற்றியதாகக் குறிப்பிடுகிறது. [26] மேலும் பிப்ரவரி 1, 1370 திருபபாணங்காடு ஆவணம் ஒன்று வித்தாபரின் சக அதிகாரி கம்பியாழ்வார் கொங்கராயர் என்பவர் மூன்று நபர்களை கோயிலில் விளக்கேற்ற நியமித்து அக்கோயிலின் தினக்கால பூசைகள் செவ்வனே நடைபெற நெய், பால் போன்ற அபிஷேகப் பொருள்களைக் கொடுத்ததை எண் 24, 1906 ஆண்டைய கல்வெட்டு [27] குறிப்பிடுகிறது. மேலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் வில்லிவாக்கம், மதுராந்தகம் எனும் இடங்களில் ஜபான் 22, 1373 தேதியிட்ட கல்வெட்டு வித்தாபரின் பல்வேறு பணிகளைப் பற்றிக் கூறுகின்றது. [28] வித்தாபர் சமயப் பணியை மேற்கொண்டவர் என்ற கருத்தைப் பறைசாற்றும் சான்றாக மதுராந்தகம் சிவன் கோவிலுக்கு திருவிழா எடுத்தமையைக் குறிப்பிடுகிறது.

25 ARE NO 47 of 1928
26 ARE NO 309 of 1912
27 ARE NO 248 of 1906
28 Krishnaswamy Dr A "The Tamil Country under Vijaya Nagar" P 54

சீரங்கத்திலிருந்து மே 13, 1373 இல் எடுக்கப்பட்ட கல்வெட்டானது[29] விக்ரம சோழன் திருவீதி எனும் ஊரில் உள்ள கலமடல் ஒன்றையும் சில நில சுவாந்தார்களிடமிருந்து பெற்ற கொடை நிலங்களையும் கம்பணாவின் அனுமதியுடன் கோவிலுக்கு அளித்ததாகக் கூறுகிறது. எனவே வித்தாபர் சோமப்பாவிற்குப் பிறகு பிரதானியாக இருந்ததையும் மேலும் சீரங்கம் விக்ரகம் மேற்குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் பிரதிட்டை செய்யப்பட்டதையும் குறிக்கிறது. காஞ்சி கொம்ப நாதஸ்வர சுவாமி கல்வெட்டு ஒன்று (ஜூலை 18, 1374) வித்தாபர், கம்பணாவின் பிரதானியாகச் செயல்பட்டு கம்பணாவின் துணைவியார் ரமாதேவியின் பெயரில் ரமாதேவி நல்லூர் என்ற பிராமண கிராமம் அமைத்ததைக் குறிப்பிடுகிறது. வித்தாபர் கம்பணாவின் கீழ் பல முக்கிய பொறுப்புகளை வகித்ததால் கோயில் நிர்வாகத்தில் அப்போது ஏற்பட்ட சிக்கலைத் தீர்த்து, பல்வேறு வரிகளை வசூல் செய்வதற்கான அனுமதியைப் பெற்று அவற்றினின்றும் கிடைத்த வருவாயில் ஒரு பகுதியை கோயில் திருப்பணி செய்வதற்கு உதவினார்.

*கோபணாரிய கோபணாங்கா (Gopanarya Gopananga)* கோபணாரிய கோபணாங்கா கம்பணாவின் பிராமண அதிகாரியாவார், அவர் எப்போது நிர்வாகத்தில் சேர்ந்தார் என்பதற்கான ஆதாரங்கள் இல்லாவிட்டாலும் 1361 ஆம் ஆண்டு கல்வெட்டுகளில் இவரைப்பற்றிய குறிப்புகள் தென்படுகின்றன. இவர் கோயில் நிர்வாகத்தில் சக அதிகாரியாக சோமப்பாவிடம் பணியாற்றியவர், காஞ்சியிலுள்ள ஆசிரமத்திற்கு நிலங்கள் கொடையாகக் கொடுத்ததை அச்சிரபாக்கம் கல்வெட்டுச் சான்று பகர்கின்றது.[30] நிர்வாகத்தில் பங்கு கொண்ட கோபனா, மதுரை சுல்தான்களுக்கு எதிராக நடைபெற்ற படையெடுப்பில் படைத்தளபதிகளில் ஒருவராகப் பங்கு கொண்டு விஜய நகரப் படையின் வெற்றிக்குக் காரணமாக இருந்து தமிழகம் முழுமைக்கும் விஜய நகராட்சி ஏற்படக்காரணமாக இருநதவர்களில் குறிப்பிடத்தக்கவராவார்.[31] மேலும் தென்னாற்காடு மாவட்டம் பிரமதேய கிராமத்திலுள்ள ஏப்ரல், 5, 1363 நாளிட்ட கல்வெட்டு பிரமதேயம், இராஜராஜ சதுர்வேதி மங்கல சிவன்

29 MER No 47 of 1938
30 ARE NO 250 Of 1901
31 Nilakanta Sastri, K A " History of South India" P 266

கோயில் நிலங்களுக்கு கோபனா வரிவிலக்கு செய்ததைக் குறிப்பிடுகிறது. கோபனா தமிழகக் கோயில்களின் பொதுக் கண்காணிப்பாளராகச் செயல்பட்டதை, காஞ்சிபுரத்திலிருந்து எடுக்கப்பட்ட மூன்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

கம்பணாவின் மிகப் பழமையான கி.பி. 1372 ஆண்டு திருப்புலிவமை கல்வெட்டு அரசானி பாலை என்ற கிராமத்தை உக்கல் சபை விற்றதையும் வாடகை வசூலித்ததையும் கம்பணா மதுரை சுல்தான்களின் மேல் படை எடுத்ததையும் குறிப்பிடுகிறது.

கம்பணா காஞ்சிபுரத்தை ஆளும்போது ஆட்சியில் சில மாறுபாடுகளை மேற்கொண்டான். அவற்றில் குறிப்பிடத்தக்கது கி.பி. 12 ஆம் நூற்றாண்டு முதல் காஞ்சி இராஜ சிம்மேஸ்வரா கோயில் பொது வழிபாடு நிறுத்தப்பட்டிருந்ததற்கு முற்றுப் புள்ளி வைத்து, மீண்டும் வழிபாடு நடத்த வகை செய்தான்.[32] இச்செயல்பாட்டிற்குக் காரணமாக இருந்தவன் கம்பணாவின் கோயில் அதிகாரியாகச் செயல்பட்ட கோபணா. அவன் கோயிலின் சொத்துக்களைப் பாதுகாக்கவும் நிர்வாகம் செம்மையாகச் செயல்படவும் காரணமாக இருந்தான்.[33] மேலும் இராஜ சிம்மேஸ்வரா கோயில் நிலங்கள் அதிகாரிகளால் அனிகாத் தங்க வாதம் கோயிலுக்கு விற்பனை செய்யப்பட்டதை கோபணா கி.பி. 1364 இல் ஓர் ஆணை பிறப்பித்து விற்ற நிலத்தை மீண்டும் இராஜ சிம்மேஸ்வரா கோயிலுக்குக் கொடுக்கக் காரணமாக இருந்தான். மேலும் கோபணாவின் அனுமதியுடன் இராஜ சிம்மேஸ்வரா கோயில்நிர்வாகிகள் அக்கோயிலின் சன்னதித் தெருவின் வடக்கு வரிசை வீட்டுமனைகளை நூற்று ஐம்பது பணத்திற்கு விற்பனை செய்துள்ளதைக் குறிக்கிறது. எனவே அதிகாரிகள் ஆட்சியாளர்களின் ஒப்புதலுடன் கோயில்நிர்வாகத்தை நடத்தினர் எனத் தெரிகிறது. சிற்சில சமயங்களில் ஆட்சியாளர்களின் தலையீடும் இருந்தது. கம்பணாவின் ஆட்சிக் காலத்தில் இவன் செஞ்சியின் கவர்னராக நியமிக்கப்பட்டான். அப்போது முகமதியப் படையெடுப்பால் அங்கு

32 H.I S I P 196
33 S I I Vol I Nos. 86, 87, 88

வந்திருந்த சீரங்கத்தின் விக்ரகம், அங்கிருந்து எடுக்கப்பட்டு மறுபடியும் சீரங்கத்தில் நிறுவப்படக் காரணமாக இருந்தான். [34]

சீரங்கம், சீரங்க நாதரைப் பற்றிக் குறிப்பிடும் கோயிலொழுகு, குருபரம்பரை என்ற இரண்டு வைணவ நூல்கள், முகமதியர்களின் தமிழகப் படையெடுப்பையும் அவற்றால் சீரங்கநாத விக்ரகம் மாற்று இடத்திற்கு எடுத்துச் செயல்பட்டுப் பின் திருப்பணி செய்யப்பட்டதையும் கூறுகின்றன. அக்கோயிலுக்கு ஏற்பட்ட சேதத்தை விரிவாகப் புலப்படுத்தும் வேறு சான்றுகளும் உள்ளன. இரண்டு முறை முகமதியப் படை பாண்டியநாடு நோக்கிச் சென்றபோது இக்கோயில் தாக்குதலுக்குள்ளானது. முதலாவதாக, டில்லி சுல்தான் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக்காபூரின் படையெடுப்பால் சின்னா பின்னமாக்கப்பட்டு கோயில் சிலைக்குச் சேதம் விளைவித்ததையும், முகமது பின் துக்ளக் காலத்தில் இரண்டாவது தாக்குதலும் நிகழ்ந்த இத்தாக்குதல்களைப் பற்றியும் அவற்றால் ஏற்பட்ட விளைவுகள் பற்றியும் பிரபன்னாமிர்தம் என்ற வைணவ நூலும் சில தெலுங்கு நூல்களும் கூறுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது அச்சாரய சுக்தி முத்தாவலி என்பதாகும்.[35]

ஆனால டாக்டர் ஐயங்காரவர்கள் முகமதியர்களின் இரண்டாவது படையெடுப்பில் அதாவது முகமது பின் துக்ளக் காலத்தில் 1327-28 இல் தான் சீரங்கம் தாக்குதலுக்குள்ளானதாகக் கூறுகிறார்.

*சாளுவ மங்கு :* இவன கம்பணாவின் அதிகாரியாக தமிழக ஆட்சியின் செயல்பாடுகளைக் கவனிக்கும் பொறுப்பைப பெற்றிருந்தான். இவன் திறமையைப் பாராட்டி இவனது ஆற்றலை வெளிப்படுத்தும் நோக்கோடு விஜய நகரப்படைத தளபதியாக நியமனம் செய்யப்படடான். தமிழகத்தில கி.பி. 1362 இல் தொண்டை மணடல ஆட்சியாளர்களாகிய

34 H I S I P 198
Sastri K A N "A History of South India" P 266
Krishnaswamy Iyengar, S "South India and her Mohammadan Inbaders" P 116
35 Saletore, R N "Encyclopaedia of Indian Culture" P 1583

சம்பவராயர்களுக்கு எதிராக நடந்த போரிலும் மதுரைச சுல்தான்களுக்கு எதிராக 1371 இல் நடந்த போரிலும் இவரது பணி போற்றத்தக்கதாக இருந்தது. அப்போரில் மதுரை சுல்தானைக் கொன்றான். இவனது திறமையைப் பாராட்டி சாளுவ என்ற பட்டத்தைச் சூட்டினார். மேலும் இவன் கோபரை என்ற அதிகாரியுடன் நிர்வாகத்தில் சிறந்த ஒததுழைப்பைக் கொடுக்கும் நோக்கோடு சீரங்கம் விக்ரகத்தை மீண்டும் அங்கே வைத்துத் திருப்பணி செய்ய உதவியாக இருந்தான். அத்தோடு 80,000 மாடை தங்கத்தைக் கொடையாக அளித்தான். விஜயநகர இரண்டாவது வம்சத்து அரசனாக கி.பி. 1486 - 91 இல் ஆட்சி செய்த சாளுவ நரசிம்மன் என்பவனுடைய மூதாதையர்தான் சாளுவமங்கு. கம்பணாவின் நிர்வாகத்தில் அதிகாரியாக இருந்த விஜய சிங்க தேவா என்பவர் கோயில் நிர்வாகத்தைக் கண்காணிக்க, கங்காணியாகச் செயல்பட்டார். எல்லா வேலைகளையும் தனித்தனியாக ஆய்வு செய்ய கங்காணி என்ற ஒரு அதிகாரியும் இருந்தார்.

குமார கம்பணாவின் தமிழக ஆட்சி பற்றிய பல்வேறு கருத்துக்களை வரலாற்றாய்வாளர்கள் கூறிவிட்டுச் சென்றுள்ளனர். ஆனால் அது ஒரு முழுமையாகாத செய்தியாகத்தான் இருக்கிறது. ஆற்றல் மிகுந்த கம்பணா பல படையெடுப்புகளில் வெற்றி பெற்றுத் தமிழகத்தின் ஒரு சிறந்த ஆட்சியாளராக நின்று பல புதிய நிாவாக யுக்திகளை மேற்கொண்டு, குறிப்பாகக் கோயில் நிர்வாகத்தில் நிலவிய நிர்வாகச் சிக்கலைத் தவிர்த்து ஒரு நிலையான தனமையை ஏற்படுத்தினான். சுதந்திரமாகச் செயல்படட இவன், தன் தந்தை புக்கர் காலத்திலேயே கி.பி. 1341-இல் முல்பாகல் மாநிலத்தின முதல் மகாமண்டலேசுவரராக இருந்தார். கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழகத்தின் நிர்வாகத்தில் தனித்தன்மை வாய்ந்தவனாக இருந்தான்.

கம்பணா காலத்தைய கிடடத்துட்ட 132 கல்வெட்டுச் செய்திகளும் கி.பி. 1374 அக்டோபருக்கு முந்திய செய்தியைத்தான் குறிக்கின்றன. ஆனால் 17.12.1374 தேதியிட்ட திருவண்ணாமலைக் கல்வெட்டுதான் கடைசியாகக் கிடைத்த கல்வெடடு. கம்பணா உடையார்க்கு சிரார்த்த பூர்வமாக

அத்தியயனம் பண்ணச் சர்வமானிய இறையிலியாக விட்ட ஆடையூர் நாடு கீழப்பற்று அகரம் அதிகையான கம்பராயச சதுர்வேதி மங்கலம நஞ்சை புஞ்சை நாற்பாற்கொல்லைக்குட்பட [36] கம்பணாவின் மகன் சம்மண உடையார் தனது தந்தையின் ஆத்மா சாந்தியடைய திருவண்ணாமலை கோயிலில் இராஜ விபாதன் சன்னதியில் அர்ச்சனை செய்யவும், மந்திரங்கள் ஓதுவதற்கும் 17.12.1374 இல் நிலம் தானாக வழங்கியுள்ளதால் இத்தேதிக்கு முன்னர் அவன் இறந்திருக்க வேண்டுமென்று கூறலாம்.

*இரண்டாம் அரிகரன் (கி.பி. 1377 - 1404) :* முதலாம் புக்கருக்குப்பின் அவனது மூன்றாவது புதல்வனாகிய இரண்டாம் அரிகரன் விஜய நகர மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். [37] ஏறத்தாழ இருபத்தேழு ஆண்டுகள் ஆடசி செய்தான். இவனது ஆட்சி பற்றித் தெரிந்து கொள்ள உதவும் கல்வெட்டுகள் வட ஆற்காடு. [38] செங்கல்பட்டு [39] ஆகிய பகுதிகளில் காணக்கிடைக்கின்றன. இவ்வன் மகாராஜாதிராஜா என்ற பட்டம் சூட்டிக்கொண்டு தென்னகப் பகுதிகளை ஒருங்கிணைப்பு செய்து சிறப்புடன் ஆட்சி செய்ததை மேற்கூறிய கல்வெட்டுகள் கூறுகின்றன. மேலும் இவனது ஆட்சி தென்னகத்தில் பரவியிருந்ததை காஞ்சிபுரம், திருச்சி போன்ற பகுதிகளினின்றும் கிடைத்த கல்வெட்டுகளின் வாயிலாகவும் தெரிந்து கொள்ள முடிகிறது. இவனுக்கு விருபாச்சா, இரண்டாம் புக்கன், முதலாம்தேவராயன் என்ற மூன்று புதல்வர்கள் இருந்தனர். சிவமதத்தில் ஈடுபாடு கொண்ட இம்மன்னன் அவர்களின் குலதெய்வமாகிய விருபாச்சாவை வழிபட்டான். அமைதியை விரும்பும் அன்புள்ளத்தைக் கொண்ட இவன் அறவழியில் செயல்பட்டான். [40] தனது ஆட்சிக்காலத்திலேயே நிர்வாகப் பொறுப்பில் இருந்த புதலவன் விருபாச்சா தந்தைக்கு உறுதுணையாக இருந்தது மட்டுமல்லாமல் ஆங்காங்கு நடைபெற்ற புரட்சிகளை அடக்கி அமைதி காத்தான். மேலும் கி.பி. 1385இல் இலங்கை வரை படையெடுத்துச் சென்று அவ்வாட்சியாளனிடம் திறை

36 ARE NO 573 of 1902
37 ARE NO 6 & 13 of 1972
38 ARE NO 122 of 1921
39 ARE NO 671 of 1904
40 Robert Sewell, " A Forgotten Empire' P 50

பொருள் கொணர்ந்து தந்தையிடம் சமர்ப்பித்தான். மகனின் திறமையையும் ஆற்றலையும் உணர்ந்த இரண்டாம் அரிகரன் அவனை தமிழ் மாகாண ஆட்சியாளனாக நியமித்தான். எனினும் அவனது புதல்வர்களிடையே ஏற்பட்ட பூசல்களால் சில பிரச்சினைகள் எழுந்தன. கி.பி. 1404 – 1405 வரை ஒரே ஆண்டு ஆட்சி செய்தாலும் தன் புகழ் நிலை பெறும் வகையில் சாதனைகள் பல புரிந்தான்.

குறிப்பாக விருபாச்சாவின் காலத்தில் வெளியிடப்பட்ட சில சான்றுகள் நமக்கு அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. அவற்றுள் குத்தாலத்திற்கு அருகில் சுரைக்காவூரிலிருந்து எடுக்கப்பட்ட ஓர் செப்புப் பட்டயம் அவருடைய வமிசா வழியைப் பற்றிக் கூறுகிறது. மேலும் அவனின் தர்ம சிந்தனைக் கொள்கையைப் பறை சாற்றும் வகையில் சுரைக்காவூர் கிராமத்தையும் அதனுடன் 10 3/4 வேலி நிலத்தையும் விஜய சுதர்சனபுரம் என்ற பெயரில் பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்த பதினான்கு பிராமணர்களுக்குக் கொடுத்து தன் ஈகைக் குணத்தை வெளிப்படுத்திக் கொண்டான். [41] மேலும் ஆயிரம் பசுக்களைக் கொடுத்தும் சீரங்கம், சிதம்பரம் கோயில் விமானத்தைத் தங்கமுலாம் பூசியும் திருப்பணி செய்தான். இவன் ஒரு சிறந்த ஆட்சியாளனாக மட்டும் தன் புகழை நிலை நாட்டவில்லை. தன் இலக்கியத் திறமையால் 'நாராயண விலாசம்' என்ற சமஸ்கிருதக் காவியத்தையும் இயற்றினான். தனது போர்த்திறமையால் தொண்டை நாடு, சோழ, பாண்டிய நாடுகளை வென்று பெரும் பொருளைத் திறையாகப் பெற்று தலைநகரடைந்ததாக அவனது ஆலம்பூண்டிப் பட்டயம் கூறுகிறது. [42] இவன் சிறிது காலத்திற்குள்ளாகவே ஆட்சியினின்று நீங்கினான். அதன் பின் இவனது சகோதரன் இரண்டாம் புக்கன் கி.பி. 1404 முதல் 1406 வரை ஆட்சி செய்தபோது தலைநகரை அயலாரின் படையெடுப்பினின்றும் காக்க மதில் சுவர்களையும், கோபுரங்களையும் கட்டினான். இவனது சாதனையாகத் துங்கபத்திரை நதியில் கட்டிய அணையைக் குறிப்பிடலாம். இவனுக்கு அடுத்து இவனுடைய சகோதரன் முதலாம் தேவராயன் விஜயநகர மன்னனாக முடி சூட்டிக் கொண்டான்.

---

**41. பிள்ளை கே.கே. தென் இந்திய வரலாறு ப. 31**

**பேராசிரியர் அறுவர் சொற்பொழிவுகள் தமிழக வரலாறு ப. 229**

**42. அப்பாதுரை கா. தென்னாட்டு போர்க்களங்கள் ப. 325**

*முதலாம் தேவராயன் (கி.பி. 1406 - 1422)* : இம்மன்னனின் ஆட்சியைப் பற்றித் தெரிந்து கொள்ள உதவும் கல்வெட்டுகள், புதுக்கோட்டை[43] மற்றும் செங்கல்பட்டு[44] பகுதிகளில் கிடைக்கின்றன. இவை இவன் கி.பி. 1421 இல் ஆட்சி செய்ததைக் கூறுகின்றன. இவன் அமைதியுடன் சில ஆக்கப் பணிகளைச் செவ்வனே செய்து வந்தான். கலை, இலக்கியங்களை ஆதரித்துப் பேணி வந்த தேவராயன் இலக்கியவாதிகளுடன் ஆய்வுக் கருத்துக்களைப் பரிமாறி இலக்கிய வளர்ச்சிக்குப் பேருதவியாக இருந்தான். பல்துறை வல்லுனர்களின் கருத்தைப் பரிமாறிக் கொள்வதற்கு அவர்களை அரசவைக்கு அழைத்து உரையாடச் செய்து தன் தலைநகரைக் கலை மகளின் காட்சியிடமாகச் செய்தான். இவன் தாமே ஒரு சிறந்த போர்த் தளபதியாதலால் இராணுவத்தின் வலிமையை வெளிக் கொணரப் பல புதிய மாற்றங்களை உட்புகுத்தினான். மேலும் இராணுவத்தில் குதிரைப் படையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதில் சில மாற்றங்களை ஏற்படுத்தினான். உயர்சாதி எனப்படும் நீண்ட தாடிகளை உடைய அராபிய, பாரசீகக் குதிரைகளைப் போர்ச்சுகீசியரிடம் பெற்று தனியுரிமை வியாபாரம் செய்தான். மேலும் போர் நுணுக்கங்களையும், வீரம் செறிந்த போர் வீரர்களையும் துருக்கிய வில்லாளிகளையும் படையில் சேர்த்து மெருகூட்டினான். இவனே விஜய நகரப் படையின் சீரமைப்பிற்கு வித்திட்டவனாவான்.[45] சைவச் சமயக் கருத்துக்களைப் போற்றிய இவன் அவற்றை நடைமுறைப்படுத்தும் விதத்தில் பல கோயில்களைக் கட்டினான். இவனுக்குப் பின் இவனது புதல்வர்கள் சிறிது காலம் ஆட்சி செய்த பின்பு இரண்டாம் தேவராயன் என்பவன் பட்டத்திற்கு வந்தான்.

*இரண்டாம் தேவராயன் (கி.பி. 1422 - 1446)* : இரண்டாம் தேவராயன் பேரரசனாகப் பட்டமேற்றவுடன் சில எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இவனது ஆட்சி தமிழகத்தில் பரவலாக இருந்ததை

43 ARE No 158 of 1907
44 ARE No 355 of 1908
45 Venkata Ramanappa, M N "Outlines of South India History" P 164

உறுதிப்படுத்தும் கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. சேலம்[46] கோயமுத்தூர்[47] செங்கல்பட்டு[48] தென்னாற்காடு[49] மாவட்டம் போன்ற பகுதிகளில் இவன் ஆட்சி செய்ததைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. வட ஆற்காடு மாவட்டம் இவனின் ஆளுகையின் கீழ் இருந்ததைச் சத்தியமங்கலம் செப்புப்பட்டயம் உறுதிப்படுத்துகிறது[50] மேலும் தமிழகத்தின் தென் பகுதிகளான திருச்சி[51] தஞ்சை மாவட்டப் பகுதிகளும் இவனது ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதிகளாகும். இவன் தலைநகரில் புகழ் பெற்ற ஹசாரா ராமசாமி கோயிலைக் கட்டினான். இவனுக்கு முன் ஆட்சி செய்த மன்னர்களின் வரி விதிப்பு முறையால் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் பிரச்சினையில் தலையிட்டு இன்னல்களைக் களைய நடவடிக்கைகள் மேற்கொண்டான். மேலும் மக்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகள் என்னென்ன, அவற்றை ஒழுங்கீனம் இல்லாமல் எப்படி வசூலிப்பது என்பன போன்றவற்றை வரையறை செய்து அதைக் கோயில் சுவர்களில் பொறித்து நடைமுறைப்படுத்தினான். இவன்காலச் சமுதாயத்தில் இன்றுவரை அறிஞர் பெருமக்களால் முடிவு செய்ய முடியாத வலங்கை, இடங்கைப் பிரிவுப் பூசல்களும் நடைமுறையில் இருந்ததை அறிய முடிகிறது. இப்பிரச்சினைகள் சிறு சிறு பிரச்சினைகளாகவே இருந்தன, எனினும் அவை சமுதாயத்தில் அமைதியின்மையை உருவாக்கியதை அறிய முடிகிறது. [52]

இப்பிரச்சினை திருவிழா மற்றும் விசேஷ நாட்களில் உடைகள், அணிகலன்கள் அணிவதிலும் திருவிழாவில் வாத்தியங்கள் பயன்படுத்துவதிலும், அரசாங்கத்தில் சில உரிமைகளைப் பெறுவதிலும் எழுந்தது. இப்பிரச்சினையில் தலையிட்டு ஒழுங்குபடுத்தி, சமாதானப்படுத்தும் வகையில் இருசாராருக்குமிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அவ்வொப்பந்தத்தின்படி மக்களுக்கு இடர்ப்பாடாக,

46 ARE No 196 of 1910
47 ARE 581 of 1903
48 ARE No 200 of 1916
49 ARE No 72 of 1903
50 ARE No 133 of1919
51 ARE No 519 of 1904
52 Singaravel A "Socio-Cultural History of Thanjavur District as revealed by Tamil Literature "P 34

முறையற்ற வரி வசூல் நடைபெறா வண்ணமும், முறையற்ற வரி வசூல் செய்வோருடன் தொடர்புள்ளவர்கள் தண்டிக்கபடுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. [53] இரண்டாம் தேவராயரின் இறையருளையும், ஈடுபாட்டையும் அவர் சீரங்கம் ரெங்கநாதர் கோயிலுக்கு முறையாக வழிபாடு நடைபெறுவதற்கும், திருவிழா நடத்துவதற்கும் இனாம் கிராமங்கள் வழங்கிச் சிறப்பித்ததைத் தமிழ் மற்றும் வடமொழிக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. மேலும் அக்கோயில் நற்காரியங்களுக்குப் பயன்படவழிவகை செய்தார [54] இவன் கீழ் அதிகாரியாகச் செயல்பட்ட ரெங்கராஜா என்பவர் வட ஆற்காடு மாவட்டத்தில் புலிவளம் கிராமத்தில் மக்களுக்குப் பயன்தரும் வகையில் ஒரு குளம் வெட்டினார். [55] அப்துர் ரசாக் எனற பாரசீக அறிஞர் இவர் காலத்தில் இந்தியாவிற்கு வந்ததால் அவர் இம்மன்னனின் ஆட்சி பற்றிய சில குறிப்புக்களை விட்டுச்சென்றுள்ளார்; அவை விஜய நகர வரலாற்றிற்குத் தக்க சான்றுகளாக அமைந்துள்ளன. தேவராயனின் தலையாய பணியாக, நாட்டின் பாதுகாப்பைக் கருதி படைபலத்தைப் பெருக்கவும், சீர் திருத்தம் செய்யவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டதைக் கூறலாம். அதன்படி, முகமதியர்களின் போர்த் திறமையை உணர்ந்து ஏராளமானோர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனினும் அவர்கள் தங்களின் மதக்கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கவும், தொழுகை நடத்தவும், மசூதி, கட்டிக் கொள்ளவும் அனுமதியளிக்கப்பட்டனர் [56] அவர்களை ஊக்கப்படுத்த, திறமையின் அடிப்படையில் ஜாகீர் போன்ற உயர் பதவிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். [57] இதை உறுதி செய்யும் செய்தியாக இவனுடைய தஞ்சைக் கல்வெட்டு இவனுடைய தளபதி லக்கணாவை 'தென் சமுத்திரத்தின் பிரபு' (Lord of the Southern Ocean ) என்று சிறப்பித்து வர்ணிக்கிறது. [58]

53 ARE No 92 of 1918
54 ARE No 216 of 1917
55 Annual Report on Epigraphy 1937-38 P 101
56 Annual Report on Epigraphy 1933-34 P 38
57 E I C P P 1584
58 ARE No 100 of 1911

இரண்டாம் தேவராயனுக்குப் பிறகு அவனுடைய மகன் மல்லிகார்சுனா என்பவன் பட்டத்திற்கு வந்தான். அவனுக்குச் சில இன்னல்கள் நிகழ்ந்தன. விஜயநகரின் முதல் வமிசமாகிய சங்கம வமிசம் மல்லிகார்சுனா காலம் தொடங்கி அழிவுப் பாதையில், சென்று கொண்டிருந்தது. ஒருபுறம் ஓரிசாவின் ஆட்சியாளர்கள் விஜய நகருக்குத் தொல்லை கொடுத்தனர். மறுபுறம் சகோதரன் இரண்டாம் விருபாச்சா என்பவன் ஆட்சியைக் கைப்பற்ற முனைந்ததாலும் மல்லிகார்சுனாவால் அமைதியுடன் ஆட்சி செய்ய முடியவில்லை. தமிழகத்தில் விஜயநகர ஆட்சி இரண்டாம் அரிகரன் விருபன்ன உடையாா, முதலாம் தேவராயன், இரண்டாம் தேவராயன் ஆகியோரது காலத்தில் நிலை நாட்டப்பட்டாலும் பின்னால் ஆட்சிக்கு வந்த மல்லிகார்சுனா காலத்திலும், விருபாச்சா காலத்திலும் விஜயநகர மன்னர்களின் ஆட்சி இறங்குமுகத்தில் இருந்தது. மல்லிகார்சுனனின் ஆட்சித் துவக்கம் விஜயநகர மன்னர்களின் முதல் வமிச ஆட்சியின் முடிவுக்கு ஆரம்பம் என்றே கூறலாம். இக்காலக்கட்டத்தில் விஜய நகரின் பலவீனத்தைப் பயன்படுத்தி ஓரிசா மன்னன் கபிலேசுவர கஜபதி படையெடுத்தான். இப்படையெடுப்பு தமிழகத்தில் பெரும் குழப்பத்தை விளைவித்தது. இப்படையெடுப்பே கல்வெட்டுக்களில் 'ஒட்டியன் கலாபை' என்று கூறப்படுகிறது. கபிலேசுவர கஜபதி கிழக்கு கங்க மன்னனின் கீழ் அமைச்சராகப் பணிபுரிந்தவனாவான். அம்மன்னனின் முடிவுக்குப்பிறகு அந்த ராஜியத்தைப் பிடித்த கஜபதி சூரிய வமிசத்தை கி.பி. 1434-35 இல் ஓரிசாவில் தோற்றுவித்தவனாவான்.[59] கபிலேசுவர கஜபதியின் ஆட்சியின் துவக்கமும் விஜய நகர மன்னர்களின் ஆட்சியின் இறக்கமும் ஒரே கால கட்டத்தில் நிகழ்ந்ததெனலாம்.

கபிலேசுவரன் தம் ஆட்சியின் துவக்கத்தில் விஜய நகரின் வட பகுதி மீது படையெடுத்தான். ஆனால் அப்போது விஜய நகரின் மன்னனாக இருந்த இரண்டாம் தேவராயன் அவனைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான். ஆயினும் இரண்டாம் தேவராயரின் மறைவுக்குப்பின் கபிலேசுவரன் சிறிது சிறிதாக மல்லிகார்சுனா காலத்தில் படையெடுத்து விஜய நகரின சில பகுதிகளைத தம்மாட்சியுடன் இணைத்துக் கொண்டான். இச்செய்தியை

59 Banerji R.D. "History of Orrisa" Vol.I.PP 287-288

கி.பி. 1470-71 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இபபடையெடுப்பின் விளைவாக, தமிழகத்தில் பல கோயில்கள் அழிக்கபபட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை அரகண்ட நல்லூர் சிவபெருமான் கோயிலும், செஞ்சிக்கருகில செம்பேடு என்ற இடத்திலிருந்த சுந்தரேசுவரர் கோயிலும் ஆகும். இவை முழுமையாக அழிக்கப்பட்டன. மேலும் அக்கோயிலில் இருந்த செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கோயில் மண்டபங்கள் நாசமாக்கப்பட்டன. மக்கள் கிராமங்களினின்றும் விலகியதால அவை பாலைவனமாகக் காட்சியளிததன. நீர்ப்பாசனக் கால்வாய்கள் சேதப்படுத்தப்படடு உபயோகமற்றுப் போயின. இப்படையெடுபபை யார் முன்னின்று நடத்தியது என்பதில் அறிஞா பெருமக்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் கபிலேசுவர கஜபதிதான் படையெடுப்பு நிகழ்த்தியதாகக் கூறுகின்றனா. ஆனால் என். வெங்கட ரமணய்யா உள்ளிட்ட பல அறிஞர்கள் கபிலேசுவர கஜபதியின் மகன் குமார கம்பிரா அல்லது குமார கம்பிராவின மகன குமார கபிலேசுவர மகாபத்ராதான் இப்படையெடுப்பை முன்னினறு நடத்தியதாகக் கூறுகின்றனர். தமிழகத்தில் சில பகுதிகளில் பெரும் நாசம் செய்து, இந்து மதத்கோயில்களை இநது சமயத்தை சேர்ந்த மன்னாகளே கொள்ளையிட்ட ஒரு வினோத நிகழ்ச்சியே ஒட்டியன் கலாபையாகும்.

மல்லிகார்சுனா தன் தந்தை இரண்டாம் தேவராயரின் ஆட்சிக் காலத்திலேயே அரசின் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததால் தந்தையைப்போல பட்டங்கள் வென்றான். யானை வேட்டையில் தேர்ச்சி பெற்றிருநததால 'கஜவேட்டை காரா' என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றிருந்தான. அரசுக்குப் புததுயிர் ஊட்டிச் சிறப்புடன் செயல்படவும். மக்களிடையே நல்லெணணததை ஏற்படுததவும் சுமையாக இருந்த சில வரிகளைத் தள்ளுபடி செயதான். மல்லிகார்சுனாவின் ஆட்சியைப் பற்றி வரையறை செயயும் கல்வெட்டுகள் வட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களிலும்[60] தென்னாற்காடு[61] தஞ்சை[62] திருசசி[63] காஞ்சிபுரம்[64]

60 ARE No 102 of 1923
61 ARE No 154 of 1990
62 ARE No 524 of 1920
63 ARE No 474 of 1908
64 ARE No 146 of 1901

சென்னை [65] போன்ற பகுதிகளிலும் கிடைத்துள்ளன. இவனுடைய அமைச்சராக இருநத சாளுவ திருமலை, அரசின் பல செயல் திட்டங்களுக்கு உறுதுணையாக இருநது வந்தான். [66] இவன் தஞ்சைப் பகுதியில் அரசுக்குச் சேர வேண்டிய வரிகளை வசூலித்துச் செலுத்தினான். [67] கி.பி. 1463 இல் மல்லிக்ார்சுனாவின் ஒரு வயது மகனுக்குப் பெயர் சூட்டும் விழா அரசின் எல்லாப்பகுதிகளிலும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின் சிறப்பம்சமாக நில மானியம் வழங்கப்பட்டது. இவன் கி.பி. 1465 இல் இறந்ததால் ஒரு வயதே நிரம்பிய ராஜசேகரர் பதவியேற்க முடியாததால் இவனுடைய சகோதரன் இரண்டாம் விருபாச்சா என்பவன் மன்னனாகப் பதவியேற்றான். [68] இவன் கி.பி. 1465 முதல் 1485 வரை ஆட்சி செய்தான். பேரரசில் நிலவிய அமைதியின்மையாலும், ஒழுங்கின்மையாலும் ஆங்காங்கு விஜயநகரின் குறுநில ஆட்சியாளர்கள் எலலாம் தனிச்சுதந்திரம் பெற்றவர்களைப் போல் தலைப்பட ஆரம்பித்தனர். இவனுக்கு வீரபிரதாப தேவராயர் என்ற மற்றொரு பட்டமும் உண்டு. இவனது ஆளுகையின் கீழ் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தஞ்சாவூர் போன்றவை இருந்தன. [69] அரசின் பொறுப்பிலிருந்த சாளுவ நரசிம்மன் என்பவன் ஆட்சியைக் கைப்பற்றும் எண்ணம் கொண்டு செயல்பட்டான். எனினும் விருபாச்சனை அவனது மூத்த மகன் கொன்று விடவே இரண்டாவது மகன் புருடராயர் ஆட்சிக்கு வந்து தாக்குப்பிடிக்க முடியாததால் ஆட்சிப் பொறுப்பிலிருந்த சாளுவ நரசிம்மன் அவனுக்கு உதவியாக இருப்பதுபோல் நடித்து விஜய நகரின் இரண்டாவது வமிசமாகிய சாளுவ வமிசத்தைப் பதவியில அமாத்தினான்.

65 H I S I P 220
66 ARE No 73 of 1888
67 S I I Vol II P 109, 117
68 H I S I P 220
69 ARE No 613 of 1919, 10 ARE No 39 of 1890,
ARE No 487 of 1912

*சாளுவ வமிசம் (கி.பி. 1485-1503) :* விஜயநகர ஆட்சியின் முதல் வமிசமாகிய சங்கம வமிசத்தில் கடைசி மன்னனாக இருந்தவன் இரண்டாம் விருபாச்சனின் மகன் புருடராயர் என்பவனாவன். இம்மன்னனின் ஆட்சியுடன் முதல் வமிசத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன் பின்பு ஆட்சிக்கு வந்த விஜய நகரின் இரண்டாவது வமிசமாகிய சாளுவ வமிசம் கி.பி. 1485 முதல் 1503 வரை ஆட்சி செய்தது. இவ்வாட்சியை அமைத்தவன் சங்கம வமிசத்தின் நிர்வாகப் பொறுப்பில் ஈடுபாடு கொண்டு அவ்வமிசத்தின் இறுதிக் காலத்தில் சந்திரகிரியின் குறுநில ஆடசியாளனாகச் செயல்பட்ட சாளுவகுண்டா என்பவனின் மகன் சாளுவ நரசிம்மன் என்பவனாவான். சங்கம வமிசத்தின் இறுதியில் நிலவிய பலகீனத்தைப் பயன்படுத்தி சாளுவ வமிசத்தின் ஆட்சியை நிறுவினான்.[70] முதல் வமிசத்தில் அரசுக்கு ஏற்பட்ட பலகீனத்தைச் சரிக்கட்டும் விதத்தில் இழந்த நாடுகளை மீட்டுப் பலம் பொருந்திய ஒரு அரசனாகச் செயல்பட முனைந்தான். இவனுடைய ஆட்சி பற்றிய குறிப்புகள் தென்னாற்காடு, செங்கல்பட்டு, திருப்பதி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.[71] எனினும், சாளுவ நரசிம்மனுக்கு உறுதுணையாக இருந்தவன் துளுவ வமிசத்தைச் சேர்ந்த ஈசுவரனே. மேலும் இவனது மகன் நரச நாயக்கனே சாளுவ நரசிம்மனின் ஒப்பற்ற படைத் தலைவனாக விளங்கினான்.[72] சாளுவ நரசிம்மனின் மற்றொரு படைத்தளபதி மதுரையில் நாயக்கர் ஆட்சியை அமைத்த விசுவநாதனின் தந்தை நாகம நாயக்கனாவான். இவன் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி திருப்பதி வெங்கடேசுவர பெருமானுக்கு பூசை நடதத, பூமாலையால் அலங்கரிக்க பூங்காவனமும், தினந்தோறும் இரண்டு நெய்விளக்குகள் ஏற்றுவதற்கு திரடாம்பாடி கிராமத்தையும் இனாமாகக் கொடுத்து அக்கிராம வருவாயிலிருந்து செலவுகள் செய்யப்பட்டன.[73]

70 Krishnaswami Iyengar "A Little Known Chapter of Vijaya Nagar History" P 49
71 ARE NO 1 of 1905
72 ARE NO of 8 of 1922
73 ARE NO 736 of 1909

*கோனேரி ராஜன் :* விஜய நகர மன்னாகளான மல்லிகார்சுனா மற்றும் விருபாச்சாவின் ஆட்சிக் காலங்களில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, பகுதிகளை சாளுவ திருமலைய்ய தேவா என்பவன் நிர்வகித்து வந்தான். தஞ்சைக்கருகிலுள்ள பட்டிசுவரத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சோழ மண்டலத்தின் மகாமண்டலேசுவரனாக இவனைக் குறிப்பிடுகிறது. கோயிலொழுகு சான்று சாளுவ திருமலையயனுக்குப்பின் கோனேரி ராஜன் என்பவன் திருச்சிராப்பள்ளிச் சீமைக்கு ஆளுநராக இருந்ததைக் கூறுகிறது. மேலும் தமிழகத்தில் கண்டெடுக்கப்பட்ட பல கல்வெட்டுக்கள் கோனேரி ராஜனைப் பற்றிய செய்திகளை அளிக்கின்றன. இவன் சீர்காழியிலிருந்த சிவ பெருமானின் கோயிலுக்குச சர்வமானியமாக, நிலங்கள் வழங்கியதாக இக்கல்வெட்டுக்களில் ஒன்று கூறுகிறது. இக்கல்வெட்டுக்களின் கூற்றுப்படி கோனேரி ராஜன் வாசவ சங்கராவின் புதல்வனாவான். மேலும் 'பத்துக்கட்டாரி' காஞ்சிபுர வர்தேஷ்வரா போனற பல பட்டப் பெயர்களைப்பெற்றிருந்தான். திருச்சிராப்பள்ளிச் சீமையில் ஆளுநராக இருந்த போதிலும், கோனேரி ராஜன் சாளுவ நரசிம்மனையோ அல்லது இம்மடி நரசிம்மனையோ தன் மேலதிகாரியாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவன் ஒரு சுதந்திர மன்னனாக இருந்திருக்க வேண்டும். ஏன் எனில், சாளுவ நரசிம்மனும், நரசிம்ம நாயக்கனும் ஆட்சிக் குழப்பங்களில் மூழ்கியிருந்த தருணத்தில் செல்வாக்கைப் பயன்படுத்தி கோனேரி கி.பி. 1485 -இல் மன்னனானான்[74] கோனேரி ஒரு சிறந்த சிவ பக்தன், சிவபெருமானின் கோயில்களுக்குப் பல நிவந்தஙகளை வழங்கிச் சைவ சமயத்தை ஆதரித்தான். ஆனால வைணவர்களைப் பல இக்கட்டுகளுக்கு ஆளாக்கினான் என்பது தெளிவு. அதற்கு ஆதாரமாக, முன்பிருந்த மன்னர்கள் வைணவர்கள் செலுதத வேணடியதில்லை என்று அறிவித்த வரிகளை இவன் செலுததச் செய்தான. இதனால் கோபமுற்ற வைணவர்கள் நரச நாயக்கனின் உதவியை நாடினா.[75] ஆயினும் காவிரியின் தென்கரையில் சோழ மண்டலத்தில இரண்டு கிராமஙகளை தன பெயரில் தினப்பூசைகள் நடைபெற திருப்பதி தேவஸ்தானத்திற்குக் கொடையாகக் கொடுத்தான்.[76]

74. இராச சேகர தங்கமணி, புரட்சித்தலைவன் கோனேரி ராயன், பதினைந்தாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை தொகுதி 3. ப. 201

75 I A Vol 40,P 142

76 T D I VOl II NO 369 T T

மேலும் தன்னுரிமை பெற்றவனை போல் ஆட்சி செய்த கோனேரி ராஜனைப் படைததலைவன் நரசநாயக்கன் பெரும்படையுடன் தாக்கினான். இபபோரில் தோற்கடிக்கபபட்டு அவனது ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பிறகு கோனேரி ராஜன வைணவர்கள் மீது விதித்திருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. சீரங்கம் கோயிலில் இருந்து கைப்பறறப்பட்ட நிலங்களும் திருபபியளிக்கப்பட்டன. இவனது ஆடசி கி.பி. 1495இல் முடிவுற்றது.

சாளுவ நரசிம்மனின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாத விஜய நகரக் குறுநில ஆட்சியாளர்களும், மாகாண ஆட்சியாளர்களும் அரசுக்குக் குழபபத்தை விளைவித்த வண்ணம் இருந்தனர். ஆயினும், அவ்வப்போது படையெடுததுப் புரட்சிகளை ஒடுக்கி அமைதியை நிலைநாட்டினாலும் கி.பி. 1490 இல் இவன் இறநததால் மீண்டும் விஜய நகர அரசு குழப்ப காலத்தைச் சநதிக்க வேண்டிய நிர்பந்தம ஏற்பட்டது. படைத்தளபதியாகச் செயலபட்ட நரச நாயககர் இந்த இடற்பாட்டை எதிர்நோக்க வேண்டியிருநதது. எனவே இச்சூழ்நிலையில் சாளுவ நரசிம்மனின் மூத்த புதல்வனான சாளுவ திருமலாவை மன்னனாக முடிசூட்டச் செயதான். ஆனால், இளவரசன் திருமலா அரசியல் சூழ்ச்சியின் காரணமாகப் பதவியேற்ற ஓராண்டிலேயே கொலையுணடான். சாளுவ திருமலாவிற்குப் பின் அவனது சகோதரன் இம்மடி நரசிம்மன் என்பவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். ஆனால், சிறிது காலத்திற்குள்ளாகவே அரசியல் சூழ்ச்சியின் காரணமாக நரச நாயக்கனுக்கு எதிராகச் செயல்பட்டான்.

இம்மடி நரசிம்மன் நீண்ட நாள் ஆட்சி புரியவில்லை. எனினும் கி.பி. 1501 இல் திருச்சி, சேலம் பகுதிகளில் ஆட்சி புரியும்போது, தம்மய தேவா என்றும், செங்கல்படடில ஆட்சி புரியும்போது தர்மராயா என்றும், கல்வெடடுக்களில் குறிக்கப்படடுளளான்.[77] எனவே அரசாட்சியில நாட்டம் கொண்ட அமைசசர் நரச நாயக்கன், ஆட்சியாளன இம்மடி நரசிம்மனைத் துரதிருஷ்டவசமாகக் கொன்று விட்டு விஜயநகரை ஆட்சி செய்ய

77 ARE NO 155 of 1905, ARE No 664 of 1909, ARE No 173 of 1919

மூன்றாவது வமிசமாகிய துளுவ வமிசத்தை நிறுவினான். [78] ஆனால், நரச நாயக்கன் இம்மடி நரசிம்மனுடைய மரணத்திற்குக் காரணமல்ல, வீர நரசிம்மன் என்ற நரச நாயக்கனுடைய புதல்வன்தான் மன்னனைக் கொனறு தன் வமிசமாகிய துளுவ வமிசத்தை நிலைநாட்டினான் என்பது அறிஞர்களின் தற்போதைய கருத்தாக இருக்கிறது.

*துளுவ வமிசம் :* விஜய நகரின் முதல் இரண்டு வமிசங்களின் ஆட்சிக்குப் பிறகு மூன்றாவது மரபாகிய துளுவ வமிசம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. இவ்வமிசத்தை அரசாட்சியில் அமர்ததியவன் நரச நாயக்கன் என்பவனாவான். இவன் முந்தைய வமிச ஆட்சியில் படைத்தளபதியாகச் செயல்பட்டு அரசுக்கு உறுதுணையாக இருந்தவன். இந்த துளுவ வமிச ஆட்சியின் துவக்க காலத்தில் தெற்கே இருநத பகுதிகளை ஒருங்கிணைப்பு செய்யும் விதத்தில் சோழப்பகுதியான சீரங்கப்பட்டணத்தைப் பேரரசுடன் இணைத்தான். மேலும் அங்கு வெற்றியின் நினைவாக ஒரு தூண் எழுப்பினான். [79] இதன் பிறகு மேலும் தெற்கு நோக்கிச் சென்று கி.பி. 1480 முதல் மதுரை மற்றும் தென்காசிப் பகுதிகளை ஆட்சி செய்த மானபூசனிடமிருந்த பாண்டிய தேசத்தைக் கைபபற்றினான். மான பூசன் என்பவன் சடையவர்மன் குலசேகர பராக்ரம பாண்டியன் என்பவனே. அந்நிகழ்ச்சிக்குப் பிறகு விஜயநகரின் மானியக்காரனாகவும் (Feudatory) கப்பம் கட்டியாகவும் செயல்பட்டான். நரச நாயக்கன் கி.பி 1503 இல் இறந்ததும் அவனது மூத்த மகன் வீர நரசிம்மன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். வீர நரசிம்மனின் ஆட்சி காலத்தில் வட ஆற்காடு பகுதியில் முப்பத்து மூன்று வகையான வரிகளை விதித்தான். இதில முப்பத்து இரண்டு வகை வரிகளைக் கோயில் பராமரிப்புச் செலவுகளுக்காக அந்நிர்வாகமே வசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தது. எஞ்சிய ஒரு வகை வரி மன்னனுடைய கட்டுப்பாட்டில் வசூலிக்கப்படடு, நிர்வாகச்

78 H I S I P 236, EP Ind Vol VIIP 790
79. EP Ind Vol XIII P 131

சிக்கல்கள் தவிர்க்கப்படடன.[80] வீர நரசிம்மன் கோயில்களுக்குத் தாராளமாகக் கொடை வழங்கிச் சிறப்பித்துள்ளான். இராமேஸ்வரம், சீரங்கம், கும்பகோணம், சிதம்பரம் காஞ்சிபுரம் போன்றவை அவற்றிற்கு ஆதாரமாக உள்ளன. [81] இவனது ஆட்சி திருச்சி, சேலம், காஞ்சிபுரம் தென்னாற்காடு பகுதிகளை உள்ளடக்கி இருந்தது. [82]

நரச நாயக்கனுக்கு மூன்று மனைவிமார்கள். அவர்களில் முதல் மனைவியான தீபாம்பாளுக்கு மகனான வீர நரசிம்மனும், இரண்டாவது மனைவி நாகல தேவிக்கு மகனும் விஜயநகர ஆட்சிக்கு சரித்திரத்தில் நீங்கா இடத்தை ஏற்படுத்திய வருமான கிருஷ்ண தேவராயரும், மூன்றாவது மனைவியாகிய உமாம்பிகா தேவிக்குப பிறந்த அச்சுத தேவராயரும், ரங்கராயரும் விஜயநகர வரலாற்றில குறிப்பிடதக்க இடத்தைப் பெற்றனர். வீர நரசிம்மனின் இறுதிகால கட்டத்தில் விஜய நகரத்தை ஆளுவதற்கு அவனின் ஒன்று விட்ட சகோதரன் கிருஷ்ணதேவராயரை நியமித்தான். [83] எனவே கி.பி. 1509 இல் கிருஷண தேவராயர் விஜய நகர மன்னனாக முடிசூட்டிக் கொண்டான். இவரது இருபது ஆண்டுகால ஆட்சி விஜயநகர ஆட்சியின் திருபபுமுனையாக அமைந்துள்ளது.

80 ARE NO 353, 355, 395, 396 of 1912
81 "A Little known Chapter of Vijayanagar" P 73
82 ARE NO, 147 of 1914, ARE No, 408 of 1913, ARE No 601 of 1919
83 Sastri, K A N "A History of South India" P 276

## 4

# கிருஷ்ண தேவராயர்

விஜய நகரத்தை ஆண்ட நான்கு அரச மரபுகளில் மூன்றாவது மரபாகிய துளுவ மரபு கி.பி. 1503 முதல் 1570 வரை ஆடசி செய்தது. அம்மரபில் தோனறிய கிருஷணதேவராயர் கி.பி. 1509 முதல் 1529 வரை ஆட்சி செய்தார். இவர் விஜய நகர அரசின் படைத் தளபதியாகவும், நிர்வாகியாகவும் விளங்கிய நரச நாயக்கர் என்பவரின் மகனாவார். இளமையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இவர் தனது ஆற்றலையும், திறமையையும் வெளிப்படுத்துவதில கவனமாகச் செயல்பட்டார். இவரின் திறமையை அயல்நாடுகளில் இருந்து விஜயநகருக்கு விஜயம் செய்த வெளிநாட்டவரின் குறிப்பிலிருந்து காணலாம். குறிப்பாக போர்ச்சுக்கீசிய அறிஞர் டோமின்கோபைஸ் இவரது ஆட்சி பற்றியும், விஜய நகரின் செல்வச் செழிப்புப் பற்றியும் விட்டுச் சென்ற குறிப்புகள் தற்போதைய வரலாற்று விதகர்களுக்கு அரிய கருவூலமாகத் திகழ்கின்றன. கிருஷ்ண தேவராயரின் தாய்மொழி கன்னடமாக இருந்தாலும் அவரது தெலுங்குப் படைப்பாகிய 'ஆமுக்த மால்யத' ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாகும். இலக்கியங்களை வளர்ப்பதற்காக அரசவையில் புலவர் பெருமக்களுக்குப் பிரதிநிதித்துவமளித்தார். அதற்கு எடுத்துக்காட்டாக தெலுங்குக் கவிஞரான அல்லசானி பெத்தண்ணா, திம்மண்ணா போன்றவர்கள் அரசவைப் புலவர்களாக விளங்கினர்.[1] விஜயநகரின் சிறப்புக்கும் மேன்மைக்கும் இவரது பணி அளப்பரியது என்றால் மிகையாகாது. கட்டடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நாடகம், நாட்டியம் போன்ற பலகலைகளின் வளர்ச்சியை அவர்காலக் கோயில்களில் காணலாம். இவர் தனக்கு முன் ஆடசி செயதோரின் கலைகளை மெருகூட்டி, பின்னால் ஆட்சி செய்தவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.[2] இவரது பல்துறை ஞானத்திற்கு இவைகளே சான்றாக அமைந்துள்ளன.

1. பிள்ளை, டாக்டர். கே.கே. தென்னிந்திய வரலாறு, தொகுதி II பக்.35, 36
2 Soletore R N EIC P 1581



76
80
அச்சுத தேவராயர் காலத்தில்
விஜயநகரப் பேரரசின் ராஜ்யங்கள்
(உத்தேசமானது)
கிருஷ்ணா நதி
16
கொண்டவீடு
ராய்ச்சூர்
குத்தி ராஜ்யம்
கந்தன வோலு ராஜ்யம்
ஸ்ரீசைலம்
முதுகல் ராஜ்யம்
ஹம்பி
ஹஸ்தினவதி
துளு ராஜ்யம்
பெனு கொண்டா ராஜ்யம்
உதயகிரி ராஜ்யம்
ஸ்ரீரங்கப் பட்டின ராஜ்யம்
சந்திர குத்தி
படைவீடு ராஜ்யம்
சந்திரகிரி ராஜ்யம்
பரகூர்
12
முல்பாகல் ராஜ்யம்
திருவதிகை ராஜ்யம்
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்
கள்ளிக்கோட்டை
திருவடி ராஜ்யம்
சோழ ராஜ்யம்
பாண்டிய ராஜ்யம்
கொல்லம்
தென்காசி பாண்டியர்
8
இந்துப் பேராழி
இலங்கை


கிருஷ்ணதேவராயர் காலத்தில்
பாமினி அரசுகளும் விஜயநகரப் பேரரசும்
76
80
84
20
16
12
8
பீரார் அரசு
தேவகிரி
ஆமதுநகர்
கோதாவரி நதி
கோல்கொண்டா அரசு
கலிங்கம்
வாரங்கல்
பீடார்
ஆமதுநகர் அரசு
கோல்கொண்டா
பீடார் நாடு
கோவில்கொண்டா
கொண்டபள்ளி
கிருஷ்ணா
ராய்ச்சூர்
பாங்கல்
விஜயவாடா
ஸ்ரீசைலம்
மசூலிப்பட்டினம்
பெல்காம்
முதுகல்
வினுகொண்டா
கோவா
தார்வார்
கர்நூல்
இங்கோல்
விஜயபுரி அரசு
ஆதோனி
குத்தி
விஜயநகரம்
உதயகிரி
கண்டிக்கோட்டை
சித்தவட்டம்
ஹோனவார்
நெல்லூர்
பெனுகொண்டா
பட்கல்
பழவேற்காடு
பரகூர்
ஸ்ரீரங்கப்பட்டினம்
காஞ்சிபுரம்
பாலாறு
சென்னை
சாந்தோம்
மங்களூர்
செஞ்சி
செங்கல்பட்டு
மைசூர்
திருவண்ணாமலை
புதுச்சேரி
கண்ணனூர்
திருக்கோவலூர்
விழுப்புரம்
சிதம்பரம்
கள்ளிக்கோட்டை
ஸ்ரீரங்கம்
காவிரி
நாகப்பட்டினம்
திருச்சி
தஞ்சை
அரபிக் கடல்
வங்காளக் குடாக் கடல்
கொச்சி
மதுரை
வைகை
ஸ்ரீவில்லியுத்தூர்
இராமேஸ்வரம்
தென்காசி
கொல்லம்
கன்னியாகுமரி
இலங்கை

இவரது தந்தை நரச நாயக்கருக்கு தீபாம்பா, நாகாம்பா என்ற இரு மனைவிகள் இருந்தனர். வீர நரசிம்மன், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர், சதாசிவராயர் போன்றோர் அவரது புதல்வர்களாவர். வீர நரசிம்மராயருககுப் பின் கிருஷ்ண தேவராயா படடததிற்கு வந்தார். இவருக்கு திருமலாதேவி, சின்னாதேவி, அன்னபூர்ணா என்ற மூன்று மனைவியர் இருந்தனர். திருமலாம்பா, மோகனாங்கி என்ற இரு மகள்களும் திருமலராயர் என்ற மகனும் இவரது வாரிசுகளாகும. ஆனால் தனது மகனை இளவயதிலேயே இழந்தார். இவரின் திறமைக்காக இரகுதா மல்லா, இராஜாதி ராஜ பக்ஷி, சம்புவராயஸமதாபனாசாரியா, கல்யாண புராவராதிஸ்வரா, சாளுக்கிய ராய சக்ரவர்த்தி போன்ற விருதுகள் வழங்கப்பட்டன.[3]

கிருஷ்ண தேவராயர் திறமை வாய்ந்த போர் வீரர், போற்றுவதற்குரிய படைத்தளபதி, உயர்ந்த இராஜதந்திரி, தலைசிறந்த ஆட்சியாளர், பரந்த கல்வி ஞானம் படைத்தவா, கலைகளைப் போற்றிய வள்ளல், தெய்வபக்தி சான்றவர், வைணவததில் ஆழ்ந்த பறறுடையவர். திருப்பதி ஏழுமலையானிடத்தில் பயபக்தியுடையவராவர்.[4] இவர் ஆட்சிக்கு வந்ததும ஆஙகாஙகு கலகம் செய்தவர்களை ஒடுக்கினார். கலிங்க நாட்டை வென்று அடக்கியதால் அம்மன்னன் தன் மகளைக் கிருஷ்ண தேவராயருக்கு மணம் முடித்து மருமகனாக்கிக் கொண்டார்.

*கலிங்கமிழந்து ஓதிக் கைச்சங்கள் தோற்று*
*மெலிந்து கந்நமுவ விட்டாள் — மலிந்தமரைப்*
*பொன்னிட்ட மானகிருட்ண பூபாலவுன்றனுக்குப்*
*பின்னிட்ட வொட்டியன் பெற் பெண்*[5]

3 ARE No 144 of 1939-40, ARE No 172 of 1939-40

4. ஜகநாதராஜா, மு.கு. 'ஆமுக்த மால்யத' XXIV
Venkataramanappa M N O S I H P 174
Krishnadevaraya was the contemporary of the English King Henry VIII He distinguished himself as a maker of an era by his manysided personality He was a great warrier Administrator, patron of Art and Literature Above all he himself was a poet and Author of the brilliant works of literary value During his reign of twenty years the glory of the empire attained its highest water mark

5. குமார சரஸ்வதி 'தமிழ் நாவலர் சரிதம்' ப.210

பதவியேற்ற பத்தாண்டுக்களுக்குள் தென்னகம் முழுமைக்கும் ஏக சக்ரவர்த்தியானார். சைவம், வைணவம் என்று பாராமல் கோயில்களுக்குக் கொடை வழங்கி தனது சமயப் பொறையுடமையை நிலை நிறுத்தினார். இறைவழிபாடு தழைக்க தேவதான நிலங்களின் வரியைத் தள்ளுபடி செய்தார்.[6] கி.பி.1514இல் தனது மனைவிகளான திருமலாதேவி, சின்ன தேவி ஆகியோருடன் தான் தென்னகத்தில் அடைந்த வெற்றிக்கு நன்றி செலுத்தும் பொருட்டு தலைநகர் செல்லுங்கால் வடவேங்கடமெனும் திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானைத் தரிசனம் செய்தார். மேலும் கி.பி.1513 முதல் 1524 வரை ஏழுமுறை திருப்பதிக்குச் சென்று வழிபட்ட செய்திகளையும் காண முடிகிறது. தலைநகர் விஜய நகரில் வித்தலசாமி ஆலயத்தைத் திருப்பணி செய்ததோடு, கிருஷ்ணன் கோயில் ஒன்றையும் கட்டினார்.[7] மேலும் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட நரசிங்கமூர்த்தியின் மிகப்பெரிய சிலை ஒன்றையும் உருவாக்கினார். நிர்வாகம் செம்மையாக நடைபெறப் பழமையைச் சீராக்கினார். கி.பி.1514இல வரிக்கொடுமையால் மக்கள் தங்கள் இல்லங்களை விட்டு வெளியேறியதால் இதை தடுப்பதற்காக வரி விதிப்புக் கொள்கையில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தார்.[8] எனத் தென்னாற்காடு மாவட்டக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

தென்னாற்காடு மாவட்டம், சேந்தமங்கலம் கல்வெட்டு கி.பி.1517-18 இல் கிருஷ்ண தேவராயரின் படையெடுப்பைப் பற்றியும், சிவன், விஷ்ணு ஆலயங்களுக்கு அவர் ஆயிரம் பொற்காசுகள் வரியைத் தள்ளுபடி செய்துள்ளார் எனவும்[9] திருவண்ணாமலை அருணாசலேசுவர் ஆலயத்தின் மேற்கு கோபுரமாகிய மேல்கோபுரத்தையும் ஆயிரங்கால் மண்டபத்தையும் அமைத்தார்[10] எனவும் கூறுகிறது. கிருஷ்ணதேவராயரின் செப்புப் பட்டயத்தில் திருவண்ணாமலைக் கோயில் வளாகத்தில் ஆயிரங்கால் மண்டபம் கட்டிய இடத்தை வழங்கியவருக்கு இழப்பீட்டுத் தொகை கொடுத்து

6 ARE No 1939-40 to 1942-43 P.265
7. பரந்தாமனார், அ.கி. 'மதுரை நாயக்கர் வரலாறு' ப.64
8 ARE No 246 of 1916
9 ARE No 1906-10 P 65 "Soon after this return from Campaign Krishna devaraya appears to have remitted the taxes on the rent free villages owned by Siva and Vaishnava temples of the South
10 Sivaramamurthi Calambur **"The Art of India"** P 527

எடுத்துக் கொணடது. இந்த மடம் தற்போது கோயிலுக்கு வெளிப்புறத்தில் காணப்படுகிறது. இது அப்பரின் நினைவாக அபபர்மடம் என்று அழைக்கபபடுகிறது.[11] கோயில் நிாவாகத்தின் அடிபபடைச் சிக்கலைத தீர்க்கும் பொருட்டுச் சில மாற்றஙகளைக் கொண்டு வந்தார். அதன் பயனாக வழிபாட்டு முறையைச் சீராக்கினார். திறமையற்ற கோயில் நிர்வாகிகளைப் பதவியிறக்கம் செய்ய ஆணையிட்டார். திருவாரூர் கோயில் நிர்வாகத்தில் தலையிட்ட செய்தியைச் செய்யுள் வடிவிலே எடுத்துரைப்பது அறியத்தக்கதாகும்.[12]

தத்துவப் பிரகாசர்,
திருவாருர்க் கொடியிரக்கா மற்ற கைந்தது
மருவு புகழ் கிருஷ்ண மகராச ராளை
அரிய வடமலையாரானண் - திருவாளுர்ப்
பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை
தியாகக் கொடியிரக்காதே

எனப் பாடியுள்ளார்.

கிருஷ்ண தேவராயர் தென்னகதகின் பல கோயில்களுக்கு விஜயம் புரிந்துள்ளார். சில அவரின் கொடையால் சிறப்புப் பெற்றன. அவற்றுள் அழகர் கோயில், ஸ்ரீவிலலிபுத்துர், சங்கர நாராயணர் கோயில், தென்காசி, குற்றாலம், பொதிகைமலை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்செந்துார் போன்ற கோயில்களுக்குச சென்று வழிபட்டுள்ளார். மேலும் மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோலுக்குத் தங்கம் கொடையாக அளிததுள்ளார். திருநெல்வேலிக்கு அருகில் கிருஷ்ணராய சமுத்திரம் என்ற இவரது பெயரில் கிராமம் ஒன்று உள்ளது. தென்னாட்டில் தான் பெற்ற வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இராமேஸ்வரம் கோயிலில் வழிபட்டார். மேலும் போர்வாளுக்கு ரத்த ஸ்நானம் செயது எடைக்கு எடை தங்கம் பெற்றுக் கொண்டு பின தலைநகர், சென்றதாக கிருஷ்ண தேவராயரின் ராய வாசகமு என்ற இலக்கியம கூறுகிறது.

11 ARE No 574 of 1902
12 Krishnaswamy Iyengar, S **"Sources of Vijayanagar History"** P 156

கிருஷ்ண தேவராயர், பேரரசின் நிர்வாக வசதிக்காக ஆட்சிப் பகுதியைப் பிரித்து ஆங்காங்கு கவர்னர்களை நியமித்தார். மேலும் அவர்களுக்கு நிர்வாக ஒத்துழைப்புக் கொடுப்பதற்காக அதிகாரிகளையும் நியமனம் செய்தார். அவர்களுள் இம்மாடி திருமலை நாயக்கர் என்பவர் முக்கிய அதிகாரியாக விளங்கினார். அவர் திண்டிவனம் பகுதியின் கவர்னராகவும் பணி செய்துள்ளார். இவரது கட்டுப்பாட்டில் தென்னாற்காடு மாவட்டம் குகையூர், செங்கை மாவட்டம் எருமைவேட்டி பாளையம், வட ஆற்காடு மாவட்டம் தேவிகாபுரம், சேலம் மாவட்டம் அரகலூர் போன்ற பகுதிகள் இருந்தன. இதன் நிர்வாகம் செம்மையாகச் செயல்பட நடவடிக்கைகள் மேற்கொண்டதை அறிய முடிகிறது. இவர் கிருஷ்ண தேவராயருக்குப் பின் அச்சுதராயர் காலத்திலும் அப்பொறுப்புகளைத் தொடர்ந்து கவனித்து வந்தார்.[13] அறம் வளர்த்த முதலியார் என்பவர் கிருஷ்ண தேவராயர் காலத்திலும் அவருக்கு முன்பும் அமைச்சராகப் பணியாற்றினார். மற்றொரு பிராமண அமைச்சரான சாளுவ திம்மா நிர்வாகப் பொறுப்புகளைக் கவனித்து வந்தாலும் அனைத்துப் படையெடுப்புகளிலும் பங்கு கொண்டு விஜய நகர ஆட்சியின் விரிவாக்கத்திற்கு உறுதுணையாகப் பணியாற்றினார்.[14] இறைவழிபாடு சிறக்க பேரரசர்கள் மட்டுமல்லாமல் அதிகாரிகளும், கவர்னர்களும் கோயில்களுக்குக் கொடை பல வழங்கியுள்ளதை அறிய முடிகிறது. தென்னகத்தில் வைசிராயாக இருந்த செல்லப்பா என்ற வீர நரசிம்மா இராமநாதபுரம் கோயிலுக்குக் கிராமங்களையும், நிலங்களையும் கொடையாகக் கொடுத்துள்ளார். மக்களின் நிலையை உணர்ந்து செயல்பட்டு இதுகாறும் மணமகனும், மணமகளும் செலுத்தி வந்த திருமண வரியைத் தள்ளுபடி செய்தார்.[15]

கிருஷ்ண தேவராயர் தன் பதவி ஏற்பு விழாவிற்கு விஜய நகரின் கோயில் வாயிலில் ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டி விழா நடத்தினார்.

13 ARE No 340 of 1939-40, ARE No 35 of 1905, ARE No 101 of 1918, ARE No 168 of 1930, ARE No 358 of 1912, ARE No 1913, ARE No 276 of 1915

14 Robert Sewell, "Forgotten Empire" P 123

15 ARE No 256 of 1910, ARE No 387 of 1904

ஆட்சிக்கு வந்ததும் பழைய கோயிலகளைப் புதுப்பித்தும், புதிய நிர்மாணப் பணியை மேற்கொணடும் சிறப்புச செயதார். புகழ்பெற்ற கிருஷ்ணசாமி கோயிலை கி.பி.1513 இல் தனது கிழக்கத்தியப் படையெடுப்பின் நினைவாகத தலைநகரில கட்டினார். மேலும் அதே ஆண்டில் அரண்மனையில ஹசாரா இராமசாமி கோயிலை வெவ்வேறு கலை நுணுக்கங்களையும், நுடபங்களையும் கொண்டு கட்டினார். இக்கட்டடக் கலையைப் போன்று வேறு எங்கும் காண முடியவில்லை என்று ரியா என்ற அறிஞர் கூறுகிறார்.[16]

கிருஷ்ண தேவராயரின் அறக்கொடையால் சோழ மண்டலத்துக் கோயில்கள் அனைத்தும் சிறப்படைந்தன என்று கல்வெட்டுகள் மூலம் அறியலாம். சோழ மண்டலத்தில் அரிய பல பணிகளைச் செய்த இவர் தில்லைத் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்தைத திருத்தி கட்டினார். அக்கோபுரத்தில் இவரது திருவுருவச் சிலை ஒன்றும் காணப்படுகிறது. பல்வேறு கலை நுணுக்கங்களை ஒருஙகே கொண்ட இக்கோபுரத்தில் பரதக் கலையின் நூற்று எட்டு கர்ண முத்திரைகளையும், ஆடும் ஆரணங்குகளின் சிற்பங்களையும் காண முடிகிறது.[17] மேலும் இக்கோபுரததைக் கட்டிய சிற்பிகள் நால்வரின் உருவச் சிலையும் அங்கு காணபபடுவதால் அவர் தொழில் வல்லுநர்களுடன் கொண்டிருந்த உறவு புலப்படுகிறது. அவர்களின்பால் கொண்ட அன்பும், மரியாதையும், தன் சிற்பிகளையே சிலையாக்கிக் காணபர், உள்ளத்தைக் கவர்ந்திடச் செய்தார்.

கிருஷண தேவராயரும் அவரது சகோதரர் வீர நரசிம்மாவும் புனித ஸ்தலங்களுக்கு விஜயம் செய்த செய்தியும் அவர்கள் கோயிலுக்குக் கொடை கொடுத்த செயதியும் கோயில் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ளன. இதறகுச் சான்றாக, கும்பகோணம் சாரஙகபாணி திருக்கோயில் கர்ப்பக்கிரகத்தின் பின்புறம் இவரது கும்பகோணம் விஜயத்தைப் பற்றியும், வழங்கிய கொடைகள் பற்றியும் பன்னிரண்டு ஆணடுகளுககு ஒருமுறை சிறப்பாக நடைபெறும் மகாமக விழாவில் கலந்து கொணடு வழிபட்டதையும் காண முடிகிறது.[18] இவரது காலத்தைச் சேர்நத சீரங்கம்

16 Robert Sewell, "A Forgotten Empire" P 161
17 Nagaswamy R "Tantric cult of South India" P 182
18 Epigraphia Indica Vol XIII P 124

செப்பேடு, காவிரியின் தென்கரையில் உள்ள சோழ மண்டலததுக் கிராமங்களான வேடாம்பூர், ஏகாம்பரபுரம், திருவாரூர்ச் சீமை, ஆலங்குடிக் கிராமம் இங்கெல்லாம் கிருஷ்ணராயபுரம் என்ற கிராமத்தை ஏற்படுத்திப் பிராமணர்களைக் குடியமர்த்தினார்.[19] பெரும்பாலான கோயில்களுக்கு இனாம் வழங்குவதை வழக்கமாகக் கொண்ட இவர் அக்கோயில் நிலங்களின் வரியைத் தள்ளுபடி செய்தார். மேலும் 1514-15 இல் தஞ்சை மாவட்டத்திலுள்ள சுவாமிமலை சுவாமிநாத சாமியின் நிலத்திற்கு வரி தள்ளுபடி செய்துள்ளதைக் கல்வெட்டுச் செய்திகளின் மூலம் உணரலாம்.[20] நிலங்களைத் தானமாகக் கொடுத்தது மட்டுமல்லாமல் விலைமதிப்பற்ற புகழ் வாய்ந்த நவரத்தினக் கற்களாலான இரத்தினக் கிரீடத்தையும், விலை உயர்ந்த பொருள்களையும் திருப்பதி ஏழுமலையானுக்கு கொடுத்துள்ளதை அக்கோயில கல்வெட்டுகளின் மூலம் அறியலாம்.[21]

மேலும் கிருஷ்ண தேவராயரின் இளவரசியார் சின்னாஜி அங்குள்ள திரு வெங்கலநாத சாமிக்கு இரவு நேர நெய்வேத்தியம் செய்ய தங்கக் கோப்பை வழங்கியுள்ளார்.[22] படைத்தலைவர் இராமநாயக்கர் கடலூர் கிராமத்தை திருப்பதி ஏழுமலையானுக்கு வழஙகியுள்ளார்.[23] அரசியார் திருமலாதேவி அர்த்தசாம நெய்வேத்தியம் ஏழுமலையானுக்குச் செய்ய தங்ககோப்பை வழங்கியுள்ளார்.[24] இக்கோயில் கல்வெட்டுக்களில் வடமொழியில் செய்யுள் மற்றும் உரைநடை வடிவில் எழுதப்பட்டுள்ள செய்திகள் நாயக்கர்களின் வமிசாவழி பற்றியும் கொடைகளளித்த கிருஷண தேவராயர், வீர நரசிம்மராயர் போனறவர்கள் பற்றியும் விவரிக்கிறது.[25] கி.பி.1520இல் சோழ மண்டலத்து சிவாலயங்களுக்கும், வைணவ ஆலயங்களுக்கும் சிலவகை வரிகளில இருந்து கிடைக்கும் பதினைந்தாயிரம் வராகன்களைக் கொண்ட அறக்கட்டளையை ஏற்படுத்தி

19 ARE No 60 of 1936-39 P 84
20. S.I I Vol XXIII No 496, ARE NO 496 of 1907
21 Tirupati Devasthanam Inscriptions Vol III No 32, No.2 TT. SSI Vol XVI NO 50
22 T D I Vol III No 40, No 8 T T
23 T D I Vol III No 1, No 305 T T
24 T D I Vol III No 50, No 9 T T
25 T D I Vol III No 65, No 459 T T

சமயப்பணி தழைக்கச் செய்தார்.[26] விஜய நகரின் கீழ் குறுநில ஆட்சியாளனாக இருந்த புதுக்கோட்டை மாகாணத்தில் அறந்தாங்கி கிராமததை நிர்வகிக்க, பொன்னம்பல நாத தொண்டைமான என்பவர் இலங்கையிலிருந்து எடுத்து வரபபட்ட பொன், பொருள்களைக் கிருஷ்ண தேவராயருககுக் கொடுத்தார்.[27]

கிருஷ்ண தேவராயரில் இறுதிக் கால கட்டத்தில் அரசியல் கலவரங்களைத் தடுத்து அமைதி காப்பதற்காக முக்கியமான அரச குடும்பத்தினர் சநதிரகிரியில் காவலில் வைக்கப்படடனர். அவர்களில் அச்சுதராயனும் ஒருவன். இவர் கிருஷ்ண தேவராயருக்குப பின் முடிசூட்டிக் கொள்ள முனைபபுடன் செயலபட்டார். அவ்வாறு தலைநகர் வரும்போது திருப்பதியிலும், காளத்தியிலும் முடிசூட்டு விழா நடத்தி விட்டு வந்தார்.[28] ஆனால் கிருஷ்ண தேவராயரின் மருமகன இராமராயர் அரசுரிமை பெறுவதில் போட்டியிட்டு இறுதியில் சமாதானம் செய்து கொண்டார். ஆனால் அச்சுதராயனை ஆதரித்து நின்ற தஞ்சை ஆளுநரான சாளுவ நரசிம்மனுக்கு இச்செயல் மனக் கசப்பை ஊட்டிற்று. மேலும் பேரரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய இதுவே ஏதுவாயிற்று.

கிருஷ்ண தேவராயரிடம் நிர்வாகப் பொறுப்பிலும், படைத்தளபதியாகவும் பணி செய்து கொண்டிருந்த நாகம நாயக்கர் திருவாங்கூர், ஆற்காடு பகுதிகளிலிருந்து வரும் வருவாய்களையும், வெகுமதிகளையும் வசூல் செய்வதற்கான பணியில் ஈடுபட்டார். தலைநகர் விஜய நகரில் உதயமான ஆட்சி 56 தேசங்களுக்கும் விரிவாக்கப்பட்டது. படைத்தலைவர் நாகம நாயக்கரின் கீழ் 40,000 குதிரை, 1000 யானை, 10,000 ஒட்டகம் கொண்ட பெரும்படை தலைநகரில் செயல்படடது. மேலும் 6000 குதிரை, 20,000 காலாடபடை கொண்ட ஒரு பெரும்படையைச் சொநதமாக வைத்திருந்து பராமரித்தார்.[29]

26 ARE No 324 OF 1911
27 ARE No 1923-24 of P 112
**28. மாதவையர் அ. தட்சிண சரித்திர வீரர் ப.40**
29 Willam Taylor, Oriental Historial Manuscripts Vo II P 3

விஜய நகரப் பேரரசு மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. அவைகள் முறையே நெல்லூர் முதல் கொள்ளிடம் வரையிலான பகுதி செஞ்சியை தலைநகராகக் கொண்டு துபபாகசி கிருஷ்ணபப நாயக்கன் கீழும் தஞ்சையைத் தலைநகராகக் கொண்ட பகுதி விஜய ராகவ நாயக்கன் கீழும் மதுரையைத் தலைநகராகக் கொண்ட பகுதி வெங்கடப்ப நாயக்கரின் கீழுமாக நிர்வகிக்கப்பட்டது.

அந்நாளில் பாண்டிய மரபினர் மட்டுமன்றி பிற மரபினரும் சிற்றரசர்களாகத் தங்கு தடையற்ற தன்னுரிமையுடையவராக ஆண்டு வந்தனர். ஏனெனில், பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோழ நாட்டை ஆண்ட வீர சேகரச் சோழன் பாண்டிய நாட்டை ஆண்ட சந்திர சேகர பாண்டியன் மீது படையெடுத்துப் பாண்டிய நாட்டை சோழ நாட்டுடன் இணைத்தார்.[30] எனவே பாதிக்கப்பட்ட பாண்டியன் கிருஷ்ண தேவராயரிடம் சென்று இழந்த நாட்டை மீட்டுத் தரும்படி வேண்டினான். எனவே கிருஷ்ண தேவராயரும் அவனுக்கு உதவும் பொருட்டு கி.பி. 1525இல் தன நம்பிக்கைக்குரிய படைத்தலைவர் நாகமநாயக்கனின் கீழ பெரும்படை ஒன்றை அனுப்பி பாதிக்கப்பட்ட பாண்டியனுக்கு நீதி வழங்கும்படி அனுப்பினார்.

நாகம நாயக்கன் சாளுவ நரசிம்மன் ஆட்சியிலும், இம்மடி நரசிம்மன் ஆட்சியிலும் அரசின் பல்வேறு அலுவல்களைக் கவனித்து நிர்வாகத்திறமை கொண்டவனாகத் திகழ்ந்தான். அரசின் கட்டளைப்படி சோழனை அடக்கி பாண்டிய நாட்டை மீட்டவன் அதை பாண்டியனிடம் கொடுக்காது தாமே அப்பகுதியை ஆட்சி செய்ய முற்பட்டான்.[31] உடனே சந்திர சேகர பாண்டியன் மீண்டும் நடந்ததை கிருஷ்ண தேவராயரிடம்

30 Krishnaswamy Iyengar, S "Sources of Vijaya Nagar History" P 319

31 Willam Taylor, Oriental Historical Inscriptions Vol II P 11 & 107
Nagama Nayaka came to Madura and in a suitable manner punished Vijayanagara soren, but then instead of restoring the kingdom to Chandrasekara pandian, he usurped it as his own On his usurpation occuring Chandra segara again went to the Rayar, and conplained saying he has taken kingdom for himself The Rayar instantly despatched an imperial mandate commending Nagama Nayakar to restore the kingdom to the Pandian

விவரிக்க அவர் உடனே ஓர் ஆணை பிறப்பித்து நாகம நாயக்கர் பாண்டிய நாட்டை சநதிர சேகர பாண்டியனிடம் ஒப்படைக்கக் கட்டளையிட்டார். ஆனால் அவ்வாறு நடக்காததால் கடுஞ்சினங்கொண்ட அரசன் ஒரு பெரும் படையை விசுவநாத நாயக்கர் என்ற படைத்தளபதியின் கீழ் அனுப்பினார். படை மதுரையை அடைந்து நாகம நாயக்கரைச் சரணடையக் கட்டளையிட்டது. ஆனால் மகன் விசுவநாத நாயக்கர் மீது பாசங்கொண்ட நாகம நாயக்கரோ உனக்காகத்தான் பாணடிய நாட்டை கைப்பற்றியுள்ளேன். எனவே என்னுடன் சேர்ந்து ஆதரவு கொடு என வேணடினான் ஆனால் கடமையுணர்வு கொண்ட விசுவநாதன் அதை ஏற்க மறுத்ததால் இரு படைகளும் மோதிக் கொண்டதில் நாகம நாயக்கரின் படை தோற்கடிக்கப்பட்டு காவல் கைதியாகத் தலைநகர் கொண்டு செல்லப்பட்டான். அரசன் அவனது திறமையைப் பாராட்டி மதுரையின் ஆட்சியாளராக நியமித்து பெரும்படையுடன மதுரைக்கு அனுப்பினான். மதுரையடைந்த விசுவநாத நாயக்கர் அரியநாத முதலியார், கேசவயே நாயுடு போனற படைத்தலைவர்களுடன் கலந்தாலோசிதது மதுரையின் கோட்டைக்கு எட்டு வாயில்கள் அமைத்துப் பலம் பொருந்தியதாகக் கட்டப் பணிந்தான். மேலும் மீனாட்சி சுந்தரேசுவரா கோயிலில் திருப்பணி செய்யக் கட்டளையிட்டான். விசுவநாத நாயக்கர் விஜய நகருக்குக் கடடுபபட்டு விசுவாசமிக்கவனாக ஆட்சி செய்தான். பின்பு கிருஷ்ண தேவராயர் இறந்ததும் ஆட்சிக்கு வந்த அச்சுத தேவராயர் தனது மனைவி திருமலாம்பாலின் தங்கை மூர்த்தியம்மாவின கணவர் சேவப்ப நாயக்கரை, மதுரை நாயக்கரிடமிருந்து தஞ்சைப பகுதியைப பிரித்து தஞ்சையின ஆடசியுரிமையை அவனுக்களித்து தஞ்சை நாயக்க மரபின் மூத்தவராக நியமிக்கபபட்டான்

மதுரையில் நாயக்கர்கள் ஆட்சி ஏற்படக் காரணமாக இருந்தவர் விசுவநாத நாயக்கனாவார். விசுவநாதனின் திறமையை அறிந்து அவனுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் விஜயநகரம் கூடுதல் உரிமை அளிததது. விசுவநாதனுககு 'தென் அரசின் முதல்வர்' 'பாணடிய நாட்டின் தலைவர்' போன்ற விருதுகளை வழங்கி கிருஷ்ண தேவராயர் கௌரவிததார்[32] அவன் அரிய நாயக முதலியார் போன்றவர்களின்

32 Sathiyanatha Aiyar, "History of the Nayaks of Madura" P 91

துணையால் நாட்டில் அமைதி தழைக்கச் செய்தான் [illegible] நடசுபின் மிக முக்கியமான நிர்வாக சீர்திருத்தமும் [illegible] வரலாற்றில் மிகப் பரபரப்பான இடத்தை வகித்த பாளையப்பட்டு முறை விசுவநாத நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் தான் தொடங்கப்பட்டது.[33] என்பது வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது.

*பொருளாதாரக் கொள்கை:* கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக்காலத்தில் பல்துறைகளிலும் விஜய நகராட்சி மேன்மை பெற்று சிறப்படைந்ததென்றால் அது மிகையாகாது. பேராசிரியா டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார், விஜய நகரப்படையெடுப்புப் பற்றியும், பொது ஆட்சி முறை பற்றியும் விளக்கமாகவும், நுட்பமாகவும் நூல் வடிவிலே கொடுத்துள்ளது போற்றுவதற்குரியதாகும். மேலும் டாக்டர் R N சாலிடோர் விஜய நகரத்தின் சமூக அரசியல் நிலை பற்றிய அரிய கருத்துக்களைத் தொகுத்து தெளிவுப்படுத்தியுள்ளார். கிருஷ்ணதேவராயரின பொருளாதார நிலை மற்றும் கோட்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்கு நமக்குச் சமகாலத்து நூல்களான இராயவாசகம (Rayavacakama) ஆமுக்த மால்யத (Amuktamalyada) போன்ற நூல்கள் முதன்மைச் சான்றாக விளக்குகின்றன.[34]

கிருஷ்ண தேவராயர் இந்திய வரலாற்றில் மத்திய கால கட்டத்தில் சிறப்பாக ஆட்சி செய்த இந்து அரசர்களில் சிறப்பானவர். தனது ஆட்சிக்காலத்தில் அரசியல், பொருளாதார நிலையை சமசீர் நிலையில் வைத்திருந்தார். ஆனால் நீண்டகாலம் ஆட்சி செய்த முகமதியர்கள் அரசியல் சமூக, பொருளாதார நிலையில் பல மாற்றங்களைச் செய்தனர். கி.பி.1509இல் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்தில் அனைத்துத் துறைகளிலும் நன்கு படிப்பறிவும் பட்டறிவும், மதி நுட்பமும் உடையோர் இருந்ததால் முகமதியர் காலத்தில் விதிக்கப்பட்ட சில அருவருப்பான சுமையான வரிகள் தள்ளுபடி செய்யப்பட்டன. வரிவிதிப்பில் கருணை மனதுடன் செயல்பட்டார். இச்செய்தியைப பறைசாற்றும் கல்வெட்டுக்கள் பல நமக்குக் கிடைக்கின்றன. அரசின் பொது வரிகளையும், சிவன் விஷ்ணு

33 Opcit P 58
34 Sathiyanatha Aiyar, "History of the Nayaks of Madura" P 91

கோயில் வரிகள் மூலமாகக் கிடைக்கக் கூடிய சுமாா் ஆயிரம் வராகன் வருமானத்தையும் தள்ளுபடி செய்தும் கோயிலின் சமயப் பணிக்கு உதவியுள்ளாா்.[35]

அரசாங்கத்தின் ஆண்டு வருமானத்தைக் கணக்கீடு செய்து வரவு செலவுத் திட்டங்களைத் தீட்டி அதனபடி செயலபட்டாா். அவ்வாறாக, மொத்த வருமானம் நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. வருமானத்தில் நான்கில் ஒரு பகுதி அரசனின் தனிபபட்ட செலவுகளுக்கும் அரசின் சாா்பாக சமய பணிக்கோ அல்லது அதிகாாிகளுக்கோ, பிறவற்றிறகோ பொதுக்கொடை மறறும் தா்மம் வழங்குவதற்கோ செலவிடபபட்டது. எஞ்சிய நான்கில் இரண்டு பங்கு நாட்டின் பாதுகாபபிற்கும் அரசின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கும் செலவிடப்படடது. மீதமுள்ள நான்கில் ஒரு பகுதி சேமிப்பு வருவாயாகக் கருதப்பட்டது. பழஙகாலத்திலிருந்து தவிா்க்க முடியாத படையெடுப்புச் செலவினங்களைச் செயல்படுததும் நோக்கோடு உபாிவரவு செலவுதிட்டத்தை (surplus budget) முன்னெச்சாிக்கையாக மேற்கொண்டனா். காலச் சூழ்நிலையாலும், இயற்கைச் சீற்றத்தாலும் ஏற்படும் புயல், பஞ்சம், தொற்று நோய் ஆகியவற்றால் ஏற்படும் செலவினங்களைக் கருத்தில் கொண்டு செயல் திட்டங்கள் தீட்டப்பெற்றன. அப்போது தங்க நாணயங்களும் புழக்கத்திலிருந்தன. அவற்றில் குறிப்பாக பாா்டோ (Pardao gold coin) தஙக நாணயங்கள் குறிப்பிடத் தக்கவை.[36]

அப்துா் ரசாக் என்ற பாரசீக அறிஞா் கி.பி. 1442-1443 இல் வருகை புரிந்ததால் அக்கால செல்வச செழிப்புப பற்றிக் குறிப்பிட்டுள்ளாா். அரசனின கருவூலம் தங்கக் கட்டிகளின் அரங்கங்களாக இருத்தனவென்றும மக்கள் பல்வகை ஆபரணங்களை அணிந்திருந்தனா் என்றும் கூறுகிறாா். ஆபரணங்கள், மூக்கு, காது ஆபரணங்கள், கைவளையலகள் மணிக்கட்டு, ஆபரணங்கள், விரல்களில் மோதிரம் அணிநதிருந்த மக்கள் ஆகியோரைப் பற்றிக் குறிப்பிட்டு செல்வச் செழிப்புக்கு மெருகேற்றுகிறாா். மேலும் ஒன்பது நாள் நடைபெறும்

35 Opsit P 58
36 I H Q Vol XVII P 97

நவராத்திரித திருவிழாவில், நடன மகளிர் அணிந்திருந்த ஆடை அலங்காரங்கள், முத்து ரத்தினக் கற்களால் அழகு செய்யப்பட்ட ஆடைகள் ஆகியவை பற்றியும் குறிபபிடுகிறார்.[37] மேலும் இவர் ஒரு கொடை வள்ளலாகச் செயல்பட்டமையை நாம் நன்கு அறிந்து கொள்ள இயலும். எனவே கோயில் கட்டுவதற்கும், கோயில் திருப்பணிகள், வழிபாடு பூசைகள் நடததுவதற்கும் கோயிலில் அவ்வப்போது திருவிழாக்கள் நடத்துவதற்கும் பொது நிதியை மனமார அளித்தார். கோயில் நிலங்களுக்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்துள்ளார். கோயில்களுக்கு நிலம், பொருள், சிலசமயம் தங்கம் ஆகியவற்றை இனாமாகவும், கொடையாகவும் கொடுத்துள்ளார். விவசாயத்தில் ஈடுபாடு கொண்டு நீர்ப்பாசன முறைகளைத் திட்டமிட்டு வழி வகுத்தார். விவசாயிகள் சுரண்டப்படுவதைத் தடுக்கவும் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவும் வழிமுறைகள் கண்டறியப்பட்டுச் செயல்படுத்தப்பட்டன.

அரசாங்கத்தின் வருவாயைத் திட்டமிட்டுச் செலவு செய்ய அரசின் கருவூலத்தைச் செழிப்பாக்கவும் செயல் திட்டங்கள் தீட்டப்பட்டுச் நடைமுறைப்படுத்தப்பட்டன. நிலவரியும் உற்பத்தியாகும் பொருள்களுக்கு மறைமுகமான வரிகளினாலான வரவும், பொதுமக்கள், அரசின் அதிகாரிகள் மூலமாகவும் வந்த வெகுமதிகளும், அன்பளிப்புகளும் கனிசமான வருவாயைக் கொடுத்தது. இயற்கை வளங்களை ஆராயந்து அவற்றின் மூலமாகப் பொருளாதாரத்தைப் பெருக்கினார். அரங்கங்களின் மூலமாகவும், விளை நிலங்களின் மூலமாகவும் வருவாயைப் பெருக்கினார். பயனற்ற நிலங்களை (Waste lands) மக்களுக்குத் தாராளமாக வழங்கி விளை நிலமாக்கி அதன் மூலமாக வருமானத்தை இரட்டிப்பாக்கினார். அரசின் வருவாயை அதிகரிக்கவும் அன்னிய செலவாணியை முறைப்படுத்தவும் வெளிநாட்டு வர்த்தகத்தை ஆதரித்து வர்த்தகர்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தார். வெளிநாடுகளுக்கு சில பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. சில அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியும் செய்யப்பட்டன.

37 Soletore, R N E I.C P 1593

நிலவரி பணமாகவும், பொருளாகவும் வசூலிக்கப்பட்டது. கிருஷ்ண தேவராயரின் அமுக்த மால்யதா என்ற நூல் அப்போது நிலவிய வரி முறைகள் பற்றிக் கூறுகிறது. மேலும் இந்தியாவிறகும் ரோமப் பேரரசுக்குமிடையே அடிமைப் பெண்கள் வியாபார முறை 16ஆம் நூற்றாண்டில் விஜய நகர ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாகப் பிரபல அறிஞா A-L பாஷம் குறிப்பிட்டுள்ளார்.[38] தனது சீரிய சிந்தனையாலும் முயறசியின் காரணமாகத்தான் இருபது ஆண்டுகள் ஆட்சி செயதார். கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்டாலும் தெலுங்கில் தனது ஆற்றலை வெளிப்படுத்தும் விதத்தில் நூல்களை வெளியிட்டார். இலக்கியங்களை வளர்பபதற்கு புலவர்களை அரசவையில இடம் பெறச செய்தாா. எனவே இவர் ஒரு பல்துறை வித்தகர், மற்றைய ஆட்சியாளர்களுக்கு ஒரு முன்னோடி என்றால் அது மிகையாகாது.

38 Basham, A L "The Wonder that was India" P 153

# 5

# நிர்வாகம்

மன்னராட்சி நடைமுறையில் இருந்த காலத்தில் மன்னருக்கு ஆலோசனை கூறவும், நிர்வாகத்தைச் சீராகவும், திறம்பட நடத்தவும் அமைச்சரவை என்ற அமைப்பு இருந்தது. அமைச்சரவையின் செயல்பாடுகள் அரண்மனை வளாகததிலேயே நடைபெற்றன. ஒவ்வொரு துறையும் பல்வேறு அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு, அதன் மேல்நடவடிக்கைகளை அந்தந்தத் துறை அமைச்சர்களே கவனித்து வந்தனர். இதைப்போலவே, தமிழகததை ஆண்ட விஜய நகர மன்னர்களும் அமைச்சரவைக் குழுவை அமைத்து நிர்வாகத்தைச் செவ்வனே நடத்தினர். அரசாங்கம் மத்திய அரசு என்றும் மாகாண அரசு என்றும், உள்ளாட்சி நிர்வாகம் என்றும் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. மத்திய அரசின் நிர்வாகத் தலைவன் மன்னனே. மத்திய அரசின் அமைச்சர்கள் பல்வேறு துறைகளைக் கண்காணித்து வந்தனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வருவாய்த்துறை, நீதித்துறை, பாதுகாப்புத்துறை என்பவையே. இம்முப்பெரும் துறைகளின் கீழ் சிறு சிறு அமைப்புகளும் இயங்கி வந்தன. மன்னனின் முக்கியமான, இரகசியமான கருத்துக்களைப் பிரதம அமைச்சகம் கலந்தாலோசித்தாலும் இறுதி முடிவை எடுக்கும் உரிமை மன்னருக்கே இருந்தது.[1] மன்னர் தலைநகரை விட்டு வெளியில் செல்லுங்கால் அப்பொறுப்பை பிரதம அமைச்சரே ஏற்று நடத்துவார். அமைச்சரவைக்குழு திறமைமிக்கவர்களாலும், மன்னனின் நம்பிக்கைக் குரியவர்களாலும் அமைகசுப்பட்டு இருந்தது. சில சமயம் தவறு செய்யும் அமைச்சர்களைத் தண்டிக்கவும், அவர்களைப் பதவியிறக்கம் செய்யவும் தயங்கியதில்லை அதன்படி, கிருஷ்ணதேவராயர் தன் மகன் திருமலராயரைக் கொலை செய்த அமைச்சர் திம்மராசு என்பவரைச் சிறையிலடைத்துத் தண்டனை வழங்கினார்.[2] எல்லா கீழ்த்திசை அரசாட்சி முறைகளின்படியே விஜய நகர

1 O S.I H P190

2. ஜகந்நாத ராஜா, மு.கு. சி 'ஆமுக்த மால்யத' ப. XXIV

மன்னர்களின் ஆட்சி முறையிலும் மன்னனே பேரரசின் மிக உயர்ந்த அதிகாரி; அவர் வரம்பற்ற அதிகாரத்தைப பெற்றிருந்தார். அவருடைய அதிகாரம் ஒரு அமைசசரவைக் குழுவாலோ அல்லது ஒரு மக்கள் சபையாலோ கட்டுப்படுத்தப படாவிடினும் அவர் ஒரு எதேச்சாதிகாரியாகச் செயலபடவில்லை. விஜயநகர மன்னர்கள் தர்மத்தின் அடிப்படையில் ஆட்சி செயதனா. தர்மம் மட்டுமல்லாது நாட்டில் பல்லாண்டு காலம் வழங்கி வந்த பழக்க வழக்கங்கள் மனனனின் வரம்பற்ற அதிகாரத்தைக் கட்டுப்படுததி வந்தன.[3] அரசவை பெரும் பகட்டும் ஆடம்பரமும நிறைந்ததாக இருந்தது. அரசவையில் அமைச்சர், மானியர், கணிதர், கவிஞர், காவல்துறை அலுவலாகள் போன்றோர் தத்தமக்கு ஒதுக்கப்பட்ட அலுவல்களைச் செய்து வந்தனர்.[4] நிர்வாக வசதிக்காக பேரரசு பல மாநிலங்களாகப பிரிக்கப்பட்டு இயங்கியது. இவை சில பகுதிகளில இராஜியங்கள் என்றும் மண்டலங்களென்றும் அழைக்கப்பட்டு வந்தன. அவவப்போது மாநில எல்லைகள் மாறறியமைக்கப்பட்டன. இம்மாநிலத்தை ஆளுவதற்கு மகாமண்டலேசுவரர்களாக இளவரசர்களையோ அல்லது முன் ஆட்சி செய்த அரச மரபினரையோ அலலது அரச குடும்பத்து உறவினர்களையோ நியமித்தனர். சில பகுதிகளில போரில் செயற்கரிய வல்லமை புரிந்த நாயக்கர்களை அமாத்தினர்.

அரசாஙகத்திற்குத் தவறாமல் திறை செலுத்தியவர்கள், அரசின் நலனை மனதில் கொண்டு செயலாறறியவர்கள், நம்பிக்கைக்குரிய நல்லெண்ணக்காரர்கள், மத்திய அரசுடன் சமூக நல்லிணக்க உறவுக்காரர்கள் மட்டுமே பொறுப்பில் நீடித்தனா. ஆனால உள்ளாட்சி நிாவாகத்தில் தலையிடாமல் அது சுதந்திரமாக செயல்பட ஒத்துழைப்பு நலகினர்.[5] விஜயநகர அரசு அமைந்ததும், அதன் அரசியல்முறை உருவானதும் தென்னிந்திய வரலாறறில் முக்கிய நிகழ்ச்சியாகும். விஜய நகரின் செலவாககு தெனனாடு முழுமைக்கும் பரவியிருநததற்குக் காரணம், அவறறின செயல்பாடே. எநதஒரு அரசின் வெற்றிக்கும்

3 Mahalingam, T V "Administration and Social Life under Vijaya Nagar" P 9

4. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி II ப. 53

5 O S I H P 190

முதன்மையான காரணமாக அமைவது அதன் அரசியல ஆட்சி முறையே, ஏன் என்றால் விஜயநகர ஆட்சிக்குப்பின் தனியாட்சி அமைத்த நாயக்கர்கள் அதே அரசியல் முறையைப் பின்பறறினர். பல்வேறு பகுதிகளில் ஆட்சி செய்த நாயக்கர்கள், மரபுப் பண்புகளைப் பின்பற்றினர். பேரரசில் மரபுரிமை மனனராட்சி நடைபெற்றது. ஏறத்தாழ இருநூறு நாயக்கர்கள் அரசுக்கு ஆண்டுதோறும் கப்பம் கடடியும் போர்க்காலங்களில் படையுதவியளித்தும் வந்தனா. பெரும் அரசாங்கத்தைக் காப்பதற்கும் நாட்டின் பாதுகாப்பிற்கும் பல்வேறு பிரிவுகளைக் கொண்ட பெரும்படை செயல்பட்டது. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை போன்றவை இராணுவத்தின் முக்கிய அங்கங்களாகச் செயல்பட்டன. திறமை வாய்ந்தவர்கள் தகுதியின் அடிப்படையில் படையில் சேர்த்துக் கொள்ளப்படடனர். படையில்பல்வேறு பெயர்களில் அதிகாரிகள் இருந்தாலும் பெரும் அதிகாரிகளை நாயக்கர்களென்று அழைத்தனர். மேலும் வில்லாளி, வாளாளி, பீரங்கிப்படை போனற அமைப்புகள் இருநதன. படைவீரர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஊதியமாகப் பணம் வழங்கப்பட்டது. சில சமயம் பணத்திற்குப் பதிலாக மானியம், போன்றவையும் வழங்கபபட்டன. இராணுவத்திற்கு முறையாகப் பயிற்சிக்கூடங்களில் அதிகாரிகளால் பயிற்சியளிக்கப்பட்டது. விஜயநகரப்படை எதிரிகளின் கோட்டையை முற்றுகையிடுவதில் தேர்ச்சி பெற்றிருந்தது என்பதை டோமினகோ பைஸ் என்ற போர்ச்சுகீசிய வெளிநாட்டறிஞர் சிறப்பாகத் தனது பயணக் குறிப்பில் குறித்துள்ளார். பாளையக்காரர்கள் என்பார் அரசுக்கு எவ்வப்போது படை தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் அளித்துச் சட்டம் ஒழுங்கைக் காத்து அமைதி நிலைத்திட உதவினர்.

*அரசின் வருமானம் :* அரசின் பெரும் செலவைக் கட்டுப்படுத்த வருவாயைப் பெருக்கிக் கொண்டனர். வருமானம் அரசின் பல்வேறு துறைகளின் கீழ் பெறப்பட்டது. எனினும் நிலவரி அரசின் முக்கிய வருவாயாகக் கருதப்பட்டது. வெகுமதி நிலங்களின் மூலம் கிடைத்த வருவாய், குடிமக்களின் கொடை, வெளிநாட்டாருடன் வளமான கடல் வாணிபம் செய்ததினால் கிட்டிய கணிசமான சுங்கவரி, உள்நாடு வணிகத்தின் மூலம் கிடைத்த வருவாய் மேலும் மாகாண ஆட்சியாளர்கள், ஆண்டுதோறும் நடைபெறும் மகாநவமி எனற திருவிழாவின் போது கொடுத்த கொடைகள் அரசின் கருவூலத்தை வளமாக்கின. அரசு

வருமானத்தின் பெரும்பகுதி நிலவரியே. நிலவரியை வசூலிப்பதில் பெரும் கவனம் செலுத்தப்பட்டது. நிலவரிக்கு உட்படுத்தப்பட வேண்டிய நிலங்களின் அளவு முறையாகவும் முழுமையாகவும் கணக்கெடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் நில அளவு செய்யப்பட்டு அவற்றின் விபரம், உரிமையாளர் பெயர் மற்றும் அவர்களுக்கு உரிமையான நிலங்களின் விபரம் போன்றவை முறையாகப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தன.[6] இதனால நிலவரியிலிருந்து வரிவிதிபபுக்குத் தகுதியான நிலங்கள் விடுபட்டு வரி இழப்பு ஏற்படவாய்ப்பில்லாமல் போனது. இதன் விளைவாக நிலவரி வசூல் பெருமளவில் உயர்ந்தது. வசூல் செய்யப்பட்ட அரசின் வருவாயைக் கண்காணிக்க இரணடு கருவூலங்கள் செயல்பட்டன. அவைகள் முறையே சிறிய கருவூலம், பெரிய கருவூலம் என்றழைக்கப்பட்டன. இவ்விரண்டு கருவூலங்களின் பணிகளும், செயல்பாடுகளும் வரையறை செயயப்பட்டன. அரசாங்கத்தின் அன்றாட வரவு செலவுகளைக் கவனிக்கும் பொறுப்பைச் சிறிய கருவூலம் என்ற அமைப்பு செயல்படுததி வந்தது.

அரசர்கள், மகாமண்டலேசுவர்கள், பொதுமக்கள் ஆகியோர் கொடை கொடுத்துப் பெரிய கருவூலத்தைச் செழிபபுறச் செய்தனர். டோமின்கோ பைஸ் என்ற போர்சசுக்கீசிய அறிஞா, பெரிய கருவூலம் பூட்டி வைக்கப்பட்டு முத்திரையிடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார். மன்னா மட்டுமே இக்கருவூலத்தைப் பார்க்க அனுமதியுண்டு. இப்பெரிய கருவூலத்தை மன்னருக்குப் பெரும்நிதி தேவைப் படடாலொழிய திறக்க மாட்டார்கள்.[7] விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயரின் படைப்பாகிய ஆமுக்த மால்யதா என்ற இலக்கியம் பல்வேறு செய்திகளை விளக்குகிறது. இது அரசின் வருமானம் நான்கு பெரும் பிரிவுகளாகப பிரிக்கப்பட்டுச் செலவிடப்பட்டதாகக் கூறுகிறது. முதலாவதாக அறக்கொடைச் செலவுகளும, மன்னனின் அந்தரங்கச் செலவுகளும் இரணடாவதாக குதிரைப்படைப் பராமரிப்புச செலவுகளும், மூனறாவதாக, வெளிநாடடுப படை எடுபபிற்கும், நான்காவதாக, அரசாங்க வளர்சசிக்கும் பாதுகாப்பிற்குமாகச் செலவிடபபட்டது.

6 Venkataramanayya, N "Vijayanagara Third Dynasty" P 194

7 O S I H P191

மக்களிடையே ஏற்படும் வழக்குகளை விசாரித்துப் பாராபட்ச மற்ற முறையில் தீர்ப்பு வழங்க அரசின் பல்வேறு பகுதிகளில் நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டன. வழக்குளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்குச் சில சட்ட முறைகள் பின்பற்றப்பட்டன. அவை தர்ம சாஸ்திரத்தின் அடிபபடையில் அமைந்திருந்தன.[8] நீதிமன்றங்கள் கடமை தவறாது நேர்மையான வழியில் தீர்ப்புகளை வழங்கின. வழக்கின் உச்ச நீதிபதிகளாகச் செயல்பட்ட விஜயநகர மன்னர்கள் வழக்கின் தீர்ப்பை மாற்றியமைக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். இதைச் சபை என்று அழைத்தனர்.[9]மன்னர்களிடம் வழக்கை நேரிடையாக மேல்முறையீடு செய்ய முடியாது. ஆனால் அதற்கென இருந்த அதிகாரிகளின் மூலமே செய்ய முடியும்.[10]

நிர்வாகத்தின் கீழ் மட்டத்திலிருந்த கிராம நீதி மன்றங்கள், சாதிப்பஞ்சாயத்துக்கள், வாணிபக் குழுக்கள் என்பன சிறு, சிறு வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தன. இவ்வழக்கு மன்றங்கள் சாதி முறைமைச் சட்டங்களை மீறும் குற்றங்கள், வாணிப விதிமுறைகளை மீறும் குற்றங்கள் போன்ற வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தன. வழக்குகளை மறுபரிசீலனை செய்யும் முறை கையாளப்பட்டது. பொதுவாக வழக்குகளின் தன்மையைப் பொறுத்துத் தண்டனை வழங்கப்பட்டது. சிலசமயம் கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டன. அவற்றில், குறிப்பாகப் பெரும் குற்றங்கள் புரிந்தவர்களின் தலையை வெட்டுதல், கழுவேற்றம், யானைகளிடையே வீசுதல் போன்றவை அடங்கும். பெரும்பாலும் வழக்குகள் தொடுக்கும் இரு பிரிவினரையும் வரவழைத்து, வழக்குகளை நீதிமன்றத்தில் தொடங்காது ஆரம்பத்திலேயே சமாதானம் செய்யப்பட்டது. நிலச்சம்பந்தமாக எழும் பிரச்சினைகளை அத்துறையில் கைதேர்ந்த பிராமணர்களிடம் ஆலோசனை பெற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இம்மாதிரி முறையான நீதி

8 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P 102

9 Opcit P 110

10 Opcit P 112

மனறங்களைத் தவிர, ஆங்காங்கு மக்கள் மன்றங்களும் குறறங்களை விசாரிததுத தீர்ப்பு வழங்கின. இவையாவும் நீதிமன்றங்களுக்கு இணையான அதிகாரங்களைப் பெற்றிருந்தன. அவற்றுள் கிராமங்களில் செயல்பட்ட கிராம சபைகள், கோயில தாமகர்த்தா சபை, சாதிப் பெரியோாகளின சபை போன்றவை குறிபபிடத்தக்கவை. கிராமங்களில செயல்பட்ட நீதிமன்றங்களில் மகாசனங்கள் என்ற பெரியோர்களின் தீர்பபே இறுதியானது. சாதிப்பிரச்சினைகள் சமமந்தமான வழக்குகளை அச்சாதிச் சபையே ஏற்றுத் தீர்ப்பளித்தது. கோயில சம்மந்தமான வழக்குகள் அக்கோயில் தர்மகர்த்தாவால் தீர்மானிக்கப்பட்டன. இவை தவிர, வியாபாரக் குழுக்களின் நீதிமன்றங்கள் இத்துறை சம்மந்தமான வழக்குகளுக்கு வியாபாரத் தலைவர்களின் மூலமாகத் தீர்ப்பளித்தன.[11] மாகாண நீதிமன்றஙகளின் நீதிபதியாக மாகாண ஆட்சியாளர்களோ அல்லது மன்னனின பிரதிநிதிகளோ செயல்பட்டனர்.[12] குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்க சிறைச்சாலைகள் செயல்படடன. சிறு குற்றஙகளுக்கு அபராதம் விதிக்கும் முறையும் கையாளபபட்டது. மக்களிடையே நிகழும் குற்றங்களைத் தடுப்பதற்கும், கண்டுபிடிப்பதற்கும் காவல்முறை என்ற ஒரு அமைப்பு செயல்பட்டது. மேலும் குறறங்களைத் தடுப்பதற்கு உளவுமுறை என்ற ஒரு அமைப்பும் விஜய நகராட்சியில் செயலபடடதாக பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி தனது நூலில் குறிப்பிட்டுள்ளாா.

அரசின் பல்வேறு பகுதிகளில் அன்றாடம் நடைபெறும் நிகழ்சசிகளைத் தெரிவிப்பதற்கும், வளர்ச்சிப் பணிகளைத் தெரிவிப்பதற்கும், அரசிற்கு எதிரான சதி திட்டஙகள், புரட்சிகள், வஞசனை செயயும் மாகாண கவர்னர்கள் போன்றவாகளின் செய்திகளை மன்னனிடம் ரகசியமாகத் தெரிவிக்க ஒற்றர்கள் என்ற ஒரு உளவு சாதன அமைப்பு ஒவ்வொரு பகுதியிலும் செம்மையாகச் செயல்பட்டது. இவற்றின் மூலமாக நாட்டில சுமூக உறவு நிலவச் செயயவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உதவியது. நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க இரண்டு காவல் படைகள் செயல்பட்டன ஒரு படை அரசாங்கத்தாலும் மற்றொன்று மக்களாலும் நிரவகிக்கபபட்டது.

11 Opcit P 114
12 Opcit P 113

இவைதவிர ஆயகர், காவல்காரர், தலையாரி போன்ற அமைப்புகளும் செயல்பட்டன.[13]

விஜய நகரப் பேரரசு தமிழகம் முழுமைக்கும் விரிவாக்கப்பட்டதால் பெரிய பேரரசைச் செம்மையாகவும் நன்முறையில் ஆட்சி செய்யவும் பேரரசு பல பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. இப்பெரும் பிரிவுகள் விஜய நகர மன்னர்களின் நேரடி ஆட்சியில் இருந்தன. இப்பெரிய பிரிவுகள் மகாமண்டலங்கள் அல்லது இராஜியங்களாகப் பிரிக்கப்பட்டன. இவற்றின் கீழ் வராத சில பிரிவுகளும் இருந்தன. இப்பிரிவுகளை ஆண்டு வந்த சிற்றரசர்கள் விஜய நகர மன்னர்களால் வெல்லப்பட்டு அவர்களுக்கு அடங்கிய திறை செலுத்துபவர்களாக ஆட்சி செய்து வந்தனர். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் விஜயநகர மன்னர்கள், சோழாகளின் காலத்திலிருந்து தொன்றுதொட்டு இருந்து வந்த ஆட்சிப பிரிவுகளை இயக்க அனுமதித்தனர். தமிழகததை வென்றவுடன் தமிழகத்தின் ஆட்சி அமைப்பு மற்றும் ஆட்சி மரபுகளை மாற்றவில்லை. முன்பிருந்த ஆட்சிப் பிரிவுகளான கோட்டம், நாடு, வளநாடு, சபை, பற்று, ஊர் முதலியவை தொடர்ந்து இருக்க வழி செய்தனர்.[14] நாட்டின் அரசியல் நிர்வாகத்தைச் செம்மையாகச் செயல்படுத்திட அரசாங்கம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. விஜய நகரத்துக்கு முன் இருந்த மண்டலம் என்ற அமைப்பு மறைந்து அதைவிடச் சிறிய அரசியல் அமைப்பு இராஜியம் என்ற பெயரில் ஏற்படுத்தப்பட்டது.[15] எனினும் கல்வெட்டு ஆவணச் செய்திகளில் இராஜியம் என்ற பெயருடன் மண்டலம் என்ற சொல்லும் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.[16] இராஜியம் என்ற பெயர் செங்கல்பட்டு, சித்தூர் மாவட்டம் அடங்கிய பகுதியைச் சந்திரகிரி இராஜியம் என்று வழங்கியதிலிருந்து அறியலாம். குமார கம்பணாவின் தென்னகப் படையெடுப்பால் கொள்ளிடத்திற்குத் தெற்கே மதுரை வரை

13 Mahalingam, TV "Adminstration and Social Life under Vijayanagar" PP 131-133

14 MER No 100 of 1918, MER No 114 of 1914, MER No 317 of 1919,

15 ARE No 319 of 1911

16 Mahalingam, TV "Administration and Social Life under Vijayanagar" P 180

விரிவாக்கப்பட்டது. அதனால் திருவதிகை இராஜியம், சோழமண்டல இராஜியம், மதுரை இராஜியம் போன்றவை ஏற்பட்டன.

மண்டலங்களுக்கு அடுத்த நிலையில் இராஜியம் என்ற அமைப்பு செயல்படடது. இராஜியங்கள் வளநாடு, நாடு, கோட்டம் எனறும் பிரித்து அழைக்கபபட்டது. கோட்டம், நாடு என்பன தற்போதைய தாலுக்காக்களுக்குச் சமம் என்று கூறலாம். நாடு என்ற அமைப்பு ஐம்பதின் மேலகாரம் அல்லது ஐம்பது கிராமங்களின் கூட்டு என்றழைக்கப்பட்டது கல்வெடடுக்களில் பற்று என்று கூறபபடும் பதம்நாடு என்பதைத் தான் குறிக்கின்றது. நாடு எனற அமைப்பின் கீழ் அகரம் அலலது மங்கலம் என்ற அமைப்பு ஒவ்வொன்றும் ஐந்து கிராமங்களை உள்ளடக்கியதாக இருந்தது.[17] ஆட்சி முறையில முதல் மிகப்பெரிய பிரிவாக இராஜியம் திகழ்ந்தது. இராஜியம் என்ற சொல் ஒரு நிலபபகுதியைக் குறிபபதாக இருந்தாலும் விஜய நகர வரலாற்றைப் பொருத்தமட்டில அது ஒரு பெரிய மாவட்டதைததான் குறிததது. பேரரசின் ஒட்டு மொத்த நிர்வாகத்தைப் பேரரசனே கவனித்து வந்தான். இராஜியத்தின் முதனமை ஆட்சியாளர் மகா மண்டலேசுவர். இவர் துர்க்க தனணாயகா என்று அழைக்கப்பட்டார். இவர் பெரிய படைத தலைவராவாா. விஜயநகர மன்னர்களின் கீழ் வரம்பற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்தார். மகா மண்டலேசுவரர்கள் பல்வேறு கடமைகளையும், அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். தம்முடைய அதிகாரத்திறகு உட்பட்ட மாநிலத்தைப பகைவர்களின் தாக்குதலிருந்து காப்பதே இவர்களின் தலையாய கடமையாகும். குறிப்பாக, விஜய நகர எல்லையில் அமைநதிருநத மகா மண்டலேசுவரர்கள் இபபணியை மிகவும் கவனமாகச செய்ய வேணடியிருந்தது. இப்பணி மட்டுமல்லாமல் நாட்டின் வருவாயைப் பெருக்க வேண்டி. மாநிலத்தின் வரி வசூல் செய்யும் அதிகாரத்தையும்

17 EP Ind Vo XXV P 302

According to the epigraphist the region was divided in to three district or simis They are Bhuvanagiri Chehirmai, Thanjavur Pattana Chehirmai and Tiruchirapalli, Chehimai In the Vijayanagara days a Semai was a Smaller division than a rajya and its exact relation to the more acient kottam or nadu is difficult to find Though it seems probable that the simai was a larger division than the nadu or kottam

பெற்றிருந்தார்கள். மேலும் நாட்டில் சட்டம் ஒழுங்கைக் கடைப்பிடித்து நீதி நிலைத்திடச் செய்யவும், வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் நீதித் துறைத் தலைவர்களாகவும் இயங்கினர்.

*மகா மண்டலேசுவரர்கள்:* மண்டலங்களின் ஆளுநராக அல்லது மகா மண்டலேசுவரர்களாக அரச குடும்பத்தைச் சேர்ந்த மேன்மக்களைத்தான் வழக்கமாக நியமனம் செய்தனர். சிற்சில சமயம் அரச குடும்பத்தைச் சேராத திறமை வாய்ந்த மண்டலேசுவரர்களும் தங்களின் மாநிலத்தில் தங்கி ஆட்சி செயய அனுமதிக்கப்படவில்லை. மாறாக, ஆடசி எந்த ஒரு இடையூறும் இல்லாமல் செயல்படுத்தப்பட மகா மண்டலேசுவரர்கள் காரியகர்த்தா என்ற முகவர்களின் மூலம் மாநில ஆட்சியை நடததி வந்தனர். மகா மண்டலேசுவரர்கள் தங்கள் மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்புடனும், அமர நாயக்கர்களாகவும் இருந்தனர். இவ்வகையில் இவர்கள் மத்திய அரசுடன் மிகவும் நெருக்கமாகப் பிணைந்திருந்தனர். அமர நாயக்கர்களாக இருந்த மகாமண்டலேசுவரர்கள் பேரரசின் சேவைக்காக ஒரு படையை நிர்வகிக்க வேண்டியிருந்தது. அதனுடன் குறிப்பிட்ட ஒரு தொகையை அரசுக்குச் செலுத்த வேண்டியிருந்தது. பொறுப்புடன் இப்பணியைச் செய்யாதவர்களைத் தயவு தாட்சணியம் இன்றிப் பதவியிறக்கம் செய்தனர். மகா மண்டலேசுவராகள் அமர நாயக்கர்கள் என்ற வகையில் தாங்கள் தங்கள் கிராமங்களில மட்டுமே அதிகாரம் செலுத்தினர். பிற அமர நாயக்கர்களுக்கு உரிய கிராமங்களில் தலையிடுவது அனுமதிக்கப்படவில்லை. மத்திய அரசின் கருவூலத்தோடு நேரடித் தொடர்பு கொண்டிருந்த மகா மண்டலசேுவரர்கள் ஒவ்வொரு ஆண்டும் தசரா பண்டிகையின் போது உரிய வரியை நேரிடையாகச் செலுத்தினர்.

தமிழகத்தின் முதல் விஜய நகர மகாமண்டலேசுவரராக முதலாம் புக்கரின் ஆட்சிக் காலத்தில் அவருடைய மகன் குமார கம்பணா நியமனம் செய்யப்பட்டார்.. இவரைப்பின் தொடர்ந்தே ஜம்மனா உடையார் அல்லது இம்பனா உடையார் என்பவர் அப்பதவிக்கு வந்தார். இருநதபோதிலும் கம்பணாவின் காலத்திலேயே மறற அரச குடும்பத்தைச் சாாந்தவர்களும் இப்பதவிக்கு அமர்த்தப்பட்டனர்.[18] வீரசவனா உடையாரின் கல்வெட்டுச்

18 Krishnaswamy, Dr A "Tamil Country under Vijayanagar" P 164

செய்திகள் இவரை மகாமண்டலேசுவரராக கி.பி. 1353 முதல் கி.பி. 1364 வரை குறிக்கின்றன.[19] இவர் கம்பணாவிற்கு நிர்வாகத்தில் உதவி புரிந்துள்ள செய்தியும் திருவொற்றியூர், நெய்யடிபாக்கம், செந்தலை போன்ற இடங்களினின்றும் கிடைத்த கல்வெட்டுக்களின் மூலமாக அறியலாம்.[20] குமார கம்பணா மற்றும் வீரசவனா உடையாருக்குப் பின் இரண்டாம் அரிகரர் தன் மகன் விருபன்னாவை மகா மணடலேசுவரராக நியமித்தார். இரண்டாம் அரிகரர் மாகாண ஆட்சியில் பல புதிய மாற்றஙகளை ஏற்படுததினார். தமிழகததின ஆட்சிப் பொறுப்பைச் சீரமைக்க ஒருங்கிணைந்த ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டது. அதன்படி, மகாமண்டலேசுவரராக இருந்த தன் மருமகனையே பதவியிலிருந்து விலக்கினார். விருபன்னா தென்னகத்தின் ஆளுநராகவும், வட பகுதியை இரண்டாம் புக்கா என்பவரும் நிர்வகித்தனர். கி.பி. 1406 முதல் 1422 வரை ஆட்சி செய்த முதலாம் தேவராயர் காலத்தில் ஆளுநர்கள் மாற்றம் செய்யப்பட்டனர். தமிழகத்தின் வடபகுதியை நிர்வகிக்க தன் மகன் வீர விஜய பூபதி என்பவனை நியமிததார். இவன் கி.பி. 1408 முதல் 1421 வரை ஆளுநர் பொறுப்பில் இருநது நிர்வகித்தான்.[21] பின்னால் ஆட்சிக்கு வந்த இரணடாம் தேவராயர் (கி.பி. 1422-1446) ஆட்சியில் சிறு மாற்றங்களை ஏற்படுததினாா. வழிவழியாக அரச குடும்பததவர்களே மகாமண்டலேசுவரர்களாக நியமனம் செயத நிலையை மாற்றினார். அரசுக்கு விசுவாசம் செய்தவர்களையும் போரில் வல்ல திறமைசாலிகளையும் அப்பதவியில் அமர்த்தினார்.

இவரின ஆட்சிக்காலத்தில் விஜயநகர ஆட்சி மேன்மேலும் விரிவு செய்யப்பட்டு மகாமண்டலங்கள் பல உருவாககப்பட்டன. மேலும் இரணடாம் தேவராயரின ஆட்சிக்காலத்தில்தான் விஜயநகர ஆட்சி தமிழகத்தில் முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், தமிழகத்தின் தென்பகுதியில் தென்காசியில் ஆட்சி புரிந்த பாணடியர்கள் விஜயநகர ஆட்சியை ஏறறுக்கொள்ளவில்லை என்று நியுனிஸ் என்ற அறிஞர் கூறுகிறார்.[22] மேலும் சாளுவ திப்பய்ய தேவ மகாராஜ தொண்டை

19 ARE No 1935-38, P 84

20 ARE No 188 of 1903, 213 & 240 of 1912

21 ARE No 408 of 1923

22 Krishnaswamy, Dr A "Tamil Country under Vijayanagar" P 165

மண்டலத்தின் ஆளுநராகவும், சிலுபபராசர் படைவீடு பகுதிக்கும், சாளுவ திருமலை தேவா சோழ மண்டல ஆளுநராகவும் ஆட்சி புரிந்தனர்.[23] விஜய நகரின் முதல் மரபின் ஆட்சி குன்றத்தொடங்கிய காலத்தில் மனனனாக இருந்த மல்லிகார்சுனா காலத்தில் மகாமணடலேசுவரர்களாக சோழ மரபைச் சார்ந்த தெலுங்குச் சோழ குடும்பத்தாரும் நியமனம் செய்யப்பட்டனர். விஜய நகர ஆட்சியில் பல செயல் திட்டங்களைக் கொண்டு வந்த கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்காலத்தில் மகா மண்டலேசுவர்கள் மட்டுமல்லாமல் குறுநில ஆட்சியாளர்களும் ஆட்சி புரிந்தனர். அவ்வாறு பொன்னம்பல நாதத் தொண்டைமான் என்பவர் அறந்தாங்கிப் பகுதியிலும்[24] புதுக்கோட்டையில் சூரைக்குடிப் பகுதியில் பள்ளிக்கொண்ட பெருமான் விஜயாலய தேவா என்பவரின் மகன் வைரவ நாயனார் என்பவரும் குறுநில ஆட்சியாளர்களாக ஆட்சி புரிந்த செய்தியை அறிய முடிகிறது.[25]

*மகா மண்டலேசுவரரின் அதிகாரிகள் :* மாகாண அரசின் நிர்வாகச் சீரமைப்பிற்கும், அவர்களுக்கு நிர்வாகத்தில் உதவி புரியவும் சில அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டனர். அவர்களுள் மகாபிரதான, தனநாயகர் என்ற இரு அதிகாரிகள் முக்கியமானவர்கள். மேலும் இவ்வதிகாரிகளுக்குத் துணைபுரிய ஓலைநாயகம் இராயபண்டாரம், இராயசம் என்ற அலுவலர்களும் செயல்பட்டனர். ஆளுநரின் ஆணைகளை மக்களுக்கு வெளியிடும் எழுத்து அதிகாரியாகவும், தனியதிகாரியாகவும் செயல்பட்ட இராயசம் என்ற அதிகாரி திருவொற்றியூர் கோயில் தர்மகர்த்தாவிற்கு ஆணை அனுப்பியதாகக் கூறப்படுகிறது.[26] மேலும் கங்காணி என்ற ஒரு அலுவலகமும் செயல்பட்ட செய்தி குமார கம்பணா தனது படைவீடு அரண்மனையைக் கவனிததுக் கொள்ள விஜய சிங்க தேவா என்பவரை நியமித்ததாகக் கூறப்படுவதிலிருந்து தெரிய வருகிறது[27] ஆளுநரின் அந்தரங்கக் கணக்கு வழக்குகளைத் தணிக்கை

23 ARE No 264 of 1927
24 ARE No 730 of PSI
25 ARE No 726, 27, 731 of PSI
26 ARE No 226 of 1912
27 ARE NO 250 of 1906

செய்யும் அதிகாரியாக காரணிக்கம் என்பவர் செயல்படடு வந்தார். அரசின் வருவாயைப் பெருக்கவும் பொருளாதாரததைச் செம்மைப்படுத்தவும் பொருள்களுக்குச் சுங்கவரி விதிக்கவும் அவற்றை வசூல் செயயவும் சுங்க அதிகாரிகள் பலர் நியமிக்கப்பட்டனர் இவ்வாறு பல்வேறு அலுவலர்கள் பல்வேறு துறைக்கு நியமனம் செய்யப்பட்டனர்.

*மகாமண்டலேசுவரரின் அதிகாரமும், உரிமையும் :* நிர்வாக வசதிக்காக விஜய நகரப் பேரரசு பல மகாமண்டலங்களாகப பிரிக்கப்பட்டது. இம்மண்டலங்களை ஆட்சி செய்த மகாமண்டலேசுவரர்கள் மத்திய அரசின் தலையீடு இல்லாமல் தனியுரிமை பெற்ற சுதந்திர ஆட்சியாளாகளாகச் செயல்பட்டனர். இவர்களின் கீழ் ஆட்சி செய்த அதிகாரிகள் திறமையுடனும், ஒழுக்கமுடனும், நல்லிணக்கத்துடனும், கடமையைக் கருத்தில் கொண்டு செயல்பட்டனர். மகாமண்டலேசுவரர்கள் தங்களது தனிஉரிமையை வெளிப்படுத்தும் நோக்கோடு தத்தம் குலமரபுப் பட்டஙகளைச் சூட்டிக் கொண்டனர். மகாமண்டலேசுவரராக இருந்த குமார கம்பணா, ஸ்ரீமான் மகாமண்டலேசுவரா ஸ்ரீவீர கம்பணா உடையார் என்று குல மரபுப பட்டம் சூடிக் கொண்டதைக் கல்வெட்டு செய்திகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.[28]

பொதுவாக மன்னர் அமைச்சர்களின ஆலோசனைப்படியே மாநில ஆளுநர்களை நியமிப்பது வழக்கத்திலிருநதது. ஆனால் சில சமயம் காலக்கெடுவில்லாமல் ஒரு மாகாணத்திலிருநது மற்றொரு மாகாணத்திறகுப பணிமாற்றமும் செய்யப்படடனர். மத்திய அரசுடன் சுமூக உறவைக் கொண்டிருந்த ஆளுநர்கள் நாட்டின் வாணிகத்தைப் பெருக்கவும், நாணயச் செலவாணியைக் கடடுப்படுத்தவும் பொருளாதாரச் சீர்திருததத்திற்கு வழி வகுக்கவும் அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். ஆனால், செலவாணியைக் கட்டுபபடுத்தும் விதத்தில் மத்திய அரசு சில கோட்பாடுகளைக் கொண்டிருந்தது. அதன்படி வராகன் என்ற தங்க நாணயம் வெளியிடும் உரிமையை மத்திய அரசே பெற்றிருந்தது.

28 ARE No 27 of 1921

மகா மண்டலேசுவரர்கள் வரிகள் விதிக்க உரிமைகள் பெற்றிருந்த போதிலும், மத்திய அரசுக்குச் சேர வேண்டிய வரியை முறைப்படி செலுத்த அறிவுறுத்தப்பட்டனர். கி.பி. 1374 இல் குமார கம்பணாவின் செயல் *திட்டங்களை வெளிப்படுத்தும் கல்வெட்டாக உள்ள பாடம் பாக்கம் எனும்* கல்வெட்டு, தன் ஆட்சிக்குட்பட்ட கிராமங்களிலிருந்து வரி வசூல் செய்து மத்திய அரசுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியதைத் தெரிவிக்கிறது. மேலும், பக்தி நெறி வழிபாட்டில் ஈடுபட்டிருந்ததை அவன் கோயிலுக்கு, வரியிலிருந்து ஒரு பகுதியைக் கொடையாகக் கொடுத்ததிலிருந்து அறியலாம். பின்னால் வந்த மகாமண்டலேசுவரர்களும் இம்முறையைக் கடைப்பிடித்தனர்.[29] சட்டம் ஒழுங்கைக் காத்து, மத்திய அரசுடன் சுமூக உறவைக் கொண்டிருந்த ஆளுநர்கள் நன்மதிப்புப் பட்டங்கள் பெறுவதற்கும் ஆட்சிப் பீடத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் மன்னர்களைப் போல் பல்லக்கு மற்றும் யானைகளைப் பயன்படுத்திச் சிற்றரசர்களைப் போல் செயல்படவும் உரிமைகள் பெற்றிருந்தனர். ஆளுநரின் செயல்பாடுகளைப் போற்றும் விதத்திலும், பல்வேறு அதிகாரிகளை ஊக்குவிக்கும் பொருட்டும், பதவி உயர்வு கொடுத்துக் கௌரவிக்கப்பட்டனர்.

*நாயன்காரா ஆட்சிமுறை :* விஜய நகர மாகாண ஆட்சி முறையில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகத் திகழ்ந்தது இந்த நாயன்காரா முறையாகும். அரசாட்சியின் கீழ் உள்ள அனைத்து நிலங்களுக்கும் ஏகபோக உரிமை பெற்றவன் மன்னனே. அரசாங்கத்திற்கும், மன்னனுக்கும் உதவி புரிந்தவர்களுக்கு அவர்களின் சேவையைப் பாராட்டும் விதத்தில் நிலங்கள் வழங்கப்பட்டன. மன்னர்களிடமிருந்து நிலங்கள் பெற்றவர்களை, நாயக்கர்கள் என்று குறிப்பிட்டனா. அவர்களுடைய நிலப்பகுதி அமரம் அல்லது நாயக்கத்தனம் என்று அழைக்கப்பட்டது. ஆனால் விஜயநகரக் கல்வெட்டுக்களில் நாயன்காரா என்று அமரநாயக்கர்களைத்தான் குறிப்பிட்டுள்ளனர். விஜய நகரப் படைப்பிரிவில் பல உயர் அதிகாரிகள் இருந்தனர். அமரா என்பவர் அவர்களில் ஒருவர். அமரா என்ற படைததலைவன் ஆயிரம் காலாள் படைக்குத் தலைவன். அவர்களின் பணியின் தன்மையைக் கொண்டு நிலங்கள் வழங்கப்பட்டன.

29 ARE No 324 of 1911

இராணுவத்தில் படைத்தலைவனாக இருநத அதிகாரியை நாயக்கர்கள் என்று அழைத்தனர். அவர்களின் படைபபராமரிப்புச் செலவுக்கும், அவர்களின் சேவைக்கும் ஊதியமாக நிலஙகள் வழங்கப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட நிலங்கள் நாயக்கதனம் என்று அழைக்கப்பட்டதென்று போர்ச்சுகீசிய அறிஞர் டோமிங்கோ பைஸ் என்பவரும், நியுனிஸ் என்பவரும் கூறுகின்றனர். இம்முறைப்படி பெற்ற நிலங்களை, அனுபவிக்கும் உரிமை பெற்றிருநதனர் ஆனால் இது ஒரு வகை நில குத்தகை முறை போன்றதாகும். இநதக் குத்தகைக்கு அடிபபடை இராணுவ முறையாகும். இராணுவச் சேவை புரிவதை அடிப்படையாகக் கொண்டு மன்னனுககும் நாயக்காகளுக்கும் இடையே எழுந்த ஒரு ஒப்பந்தம் போன்றது இது.

இம்முறையில் இருவருககும் சுமுகமான உறவு நீடிக்கும் வரையிலோ அல்லது அரசனுடைய விருப்பம் நீடிக்கும் வரையிலோ அந்நிலததைப பயன்படுததிக் கொள்ள முடியும். இம்முறை தலைமுறை தலைமுறையாக வந்ததலல. ஐரோப்பாவில் நிலவி வந்த நிலப் பிரவுத்துவ முறைக்கும் நாயன்காரா முறைக்கும் சிறிதளவே தொடர்புண்டு. மத்திய ஐரோப்பாவில் நிலவி வந்த நிலப்பிரபுத்துவ முறை மக்கள் அனைவரையும் நிலக்குததகை முறையில் இணைக்கக்கூடிய ஒரு அமைப்பாக இருந்தது. ஆனால விஜயநகரில் நிலவி வந்த நாயன்காரா முறை ஒரு குறிப்பிடட மக்களே அதாவது இராணுவ சேவையோ அல்லது அரசின சேவையோ செய்தவர்கள் மட்டும்தான் இம்முறையினால் பயன்பெற்றனர்.[30] மேலும் நாயன்காரா அமைப்பில் பேரரசருக்கு அமர நாயக்கர்கள் இராணுவ சேவையைத் தவிர எந்த ஒரு சேவையையும் செயயவில்லை. அமர நாயக்கர்கள் போர்க்காலங்களின் அவரவர்களுக்குக் குறித்த படையுடன் போர்க்களங்களில் இருககவேணடும். இப்படையைப் பராமரிப்பதோடு மல்லாமல் ஆண்டுதோறும் பேரரசாகளுக்கு குறிப்பிட்ட தொகையைச் செலுததவேண்டும்.[31]

30 Mahalingam, T V "Adminstration and Social Life under Vijayanagar" P 200

31 Robert Sewell , "A Forgotten Empire" P 281

விஜய நகரத்தைப் பார்வையிட்ட பல்வேறு வெளிநாட்டறிஞர்கள் விஜய நகரத்தில் அப்போது இருந்த நிலை பற்றிய தெளிவான செய்தியை விட்டுச் சென்றுள்ளனர். டோமிங்கோ பைஸ, நியுனிஸ் போன்றவர்கள் தெளிவான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். பேரரசர், அமர நாயக்கர்கள் பராமரிக்க வேண்டிய படைகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தார். அதைக் குறைவின்றிச் செய்வது அமர நாயக்கர்களின் முதல் கடைமையாகும். அத்துடன் அல்லாமல் ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய தொகையையும் குறிப்பிடுகிறார். இவர்கள் எப்போது அரசவையில் இருக்கவேண்டும் என்றும், பேரரசருக்குக் குழந்தைகள் பிறக்கும்போது பரிசுகள் வழங்கவேண்டும் என்றும், சில நேரங்களில் பேரரசருக்கு உணவு வகைகள் வழங்கவேண்டும் என்றும் இக்கடமையில்[32] தவறுபவாகள் தண்டிக்கப்படுவர் என்றும் கூறப்படுகிறது. ஆண்டு வருவாயில் பாதியை ஆண்டுதோறும் செலுத்தி வந்தனர். கடமையிலிருந்து தவறும் நாயன்காரர்கள் தண்டிக்கப்பட்டனர்.[33]

விஜயநகர நிர்வாகத்தில் கிராமங்களை மூன்று பெறும் பிரிவுகளாகப் பிரித்து அதன் செயல்பாடுகள் வரையறை செய்யப்பட்டன. கிராமங்கள், கோயிலின் நிர்வாகம் மறறும் வழிபாடுகள் செவ்வனே நடைபெற அவற்றிற்குத் தானமாக வழங்கப்பட்டன. நாட்டின் பாதுகாப்பிற்காக நிர்வகிக்கப்பட்டு வந்த இராணுவத்தில் படையதிகாரிகளாகச் செயல்பட்டவர்களுக்கு, மானியமாகவும் சில கிராமங்கள் வழங்கப்பட்டன. மற்றும், அரசுத்துறை அலுவலர்களுக்கு ஊதியத்திற்காகச சிலவகைக் கிராமங்கள் மானியமாக வழங்கப்பட்டன.

***உள்ளாட்சி அமைப்புகள் ;*** நாட்டின் ஒட்டு மொத்த நிர்வாகத்தை நிர்வகிக்க மைய அரசு என்ற ஒரு அமைப்பு இயங்கினாலும் ஆட்சியைச் செம்மையாக நிர்வகிக்க உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன. சோழர்கள் காலத்தில் அவர்களுடைய நிர்வாகத்தில் குறிப்பிடத் தகுந்ததும்,

32 Barbosa P 209
Robert Sewell, "A Forgotten Empire" P 281
33 Opsit 374

செழிப்புற்று இருந்ததுமான உள்ளாட்சி அமைபபுகள் அவாகளுக்குப் பிறகு பின்னடைவு எயதின. குறிப்பாகச் சொல்வோமாயின் தமிழகத்தில் விஜயநகர ஆடசிக்காலத்தில கி.பி. பதினான்கு, பதினைந்தாம் நூறறாணடுகளுக்குப் பிறகு கி.பி. பதினாறாம் நூற்றாண்டு முதல் படிப்படியாக, முற்றிலும் மறைநது விட்டது என்று கூறலாம்.[34] எனினும் இங்கு சபா, ஊர், நாடு என்ற மூன்று அமைப்புகளைப் பற்றி அறிவது இன்றியமையாதது. தென்னிந்திய வரலாறறில் ஆட்சிமுறை அரசியலில் மிகவும் சிறப்பு வாய்நத அம்சம் உள்ளாட்சி அமைப்பாகும். சபா, ஊர், நாடு என்று பிரித்து கிராம ஆடசியைச சோழர்கள் நிரவகித்து வநதனர். இந்தக் கிராமிய அமைப்புகள தத்தம் எல்லைகளுக்குட்பட்டு பல்வேறு பணிகளைச் செயது வந்தன. பல்லவ பாண்டியாகளின் காலஙகளில் பிராமணாகள் செழிததிருந்த சதுாவேதி மஙகலங்களில் இவ்வுள்ளாட்சி அமைப்புகள் திறமையுடன் செயல்படடன. கி.பி. ஏழு, எட்டாம் நூறறாண்டுகளில் பல்லவ ஆட்சிப் பகுதியில் மட்டும் இருபது சபாக்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அவை பெரும்பாலும் தொண்டை மண்டலத்திலேயே அடங்கியிருந்தன. இந்த முறை பின்னாளிலும தொடர்ந்தது.

*சபா :* கலவெட்டுகள் சபா பற்றியும், அவற்றின் அமைப்புப் பற்றியும் பல்வேறு செய்திகளைக் கூறுகின்றன. கிராமங்களில் சொந்தமாக நிலம் வைத்து இருந்தவர்கள அனைவரும் ஒன்று கூடித் தம் கிராமங்களில் ஆடசிக்காக அமைத்த ஒரு அமைப்பே சபாவாகும். சோழர்கள் காலத்தில், இந்தச சபாக்கள் உள்ளாட்சி அமைப்பின் நாடித்துடிப்பாக அமைந்திருந்தன. தமிழநாடு முழுவதும் பரவியிருந்த சபாக்கள் தொண்டை மண்டலப பகுதியில் அரக்கோணம், செய்யார், திருமுல்லை வாயில், திருவொற்றியூர், சோழமண்டலத்தில் மாயுரம், நன்னிலம், கும்பகோணம் முதலிய இடங்களில் இருந்ததாக அறிகிறோம். வாரிய முறைகளும், குடவோலை முறைகளும் சோழர்கள் காலத்தியச் சபா ஆட்சி

34 Krishnaswamy, Dr A "Tamil Country under Vijayanagar" P 84
This is a clear proof of the view that during the Vijayanagar period the local institutions continued to decline during the 14th, 15th centuries and disappeared completely during the 16th century

முறையில் சிறப்பம்சமாக விளங்கின. விஜயநகர காலத்தில் சபாக்கள் முன்போல் உன்னத நிலையில் இல்லாதிருந்த போதிலும் கிராமங்களில் பல்வேறு கிராம ஆட்சி முறையில் ஆயகர் முறையைக் கொண்டு வந்துவிட்டதால், சபை செய்து வந்த பல்வேறு பணிகளை ஆயகர்கள் செய்ய ஆரம்பித்தனர். எனவே விஜய நகர காலத்தில் சபாக்கள் தங்களின் முக்கியத்துவத்தை இழந்து விட்டன. விஜயநகர மன்னர்களின் ஆடசிக்காலம் முழுவதும் தமிழகத்தில் பத்து இடங்களில மட்டுமே சபா செயல்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அவை வட ஆற்காட்டில் ஐந்தும், தென்னாற்காட்டில் இரண்டும் செங்கல்பட்டில் மூன்றும் செயல்பட்டு பின்னடைவு எய்தியதைக் காட்டுகின்றன. ஆயினும் சபாக்கள் தங்களின் எல்லைகளுக்குட்பட்டே பணிகளைச் செய்து வந்தன. சபைகள் பல்வேறு வாரியங்களாகப் பிரிந்து நின்று தமக்கிட்ட பணியினைச் செய்து வந்தன. கிராமங்களில் குளங்களையும் நீர்பாசன முறைகளையும் சபைகள் கவனித்து வந்தன. மேலும் தோட்டங்கள் மற்றும் கிராமக்காடுகளைக் காத்து வந்தன. பஞ்சக் காலங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது, கிராமச்சாலைகளை நிர்வகிப்பது போன்ற பணிகளைச் செம்மையாகச் செய்து வந்தன. சபையில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை, கிராமத்திற்குக் கிராமம் மாறுபட்டது. இவர்கள் தங்கள் பணிக்காக எந்த ஒரு ஊதியத்தையும் பெறவில்லை. ஆனால் சபையின் நிர்வாகச செலவிற்காக, சில கிராமங்கள் கொடையாகக் கொடுக்கப்பட்டதை குமார கம்பணா திருவண்ணாமலைக்கு அருகில் உள்ள சோமநாத சதுர்வேதி மங்கலம் என்ற கிராம சபைக்கு ஒராபாக்கம் என்ற கிராமத்தைக் கொடையாக அளிக்க ஆணை பிறப்பித்துள்ளதன் மூலம் அறியமுடிகிறது.[35] மேலும் இச்சபைகள் சுதந்திரமாக நிர்வாகத்தை நடத்தி வந்துள்ளன.[36] பன்னிரெண்டு ஆழ்வாகளில் ஒருவரான திருமழிசையாழ்வார் பிறந்த திருமழிசை கிராமத்துச் சபை அதே கிராமத்திலுள்ள செகனாதப் பெருமாள் கோயிலுக்கு நிலங்களைக் கிரயப் பத்திரம் செய்து கொடுத்ததையும், ஆவணங்களின் மூலமாகத் தெரிந்து

35 ARE No 304 and 305 of 1919

36 ARE No 389 and 390 of 1923

கொள்ளலாம்[37] மேலும், இரண்டாம் தேவராயர் (1422-46) காலத்தில் கிடைத்த கலவெடடுச் செய்திகளினபடி கி.பி. 1434இல் உத்திரமேரூர் சபை கருவேப்பம் பூண்டி என்ற கிராமத்தை திருபபுலிவனம் சிவன் கோயிலுக்குக் கொடையாகக் கொடுததலைக் குறிப்பிடுகிறது[38]

*ஊர் :* அநதணர்களும் மற்ற இனத்தார்களும் சேர்ந்து வாழ்ந்த கிராமஙகளில் கிராமங்களின் நிர்வாகத்தைக் கவனிக்க செயல்பட்ட அவையை ஊா என்று அழைத்தனா். இதுவும் சபா அமைப்பு போன்றே பல்வேறு பணிகளைச் செய்தது. ஊர் அல்லது ஊரவர் சபையின் செயல்பாடுகளுக்கு ஊக்கம் தரும் வகையில் மற்ற சிறு சிறு அமைப்புகளும் செயல்பட்டன. இந்த ஊரவர் அவை கிராமங்களுடைய நிலங்களை விற்பது, வாங்குவது கோயில்களின் நிர்வாகச் செலவுகளுக்கு நிலங்களைக் கொடையாகக் கொடுப்பது போன்ற செயல்களைச் செய்து வந்தது. பேரரசர்களும் இவற்றின் செயல்பாடுகளுக்கு ஊக்கம் தந்தனர். முதலாம் புக்கரின் புதல்வராகிய விருபன்னாவின் ஆட்சிக்காலத்தில் அவருடைய அலுவலராகச் செயல்பட்ட மங்கபப உடையாா் கி.பி. 1382 இல் ஊரவர் அவைக்கு ஓர் ஆணை பிறப்பித்துள்ளார். அதன்படி, சம்புவராயன் நலலூரில் உள்ள விருப்பாச்சா கோயிலுக்கு அன்றாட வழிபாட்டினைச் சிறப்பாக நடத்துவதற்கு ஒரு வேலி நிலமும், வழிபாடு நடத்துபவர்கள் குடியிருக்க வீட்டு மனைகளும் வழங்கபபட்டதாகத் தெரிய வருகின்றது[39] மேலும் விருததாசலம் தாலுக்கா வயலூரில் கி.பி. 1401 ஆம் ஆண்டு கல்வெட்டு, ஊரவர் அவை ஒரு மாநிலத்தை மேற்படி கோயிலுக்கு வழங்கியுள்ளதைத் தெரிவிக்கிறது. இரண்டாம் தேவராயர் காலத்தில் கி.பி. 1422-46 இல் திருக்கோயிலூா் தாலுக்காவில் ஆவியூர் கிராமம் ஊா என்ற அவையைப் பெறறிருந்தது. மேலும் தென்னாற்காடு மாவட்டம் நெற்குன்றம் கிராமத்தில் செயல்பட்ட சபை என்ற அமைபபும் பேரவை என்ற அமைப்பும கி.பி. 1426இல் கிராமங்களின் முக்கியப் பிரச்சினைகளை விவாதிக்கக் கூட்டுக் கூட்டத் தொடரை மேற்கொண்டு சில

37 MER 1923 Para

38 ARE No 202 of 1923

39 ARE No 96 of 1941

பிரச்சினைகளுக்கு முடிவெடுத்தது. குமார கம்பணாவின் ஆட்சிக் காலத்தில் இந்த ஊரவர் அவையைப் பற்றி அவருடைய தளவானூர் கல்வெட்டு கூறுகினறது.

விஜயநகர ஆட்சியில் தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இவ்வகைகள் நன்கு செயல்படடன. கி.பி. 1406 இல் கீரனூர் என்ற இடத்திலிருந்து கிடைத்த செயதியின் மூலம் கீரனூர் கோயில் அறங்காவலர், கைகோளர் போன்றோர் இந்த ஊரவர் அவையில் இடம் பெற்றிருந்தனா. மேலும் இக்கோயிலைப் புதுப்பித்த இரண்டு பொற்கொல்லர்களுக்கு அவர்களின் செயலைக் கௌரவிக்கும் விதத்தில் பட்டங்கள் அளித்தனர்[40] என அறிய முடிகின்றது.

*நாடு :* அந்தணர்கள் வாழ்ந்த பல சதுர்வேதி மங்கலஙகளை உள்ளடக்கியதாக இது செயல்பட்டது. ஒரு அரசியல் அமைப்பாக வளநாடு என்ற அமைப்பின் கீழ் செயல்பட்டது. ஆனால் ஊர் என்ற அமைப்பை விட பெரிய அரசியல் அமைபபாகும். நாடு என்ற அமைப்பில பத்துப் பேரவைகளை உள்ளடக்கிய ஒரு பெரும் அமைபபாகச செயல்பட்டது. ஆனால் இவ்வமைபபுகள் தமிழகத்தின் வடபகுதியை விடத் தெனபகுதியில் நன்கு செயலபட்டன. குமர கம்பணாவின் ஆட்சியின்போது தஞ்சையில் பொன்பட்டி, திருவாய்ப்பாடி என்ற கிராமங்களில் நாட்டவர்களின் கூட்டம் நடைபெறற செய்தியை அறிய முடிகிறது. மேலும் தென்னாற்காட்டில் திருக்கோயிலூரிலும், இராமனாதபுரத்தில் திருப்புல்லானியிலும் இவவவையின் கூட்டம் நடைபெற்று சில முக்கிய கருததுக்களை விவாதித்தன. கி.பி. 1372 இல் குமார கம்பணா பொன்பட்டி நாட்டவர் அவையின் அனுமதி பெற்று தெய்வச்சிலை பெருமாள் கோயிலுக்கு நகையைக் கொடையாக அளித்துள்ளார். கி.பி.1446இல் கார்குறிச்சி என்ற

40 No 690 of PSI

**கீரனூர், உத்தம தானீஸ்வரமுடையார் கோயில் தானியரும், கைக்கோளர் முதலிகளும் கீரனூர் ஊராக இனசந்த ஊரவரும் ஆகிய இவ்வனைவரும்.**

ஊரில் செயல்பட்ட நாட்டவர் அவை புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள திருக்கட்டளைச் சிவன் கோயிலுக்கு ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்திப் பல்வேறு பணிகளைச் செய்தது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் வளநாடு நாட்டவா அவை மத்திய அரசுக்குத் செலுத்த வேணடிய நிலுவைவரித் தொகைககாக திருவரங்குளம் கோயிலுக்கு நிலங்களை விற்றனர் என்று இந்த உள்ளாட்சி அமைப்பின் செயல்பாடுகளைப் பறறி அறிய முடிகிறது.[41]

*ஆயகர்கள் :* விஜய நகரப் பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் உள்ளாட்சி முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆயகர்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள். உள்ளாடசி அமைபபுகள் தொன்று தொட்டுக் கிராமஙகளின் ஆட்சியை நடத்தி வந்தன. ஊர் மற்றும் சபைகள் செய்து வந்த பணியை விஜயநகர காலத்தில் ஆயகர்கள் என்ற அலுவலர்கள் செய்யத் துவங்கினர். இந்த அலுவலர்கள் அரசுக்கும் மக்களுக்குமிடையே ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்பட்டனர். ஆயகர் என்ற அமைப்பில் மொத்தம் பன்னிருவர் செயலபட்டனர். அவர்கள் கர்ணம் ரெட்டி, தலையாரி, நீர் வழங்குபவர், காலணி செய்பவர், முடி திருத்துபவர், தசசர், கொல்லர், புரோகிதர், துணி துவைப்பவர், குயவர் மற்றும் கருமார் என்பவர்களாவர்.[42] இவர்கள் அனைவரும் தங்களுக்குரிய பணியைச் செவ்வனே செய்து கிராமநிர்வாகம் சுமூகமாக நடைபெற ஒத்துழைப்பு நல்கினர். கிராமத்தின் பல்வேறு தேவைகளைக் கவனிதது வந்தனர். எடுத்துக்காட்டாக, கர்ணம் என்ற அலுவலா கிராமத்தின் வரவு, செலவுக் கணக்கைப் பராமரித்தார். பொதுவாகக் கிராமததின் பரப்பளவு, அதன் எல்லைகள், நிலங்கள், தோப்பு மறறும் தோட்டங்கள, குளங்கள், கிணறுகள் போன்ற அனைத்து விவரஙகளையும் தாம் பேணிய பதிவேடுகளில குறித்து வந்தார். மேலும் தலையாரி என்ற மற்றொரு அலுவலர் கிராமத்தின் அமைதிக்கும் மக்களின உடமைகளைப பாதுகாப்பதற்கும் பொறுப்புடையவராயிருந்தார். ஆயகாகளுக்கு அரசு எவ்வித ஊதியமும் வழங்கவில்லை. ஊதியத்திறகுப் பதிலாக அலுவலர்களுக்கு நிலங்களை வழங்கியது. மேலும் அறுவடைக் காலங்களில் குறிப்பிட்ட அளவு விளைவு அவர்களுக்கு வழங்கப்பட்டது.

41 No 733 and 737 of PSI

42 No 740 and PSI

இந்த கிராம அலுவலர்கள் அரசால் நியமிக்கப்பட்டனர். மேலும் இவ்வலுவலர்கள் வமிசாவழி அடிப்படையில் அலுவல்களைக் கவனித்து வந்தனர். இதில் ஏதும் பிரச்சினைகள் ஏற்படுமாயின், அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு தீர்த்து வைத்தது. ஆயகர்கள் அவர்களின் ஆட்சிப் பகுதியைச் சுயமாக அமைதி காத்து நிர்வகிக்க உரிமை பெற்றிருந்தனர். இக்கிராமத்தில் ஆயகர்களுக்குத் தெரியாமல் சொத்துக்களை மற்றவர்களுக்கு மாற்றம் செய்வதோ அல்லது வழங்குவதோ முடியாது. நிலங்களை விற்பதாக இருந்தாலும், வாங்குவதாக இருந்தாலும் ஆயகர்களுக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தி விட வேண்டும். அதிலும் குறிப்பாக கர்ணம் என்ற அலுவலர் இப்பொறுப்புக்களைக் கவனித்து வந்தார். கர்ணம் விற்பனை செய்யும் நிலங்களின் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்து, வாங்குபவருக்கும் விற்பவருக்குமிடையிலான ஒப்பந்தப் பத்திரத்தை எழுத வேண்டிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இம்முறை பின்னர் ஆங்கிலேயரால் பெரிதும் பின்பற்றப்பட்டது.

# 6
# சமூகம்

விஜய நகர காலத்தில் தமிழகத்தில் மக்களிடையே பலவிதப் பிரிவுகள் இருந்தன. அபபிரிவுகள் பிறப்பின் அடிப்படையிலும், தொழிலின் அடிப்படையிலும், மொழியின் அடிபபடையிலும், சமயத்தின் அடிப்படையிலும், பழக்க வழக்கங்களின் அடிப்படையிலும் இருந்தன. தமிழச்சமுதாயம் இந்துக்கள், முகமதியர்கள், கிருத்தவர்கள், சமணர்கள் மறறும் புதத மதத்தினரையும் உள்ளடக்கி இருந்தது. தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் சௌராட்டிரா மொழி பேசும் மக்கள், சமூகத்தின் அங்கங்களாக இருந்தனர். மேற்கூறிய நான்கு பிரிவில், சமுதாயத்தில் உயர்குடி மக்களாகக் கருதப்பட்டவர்கள் பிராமணர்களாவர். இரண்டாவதாகச சத்திரியர்கள் மன்னர்களாகவும், போர்ப்படைத் தளபதிகளாகவும், மூன்றாவதாக வைசியர்கள் வியாபாரக் குடிமக்களாகவும், இறுதியாகச் சூத்திரர்கள் சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் கீழ் சாதிககாரர்களாக சிறு சிறு வேலைகளைச் செய்பவர்களாகவும் இருந்தனர்.

ஒவ்வொரு சாதி மக்களும் தனித்தனிப் பகுதிகளில் குடியிருந்தனர். அவரவர்கள் குடியிருந்த இடம் அவர்களின் சாதியாலேயே அழைக்கப்பட்டது. குறிப்பாக, உயர் சாதி மக்களாகக் கருதப்பட்ட பிராமணாகள் வாழ்ந்த இடம் அக்ரகாரம் எனப்பட்டது. கைவினைஞர்கள் குடியிருந்த பகுதி கைக்கோளார் தெரு, கம்மாளர் தெரு என்றும் கீழ்சாதி மக்களான பறையரும், புலையரும் ஊரின் புற எல்லையில் குடியிருந்த பகுதி சேரி என்றும் வழங்கபபட்டது. சமுதாயத்தில சாதி வேற்றுமை வலுப்பெற்று ஒவவொரு சாதிக்குள்ளும் பல்வேறு பிரிவுகள் இருந்தன. இவற்றால பல்வேறு பிரச்சினைகளும், சச்சரவுகளும் மலிந்தன. இப்பிரசசினைகள் ஒருவர் செய்யும் தொழிலின் மேல் மறறொருவர் ஆதிக்கம் செலுத்துவதாலும் திருவிழா போன்ற விழாக் காலங்களில் ஆடைகள் உடுத்துவதிலும், இசை வாத்தியங்கள் பயன்படுததுவதிலும்

எழுந்தன. இவற்றை வலியுறுத்தும் செய்தியாக முதலாம் தேவராயரது கல்வெட்டு, கலைத் தொழிலாளர்களுக்குள் எழுபத்து நான்கு உட்பிரிவுகள் இருந்ததைக் கூறுகிறது. தொழிலாளர்களிடையே தனிப்பட்ட உரிமைக்காக வந்த வழக்குகள் சாதிகள் மேன்மேலும் வளர வழி வகை செய்தது. சமுதாயத்தில் இருந்த வலங்கை இடங்கைப் பிரிவும் தொழில் ஆதிக்கத்தினாலேயே எழுந்தன. விஜய நகர காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டது. இம்மாற்றம் குறித்த எழுதப்படாத எந்த நூலும், எந்த ஆய்வும் ஒரு முழுமையான ஆய்வாகாது. இக்காலக் கட்டத்தில் தான் தென்னிந்தியாவின் வட பகுதியில் ஆட்சி செய்த விஜய நகர மன்னர்கள் தமிழகத்தில் அடியெடுத்து வைத்துப் பெரும்பாலான பகுதிகளைத் தங்களது ஆட்சிக்கு உட்படுத்தினர். அப்போதுதான் தெலுங்கு, கன்னடப் பகுதிகளிலிருந்து வரிசை வரிசையாக மக்கள் தமிழகத்தில் வந்து குடியேறினர். இவர்களின் குடியேற்றம் சமுதாயத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. ஆட்சியாளர்கள் ஆட்சிப் பகுதியைப் பல்வேறு சிறு, சிறு பிரிவுகளாகப் பிரித்தனர். அவ்வாட்சிப் பகுதியின் அலுவல்களைக் கவனிக்க தெலுங்கு, கன்னடப் பகுதியினரையே நியமித்தனர்.

அவர்களுடைய ஆட்சிப் பகுதியின் மண்டலங்களுக்கு மகாமண்டலேசுவரர்களாக தெலுங்கு, கன்னட மக்களையே நியமித்தனர். விஜய நகர மாகாண நிர்வாகத்தில் தலைசிறந்த அம்சமாகக் கருதப்பட்ட நாயன்காரா முறையில் அமர நாயக்கர்களாகப் போரில் வல்ல கன்னடர்களும், தெலுங்கர்களும் தமிழ்ப்பகுதியில் நியமிக்கப்பட்டனர். இந்த வகையான நியமனங்கள் உயர்ந்த அலுவலர்களிடையே மட்டுமன்றி உள்ளாட்சி நிர்வாகத்திலும் கொண்டு வரப்பட்டன. ஆயகர் முறையில் பணிபுரிந்த பல்வேறு அலுவலர்களும் மேற்கூறப்பட்டவர்கள். இக்குடியேற்றம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதைச் சற்றுக் கூர்ந்து ஆராய வேண்டும். விஜய நகர மன்னர்கள் உயர்ந்த அலுவலர்களை மட்டுமல்லாது கலையைக் காக்கவும் வளர்க்கவும் அத்தொழிலில் கைதேர்ந்தவர்களையும், தொழில் வல்லுனர்களையும் வருந்தி அழைத்து வந்து பேராதரவு காட்டித் தமிழ்ப் பகுதியில் குடியேற்றினர்.[1] தொழில்களைத் துவக்கவும் தம்

Venkasamy Rao, T. "Manual of the Tanjore District" P P 164-168

கலைகளை வளர்த்து மேம்பாடடையவும் ஊக்குவிக்கப்பட்டனர். இவ்வாறு தமிழகத்தில் குடியமர்ந்த தெலுங்கு மற்றும் கன்னட மக்கள் தத்தம் குடும்பங்களோடும், உறவினர்களோடும், வேலைக்காரர்களோடும் தமிழகத்தில் குடியமர்ந்தனர். இவர்களின குடியேறறத்தினால் தமிழகத்தில் ஏற்கனவே குடியிருந்த மக்களின் வாழ்ககை நிலை பெரிதும் பாதிக்கப்படடது. மேலும் அவர்கள் செய்து வந்த தொழில்கள் சமுதாயக் கலப்படத்தால் பல மாற்றங்களுக்கு உட்பட்டன என்றாலும் கலையிலும் மக்களின் கலாச்சாரத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்தன. முன்பு அரசின் உயர்பதவியில் இருந்த தமிழர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு அவ்விடங்களில் புதிதாக வந்தவர்கள் நியமிக்கப்பட்டனர்.[2]

*பிராமணர்கள்:* நான்கு வகைச் சாதிகளில் உயர் சாதி மக்களாகக் கருதப்பட்ட பிராமணர்கள் அரசின் அனைத்து வகை நன்மைகளையும் பெற்று உயர்நிலை அடைநதனர். இவர்கள் கல்வி, கேள்விகளில் தேர்ச்சி பெற்று விளங்கியதால் எல்லா நிலையிலும் மேன்மையடைந்தவர்களாகச் சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர். இவர்கள் ஆட்சியாளர்களாகவும், ஆசிரியர்களாகவும், கோயில்களில் இறைப்பணி செய்பவர்களாகவும், கோயில் நிர்வாக அதிகாரிகளாகவும், ஊழியர்களாகவும் பணி செய்தனர். இவற்றை வலியுறுத்தும் சான்றுகளாக அமைந்துள்ள வெளிநாட்டார்களின் விஜய நகர அரசைப் பற்றிய செய்திகளும் பிராமணர்களின் உயர்நிலை கண்டு அவற்றைத தம் நூல்களில் வெளியிட்டுள்ளனர். சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் இருந்தது மட்டுமன்றி அரசின் பல்வேறு சலுகைகளையும் பெற்றிருந்தனர். இவர்கள் வைதீக வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சிலரே கோயில் நிர்வாகத்தோடு பணிபுரிந்தனர். வேறு சிலர் பெரிய நிலங்களுக்குச் சொந்தககாரர்களாக சமுதாயத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர்.[3] மற்றும் சிலா வியாபாரம் மற்றும் வணிகத் துறையில் ஈடுபட்டுப பெரும் பொருளீட்டினர். சிலர் மடாலயங்களில் தங்கி கல்வி மற்றும் இலக்கியங்கள் செழித்து வளரப் பாடுபட்டனர். இவர்களுடைய குலத்தொழிலாகக் கருதபபட்ட வேதங்கள் மற்றும் சமயச் சார்புடைய நூல்களை ஓதுவதும் அவற்றைப்

2 Srinivasa Ayyengar, M "Tamil Studies" P 85

3 Sewell Robert "A Forgotten Empire" P 245

பயிற்றுவிப்பதும் அவர்களின் தலையாய கடமையாக இருந்தது. ஆயினும் பல சிறந்த பிராமணர்கள் சமய வாழ்க்கையை விட்டு விட்டு சிறந்த அரசியலவாதிகளாகவும், அரசியல் அறிஞர்களாகவும், சிறந்த ஆட்சியாளர்களாகவும் படைத் தலைவர்களாகவும் செயல்பட்டனர். வெளிநாட்டறிஞர்களான அப்துர்ரசாக், டோமிங்கோ பைஸ் போன்றோர் அரசு, பிராமணர்களுக்கு அளித்த வெகுமதிகள், பரிசுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அரண்மனையில் இரண்டாயிரம், மூவாயிரம் புரோகிதர்கள் பல்வேறு பொறுப்புக்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் குமார கம்பணாவின் ஆட்சிக்காலத்தில் கோயில் நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தார். அதன்படி நிர்வாகச் சிக்கல்களைக் களைந்தார். கோபணாரிய கோபணா என்ற பிராமணர் கோயில் நிர்வாக அதிகாரியாக இருந்தார். இவர்கள் பொதுவாக, சைவ உணவுப பழக்க வழக்கங்களை மேற்கொண்டவர்களாக இருந்தனர். பிராமணாகள் நன்கு மதிக்கப்பட்டனர். எந்தக் குற்றங்கள் செயதாலும் அவர்கள் தண்டிக்கப்படவில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக கிருஷ்ண தேவராயர் தன் மகன் திருமலாவைக் கொன்ற சாளுவ திம்மா என்ற அமைச்சரைக் கொலவதற்கு ஆணை பிறப்பிக்கவில்லை[4] பேரரசை நிர்வகிப்பதற்கு பிராமண அமைச்சரின் ஆலோசனையைக் கேட்டனர். முதலாம் புக்கர், இரண்டாம் அரிகரர் ஆட்சியின்போது மாதா, சாயனா என்ற இரண்டு பிராமண அமைச்சர்கள் அரசின் நன்மதிப்பைப் பெற்றிருந்தனர். கிருஷ்ண தேவராயரின் ஆட்சியின்போது ஏராளமான பிராமணர்கள் உயர் பொறுப்புகளில் அங்கம் வகித்தனா. அவர்களின் குறிப்பிடக்கூடிய சாளுவ திம்மா, சாளுவ கோவிந்த ராசா, இராயசமராசு, கொண்டமராசு, திம்மராசு, அய்யப்பராசு, மங்கராசா காரணிக்கர், லைக்ஷ்மி நாராயண காரணிக்கர் மற்றும் செல்லப்பா போன்றோராவர். பிராமணர்கள் மேல்பதவியில் அமர்த்தப்பட்டதற்குக் கிருஷ்ண தேவராயர் பின்வருமாறு காரணம் கூறுகிறார். பிராமணர்கள் அரசுக்கு நெருக்கடி வரும் சமயத்திலும் போர்க்காலங்களிலும் விசுவாசமான முறையில் நடந்து கொண்டனர். சில சமயம் அவர்களைச் சத்திரியர்களுக்கும், சூத்திரர்களுக்கும் கீழ்

4 Mahalingam, T V. "Administration and Social Life under Vijayanagar" P 240

அதிகாரிகளாக நியமித்த சமயததிலும் பொறுப்புடன் செயல்பட்டனர் எனப் புகழ்கிறார். பிராமணர்களின் திறமையையும், பொறுப்பையும் பாராட்டி அவர்களுக்குக் கிராமங்கள் மானியமாகவும் வழங்கப்பட்டது. பிராமண சமுதாயததைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்களிடையே இருந்த சில பழக்க வழக்கங்கள் மற்றவாகளிடமும் பரவியது. குறிப்பாக குழந்தைப் பருவ மணம், சீதனம் கொடுத்தல், பணம் கொடுத்துப் பெண்ணை மணம் செய்தல் போன்ற தீய பழக்கவழக்கங்களும் நடப்பில் இருந்தன.

*சத்திரியர்கள் :* பிராமணர்களுக்கு அடுத்த நிலையில் உயர் சாதிக்காரர்களாகக் கருதபபட்டவர்கள் சத்திரியர்களாவர். அரசாளும் வகுப்பைச் சேர்ந்தவர்களும், பிரபுக்களும், போர்ப்படைத் தளபதிகளும் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படடனர். அரசாளும் வகுப்பைச் சேர்ந்த இவர்கள் எண்ணிக்கையில் குறைவே; ஆனால் ஆடம்பர, செழிபபான வாழ்க்கையை மேற்கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். மேலும் அரசாங்க நிர்வாகப் பொறுபபுகளில் உயர் அதிகாரிகளாகவும், வீரம் செறிந்த படைத் தலைவர்களாகவும், அரசின் அனைத்துப் துறைப் பொறுப்புகளையும் நிர்வகிப்பதில் தேர்ச்சியும், திறமையும் பெற்றவர்களாகவும் இருந்தனர். விஜய நகரப் பேரரசு தென்னாடு முழுமைக்கும் பரவியதற்கு சத்திரியர்களே காரணமாயிருந்தனர். சிறந்த படைத்தலைவர்களாகத் திகழ்ந்த இவர்கள் தெனனாட்டில் முகமதிய அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட இந்து சமயத்தையும், மக்களையும் காத்தனர்.

*வைசியர்கள்:* இவர்கள் வணிகத்தை தம் குலத் தொழிலாக மேற்கொண்டவர்களாவர். மேலும் இவர்கள் விவசாயம், மாடு வளர்ப்பது போன்ற தொழில்களையும் செய்து வந்தனர். அரசிடம் சுமூக உறவை ஏற்படுததிக கொண்டு நல்ல பல சலுகைகளைத் தமதாக்கிக் கொண்டனர். இதனால் அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்திக் கொண்டு சமுதாயத்தின மேட்டுக்குடி மக்களாக வாழ்ந்து வந்தனர். தென்னாட்டில் இவாகள் தனிப்பட்ட இனத்தவர்களாக வாழ்ந்தனர். ஆனால் இவர்கள் தெலுங்கு, கன்னட நாட்டிலுள்ள கோமுட்டி என்ற வர்த்தக இனத்தைச் சேர்ந்தவர்களெனக் கூறிக் கொண்டனர். விஜய நகர காலத்தில வாணிபம் உயர்நத நிலையை அடைந்திருந்தது. உள்நாட்டு வாணிபம்

மட்டுமல்லாமல் வெளிநாட்டாருடனும் வாணிபம் செய்து வந்தனர். வெளிநாட்டுடனான வர்த்தகத் தொடர்பால் வாணிபம் செழித்தது. அன்னியச் செலவாணி உயர்ந்தது. தங்கம், வெள்ளி போன்ற நாணயங்கள் பழக்கத்தில் இருந்ததாக விஜய நகருக்கு விஜயம் செய்த அயல்நாட்டு அறிஞாகள் தம் குறிப்பில் விட்டுச் சென்றுள்ளனர். நாட்டின் பாதுகாப்பிற்கும், உள்நாட்டு அமைதிக்கும் படையை நிர்வகிப்பது அவசியமாயிற்று. ஆதலினால் போர் புரிவதற்குத் தேர்ச்சி பெறற வீரம் செறிந்த குதிரைகளை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தனர். இக்கடல் வாணிபத்திற்குத் தென்னாட்டின் மேற்கு கடற்கரையோரத்தில் வாணிபத் துறைமுகங்கள் நன்கு செயல்பட்டன. வணிகத் தொழிலை மேற்கொண்ட வைசியர்கள் தங்களுக்குள் வணிகக் குழுக்களை அமைத்துக் கொண்டு செயல்படடனர். இதனால் பொருள்களின் விலையை நிர்ணயித்து விற்பதற்கும், வாங்குவதற்கும் விலை ஏறறத்தாழ்வு போன்ற சிக்கல்களையும் தவிர்த்தனர். இவ்வணிகக் குழுக்கள் வணிகத்தில் ஏற்படும் சச்சரவுகள் வழக்குகள் போன்றவைகளைத் தீர்த்து வைத்து நீதி வழங்கும் ஒரு அமைப்பாகவும் செயல்பட்டன. நாணா தேசிகன் போன்ற வியாபாரக் குழுக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்திலும் பெரும் சாதனை புரிந்தவர்களாவர். தமிழ்நாட்டில் விளைபொருள்களுக்குக் கீழ்திசையிலும், மேற்றிசையிலும் உலகச் சந்தையை ஏற்படுத்தியது இவர்களின் சாதனையாகும்.

*சூத்திரர்கள்:* சமுதாயத்தைப் பாகுபாடு செய்த நான்கு பெரும் சாதியில் கீழ் சாதிக்காரர்களாக எல்லா நிலையிலும் பின் தங்கி இருந்தனர். பொருளாதாரத்தில் நலிவடைந்து இருந்ததால் இவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வழியில்லை. மற்ற மூன்று சாதிக்காரர்களின் பணியாட்களாகவே செயல்பட்டனர். சிறு, சிறு வேலை செய்யவும் எடுபிடியாட்களாகவும் அன்றாடம் காய்ச்சிகளாகவும் இருந்தனர். இவவகுப்பினர் பயிர்தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர். விஜய நகரப் பேரரசில் இருந்த பல்வேறு வகுப்பினர் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் வலஙகை, இடங்கை வகுப்புப் பிரிவினர் என்று அழைககப்பட்டனர்.[5]

5 Mahalingam, T.V "Administration and Social Life under Vijayanagar" P 221

ஒவ்வொரு பிரிவின் கீழும் சுமார் தொண்ணூற்று எட்டுச சிறு சிறு பிரிவுகள் இருந்தன. இந்தத் தொண்ணூற்று எட்டுப பிரிவுகளும் பதினெட்டுப் பெரும் பிரிவுகளின் கீழ் உள்ளவையென்று பேராசிரியர் டி.வி. மகாலிங்கம் தனது நூலில் கூறுகிறார். வலங்கை, இடஙகைச் சாதிப்பிரிவுகள் தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திரா, கர்னாடகப் பகுதிகளிலும் பரவலாக இருந்தன என்பதைச் சான்றுகள் பகர்கின்றன[6] தமிழகத்தில் வலங்கை, இடங்கைப் பிரிவுகளுக்கிடையே இருந்த சச்சரவுகள் சமுதாயத்தின் அமைதியை அடிக்கடி குலைத்தன. இச்சச்சரவுகள் பெரும்பாலும் சலுகைகளின் அடிப்படையிலேயே எழுந்தன.

வலங்கை மற்றும் இடங்கைப் பிரிவுகளின் தோற்றம் அறிஞர்களால் அய்யமின்றித் தீர்மானிக்க முடியாத ஒரு செய்தியாக இருக்கிறது. பல்வேறு அறிஞர்கள் அவர்களின் தோற்றம் பற்றிய பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றனர். தொன்றுதொட்டு வாழ்ந்து வந்த விவசாயப் பெரும் குடிமக்களுக்கும் வாணிபம் செய்யும் பிரிவினருக்கும் இடையே ஏற்பட்ட சலுகை பற்றிய சசசரவாகும் என்று பல கருத்துத் தெரிவித்துள்ளனர். மேலும் தொழில் சார்ந்த மக்களுக்கிடையே ஏற்பட்ட போட்டிதான் இப்பிரிவுகளின் தோற்றத்திற்குக் காரணமென்று கூறுவர். இவர்களுக்கிடையே ஏற்பட்ட சச்சரவுகள் பெரும்பாலும் மிகவும் அற்பமாக இருந்தன. அதாவது திருவிழாக்காலஙகளில் இன்னிசைக் கருவிகளை உபயோகிப்பது, ஆடைகளை உடுத்துவது, அணிகலன்கள் அணிவது, காலணிகள் அணிவது மற்றும் பலலக்கில் ஏறித் தெருக்களில் உலா வருவது குறித்தும், குதிரைகளில் சவாரி செய்வது குறித்தும் பிரச்சினைகள் எழுந்தன.[7] விஜய நகரப் பேரரசின் காலத்தில் இச்சச்சரவால் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஆடசியாளர்கள் அடிக்கடி இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நேரிட்டது. வட ஆறகாடு மாவட்டம் மலயம்பட்டு என்ற இடத்தில் கிடைத்த சான்றுகளின்படி இரு பிரிவினர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களால் இரண்டு பிரிவிற்கும் மிகுந்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன

6 Opcit P 250

7 Abbe, Dubois, "Hindu manners, Customs and Ceremonies Vol I P.26

என்று தெரிகிறது.[8] மேலும் கி.பி. 1438-39இல் வலங்கை, இடங்கைப் பிரிவினர்களுக்கிடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி திருவிழாக்காலங்களில் கலகம் செய்யும் ஒருவர் எப்பிரிவைச் சேர்ந்தவராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி அவ்விடத்திலேயே ஈட்டியால் கொல்லப்படுவார் என்றும் அவருக்கு எந்தவித ஈமச்சடங்குகளும் நடைபெறாது என்று கூறுகிறது.[9] அதோடு மட்டுமல்லாமல் காவிரியின் வடகரையில் அமைந்திருந்த இருங்கோல பாண்டி வளநாடு பகுதியில் வாழ்ந்த வலங்கை இடங்கைப் பிரிவினர்களின் சமூகப்பழக்க வழக்கங்கள் ஒரு ஒப்பந்தத்தின் வாயிலாக கி.பி. 1440-41இல் தீர்வு காணப்பட்டன.[10] இப்பிரிவினர்கள் சமுதாயவரி என்ற ஒருவகை வரியைச் செலுத்தினர். இதற்கு எடுத்துக்காட்டாக இடங்கை வரியை அரசுக்குச் செலுத்தினர்.[11] மேலும் இப்பிரிவினர் அரசியல் குழு என்ற ஒரு அவையை தங்களுக்குள் ஏற்படுத்தித் தாங்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி பற்றித் தீர்மானித்தனர். அதே சமயம் தீர்மானித்த வரிக்குமேல் வசூல் செய்யும் பிராமணர்களும், வரி வசூலிப்பவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.[12]

வலங்கை இடங்கைப் பிரிவினர் சமூகப் பழக்க வழக்கங்களில் மட்டுமல்லாது சமயத்திலும் தங்களது பிரச்சனைகளை வளர்த்துக் கொண்டனர். ஒரே கோயிலில் வழிபாடு நடத்துவதோ அல்லது சமயப் பணிக்கு இரு சாரரும் ஒரே மண்டபத்தைப் பயன்படுத்துவதோ தவிர்க்கப்பட்டது.[13]

*பெண்கள் நிலை* : குறிப்பாக, மகாமண்டலேசுவரராக விளங்கிய குமார கம்பணாவின் மனைவி கங்காதேவி மதுரா விஜயம் என்ற ஒரு அரிய

8 ARE No 185 of 1921
9 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P 253
10 ARE No 253 of 1926
11 ARE No 4 of 1906, 215 of 1910
12. ARE No 92 of 1918, 59 of 1914
13. Venkataramayya, N. "Vijayanagar third Dynasty", P.382

நூலைப் படைத்துள்ளார். இதுவே விஜய நகர வரலாறறுக்கு அடிப்படைச் சான்றாக அமைந்துளளது. விஜய நகரத் தென்னகப் படையெடுப்புப் பற்றியும, ஆடசி பறறியும் அறிந்து கொள்ளத தக்கதோர் சான்றாக விளங்குகிறது. மேலும் கொன்னாமா என்ற பெண்மணி விஜய நகர அரசவையில் வாசகராக நியமிக்கப்பட்டார். மேலும் அச்சுதராயர் காலத்தில் வடமொழிப் பண்டிதராக விளங்கிய திருமலாம்பாளின் பணி போற்றுவதற்குரியது. பெண்கள் இளம் வயது முதலே பாடுவதற்கும், ஆடுவதற்கும் பயிற்றுவிக்கப்பட்டதாக வெளிநாட்டறிஞர் நூனிஸ் கூறுகிறார்.[14]

விஜய நகரப் பேரரசின் காலத்தில் இரண்டு வகைப் பெண்கள் இருந்தனர். அவர்கள் முறையே குடும்பப் பெண்களும், பொது மகளிர் என்பாரும் ஆவர். குடும்பப பெண்கள் சமுதாயத்தில் பெரும் பங்கு வகிக்கவில்லை. அவர்கள் தத்தம் குடும்ப நலத்தைப் பேணுவதிலேயே கருத்தாக இருந்தனர். குடும்பப் பெண்கள் இளம் வயதில் தங்களின் பெற்றோரின் கட்டுப்பாட்டின் கீழ் ஒழுக்கமுடன் வாழ்ந்தனர். பெண்களுககுக் கல்வி போதிக்கப்பட்டது. குறிபபாக அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்களின் குடும்பப் பெண்களுக்குக் கல்வி போதிக்கப்பட்டது. தாய்மொழி மட்டுமின்றி சமஸ்கிருதம் (வடமொழி) போன்ற பிற மொழிகளும் போதிக்கப்பட்டன. இசையும், நாட்டியமும் அவர்களின் கல்வியில் இடம் பெற்றன. இசைபாடுவதறகும், இசைக்கருவிகளை மீட்டுவதற்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவையாவும் பெண்கள் அறிவு வளர்ச்சி பெற வேண்டும் எனபதற்காகவோ அல்லது சுதந்திரச சிநதனை பெற வேண்டும் என்பதற்காகவோ அல்ல. கல்வி வாழ்வில் ஒரு அங்கமாகக் கருதபபட்டது. பொதுவாக பெற்றோர்கள் தங்களின மகள்களைப் பாரமாகவே கருதினர். அவர்களுக்கு விரைவில் மணம் முடிக்க விரும்பினர். பெணகள் தங்களின் கணவனைத் தேர்ந்தெடுக்கப் பெரும்பாலும் அனுமதிக்கப்பட வில்லை. பெற்றோரே தெரிவு செய்தனர். ஆணும், பெண்ணும் காதலித்து மணம் புரிவது மிகவும் அரிதாக இருந்தது. பலதார மணம் சமூகததில் மலிநது இருந்ததால்

14 O S I H P 186

காதலும், அன்பும் அரிதாகக் காணப்பட்டது.[15] திருமணத்திற்குப் பிறகு பெண்கள் கணவனின் கட்டுபபாட்டில் முழுவதுமாக அடைபட்டனர். அவளுக்கு எல்லாம் கணவனே என்று மனுதர்மத்தின் அடிப்படைக் கொள்கை போதிக்கப்பட்டது. ஆனால் பொதுமகளிர் சமுதாயததில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சமுதாயத்தில் நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டனர். அபபொது மகளிரில இரண்டு வகை இருந்தது. முதலாமவர் அரசவையைச் சார்ந்தவராக இருந்தனர். அவர்கள் சமூகத்தில் பங்கு கொண்டு திருவிழா போன்ற விசேஷங்களிலும் கலந்து கொண்டனர். இரண்டாமவர் கோயில்களைச் சார்ந்து வாழந்தனர். இவர்கள் இறைத்தொண்டு செய்வதையே தங்களது புனிதத் தொழிலாகக் கருதினர். இறைவழிபாட்டு நேரத்திலும், திருவிழாக் காலத்திலும், நடனமாடுதல், இசை பாடுதல் போன்றவற்றில் ஈடுபட்டனர். குறிப்பாக ஆண்டுதோறும் மகாநவமி விழாவின்போது நடைபெறும் நடனநாட்டிய நிகழ்ச்சிகளில் அவர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகக் கருதப்பட்டது. அரசவைப் பெண்கள் அரசனுக்கும் அரசிக்கும் பணிப்பெண்களாகச் செயல்பட்டனர். இவர்கள் அரசியைப் பல்லக்கில் இருத்தி திருவிழா போன்ற விசேஷ தினங்களிலும் மற்றும் குறிப்பிட்ட தினங்களிலும் வீதியுலா நிகழ்ச்சியை நடத்தினர். அரசவையில் இருந்தோர் பொதுவாக விலை உயர்ந்த பட்டாடை அணிந்து ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். காலணி அணியும் வழக்கம் மேன்மக்களிடமே காணப்பட்டது. பெண்களும் ஆண்களும் தலைமுடியை நீளமாக வளர்ப்பது வழக்கத்திலிருந்தது. பெணகளும் ஆண்களும் வகைவகையான அணிகலன்களை அணிந்து கொண்டனர். தங்கக் கம்பியால் இரத்தினமோ, மணியோ பதிக்கப்பட்ட வளையல்கள், உயர்தரக் கற்கள் பதிக்கப்பட்ட காது வாளையல்கள், முத்துப்பதித்த கை வளையல்கள் போன்றவற்றை அணிந்தனர் எனறும் சந்தனம், குங்குமம், பன்னீர், கற்பூரம் போன்ற வாசனைப் பொருள்களையும் பயன்படுத்தினா என்றும் போர்சசுக்கீசிய அறிஞர் பார்போசா கூறுகிறார்.

- விஜயநகர காலத்துப் பொது மகளிர் சிலர் செல்வாக்குடன் வாழ்ந்தனர். எனினும் இவர்களின் வாழ்க்கை தாழ்வான நிலையில்

15 Venkataramayya, N "Viajayanagar third Dynasty", P 382

இருந்தாலும் அன்றைய காலகட்டத்தில் மக்களால் வெறுககப்படவில்லை. விலை மகளிர் தொழில் ஒரு சடடப்பூாவமான தொழிலாகத் திகழ்ந்தது. அவர்கள் சமுதாயத்தில் பெரிதும் மதிக்கப்பட்டனர். அரசர்களும், பிரபுக்களும் அவர்களைத் தேடிச் சென்றனர். இவர்கள் நகரங்களில் இருந்த அழகிய வீடுகளில் வாழ்ந்தனர். மேலும் அரசரின் அந்தப்புரததில் நுழையவும் அரசியலில் அளவளாவவும் உரிமை பெற்றிருந்தனர்.

அக்கால கட்டத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்ததை இத்தாலிய அறிஞர் நிக்கலோ கொண்டி தனது பயணக்குறிப்பில் கூறுகிறார். விஜயநகர அரசர்கள், பிரபுக்கள் இறக்கும்போது அவாகளுடைய மனைவிமார்கள், காமக்கிழத்திகள் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்களுக்குத் தாஙகளே தீயிட்டு உயிரை மாய்ததுக் கொண்டனர்[16] உடன்கட்டை ஏறாத கைம்பெண்களின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. அவர்கள் தலையை மொட்டையடித்துக் கொண்டனர். மேலும் ஆபரணங்களைக் களைந்து வெள்ளை நிற ஆடை அணிந்து கொணடனர். உணவுப் பழக்க வழக்கங்களிலும் மாறறம் செய்யப்பட்டது. இவர்களின் நிலை மற்றவர்களை விட மோசமாக இருநதது. பொது இடங்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. சமூகத்தை அறியாத, விளக்காத வரலாறு உண்மையான முழுமையான வரலாறு ஆகாது. எனவே சமூகம்தான் எல்லா செயல்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. ஒரு சமூகத்தை அதாவது இந்து சமூகமோ அலலது முகமதிய சமூகமாக இருந்தாலும் அவர்களை நன்கு அறிந்து கொண்ட மாத்திரத்தில்தான் தெளிவான வரலாறு எழுதமுடியும். சமூகத்தில் பலவித ஏற்றத்தாழ்வுகள் நிலவி வந்தன. அவ்வேற்றத் தாழ்வால சமூகத்தில் மக்களிடையே அமைதியின்மை ஏற்பட வழிவகுத்தது. செய்யும் தொழிலை மையமாகக் கொண்டு சாதிகள் ஏற்படலாயின. எனினும் இலக்கியங்கள் தமிழ் மக்களை ஐம்பெரும் திணைகளின் கீழ் கொண்டு வந்தன. இவை வாழும் பகுதிகள், செய்யும் தொழிலை அடிப்படையாகக் கொண்டிருந்தனவை அன்றி சாதிகளை மையமாகக் கொண்டில்லை என்பதை உணரலாம். ஆனால் பின்னாளில் சமூகத்தில் மனுதாமதத்தின் அடிபபடையிலே நான்கு பெரும் பிரிவுகள ஏற்பட்டாலும் அவைகளுக்குள் பல்வேறு பிரிவுகள் இருந்தன.

16 Basham, A L "The Wonder that was India", P 188

# 7

## சமயம்

சமயம் என்பது சமுதாயத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது. சமயம் இல்லாத ஒரு சமுதாயத்தைப் பார்ப்பது அரிது.எனவே சமயமும் சமுதாயமும் ஒன்றோடொன்று கலந்துள்ளன. ஒவ்வொரு சமுதாயத்தினரும் தங்களுக்கென்று ஒரு சமயத்தை ஏற்படுத்தி, விதிமுறை நெறிகளையும் அமைத்து அவறறின் வழி வாழத் தலைப்பட்டனர். இந்தியத் திருநாட்டில் பண்டை முதல் பல்வேறு சமயங்கள் இருந்ததை நாம் சான்றுகளின் வாயிலாக உணரமுடியும். எனினும் இந்தியத் துணைக் கண்டதகைப் பொறுதத வரை இந்து சமயமே பெரும்பான்மையான மக்களின் சமயமாகக் கருதப்பட்டது. இருப்பினும் சமணம், புத்தம், கிருத்தவம், இசுலாம் போன்ற சமயங்களையும் மக்கள் பின்பற்றினர். நாம் தொன்று தொட்டு இந்திய வரலாற்றை ஆராயும் போது எத்தனையோ அரசுகள் ஆட்சி செய்துள்ளன. ஒவவொரு அரசும் சமயப்பொறையுடைமைக் கொள்கையைப் பின்பற்றினாலும் ஒவ்வொன்றும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ஆட்சி புரிந்தன. சில அரசுகள் சமயத்தைக் கருப்பொருளாகக் கொண்டே ஆட்சி பீடம் ஏறின. தமிழகத்தை ஆண்ட விஜய நகர அரசும் இதற்கு விதிவிலக்கல்ல. சமயப்பொறையுடமைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்தாலும் அவரவர்களின சமயத்திற்கே முன்னுரிமை கொடுத்து ஆட்சி செய்தனர். மற்றும் சில அரச மரபுகள் தம் குல தெய்வத்திற்கே முன்னுரிமை கொடுதது வழிபட்டனர். மேலும், அக்கோயில்களில் இறை வழிபாடு செவ்வனே நடைபெற எல்லா அரசுகளும் நிபந்தங்கள் வழங்கின. நிபந்தங்கள் பொன்னாகவும், நிலமாகவும் கிராமங்களாகவும் அளிக்கப்பட்டதை உணர முடிகிறது. விஜய நகர முதல் மரபைச் சேர்ந்த ஆட்சியாளர்கள் தங்கள் குலதெய்வமான விருபாச்சா தெய்வத்தை வழிபடுபவர்களாக இருந்தனர். அத் தெய்வததின் பெயரையே தங்களின் பெயராகவும் சிலர் சூட்டிக் கொண்டனர். என்பதிலிருந்து அவர்கள் சமய ஈடுபாட்டில் மிகுந்த அக்கறை கொண்டு இருந்ததை அறிய முடிகிறது.

தெனனிந்தியாவை ஆட்சி செய்த விஜய நகர அரசு நான்கு பெரும் மரபுகளை உள்ளடக்கியதாகும் அவை சங்கம மரபு, சாளுவ மரபு, துளுவ மரபு, அரவீடு மரபு ஆகியவைகளாகும். இந்த நான்கு மரபுகளும் முதல் மரபாகிய சங்கம மரபே விஜய நகர ஆட்சி தென்னகத்தில் ஏற்படுவதற்குக் காரணமாக அமைநதது. இந்து சமயத்தின் ஒரு பிரிவான சைவ சமயத்தை இவர்கள் பின்பற்றினர். சாளுவ மரபு, துளுவ மரபு, அரவீடு மரபு என்ற மூன்று மரபினரும் இந்து சமயத்தின் மற்றொரு பிரிவான வைணவத்தைப் போற்றினா. முதல் மரபைத தொடர்ந்து தென்நாடு வரை உள்ளடக்கிய விஜய நகர அரசை ஆட்சி செய்த மற்ற மூன்று மரபுகளும் வைணவத்தைத் தங்களது கொள்கையாகக் கடைப்பிடித்தாலும் பிற சமயத்தை அவர்கள் வெறுக்கவில்லை. மாறாக, சமயப் பொறையுடைமைத் தத்துவத்தை மேற்கொண்டு செயல்பட்டதை இலக்கிய நூல்களும் கல்வெட்டு ஆவணங்களும் பறைசாற்றுகின்றன.

முதலாவது மரபைச் சேர்ந்த விருபாச்சா என்ற மன்னனின் வைணவ ஈடுபாட்டை விளக்குகின்ற ஒரு சான்றாக பிரபண்ணாமிர்தம் என்ற தெலுங்கு நூல் விளங்குகிறது. இவரைப் பின் தொடர்ந்த விஜய நகர ஆட்சியாளர்கள் வைணவத்தில் மிகுந்த ஈடுபாடு காட்டியதை அவர்களின் சமயக் கொள்கையை விளக்குகின்ற கலவெட்டுகளின் வாயிலாகவும், சிதம்பரம் கோயிலின் கோபுரம் கட்டியதிலிருந்தும், கிருஷ்ணதேவராயர் திருப்பதி கோயிலுக்குப் பன் முறை சென்று வழிபாடு நடத்தி அக்கோயிலுக்கு நிபந்தங்கள் வழங்கியதிலிருந்தும் அறிய முடிகிறது. மேலும் முதல் மரபைச் சோந்த ஆடசியாளர்களின் சமய நெறியை அவர்களின் அச்சுச் (seals) சான்றுகளும், சைவக்கோயிலகளுக்கு இறைவழிபாடு மற்றும் திருவிழா போன்ற நிகழ்சசிகள் தவறாமல் நடைபெற நிபந்தங்கள் வழங்கிய தன்மையும் உணர்த்துகின்ற கோயில் நிர்வாகம் செவ்வனே நடைபெற வழங்கிய இனாம் கிராமங்கள், விலை உயர்ந்த தங்க ஆபரணஙகள் அவர்களின் இறைவழிபாடடையும் ஆன்மீக உணர்வையும் பிரதிபலிப்பவைகளாக அமைந்துள்ளன. இவாகள் விருபாச்சா என்ற சைவ சமயத் தெய்வத்தைத் தங்களது குல தெயவமாக வழிபட்டனர்.[1] மேலும் இத்தெய்வத்திற்குத் தலைநகரில பிரமாண்டமான அளவில் கோயில் எடுத்தனர்.

1 I H Q Vol XIII P 255

இந்து சமயத்தின் இரு பெரும் பிரிவுகளான சைவம், வைணவம் ஆகியவை பற்றிய செய்திகளைப் பக்தி இலக்கியங்களின் மூலமாகத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். பக்தி இயக்கக் காலங்களில் தென் இந்தியாவில் சைவ மதத்தையும், சைவத் திருத்தலங்களின் பெருமைகள் பற்றியும் பாடிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் திருநாவுக்கரசர், திருஞானசம்மந்தர், சுந்தரர் என்ற மூன்று நாயன்மார்களின் படைப்பாகிய தேவாரம் சைவத் திருத்தலங்கள்தோறும் வழிபாட்டில் பாடப்பட்டது. இம்மூவர் பாடிய தேவாரத்தைத் தொகுத்தவர் இராசராச சோழன் காலத்தைச் சேர்ந்த நம்பியாண்டார் நம்பி என்பவராவார். திருவாசகத்தைப் பாடிய மாணிக்கவாசகரும் சைவமதத்தின் தத்துவக் கருததுக்களைச் செய்யுள் வடிவிலே படைத்துள்ளார். இதைப்போல வைணவத் திருத்தலங்களைப் பற்றிப்பாடிய ஆழ்வார்களின் தொகுப்பாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனி என்பவராவார்.

கி.பி. 6 ஆம் நூறறாண்டு முதல் இயங்கி வநத பக்தி இயக்கம், நாயன்மார்கள், ஆழ்வார்களைத் தொடர்ந்து சங்கரரும், இராமானுசரும் இந்து சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர். ஆனால் கி.பி. பதிநான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில நிலவிய அரசியல் குழப்ப நிலையைச சந்தர்ப்பமாகப பயனபடுத்தி டில்லி சுல்தான்கள் தம் மதமாகிய முகமதியத்தைத் தென்னாட்டில் பரப்பும் பொருட்டும், தென்னக ஆட்சியாளர்களை ஒடுக்கவும், செல்வச்செழிப்பைக் கவரவும் படையெடுப்பை மேற்கொண்டனா. எனவே டில்லி சுல்தான் ஒய்சாளர்களின் மேல் படையெடுத்து வீழ்த்தினான். மேலும் தெறகு நோக்கிச் செல்லத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்த வேளையில் மதுரையில் ஆட்சி செய்த பாண்டியப் பேரரசில் வாரிசுரிமைப் போர் ஏறபட்டது. எனவே மாலிக்காபூர், உதவி செய்யும் பொருட்டு மதுரையை நோக்கிப் படையெடுத்துச செல்லுங்கால் வழியிலிருந்த இந்துக் கோயிலகளைத் தரைமட்டமாக்கி, விக்ரகங்களைச் சிதைத்தான். பாண்டியநாடு வரை நிகழ்த்திய படையெடுப்பில் வெற்றி பெற்று மதுரையில் பாண்டியர் ஆட்சியை இறக்கிவிடடு முகமதிய ஆட்சியை நிறுவினான். அங்கு ஆட்சியாளர்களாக ஜலால் உதின் என்பவரை நியமித்தான். மதுரை, டில்லி, சுல்தான்களின் ஒரு மாநிலமாக மாறியது. எனவே முகமதியத் தாக்கததால்

சீரழிந்த இந்து, சமயத்தைக் காப்பாற்றும் பொருட்டும், அழிந்த திருத்தலங்களைச் செப்பனிடவும் இந்துக்களின் ஆட்சியாகிய விஜய நகரப் பேரரசு தென்னாட்டில் படையெடுப்பு நிகழ்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. மேலும் முகமதிய அட்டூழியங்களால் பாதிக்கப்பட்ட மக்களும் அவாகளுக்கெதிராகப் போராடத் தலைப்பட்டனர். எனவே விஜய நகரை ஆட்சி செய்த சங்கம புதல்வர்களும் அவர்களைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த குமார கம்பணா போன்றோரும் தென்னாட்டில் பன்முறை படையெடுத்து முகமதிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். எனவே மதுரைக்கு உட்பட்ட தென்னாடு முழுவதும் விஜய நகர ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

விஜய நகர ஆதிக்கத்தால், நலிவுற்ற இந்து சமயம் புத்துயிர் பெற்றது. ஆலயங்கள் தோறும் திருப்பணி நடைபெற்றது. இந்து மதத்தை வளர்க்கவும் அதன் கோட்பாடுகளை மக்கள் நன்கு புரிந்து கொள்ளும் பொருட்டும் ஏராளமான இலக்கியங்களும், நூல்களும் எழுதப்பட்டன. விஜய நகர ஆட்சியாளர்களின் இந்து சமய இயக்கத்தை ஆதரித்து அவ்வியக்கத்திற்கு உறுதுணையாக நின்றனர்.

*இந்து சமயம் : அத்வைதம்* : இந்தியாவின் மிகத் தொன்மையான, பெருவாரி மக்களால் ஏற்று கொள்ளப்பட்ட இந்து சமயம் சைவம் என்றும் வைணவம் என்றும் இரு பெரும் பிரிவுகளாக வளர்ந்து அவை ஒவ்வொன்றிலும் பல்வேறு பிரிவுகள் நடைமுறையில் உருவாயின. சைவ சமயததில் அத்வைதம், பாசுபதம், வீரசைவம், சித்தாந்த சைவம் என்ற நான்கு பிரிவுகள் இருந்தன. அத்வைதம் என்பது சங்கராச்சாரியாரின் கொளகை கோட்டுபாடுகளைப் பின்பற்றி அவர்வழி நடந்தவர்களைக் கூறுவர். விஜய நகர ஆட்சிக்காலத்தில் சிரிங்கேரி, காஞ்சிபுரம் என்ற இரு இடங்களில் அத்வைத கோட்டுபாடுகளையும், கொள்கைகளையும், பரப்பும் பொருட்டு மடாலயங்களை நிறுவினர். மேலும் பஸபகிரி, விருபாச்சம் போன்ற இடங்களிலும் சிறு மடாலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த இரண்டும் எப்போது ஏற்படுததபபட்டது என்பது சற்று ஐயப்பாடானது. சிரிங்கேரி மடாலயத்தில் அத்வைத கொள்கை முனிவராக இருந்த வித்யாரண்ய முனிவர் விஜய நகர ஆட்சி ஏற்படுவதறகுக் காரணமாகவும் ஒத்துழைப்பு நல்கியவரும் ஆவார். எனவே தான் சிரிங்கேரி மடத்திற்கு

விஜய நகர முதலாம் மரபைச் சேர்ந்த ஐந்து சகோதரர்களும் கி.பி. 1346இல் கொடை கொடுத்துள்ளதைக் குறிப்பிடலாம்.[2] மேலும் காஞ்சியில் செயல்பட்ட மடாயலமும் விஜய நகரத்தின் செல்வாககைப் பெற்றுத் திகழ்ந்தது.

பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டுகளில் இந்தியா முழுவதும் அத்வைதக் கொள்கைக்குப் பெரும் ஆதரவு கிடைத்தது. ஆங்காங்கு செயல்பட்ட மடாலயங்கள் ஏராளமான சீடர்களைப பணியில் அமர்த்தி அவர்களுக்குப் பயிற்சி அளித்தன. வேதாந்தப் பள்ளியில் பயின்ற பிரபல அறிஞர் பெருமக்கள் இந்துசமய அத்வைதக் கொள்கைகளைப பற்றி ஏராளமான நூல்களை வெளியிட்டனர். விஜய நகர மூன்றாவது மரபில் தோன்றிய பேரரசர் கிருஷ்ணதேவராயர் வைணவ சமயத்தைப் போற்றினாலும் சைவ சமய இறைவனான விருபாச்சாவிற்குத் தலைநகரில் கட்டப்பட்டிருந்த கோயில்களைப் புதுப்பித்தார். மேலும் அவரது முடிசூட்டு விழாவின் போது அங்கு கோபுரமும் மண்டபமும் கட்டப் பணித்தார். அதன் இறை வழிபாட்டிற்காகவும் பிற சிவன் கோயில்களுக்கும் நிபந்தங்களை வழங்கியுள்ளார்.

*பாசுபதம் :* விஜய நகர ஆட்சிகாலத்தில் அத்வைதத்தைப் போலவே பாசுபதமும் வளர்ச்சி பெற்றது. வேத ஆகமத்தில் பற்றுடையவர்கள் பாசுபதர்களெனப்பட்டனர். தெனனாட்டின் பல பகுதிகளிலும் பாசுபத மையங்கள் அமைக்கப்பட்டன. இவற்றிற்கு அந்தந்த இடங்களில் குருமார்களும், கொள்கைப்போதகர்களும் இருநதனர். விஜய நகர ஆடசியை ஏற்படுத்திய புதல்வர்களான அரிகரரும், புக்கரும் பாசுபதக் கொள்கைத் தத்துவங்களை மேற்கொண்டவர்களாவர். தென்னகப்படையெடுப்பிற்கும் விஜய நகர ஆட்சி, தென்னாடு வரை பரவுவதற்கும் காரணமாக இருந்த முதலாம் புக்கரின் மகனான குமார கம்பணாவும் பாசுபதக் கொள்கையை ஏற்றவராவார். மேலும் அவர் கிரியா சக்திக் குருவை தனது குல குருவாகஏறறுக்கொண்டவர்.[3] ஆனால்

2 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P 306

3 M E R 1925, Para 30

சங்கமரின் புதல்வர்கள் அனைவரும் ஒரே குலகுருவை மேற்கொண்டவர்கள் அல்லர்.

*வீரசைவம் :* சைவ சமயத்தில் மற்றொரு பிரிவான வீரசைவம் விஜய நகர அரசின் அனுமதியுடன் நன்கு வளர்த்தது. வீரசைவத்தை மேற்கொணடவர்கள் லிங்க வழிபாடு செய்பவர்களாவர். தெலுங்கு நாட்டிலும் கன்னட நாட்டிலும், தமிழகத்தின் வட பகுதியிலும் இதைப் பின்பற்றியவாகள் ஏராளமானோர் இருந்தனர். மேலும் மற்ற பிரிவில் உள்ள கொள்கைகளை இவர்கள் வெறுத்தனர்; பிராமணர்களின் செயல்பாட்டை வெறுத்தனர். இவர்கள் விதவைத் திருமணத்தை ஆதரித்தனர்.

*சைவ சித்தாந்தம்:* சைவ சமயம் சில கோட்பாடு முறைகளைக் கொண்டது. இறைவழிபாட்டிற்கு இரணடு முறைகள் பின்பற்றபபட்டன. ஒன்று சடங்கு முறை; மற்றொன்று தியானமுறை. சாதிமுறை வலுவாக இருந்ததால், ஒவ்வொரு சாதியினரும் தங்களுக்கே உரிய முறையில் வழிபட்டனர். சைவ சித்தாந்தத்தில் சடங்கு முறை வழிபாட்டை விட பக்தி முறை வழிபாடே மேன்மையானதும, சிறந்ததுமாகும். எனவே விஜய நகர காலத்தில் இவ்வியக்கம் தென்மாவட்டங்களில் எழுச்சியை ஏற்படுத்திப் பெரும்பாலானோர் இதில் இணைந்தனர்.[4] சாதிமுறைச் சடங்குகளுக்கு எதிராக சைவ சமயத்தில் ஓா எழுச்சி ஏற்பட்டது. அவ்வெழுச்சியைத்தான் சைவ சித்தாந்தம் என்றனர்.[5] இவ்வியககத்திற்கு முன்னோடியாக இருந்தவா மெய்க்கண்ட தேவர் என்பவராவார். இவர் படைத்த சிவஞானபோதம் என்ற நூல் சமயக் கொள்கை வழிமுறைகள், கோட்பாடுகளைக் கொண்டதாகும். சைவ சமயக் கோட்பாடுகளை மக்கள் அனைவரும் பின்பற்றக் காரணமான வழிமுறைகளை இவர் மேற்கொண்டனாா.

4 I H Q Vol XIII P 256

5 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P 308

*வைணவம்* : இந்து சமயத்தின் மற்றொரு பிரிவாக வைணவம் திகழ்ந்தது. விஜய நகர காலத்தில் குறிப்பாக முதல் மரபிற்குப்பின் ஆட்சிக்கு வந்த மூன்று மரபுகளும் வைணவக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பை நல்கின. இப்பிரிவின் வித்தகராக இருந்த இராமானுசர் காலத்தில்தான் வைணவப் போதகர்களும், தத்துவ ஞானிகளும் இதன் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினர். ஆகவேதான் இது மேன்மேலும் வளர்ச்சி பெற்றது. ஆனால் இந்தப் பிரிவை நிறுவிய சில ஆண்டுகளில் கொள்கைகளில் சில மாற்றங்களும் மதக் கருத்துக்களைப் பயிற்றுவிப்பதில் மாறுபாடுகளும் தேவை என்பதை உணர்ந்து அதைப் பின்பற்றியவர்கள் இப்பிரிவின் ஸ்தாபகருக்கு வேண்டுகோள் விடுத்தனர் .ஆனால் . இராமானுசர் அதற்கு அனுமதியளிக்க மறுத்து விட்டார். எனவே இராமானுசர் இறந்த பிறகு இரண்டு வைணவப் பிரிவுகள் வளர்ந்தன. ஒரு பிரிவு வடகலையென்றும், மற்றொன்று தென்கலையென்றும் செயல்படத் துவங்கின. வடகலையைச் சேர்ந்தவர்கள் வேதத்தை ஆதரித்து வடமொழியைப் போற்றி வந்தனர். ஆனால் தென்கலையைச் சேர்ந்தவர்கள் தமிழை ஆதரித்து நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தை போற்றினர்.[6] இந்த இரு பிரிவினர்களுக்குக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு அதனால் சச்சரவுகளும் பிரச்சினைகளும் நிகழ்ந்துள்ளன. எனவே, பக்தி இயக்கத்தின் மூலமாக வைணவத்தைக் காத்தனர்.

இராமானுசரைப் பின்பற்றிய வைணவர்களில் வடகலை, தென்கலை என்ற பிரிவினை ஏற்பட்டது. முக்கிய வேற்றுமைகளை இறைவனிடம் சரணமடைவதற்கு உரிய வழிபற்றியதாகும். வடகலைக் கருத்து அடியார்கள் முனைந்து ஈசன் அருளைப்பெற வேண்டுமென்பது; தென்கலையார் ஈசனை அடைக்கலமென்று அடைந்த அடியார்களை நலவழிகாட்டி முக்தி பெறச் செய்வது இறைவன கடமையென்று கருதுகின்றனர். தென்கலை வகுப்பினர் பெரும்பாலும் தமிழைத் தழுவினர். வடகலையார் வடமொழியைப பின்பற்றினர். வைணவத்தின் இரு பிரிவுகளான வடகலை, தென்கலைப் பிரிவு இயக்கங்கள் ஒன்றோடொன்று கருத்து வேறுபாடு கொண்டு தமிழகத்தில் பரவின. பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதபபடும் வேதாந்த

6. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி ,II. ப.64.

தேசிகரால் வடகலை வைணவம் பரபபப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மணவாள மாமுனி எனபவர் தென்கலை வைணவத்தைப பரப்பினார். இவ்விரு பிரிவினாகளுக்குள் முக்கிய வேறுபாடாகக் கருதக்கூடியவை வடமொழி வேதஙகளை முக்திநெறிக்கு வழியாகக் கொண்டவர்கள் வடகலை வைணவர்கள். இவர்கள் சாதி வேற்றுமையில் தீவிரம் கொண்டு வர்ணாசிரம தருமததை வற்புறுததினார்கள். ஆனால் தென்கலை வைணவர்கள் ஆழ்வார்களின் படைப்பாகிய நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை முக்தி நெறிக்கு அடிப்படையாகக் கொண்டவாகள். இவர்கள் சாதி வேற்றுமையில் கவனம் செலுத்தாது உண்மையான பக்தியுடைய எக்குலத்தவரும் திருமாலின் திருவடியை அடைய முடியும் என்ற தத்துவததை அடிபபடிடையாகக் கொண்டவர்கள். இப்பிரிவினரில வடகலையார் பாதம் இல்லாத திருநாமததையும் தென்கலையார் பாதமுள்ள திருநாமத்தையும் நெறறியிலே அணியலாயினர். எனினும் விஜய நகர அரசர்கள் வேறறுமையின்றிச் செயல்பட்டதை இந்நூலில் ஆங்காஙகு காணலாம்.[7]

விஜய நகர ஆட்சியின் கீழ் வைணவ சமயத்தின் நிலையை ஆராயும் போது சைவ சமயத்தை விட வைணவமே சிறந்து விளங்கியது. அதறகுக் காரணம் விஜய நகரப் பேரரசை ஆண்ட நான்கு மரபுகளில் முதல மரபுக்காரர்கள் மட்டும்தான் சைவ சமயத்தைச சார்ந்தவர்களாகவும் அதனை ஆதரிததும், போறறியும், வந்தனர். ஆனால் பின்பு ஆட்சிக்கு வந்த மூனறு மரபுகளும் வைணவத்தை ஆதரித்து வந்தனா. இதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வைணவத தலங்களுக்கு வழங்கிய நிபந்தஙகளைக் கூறலாம். மேலும் கோயில் நிர்வாகத்தில சிறப்பான மாற்றங்களைக் கொண்டு வந்து அதற்குப் பொலிவூட்டிய குமார கம்பணாவின் ஆட்சியின் போது கோயில் நிர்வாகத்தில் அமைசசராக இருநத மகாபிரதானா என்பவர் வட ஆற்காடு மாவட்டம் போளுா தாலுக்காவில உள்ள ஒலக்கம்பட்டு என்ற கிராமத்தை வைணவ ஆசசாரியார் நலலன் சக்கரவர்த்திக்கு இனாமாகக் கொடுத்து வைணவ

7 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P P 310-312

மத வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்ததை அறியலாம்.[8] மேலும் முகமதியப் படையெடுப்பால் சீரழிந்த இடஙகளைச் செப்பனிட கம்பணா வழி செய்தார். குறிப்பாக சீரங்கம் ரெங்கநாதர் சிலையை மீணடும் அக்கோயிலிலே அமர்த்தி திருப்பணி செய்ததையும் அறியலாம். கிருஷண தேவராயா பக்தி இயககதததிற்குக் காரணமாக இருந்த வல்லபாச்சாரியாரை அரசவைக்கு அழைத்துக் கெளவரப்படுத்தினர். மேலும் கிருஷண தேவராயருக்குப்பின் வந்தோரும் வைணவத்தை ஆதரித்ததால் பதினாறாம் நூறறாண்டில் அது மறுமலர்ச்சியடைந்தது. கிருஷணதேவராயா திருப்பதி கோயிலுக்கு பலமுறை சென்று வழிபட்டதன் மூலம் அவரின் வைணவ ஈடுபாட்டை அறிநது கொள்ளலாம்.

கிருஷ்ணதேவாராயரைப் பின் தொடர்ந்தவர்களில் குறிப்பாக அச்சுதராயரும், இராமராயரும் சிறந்த வைணவத்தலமான சிதம்பரத்தில் கோவிந்தராச சாமியின் உருவச்சிலையை மீண்டும் அமாத்தி திருப்பணி செய்ததாகச் செய்திகள் கூறுகின்றன. கி.பி. 1556.இல இராமராயரது வேண்டுகோளுக்கு இணங்கி பின்பு ஆட்சிக்கு வந்த சதாசிவராயர் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள இராமானுசர் கோயிலுக்கும் அதனைச் சார்ந்த மற்ற கோயிலுக்கும் நிபந்தங்கள் வழங்கியுள்ளார். மேலும் அதன் வழிபாடு செவ்வனே நடைபெறவும், நிர்வாகம் ஒழுங்காகச் செயலபடவும் முப்பத்தொரு கிராமங்களைக் கொடையாக வழங்கியுள்ளார்[9] பேரரசின்கீழ ஆட்சி செய்த சிற்றரசர்கள் பெரும்பாலோர் வைணவராயிருநதனர் அவர்களும் பேரரசர்கள் போலவே பரந்த மனப்பான்மையுடன் செயல்பட்டனர். ஆயினும் ஆஙகாங்கு மக்களிடையே அதிலும் குறிப்பாக மதப்போதகர்களிடையே வைணவ, சைவப போட்டி மும்முரமாக நடநதது. கிருஷ்ண தேவராயர், அசசுதராயா போன்றோா சோழ மண்டலத்தில் கி.பி. 1517-48 இல சைவ, வைணவத் திருத்தலஙகள் அரசுக்குச் செலுத்த வேணடிய ஏறததாழ பத்தாயிரம் பொன் வருவாயைத் தள்ளுபடி செய்தனா. மேலும் கிருஷணதேவராயர் பேரரசின் வடககுப்பகுதியில் நடைபெற்ற படையெடுப்புகளை வெற்றிகரமாக முடித்துவிடடு தெறகுப் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது திருவண்ணாமலைச சிவன்

8 ARE No 194 of 1939-40

௯. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி , ப.௬௩.

கோயிலில் சில கட்டடங்களைக் கட்டினார். மேலும் புகழ் பெற்ற வைணவத்தலமான திருப்பதி வெங்கடேசப் பெருமாள் கோயிலுக்கு முப்பதாயிரம் தங்கக் கட்டிகளையும் மூன்று வட கழுத்து அணிகலன்களையும் முத்து ரெத்தினங்களால் ஆன ஒரு சோடி தங்க வளையல்களையும் அன்பளிப்பாகக் கொடுத்தார்.[10] அக்கோயில்களில் கிருஷ்ண தேவராயர் தன் துணைவியார்களுடன் இருக்கும் ஒரு செப்புத் திருமேனியை இன்றளவும் காணலாம்.

*சமணம் :* விஜய நகரப் பேரரசில் ஆட்சியாளர்கள் சமண மதத்திற்கு ஆதரவு நல்கினர். மேலும் அதன் வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தனர். சமணர்களைப் பயனபடுத்திக் கொள்ளும் பொருட்டு அரச பணியில் ஆங்காங்கு அமர்த்தினார். விஜயநகரப் பேரரசில் வடக்குப் பகுதியிலும், மேற்குப் பகுதிகளிலும்,சமணம் செல்வாக்குடன விளங்கியது.முதலாம் புக்கரது ஆட்சியின் போது கி.பி. 1368 இல் சமணர்களுக்கும், வைணவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பூசல்களும் பிரச்சினைகளும் ஏற்பட்டன. இதனால் பேரரசில் குழப்பமும் அமைதியின்மையும் ஏற்பட்டது. எனவே புக்கர் இரு சமயத்தைச் சேர்ந்த தலைவர்களையும் வரவழைத்து, அவர்களுடைய பூசல்களைத் தீர்த்தார். மேலும் இரு பிரிவினரும் பிரசசினைகளின்றி ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்திச் சமரசம் செய்து வைத்தார். இச்செயல் தென் இந்திய சமய வரலாறறில் ஒரு முக்கியமான நிகழ்சசியாகக் கருதப்படுகிறது. சமய ஒற்றுமைக்காகவும், அரசியலிலே சமணர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டும் உள்ளாட்சி அமைப்பில் நாடு என்று இருந்த பிரிவில் அவர்களைப் பணியில அமர்த்தினார். அவ்வாறு பதினெட்டு நாடுகளில் வைணவர்களுடன சமணர்களையும் ஒற்றுமையுடன் பணிபுரிய அமர்ததினார். சமணசமதததிறகு ஏறபடும் பிரச்சினைகள் தொந்தரவுகளை வைணவாகளே தீர்த்து வைக்க வேண்டும் என்று பேரரசின் பல பாகங்களிலும் இநநிகழ்ச்சியைக் கல்வெட்டில் வடித்தார். சூரியன், சந்திரன இருக்கும் வரை வைணவர்களும் அவர்களின் கோட்டுபாடுகளும் சமணர்களுக்கும,சமணமதக் கோட்பாடுகளுக்கும் எந்த

10 ARE No *53, 54, 55, of 1889*

வித இன்னல்களும் வராமல் பாதுகாக்க ஆணையிட்டார். விஜய நகர அரசில் சமணர்களின் வீடுகளுக்கு வரிகள் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டன. மேலும் இருபது ஊழியர்களைச் சமணாகளின் கோயிலான பெல்கோலாவின் பாதுகாப்பிற்காக அமாத்தினாா்.

சமணர்களின் அழிந்த பாழடைந்த கோயில்கள் அரசின் செலவிலேயே திருப்பணி செய்யப்பட்டன. இரண்டாம் அரிகரனின் ஆட்சியில் இருகப்பதன்னாதா என்ற சமணரை அமைச்சராக அமர்த்தினார். மேலும் தலைநகர் விஜய நகரில் சமணாகளுக்கு ஒரு கோயிலும் கட்டப்பட்டது. இரண்டாம் அரிகரரின் கலவெட்டுகள் காஞ்சிபுரத்திற்கு அருகில சமணர் காலனி ஒன்று இருந்தது என்றும்,அங்கே இருந்த சமணக்கோயிலுக்கு முன்னால் ஒரு மண்டபத்தையும் கட்டினார் என்றும் அவரது சமயப் பொறையுடைமைக் கொள்கையை எடுத்துரைக்கிறது.[11] கி.பி.1377இல் ஆட்சிக்கு வந்த இரண்டாம் தேவராயர் விஜயநகரில சமணர்களுக்குக் கற்கோயில் ஒன்றைக் கட்டிக் கொடுத்தார்.[12] தொடர்ந்து வந்த ஆட்சியாளர்களும் குறிப்பாக மூன்றாவது மரபாகிய துளுவ மரபைச் சேர்ந்த புகழ் பெற்ற பேரரசனாக விளங்கிய கிருஷ்ண தேவராயரும் அவருக்குப் பின் வந்தோரும் சமண மதத்திற்கு அரணாக இருந்தனர்.[13] மேலும் விஜய நகர ஆட்சியாளர்கள் சமண மதத்தைத் தழுவவில்லை என்றாலும் சமண மதத்தை ஆதரித்தனர். புத்த சமயத்தைப் பொறுத்தவரை விஜய நகரப் பேரரசில் பின்னடைவு பெற்றது என்றே குறிப்பிடலாம்.[14] புத்த சமயக் கருத்துக்களையும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் வெகுவாகத் தெரிந்து கொள்ளக் கல்வெட்டுகளும் ஆவணங்களும் அப்போதைய கால கட்டத்தில் குறைவாகவே தென்படுகின்றன. குறிப்பாக கும்பகோணம் கல்வெட்டுச் சான்று, திருவிளாந்துறை என்ற இடத்தில் ஒரு புத்தர் கோயில் இருந்ததைக் குறிப்பிடுகிறது. அக்கிராமத்து நிலங்களின் சாகுபடிக்குத் தேவையான தண்ணீரைக் கொண்டு வர வாய்க்கால்கள் தேவைப்பட்டன.ஆகவே திருமலைராசபுரம் என்ற கிராமத்து மக்கள் தங்களது நிலங்களை அதற்காக

11 ARE No 42 of 1890
12 S I I Vol I P 82
13 ARE No. 528 of 1928-29
14 I H Q Vol XIII P 259

விட்டுக் கொடுத்து அதற்கு ஈடான நிலங்களைப் பெற்றனர் என்று கூறுகிறது.[15]

*கிருத்தவம்* : போர்ச்சுககீசியர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகுதான் கிருத்தவம் தென் இந்தியாவில் பரவிற்று. செசூட் பாதிரியார் இந்தியாவிற்கு வந்ததும் அவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது என்னவெனறால் , கிருத்துவ மதத்தை இந்தியாவில் பரப்புவது, மேலும் மற்ற மதத்தாரை கிருத்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வது போன்றவைகளாகும். ஆனால் இதில் முழு வெற்றி கிட்டவில்லையாயினும் ஓரளவே செய்ய முடிந்தது. கி.பி. 1533இல் பரவாகள் என்ற முத்துக் குளிக்கும் தொழிலை மேற்கொண்ட இனத்தவரிடமிருந்து, தென்னகத்தில் ஆதிக்கம் செலுத்திய முகமதியர்கள், துறைமுகத்தின ஏகபோக உரிமையைக் கேடடனர். எனவே பரவர்கள் போர்ச்சுக்கீசியக் குழுவினரைச் சந்தித்து முகமதிய இடையூரிலிருந்து தங்களைக் காக்க வேண்டினர். தக்க தருணம் பார்த்திருந்த கிருத்தவப் பாதிரிமார்கள் உதவி செய்ய ஒப்புதல் அளித்தனர். அதற்கு மாறாக, கிருத்தவமதத்தைத தழுவ நிர்பந்திக்கபபடடனர். எனவே, அவர்கள் மதுரையில் நிரநதரமாகத் தங்கிய பின்னர் ஏறத்தாழ இருபதாயிரம் பரவர்கள் கிருத்தவ மதத்தைத தழுவினர்.

விஜய நகரப் பேரரசில் கிருத்தவமதம் ஆட்சியாளர்களின் ஆாவத்தைக கவர்நதது. ஆட்சியாளர் இரண்டாம் வெங்கடா என்பவர் கிருததுவப பாதிரிமார்களை வரவழைதது அவாகளின் தத்துவக் கோட்பாடுகளைக் கேட்டு அவர்களைப் பாராட்டினர். மேலும், கிருத்துவப் பாதிரிமாாகளையும் இந்து சமயததலைவர்களையும் வரவழைத்து இருவாகளின் பிரசசினைகளைத தீர்பபதற்கு நடவடிககை மேற்கொண்டார். கிருததவாகள் தங்கள் மததததைப் பரபபுவதற்கு ஆதரவு அளித்து சந்திரகிரி, வேலூா் போனற இடங்களில கிருததுவ ஆலயங்கள் அமைத்து அதன் மூலம் கிருத்துவ மதத்தையும கோட்பாடுகளையும் பரபபுவதற்கு ஆதரவளித்தார்[16] இதன மூலம விஜய நகர அரசு சமய சகிப்புத்தன்மையை ஆதரித்தவர்கள் எனபதை உணரலாம்.

15 ARE No 292 of 1929

16 Mahalingam, T V "Administration and Social LIfe under Vijayanagar" P 318

COMPLIMENTARY COPY

*முகமதியம்*: தென் இந்தியாவின் அரசியல் பல்வேறு சிறு சிறு அரசுகளால் நிர்வகிக்கப்பட்டது. இந்து சமயத்தை பல்வேறு ஆட்சியாளர்களின் ஒற்றுமையின்மையாலும் தென் இந்தியாவின் செல்வத்தைக் கவரவேண்டும் எனற எண்ண எழுச்சியாலும், முகமதியத்தைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கததாலும் முகமதியர்கள் தென்னாட்டின் மீது கி.பி. பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் படையெடுப்பை மேற்கொண்டனர். அலாவுதின் கில்ஜியும், மாலிக்காபூரும் பலமுறை படையெடுத்து இந்து சமயத்தைச் சீரழித்தனர். கி.பி. 1327 இல் முகமதுபின் துக்ளக் ஒய்சாளர்களின் மீது படையெடுத்து இந்து அரசர்களான அவர்களைத் தோற்கடித்தார். மேலும் தெற்கு நோக்கிச் செல்லத்திட்டம் தீட்டிக் கொண்டிருந்த வேளையில் பாண்டிய நாட்டை ஆட்சி செய்த பாண்டியப் பேரரசில் வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. எனவே சுந்தர பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் ஏற்பட்ட வாரிசுரிமைப் போரைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி முகமதியப்படை சுந்தரபாண்டியனுக்கு உதவுவதாகச் சூழ்ச்சி செய்து தெற்கு நோக்கி முன்னேறியது. செல்லுங்கால் முகமதிய வெறியாளர்கள் கண்ணில் தென்பட்ட இந்துக் கோயில்களைத் தரைமடடமாக்கி இந்துக்கள் வழிபட்ட விக்கிரகங்களைச் சிதைத்துச் சின்னபின்னமாக்கினர். இந்துக் கோயில்களில் இருந்த ஏராளமான பொன், பொருள், மணிகளைக் கொள்ளையடித்தனர். மேலும் இந்து மக்களைத் துன்புறுத்தி மதமாற்றம் செய்ய வற்புறுத்தினர். இப்படையெடுப்பில் பெரிதும் பாதிக்கப்பட்ட சீரங்கம் ரெங்கநாதர் கோயில் பின்னாளில் விஜய நகரஆட்சியிலே தான் திருப்பணி கண்டது. மதுரை வரை சென்ற முகமதியப்படை அங்கு முகமதிய ஆட்சியாளர்களை அமர்த்தியது. மதுரைப் பாண்டிய நாடு முகமதியர்களின் ஆட்சியில் ஒரு மாநிலமாக மாறியது.

இவ்வாறு தென்னாட்டு அரசியலில் நுழைந்து, முகமதியர்கள் விஜய நகர ஆட்சியாளர்களிடம் சுமுக உறவை ஏற்படுத்திக் கொண்டனர். கி.பி. 1426 இல் விஜய நகரப் பேரரசனாக இருந்த இரண்டாம் தேவராயர் முகமதியாகளுக்கு ஆதரவு அளித்தார். மேலும் அவரைத் தொடர்ந்து ஆட்சியாளர்களும் முகமதியத்திற்கு ஆதரவு நல்கினர்.

பேரரசின் பாதுகாப்பைக் காக்கும் பொருட்டு இராணுவத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தார். இராணுவத்தில் திறமை வாய்நத போர் நுணுக்கங்கள் தெரிந்த முகமதியர்களை விஜய நகர இராணுவத்தில் சேர்த்தார். அவர்களுக்கு ஊதியமாக சாகிர் கொடுத்தார். தலைநகரில் அவர்கள் சுதந்திரமாக வழிபாடு நடத்துவதற்கு மசூதி கட்டிக்கொடுத்தார். முகமதியர்கள் சுதந்திரமாகத தங்களின மதச்சடங்குகள செய்யத் தடையாக இருப்பவர்களைத் தண்டித்தார். மேலும் தேவராயர் முகமதியர்களின் வேத நூலாகிய குரானைத் தன ஆசனத்திற்கு முன்பாக வைக்கப்பணித்தார். கிருஷ்ண தேவராயர் ஆட்சிக்காலத்திலும் முகமதியர்கள் ஏராளமானோர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். மேலும் முகமதியர்கள் ஏராளமானோர் பல்வேறு அரசுப்பணியிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இநதுக்களும் முகமதியாகளுக்கு ஆதரவு நல்கினர். கி.பி. 1537 இல் இந்துக்கள் முகமதியாகளுக்கு ஒரு மசூதியைக் கட்டிக் கொடுத்தனர்.[17]

விஜய நகர கால சமூகத்தில் பல்வேறு சமயங்களும் இடம் பெற்றிருந்தன. ஒவ்வொரு சமூகமும் தங்களுக்கென்று ஒரு சமயத்தை ஏற்படுத்திக் கொண்டன. இந்து, சமணம், புத்தம், கிருத்தவம், இசுலாம் போனற சமயஙகளைப் பின்பற்றினர். சமயத்தைக் கருப்பொருளாகக் கொண்டே சில அரசுகள் ஆட்சி செய்தன. விஜய நகர அரசும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டே ஆட்சி பீடமேறியது. விஜய நகர முதல் மரபாகிய சங்கம மரபு இந்து சமயத்தின் ஒரு பிரிவான சைவ சமயத்தைப் பின்பற்றினாலும் மற்ற மூன்று மரபுகளும் வைணவத்தைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு சமயங்கள் மக்களிடையே நிலவியதால் அவர்களுக்குள் சமயப் பூசல்கள் நிகழ்ந்தன. இச்சமயப் பூசல்கள் மக்களின அமைதியின்மைக்கு வழிவகுத்தன. அதனால் ஆட்சியாளர்கள் அவற்றைக் களைய சில கோயில் ஊழியர்களைப் பதவி நீக்கம் செய்து அமைதி ஏற்படச் செயதனர். கிருத்தவம் தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் செய்யாவிடினும் முகமதியம் தமிழ்ச் சமுதாயத்தைப் பாதித்தது எனலாம். அதனால்தான் விஜய நகர ஆட்சி தென்னாட்டில் ஏற்படக் காரணமாயிற்று.

17 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P 319

# 8

# பொருளாதாரம்

ஒரு நாட்டின் பொருளாதார நிலை அந்நாட்டின் இயற்கை வளங்களைப் பொருத்தே அமைந்திருக்கிறது. பொருளாதாரமே மக்களின் வாழ்க்கைத் தரத்தை அளவீடு செய்யும் அளவுகோலாக அமைந்துள்ளது. இயற்கையாக அமைந்துள்ள வளங்களின் அடிப்படையில், மக்களின் பல்வேறு தொழில் நுட்ப யுக்திகளால் வெளிப்படும் தொழிற்கூடங்கள் அவர்களின் தொழில்களாக அமைந்துள்ளன. தொழில் நுடபத்தாலும் மக்களின் ஈடுபாட்டாலும் வெளிப்படும் படைப்புகள், அவற்றின் உபயோகம், அதனால் கிட்டும் பொருளாதாரச் செலவாணி மக்களின் வாழ்வியல் நிலையை மேம்படுத்தும் கருவிகளாக அமைந்துள்ளன. மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் நிலைகளுக்கேற்ப தொழில்களை அமைத்துக்கொள்வது இன்றியமை யாமையாகும். மக்கள் வாழ்விடங்களுக்கு ஏற்பவும் ஆங்காங்கு கிடைக்கும் இயற்கை வளங்களுக்கு ஏற்பவும் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டனர். பொருளாதார மேம்பாட்டிற்கு இயற்கைச் சூழ்நிலை ஒரு காரணமாக இருந்தாலும் தொழில் நுட்ப ஈடுபாட்டினால் தான் பொருளாதாரம் வளம் பெறுகிறது. கி.பி. பதிநான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவை ஆட்சி செய்த விஜய நகரப் பேரரசு பொருளாதார நிலையில் செல்வச் செழிப்படைந்திருந்தது. அம்மக்கள் விவசாயம் சார்ந்த தொழில்களிலும் சுரங்க உலோகத் தொழில்களிலும் ஈடுபட்டனர். மேலும் மக்களின் கலாச்சாரத்தை மேம்படுத்தும் கருவிகளாக அமைந்துள்ள ஆடை அணிகலன் தொழில்களிலும், வீட்டு உபயோக கைவினைத் தொழில்களிலும் ஈடுபட்டனர்.

மக்களின் அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்ய வணிகத் தொழில்களும் சந்தைகளும் ஏறபட்டன. வணிகர்கள், உற்பத்தி செய்த பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வணிகக் குழுக்களை அமைத்துக் கொண்டனர். பொருளாதாரத்தை வளப்படுத்த உறபத்திப்

பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுபபி வெளிநாட்டு வணிகக் குழுவின் மூலமாக அன்னியச் செலவாணியை இரட்டிபபாக்கினர். ஒரு புறம் தொழில் வளர்ச்சியால பொருளாதாரமும் மற்றொருபுறம் அணடை நாட்டு மக்களின் கலாச்சாரத்திலும் நட்பை வளாத்துக் கொண்டனர். பிற நாடுகளுடன் ஏற்பட்ட சுமூக உறவு முறையால் பொருளாதாரப் பரிமாற்றமும் தொழில்களின வளர்ச்சிக்கு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. அந்தத தொழில்கள் பற்றியும் ஈண்டு காண்போம்.

துங்கபதத்திரையின் தென்கரையில் அமைநதிருந்த விஜய நகரத்தில் குன்றுகளும், பாறைகளும் அதிகம். அகன்ற நகரைப் பாதுகாக்க மதில் சுவர்கள் இருந்தன. இந்த மாபெரும் நகரில் பளிங்கு கற்களால் கட்டப்பட்ட கால்வாய்கள் எங்கும் பரந்தோடி செந்நெல்லும் கரும்பும் செறிந்த புலங்களையும் பூங்கா வனங்களையும் செழித்தோங்கச் செய்தனவென்று அபபோதைய பொருளாதார நிலைபற்றிய செய்திகள் காணக் கிடைக்கின்றன.[1] பூவைசியர்கள் கைத் தொழிலாளிகளின் வீடுகள் ஆங்காங்கு இருந்தன. வர்த்தகர், செல்வ சீமான்களின் மாளிகைகள் மலிந்து விளங்கின. இடையிடையே சிற்ப நுணுக்கம் வாய்ந்த கோயிலகளும், கோபுரங்களும் செல்வச் செழிப்பை எடுத்துரைக்கும் உருவங்களாகக் காட்சியளித்தன.

விஜய நகர பேரரசில் வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்தது என்றாலும் மக்களின் தேவைக்கேற்ப மற்றைய தொழிலகளும் கிராமங்களிலும் பட்டணங்களிலும் நடைபெறறன.[2]

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவுக்கு தொழில் வளம் பெற்றிருநதது எனினும் அரசாங்கத்தின் பாதுகாபபிறகாகப் போருக்குத் தேவைப்படும் உயர்சாதிக் குதிரைகளும், யானைகளும் வெளிநாடடிலிருந்து வாங்கப்பட்டன.[3] மண்ணின் தரத்திற்கேற்ப விவசாயத் தொழிலை மேற்கொண்டனர். அனறாட வாழ்க்கையின அங்கமாக

1. **கங்கா தேவி, 'மதுரா விஜயம்'** V
2 "Vijayanagar City of Victory" P 10
3. **மகாலிங்கம், டி.வி. 'விஜய நகர பேரரசில் நிலைபெற்றிருந்த பொருளாதார வாழ்க்கை வரலாறு' பக். 76, 77**

இருக்கிற கரும்புத் தொழிலும், கரும்பிலிருந்து உற்பததி செய்யப்பட்ட வெல்லம், சர்க்கரை சார்ந்த தொழில்களும முக்கியமானவை. மேலும் பனைமரத்திலிருந்து பனைவெலலமும், பதநீரும், பனஙகற்கணடும் பெருமளவில் விலையாயின. அவறறால் பொருளாதாரமும் பெருகிற்று. நெல் மற்றும் உணவுப்பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் நெல், மாவு முதலியவற்றை அரைக்கும் இயந்திரங்கள் இருந்தனவென்று கூற முடியாது. எண்ணெய வித்துக்களிலிருந்து உணவுக்குத் தேவையான எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது. எனவே தொழில்கள் பல நிறைந்திருநதாலும் அத்தொழில்களின் அடிப்படையிலேயே சாதிப் பெயர்கள் வழக்கில் வந்தன. தொழில் முனைவோர் அனைவரும் தொழிலின் தன்மைக்கேற்பத் தொழில் வரியை அரசுக்குச் செலுத்தினர். எண்ணெய் வணிகர்கள் செக்குக்கடமை என்ற வரியைச செலுத்தினர். தென்னை மரத்திலிருந்து தேங்காயும், இளநீரும், எண்ணெய்யும் உற்பத்தி செய்யப்பட்டன. தென்னையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட கள்ளும், பனையிலிருந்து எடுக்கப்பட்ட கள்ளும் தொழிலாளர்களுக்கு உற்சாகப் பானமாக அமைந்திருந்தன. தென்னையிலிருந்து நார், கீற்று போன்ற பொருள்கள் உற்பததி செய்யப்பட்டு உபயோகிக்கப்பட்டன. எழுதுதாள்கள் உற்பத்தி செய்யப்படாத காலங்களில் பனையோலை மூலமாகச் செய்திகளை நூல்களாகவும், பாடல்களாகவும் எழுதித் தொகுத்து வைத்தனர் என்று பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில வருகைபுரிந்த போர்ச்சுக்கீசிய அறிஞர் பார்போசா கூறுகிறார்.

*சுரங்கங்களும், உலோகத்தொழில்களும்:* விலைஉயர்ந்ததங்கம், வைரம்போன்ற பொருள்கள்தோண்டிஎடுக்கப்பட்டன. கர்நூல், அனந்தபூர்மாவட்டங்களில்குறிப்பாக வஜ்ரகரூர்என்னுமிடததில்வைரம்கிடைத்தது. மேலும்விஜயநகருக்குக்கப்பம்கட்டிய ஆட்சியாளர்கள் திறைப்பொருளாக விலை உயர்ந்த பொருள்களையும், வைரக்கற்களையும் கொடுத்தனர் என்று நூனிஸ் என்ற அறிஞர் கூறுகிறார். நகை வியாபாரிகள், முத்துக்கள், மரகதங்கள், வைரங்கள் முதலியவற்றைப் பகிரங்கமாகக் கடைகளில் விற்றனா எனச் சான்றுகள் பல கூறுகின்றன அயல்நாட்டு வாத்தகத தொடர்பைக் குறிப்பிடும்போது அண்டைநாடான இலங்கையிலிருந்து நவரத்தினங்களும், முத்துக்களும் இறக்குமதி செய்யப்பட்டன. வெண்மையும், மென்மையும் கலந்த நீலமணிக் கற்கள் கள்ளிக்

கோட்டைக்கருகில் கிடைத்தனவென்று பார்போசா கூறுகிறார். அரசாங்கத்தின அலுவலகம் செயல்பட்ட அரண்மனையில் வைரங்களைச் சேமிப்பதற்குத தனிக் கருவூலம் இருந்ததாக நூனிஸ் கூறுகிறார். தங்கத் தொழிலின் நுணுக்கத்தைக் குறிப்பிடும்போது, தங்கம் நிறைநத கற்களைப் பொடியாக்கி அதைத் தண்ணீரில் கொதிக்கும்படி செய்து கந்தகம் ஆவியானபிறகு கொஞ்சம் பாதரசத்தினை ஊற்றி தங்கமும பாதரசமும் கலந்த கலவையைப் பழுக்கக் காய்ச்சிய இரும்பில் ஊற்றினால் பாதரசம் ஆவியாகிச் சுத்தமான தங்கம் கிடைக்கப்பெற்றது. இந்தியாவில் எடுக்கப்பட்ட உலோகப் பொருள்கள் கடல் வழியாக வெளிநாடடிற்கு அனுப்பப்பட்டன. உப்புத் தயாரிப்புத் தொழிலும் அதன் ஏற்றுமதியும் வெகுவாக நடைபெற்றது. கடற்கரையில் உப்பளங்கள் மூலமாக உப்பு தயாரிக்கப்பட்டது. உப்பு உற்பத்திக்கு வரி விதிக்கப்பட்டது.

*அணிகலன்கள் :* நாகரீக வளர்ச்சியின் காரணமாக மக்கள் வகை, வகையான அணிகலன்களை அணியத் தலைப்பட்டனர். அணிகலன்கள் செய்வதற்குத் தகுதிவாய்நத தொழில் நுணுக்கம் தெரிந்த வல்லுனர்கள் தங்கள் உழைப்பின் மேன்மையால் தொழில் வளர்ச்சியடைய யுக்திகளை மேற்கொண்டனர். போர்க்கருவிகளும், வீட்டுச சாமான்களும் பலவித உலோகங்களால் செய்யப்பட்டன. அணிகலன்களில் பல வித நுண்ணிய வேலைப்பாடுகள் நிறைந்திருந்தன. நவரத்தினத்தால் செய்யப்பட்ட மகுடங்களும் பொருள்களும் விக்கிரகங்களும் செய்யப்பட்டன. மன்னர் அமர்ந்திருந்து அரசோச்சிய அரியணை பொன்மணிகளாலும் நவரத்தினக் கற்களாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்ததென்றும் மகாநவமி எனப்படும் விழாவின்போது நடன மகளிர்கள் முத்து ரத்தினக் கற்களால் அழகு செய்யப்பட்ட ஆடைகளை உடுத்தினர் என்றும் இதன்மூலம் அவர்தம் செலவச் செழிப்பும், தொழில் நுணுக்க மேம்பாடும் புலப்படுவதாக வருகைபுரிந்த பாரசீக அறிஞர் அப்துார் ரசாக் கூறுகிறார்.[4] மேலும் இரண்டாம் தேவராயா தன கழுத்தில் அணிந்திருந்த முத்துமாலை விலைமதிப்பற்றது. மன்னர்கள் தங்கள் கையில் அணிந்திருந்த முத்துக்களும், நவரத்தினங்களும் இழைக்கப் பெற்றிருந்தன. பெண்களும் ஆண்களும் அணிகலன்களை அணிந்திருந்தனர்.

4 E I C P 1593

குறிப்பாக அரசிகள் ஒட்டியாணம் அணிந்திருந்தனா. அரசிகளும், அரசர்களும், அமைச்சர்களும் பலவித கை, கால், கழுத்து, காது, மூக்கு, தலை மற்றும் இடுப்பு அணிகலனகளும் பொன்னாலும், மணியாலும் அலங்கரிக்கப்பட்ட கைவிளக்குகளையும் வைத்திருந்தனர். அரண்மனைத் தேவராயாகள் பலவித ஆபரணங்களை அணிந்திருந்தார்.

*அரச சிம்மாசனம் :* கலைகளின் இருப்பிடமாக விளங்கிய விஜயநகர அரசர்கள் அரசோச்சிய சிம்மாசனத்தைப் பற்றி கி.பி. 1443இல் விஜயநகருக்கு வருகைதந்த அபதுர் ரசாக் என்ற பாரசீக அறிஞர் விஜயநகர அரசர்களின் வஜ்ர சிம்மாசனத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் கலைகளின் நுட்ப வேலைப்பாடுகள் நிறைந்ததென்றும், முற்றிலுமாக வைரத்தாலானது என்றும் அவரே நேரில் கண்ணுற்றதாகவும் குறிப்பிடுகின்றார்.[5]

டோமிங்கோபைஸ் என்ற போர்ச்சுக்கீசிய அறிஞர் இதைப் பற்றிக் குறிப்பிடும்போது விலை மதிக்க முடியாத வைரம், தங்கம், முத்து வேலைப்பாடுகள் மூன்று வரிசைகளாக அலங்கரிக்கப்படடிருந்தன என்றும் ஆண்டுதோறும் மூன்று தினங்கள் நடைபெறும் மகாநவமி திருவிழாவின்போது அவற்றின் மேல் அமர்ந்து விழாவைச் சிறப்பிப்பார் எனவும் கூறுகிறாா.[6] அவ்வப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலே இருந்து வரும் மகா மண்டலேசுவரர்கள், ஆளுநர்கள் மற்றும் அரச மேன்மக்கள் கொடைகள் அளிப்பதும், அறிஞர் பெருமக்களையும், திறமைமிக்க சான்றோர்களையும் படையில் வல்ல நாயக்கர்களையும் இன்னும் பல மேன்மக்களையும் கொடை வழங்கிப் பாராட்டிக் கௌரவிபபதும் இக்காலங்களிலே நடைபெற்றது.

*போர்க் கருவிகள்* : நாட்டின் பாதுகாப்பு இன்றியமையாததாக இருந்ததால் படை, பலப்படுத்தப்பட்டது. ஆயுதங்கள் பல உலோகங்களினால் தயாரிக்கப்படடன. குதிரைகளுக்கும், யானைகளுக்கும், வெள்ளியாலும், பொன்னாலும் செய்யப்பட்ட முகபடாங்கள் செய்யப்படடன. குதிரை வீரர்கள் அணிந்திருந்த கவசத்தில்

5 Saletore, R N "Encychlopaedia of Indian Culture" P 1521

6 Robert Sewell, "A Forgotten Empire" P P 255-56

இருபுறமும் தங்கமுலாம் பூசப்பட்டிருந்தது. வில், அம்பு, கத்தி, கோடாரி மற்றும் போர்க்கருவிகள் உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன. வாயகன்றும், குறுகியும் உள்ள துப்பாக்கிகளும் நீளமான ஈட்டிகளும், வெடிகுண்டுகளும் போரில் பயனபடுததப்பட்டன. மிகக் கூர்மையான பிச்சுவாள் போன்ற கொடூரமான ஆயுதங்களும், மூங்கிலால் செய்யப்பட்ட வில்களின் மீது பொன், வெள்ளித தகடுகளும் பொருத்தப்பட்டன. கேடயங்களும் உபயோகப்படுத்தப்பட்டன.

*வீட்டுச் சாமான்கள் :* வீட்டின் அன்றாட உபயோகத்திற்கு வீட்டு உபயோகப் பொருள்கள் பலவித உலோகங்களினால செய்யப்பட்டன. குறிப்பாக செம்பினால் பாத்திரங்களும், நாணயங்கள் செய்ய பொன், வெள்ளி, செப்பு போன்ற உலோகங்களும் பயன்படுத்தப்பட்டன. தாம்பாளங்கள், தட்டுகள், வட்டில்கள், சாடிகள் போன்றவை பொன் வெள்ளியால் செய்யப்பட்டன. மக்களின் செல்வச் செழிப்பை உணர்த்தும் வகையிலே படுக்கை அறையில் முத்து தங்கம் பதிக்கப்பட்டது. கட்டில்களில் தங்கமுலாம் பூச்சும் யானைத் தந்தங்களிலான கட்டில்கள் மற்றும் உலோகததினால் செய்யப்பட்ட பொருள்கள், கைவினைஞர்களின் கைவண்ணத்தில் தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்டன.

*கைவினைப் பொருள்கள் :* உலோகம் தவிர மற்ற கைத்தொழில்களிலும் தொழில் வல்லுனர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டதால் கைவினைப் பொருள்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையின் உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. அந்த வகையில், மரத்தினால் செய்யப்பட்ட பொருள்கள் அரண்மனைகளிலும், பிரபுக்கள் வீடுகளிலும் மேசை, நாறகாலி, முககாலி, அலமாரி போன்ற பொருள்களும் திருவிழாக்காலங்களில் பயன்படுத்தப்படும் பல்லக்குகள் போன்றவையும் மரத்தினால செயயப்பட்டன. மாட்டு வண்டிகள், குதிரை வணடிகள் முதலியன மரததினால செய்யபபட்டன. பல்லக்கில் மன்னர் அமர அதை மறறவாகள் வீதி வழி சுமந்து செல்லும்போது மக்களுடன் நேரிடையாகத் தொடாபு கொள்ள வழி ஏற்படடது. மேலும கடலோரப பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மீனபிடித் தொழிலில் ஈடுபடப் படகுகளும், தோணிகளும் மரத்தினாலேயே செய்யப்பட்டன. மட்பாணடம் செய்யும் தொழில்

கிராமங்களில் பரவலாகக் காணப்பட்டது. உலோகப் பொருள்களைப் பயன்படுத்த முடியாத ஏழை, எளிய நடுத்தர மக்கள் மட்பாண்டங்களைப் பயன்படுத்தினர். இத் தொழிலில் ஈடுபட்ட மக்களைக் குயவர் என்று அழைத்தனர். இவர்கள் அரசாங்கத்திடமிருந்து நிலமானியம் பெற்றனர். எனினும் தொழிலுக்கு வரி விதிக்கப்பட்டது.[7]

*நெசவுத் தொழில் :* தென்னிந்தியா வெப்பம் மிகுந்த பிரதேசமாதலால் பருத்தி விளைச்சல் கணிசமாக இருந்தது. மக்களின் அத்தியாவசியப் பொருளாக இருந்த ஆடை பலவித நூல்களினால் செய்யப்பட்டாலும், பருத்தி ஆடை மக்களின் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகக் கருதபபட்டது. அத்தியாவசியத் தொழில்களில் ஒன்றாக இருந்த நெசவுத் தொழில் கிராமங்களிலும் நடைபெற்றது. கோயம்புத்தூர்ப் பகுதியில் பெருமளவில் பருத்தி நெசவுத் தொழில் சார்ந்த பொருள்கள் உற்பத்தி செயயப்பட்டன. பருத்தி ஆடைகள் மட்டுமல்லாது பட்டாடை தயாரிக்கும் தொழிலும் சிறந்து விளங்கியது. பட்டுப்பூச்சிகள் வளர்க்கப்பட்டு அவற்றின் கூடுகளிலிருந்து பட்டுநூல் தயாரிக்கப்பட்டது. நெய்யப்பட்ட ஆடை பதப்படுததப்பட்டு பல வண்ணச் சாயங்களில் தொய்க்கப்பட்டு சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய பட்டாடைகள் நெய்யப்ப்ட்டன. நெசவுத் தொழிலில் கைக்கோள்களும், சாலியர்கள் என்ற இனத்தவரும் ஈடுபட்டிருந்தனர். பட்டாடை மக்கள் விரும்பி ஆடம்பரமாக உடுத்தும் ஆடையாக இருந்தது. திருவிழாக் காலங்களில், திருமணம் போன்ற விசேஷ வைபவங்களுக்கும் பட்டாடை உடுத்துவது நாகரீகமாகக் கருதப்பட்டது.[8] தமிழகத்தின் தென் மாவட்டங்களில் ஆடையின் பெயருடன் ஊரின் பெயரும் சேர்ந்து வழங்கி வருவதைத் தற்போதும் காணலாம். மேலும் மக்கள் வசித்த தெருக்களை, அம்மக்களின் தொழில் பெயரால் குறிப்பிடும் முறையும் தோன்று தொட்டு வழங்கி வந்திருக்கிறது. பட்டுத்தொழிலில் சிறப்புற்று விளங்கிய சௌராட்டிரர்கள் தஞ்சை, மதுரை போன்ற தென்பகுதிகளில் குடியேறித் தம் குலத்தொழிலில் முனைப்புடன் செயல்பட்டனர். மதுரை நெசவுத் தொழிலுக்குப் புகழ் பெற்றது. அவ்வூரின் பெயரைத் தாங்கிய

7 ARE No.59 of 1914

8 E P Ind Vol VI p.232

துணிவகைகள் பல வெளிவந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்க, மதுரைச் சுங்குப்புடவை, மதுரைத்தாவணி, மதுரைத துப்பட்டா ஆகியவை தனிச்சிறப்புடையவை. இவற்றை நெய்பவர்கள் பெரும்பாலும சௌராஷ்டிரா என்பது குறிபபிடத்தக்கது.[9]

*வாணிபம் :* அனைத்து உற்பத்திப் பொருள்களும் மக்களுக்குப் பயன்தரவேண்டும். அதே வேளையில் உற்பத்தியாளர்களுக்கு செலவாணியையும் பெற்றுத்தர வேண்டும். எனவே, பொருள்களின் உற்பத்தியாளாகளுக்கும், பொருள்களை நுகர்வோருக்கும் இடையில் ஒரு இணைப்புப்பாலமாக ஒரு குழு செயல்பட்டது. அவர்களை வணிகர்கள் என்று அழைத்தனர். விஜய நகரப்பேரரசில் இந்துக்களும், முகமதியாகளும் இவ்வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். நாளடைவில் கடல் வாணிபத்தின் வாயிலாக அயல் நாடுகளுடன் தொடர்பு ஏறபட்டது. இதனால் நாட்டின் அன்னியச் செலவாணி இரட்டிப்பாயிற்று, பொதுவாக விஜய நகரப் பேரரசுடன் போாச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் தொடர்பு கொண்டிருந்தனர். அயல்நாட்டுத் தொடாபால் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஏற்றுமதி செயயப்பட்டன. தேவையான பொருள்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியும் செய்யப்பட்டன. போர்ச்சுக்கீசிய அறிஞர் டோமிங்கோ பைஸ் என்பவர் வணிக முறை பற்றியும் வணிகத்தில் வழக்கத்திலிருந்த பொருள்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். நாட்டில் கிடைத்த அரிய தாதுப் பொருள்கள், அரிய கற்கள் வேளாண் மக்களின் மேன்மை முதலியவை பற்றியும் குறிப்பிடுகிறார்.

கோயில்கள் வழிபாட்டு இடங்களாக மட்டுமல்லாது கலைகளை வளர்க்குமிடங்களாகவும், பாதுகாக்குமிடங்களாகவும் இருந்தன. பல்வகை நிர்வாகங்கள் கோயிலின உள்ளே நடைபெற்றன. மக்களுக்கு உணவுப் பொருள்கள் தடையினறிக் கிடைக்க தானியக் களஞ்சியங்கள் கோயில்களில இருந்தன. பல்துறை அறிஞர் பெருமக்களுக்கும் அது ஒரு வேலை வாய்ப்பகமாக இருநதது. அப்துர் ரசாக் விஜய நகரைப் பறறிக் குறிப்பிடும்போது, மக்கள் நெருக்கம் நிறைந்த நகரம்; மனனர்கள்

9. மகாலிங்கம், டி.வி. விஜய நகர பேரரசில் நிலைபெற்றிருந்த பொருளாதார வரலாறு. ப. 85.

ஆடம்பர வாழ்வை மேற்கொண்டவர்களாக இருந்தனர்; பசுமை நிறைந்த பூமியில் செழிப்பு வாய்ந்த நகரமாக விளங்கியது[10] என்பார்.

அக்காலத்தில் தென்இந்தியாவில் ஏறத்தாழ முன்னூறு துறைமுகங்கள் இருந்ததாகவும் அவற்றின் மூலமாக வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்ததாகவும் அவற்றில் குறிப்பாக மேற்குக் கடலோரத்தில் சௌள், கோவா, கோழிக்கோடு, கொச்சி, கொல்லம் போன்றவை புகழ்பெற்ற துறைமுகங்களாக விளங்கின என்றும் கூறப்படுகிறது. போர்ச்சுக்கீசியர், அராபியர் போன்றோர் தென் இந்தியர்களுடன் வர்த்தகத்தொடர்பு கொண்டிருந்தனர். மிளகு, இஞ்சி, இலவங்கப்பட்டை, ஏலக்காய், விலை உயர்ந்த மாணிக்கக் கற்கள், பல்வகை வைரக்கற்கள், கஸ்தூரி, கற்றாழை முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. மேலும் கோதுமை, அரிசி, தினை, எள் போன்றவைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டனவென்று கி.பி. 1515 இல் வருகைபுரிந்த போர்ச்சுக்கீசிய அறிஞர் பார்போசா கூறுகிறார். வாசனைப் பொருள்கள், மருந்து சரக்குகள், சந்தனம், யானைப்பல் ஆகியவை சௌள் துறைமுகத்தின் மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தங்கம் வெள்ளி, செம்பு, பாதரசம், பன்னீர், குங்குமம், மென்பட்டு வகைகள், கோழிக்கோடு துறைமுகத்தின் வழியாக இறக்குமதி செய்யப்பட்டன. படைப்பலத்திற்கும், நாட்டின் பாதுகாப்பிற்கும் பாரசீகக் குதிரைகள் கொச்சித் துறைமுகம் மூலமாக இறக்குமதி செய்யப்பட்டன. வங்காளத்திலிருந்து சர்க்கரையும் தென்னாட்டிற்கு வந்தது.

மேற்குக் கரையோரத்திய கோழிக்கோடு போன்ற துறைமுகங்களில் கப்பல்கள் கட்டப்பட்டன. கீழக்கரையில் மசூலிப்பட்டனம், நாகப்பட்டினம், மைலாப்பூர், சாந்தோம், காயல்பட்டினம், போன்றவை சிறந்த துறைமுகங்களாகச் செயல்பட்டன. பர்மாவிற்கு ஏராளமான பருத்திநூல் அனுப்பப்பட்டது. விஜயநகரப் பேரரசுக்குள்ளே நாணயங்கள் மாறுபட்டிருந்தன. உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் வணிகத்திற்கு வரும்போது சுங்கவரிகள் வசூலிக்கப்பட்டன. மேலும் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களுக்கும் வரி விதிக்கப்பட்டது. குறிப்பாக கண்ணாடிப் பொருள்கள், பித்தளைச் சாமான்களுக்கு வரியில்லை.

10 Sastri, K A.N "History of South India" p 335

*நாணயங்கள் :* வராகன், பெர்தா, பணம் என்ற மூன்று வகை நாணயங்கள் இருந்ததாக பாரசீக அப்துர் ரசாக் கூறுகிறார். இவை தங்க நாணயங்கள் மறறும் உலோகக் கலபபு போன்றவற்றால் ஆனவை. விஜயநகரத்தின் தங்கம், வெள்ளி ஆகிய நாணயங்களின் இருபக்கஙகளிலும் எருது, யானை, இந்துத் தெய்வங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருநதன. வராகன் என்ற தங்க நாணயம் ஐம்பத்திரெண்டு கிரைன் எடையுள்ளது[11] செப்புக்காசுகளும் ஒரே எடையுள்ளனவாக இருந்தன. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விஜய நகரத்தைச் சுற்றிலும் தங்க வராகன் நாணயங்கள் புழக்கத்திலிருந்தன. சில பகுதிகளில் இரும்பு நாணயங்களும், வைடூரியம் போன்ற கண்ணாடித் துண்டுகளும் நாணயங்களாக இருந்தன என்று இத்தாலிய நாட்டு நிக்கலோ கோண்டி கூறுகிறார். வெள்ளி நாணயங்கள் குறைவாகவே புழக்கத்திலிருந்தன. கத்யானா, பொன், பிரதாப், காடி, வறசா என்றழைக்கப்பட்ட பொன் நாணயங்களும் தார் என்ற வெள்ளி நாணயமும், பணம், ஜிப்பால் போன்ற செப்புக்காசுகளும் வழக்கத்திலிருந்தன.[12] மேலும் சாளுக்கியர்கள் தங்களுடைய வராக இலச்சினையை நாணயங்களில் பொறித்ததையே விஜய நகர அரசர்களும் பின்பறறினர். சில வராகன்களில் வராக உருவத்தோடு துர்க்கையின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தது. பொன் நாணயங்களின் மீது தென்னிந்தியக் கோபுரத்தின் உருவம் இருந்ததால் அன்னிய நாட்டு வழிபோக்கர்கள் இதை பகோடா (Pagoda) அல்லது கோபுர நாணயம் என்று அழைத்தனர். நாணயங்களின உருவங்கள் பல்வேறு இருந்தன. பகோடா அல்லது வராகன் நாணயம் வட்ட வடிவமானது. கட்டி வராகன், தொட்ட வராகன், சுத்த வராகன் என மூனறு வகைகளிலிருந்தன. விஜய நகரத்தில் மிக அதிகமாகப் புழககத்திலிருந்தது பணம் என்ற நாணயமாகும். இது பொன் என்ற நாணயத்தின் பத்தில் ஒரு பகுதியாகக் கருதபபடடது. தார் என்ற வெள்ளி நாணயததின் மதிப்பு பணத்தின பதினாறில் ஒரு பகுதியென அப்துர் ரசாக் கூறுகிறார். இவை தவிர வெளிநாட்டாருடன்

11 O S I H P 184

12 மகாலிங்கம், டி.வி. "விஜய நகர பேரரசில் நிலைபெற்றிருந்த பொருளாதார வரலாறு" ப. 156

தொடர்பு கொண்டிருந்ததை அறிவுறுத்தும் நாணயங்களாக குருசாடோ என்ற போர்ச்சுக்கீசிய நாணயம் வழக்கத்திலிருந்தது. தங்க நாணயத்தின் தன்மையைச் சோதிப்பதற்கு பொற்கொல்லர் சேவை இன்றியமையாததாக இருந்தது.[13]

*திருமலைராயரின் நாணயங்கள்:* திருமலைராயர் காலததில் வெளியிடப்பட்ட நாணயங்களில் படுத்திருக்கும் நிலையில் காளை பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அண்மைக்காலத்தில் காளை நின்ற நிலையில் பொறிக்கப்பட்ட செப்புக்காசுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்காசின் ஒரு புறம் நிற்கும் காளை, கட்டாரி, சூரியன் - ஆகியவை காட்டப்பட்டுள்ளன. மறுபக்கம் நாகரியில் 'மலராயா' என்று மத்தியிலும், அதனருகில சங்கும், வடகலை நாமமும் பொறிக்கப்பட்டுள்ளன. மலராயா பெயர் பொறிக்கப்பட்டு, மறுபுறம் யானையும், சங்கும் பொறிக்கப்பட்டுள்ள செப்பு நாணயங்கள் பல திருமலைராயரின் காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

*கிருஷ்ணதேவராயரின் நாணயங்கள் :* கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக்காலத்தில் பலவிதமான நாணயங்கள் வெளியிடப்பட்டன. இவற்றுள் ஒரு பக்கம் 'கிரிஷண தேவா' என்றும் மறுபக்கம் திம்மரசுகாரு என்று கன்னடத்தில் பொறிக்கப்பட்ட செப்புக்காசு போன்றவை குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணதேவராயரது பிரதம மந்திரியாகத் திகழ்ந்த சாளுவ திம்மரின் சேவைகளைப் பாராட்டுமுகததான் இக்காசு வெளியிடப்பட்டுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. இவர் கருடன், ஹனுமான் பொறித்த தங்க நாணயங்களும் வெளியிட்டார். விஜய நகர வேந்தரின் பெரும்பாலான காசுகளில கருடன பொறிக்கப்பட்டுள்ளதனை நாம் காண்கிறோம்.

*சமய நம்பிக்கை :* காசுகளைக் கொண்டு வேந்தரது சமய நம்பிக்கைகளையும் அறிகிறோம். சங்கம மரபினர் முழுக்க முழுக்க சைவர்கள் இதனை அவர்கள் காலத்திய நாணயங்கள் மெய்ப்பிக்கின்றன. அண்மையில் ஒருபுறம் 'ஶ்ரீவீர' என்றும் மறுபுறம் பதரகாளியின் உருவமும் பொறிக்கபபட்டுள்ள நாணயங்கள் கிடைத்துள்ளன. ஹம்பி கோயிலில் வீற்றிருக்கும வீரபத்திரரையும் மற்றும் அவரது தேவியான

13 SII, Vol II No 70 and 494 of 1921

பத்ரகாளியையும் குறிக்கும் இச்செப்பு நாணயங்கள் அக்காலத்திய சமய நம்பிக்கையை விளக்குவதாக உள்ளன. அரிகரன் காலத்திய தங்க நாணயங்களில கடவுளும் தேவியும் பொறிக்கபபட்டிருந்தன. மேலும் இவர் வெள்ளி நாணயங்களும் வெளியிட்டுள்ளார். இரண்டாம் தேவராயரும் (கி.பி. 140 -1410) அமர்ந்திருக்கும் கடவுள் தேவி நாணயங்களையும் வெளியிடடுள்ளார்.

*வரியும் வரிவிதிப்பு முறையும் ;* ஒரு அரசாங்கத்தின் வருவாய் அந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைப் பொறுத்ததாக அமைகிறது. ஏன் எனில் உற்பத்திப் பொருள்களுக்கு வணிகததின் வாயிலாக வரிகள் விதிக்கப்படுகின்றன. அரசின் கருவூலத்தை நிறைநத வரிகளின் மூலம் வரும் வருவாயே முக்கியமாகக் கருதப்படுகிறது. அரசின் அனைத்துத் துறைகளிலும் வரிவிதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது. விஜய நகரப்பேரரசு வரிவிதிப்பு முறையில் மூன்று முக்கிய முறைகளைக் கையாண்டது. முதலாவதாக பழைய இந்துக் கோட்பாடுகளின்படி வரி வசூல் செய்யப்பட்டது. இரண்டாவதாக விஜயநகரப் பேரரசுக்கு முன் தமிழகத்தை ஆட்சி செய்த சோழ, ஒய்சாளர்களின் வரிவிதிப்புக் கொள்கையைப் பின்பற்றியும் மூனறாவதாக, முகமதிய வரிவசூல் முறையைப் பின்பற்றியும் வரி வசூல் செய்யப்பட்டது.[14] நிலவரி, சொத்துவரி, வணிகவரி, தொழில்வரி, கைத்தொழில் வரி சமூக வரிகள், இராணுவ சம்மந்தமுள்ள வரிகள், நியாயம் வழங்குதலால் வரும் வரிகள், சில்லரை வரிகள் போன்றவை முக்கிய வரிகளாகக் கருதப்பட்டன.[15]

*நிலவரி :* நிலத்தின் தரத்தையும், தன்மையையும் பொறுத்து வரி விதிக்கப்பட்டது. அந்நிலத்தின் தன்மை, அதில் விளையும் பொருளின் தன்மை, நீர்பாசன வசதி நிலத்தைப் பயிரிடுவோருக்கும், நிலச்சொந்தக்காரர்களுக்கும் இடையே நடைபெறும் உறவைப் பொறுத்து வரிகள் விதிக்கபபட்டன. கிருஷ்ண தேவராயர் காலத்தில் நிலங்கள் முறைப்படி அளக்கப்பட்டு நிலவரி நிச்சயிக்கப்பட்டது. வரியைத தானியமாக வசூலிப்பதற்குப் பதிலாக நாணயமாக கொடுக்க, கிருஷ்ணதேவராயர்

14 I H Q Vol XII P.443
15 I H Q Vol XII P 444

வழிவகை செய்தார். கார்க்காலத்தில் அறுவடையாகும் குறுவை மகசூலுக்கு மூன்றில் ஒரு பகுதி வரியாகச் செலுத்த வலியுறுத்தப்பட்டது. எள், கேழ்வரகு, விளைச்சலில் நான்கில் ஒரு பகுதி வசூலிக்கப்பட்டது. புனசெய் தானியங்களான வரகு, கம்பு போன்ற பொருள்களுக்கு ஆறில் ஒரு பகுதியும், கொள், பச்சைப்பயறு, மொச்சை முதலியவைகளுக்கு நான்கில ஒரு பகுதியும் வரியாக வசூலிக்கப்பட்டது. கி.பி. 1504-1505இல் தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைத்த கல்வெட்டு, நிலங்கள் அளக்கப்பட்டு நன்செய் நிலமாக இருந்ததால், ஒரு மாவிற்கு இருபது பணமும், புன்செய் நிலமாக இருநதால் பதினைந்து பணமும், தானியமாகவும், நாணயமாகவும் வரி வசூல் செய்யப்பட்டது என்று கூறுகிறது.

*சொத்துவரி;* மக்கள் சொத்துக்கள் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஆனால் அவர்களின் சொத்துக்களைப் பொறுதது வரிவசூல் செய்யப்பட்டது. பல்வேறு வகையான சொத்துக்களுக்கு வரிவிதிபபு நடைமுறையில் இருந்தது. குடியிருக்கும் வீட்டிற்கு வரிவிதிக்கப்பட்டது. அதே சமயம் குடியில்லாத வீடுகளுக்கு வரிவிதிக்கப்படவில்லை. வாடகை வீட்டிற்குக் குடியிருபபரிவன் வருமானத்திற்கேற்ப வரி விதிக்கப்பட்டது. வீட்டின் தன்மையைப் பொறுத்து அதாவது மாடிவீடு, தாழ்வாரம் உள்ள வீடு, நாட்டார் வீடு, தந்தரிமார் வீடுகள், கூரை வீடுகள், கிராமங்களில் காவல் வேலை செய்து வந்த வெட்டியான் வசிக்கும் கொட்டில் போன்றவற்றிற்கும் வரிவிதிக்கப்பட்டது. இதுதவிர, மக்கள் வீடுகளில் வளர்த்து வந்த கால்நடையான பசுவிற்கும் வரி விதிப்பு நடைமுறையில் இருந்தது.

*தொழில்வரி :* தொழில் செய்பவர்கள் அனைவரும் அரசிற்கு வரி செலுத்த வேண்டும் என்பது நடைமுறையில் இருந்தது. இந்த வரி விதிப்பில் அலுவலர்கள் பொறுப்புடன் செயல்பட்டனர். ஒவவொருவர் செய்யும் தொழிலின் தன்மையைப் பொறுத்து வரிவிதிக்கப்பட்டது. ஆண்டு வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு அனைவரும் அரசிற்குச் சேரவேணடிய வரியை உரிய காலத்தில் அதற்கென்றே உரிய அலுவலர்களிடம் செலுத்தினர். கொல்லர்வரி, குயவர்வரி, சலவைத் தொழில்வரி, எண்ணெய் வணிகர் வரி, கைக்கோளார் வரி, சேனைக்கு உடையார், வலைஞர், இடையர், நியாத்தார், தச்சர்கள், சித்திரவேலைத்

தொழிலாளி, பொற்கொல்லர், தொம்பைக் கூத்தாடிகள் போன்ற அனைவருக்கும் தொழில் வரிவிதிக்கப்பட்டது.

*நீதித்துறை மூலம் கிடைத்த வருமானம் ;* பேரரசில் அமைதியையும், சட்டத்தையும் காக்க நீதிமன்றம் என்ற அமைப்பு செயல்பட்டது. இது பேரரசின் பல பாகங்களிலும் அதாவது மத்திய அரசு, மாகாண அரசு அதற்குக்கீழ் இருந்த பல்வேறு அமைப்புகளிலும் குறிப்பாகக் கிராமங்களிலும் செயல்பட்டது. அவ்வப்பகுதியில் நீதிததுறை அலுவலர்கள் நியமிக்கபபட்டனர். அவர்கள் சட்டத்தையும், ஒழுங்கையும் மீறுவோர்கள் மீது வழக்குத் தொடர்ந்து அவவழக்கின் தன்மைக்கேற்ப தண்டனையும் அபராதமும் விதித்தனர். திருட்டு, பிறர்மனை நயத்தல், கலகம் விளைவிததல், தீ வைப்பு, அநியாயச் செயல்கள் புரிவோர் போன்ற குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது.[16] நீதி வழங்கும் அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கே கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு சாதி இனப்பிரிவிலும், வயதும், அனுபவமும் உள்ள தலைவரை இப்பதவிக்கு நியமிப்பது வழக்கத்திலிருந்தது.

*வரிக்கொடுமைகள் ;* அரசின் வருமானத்தைப் பெருக்க அனைவரும் ஒரு குறிப்பிட்ட தொகையை ஆண்டுதோறும் அரசிற்குச் செலுத்தி வந்தனர். வரிவசூல் செய்வதற்கென்று தனியதிகாரிகள் செயல்பட்டனர். வரிகள் மட்டுமல்லாது அரசாங்கம் மாறும்போதும் அதாவது மன்னனும் மற்ற அதிகாரிகளும் மாறும்போது மக்கள் பரிசு, வெகுமதி போன்றவற்றை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயச் சூழ்நிலை நிலவிவந்தது. இந்தக் கெடுபிடியினால் அவதியுற்ற மக்கள் வேறு, வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து சென்றனர். இதனால், குடிசைகள், பொலிவிழந்தன. கோயில்களில் வழிபாடும் நின்றது. திருவிழாக்கள் நடைபெறவில்லை. நாட்டில் அமைதி நிலவவில்லை. எனவே மக்களின் இத்துயரைக் களையும் பொருட்டு அப்போதைய ஆட்சியாளன் இரண்டாம் தேவராயர் இவ்வரிவிதிப்பில் உள்ள முரண்பாடுகளைக் கைவிட ஆணையிட்டார்.[17] மேலும் நெசவுத் தொழில் செய்த நெசவாளிகள் கோவிலுக்குச் செலுத்தி வந்த வரியிலிருந்து

16 I H Q Vol XII p 445

17 ARE No 476 of 1921, H I S I P220

விலக்களித்தார்.[18] பெரும் அதிகாரிகளின் கீழ வரிவசூலிப்பவர்கள் செயல்பட்டனர். இவர்கள் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவதற்கு முறையற்ற சில வகை வரிகளை வசூல் செய்தனர். அவற்றில் குறிப்பிடத்தக்க வரிகளாவன, அதிகாரி சோடி, அதிகாரி பொன் ராயசவார்தானை, பிரதானி சோடி போன்ற வரிகள் வசூல் செய்யப்பட்டுச் செலுத்தப்பட்டன

விஜய நகர காலத்தில், குறிப்பாக இரண்டாம் தேவராயர் ஆட்சிக்கு வந்தவுடன் வட ஆற்காடு மாவட்டத்தில் மக்கள் செலுத்த வேண்டிய நீண்டதொரு வரிப்பட்டியலில் உள்ள குறைகளைக் களைத்தார். மேலும் சமுதாயத்தில் வலங்கை இடங்கைப் பிரிவினரின் பூசலை ஒரு ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைத்தார். இவ்வொப்பந்தத்தின் மூலமாக முறையற்ற வரிவசூலைச் செய்த இப்பிரிவினரை ஒழுங்குபடுததினார்.[19] முறையற்ற வரிவசூல் செய்தவர்களைக் தண்டிக்கவும் செய்தார். மேலும் அவர்களுடன் தொடர்புடையவர்களும் தண்டிக்கப்பட்டனர்.[20]

விஜயநகர காலத்தில், பேரரசின் கீழ் கோயில் நிர்வாகம் சுதந்திரமாகச் செயல்பட்டது. இந்நிர்வாகத்தைக் கவனிக்க, தனி அலுவலர்கள் செயல்பட்டனர். குமார கம்பணாவின் காலத்திலேதான் கோயில் நிர்வாகம் ஒழுங்கு செய்யப்பட்டது. கோயில் நிர்வாகம் செவ்வனே நடைபெற கோயிலுக்குக் கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. மேலும் மக்கள் கோயிலுக்கு வரி செலுத்தியதையும் அறியலாம். இது தவிர தலைவரி, வணிகவரி, வீட்டுவரி, நிலவரி, சுங்கவரி போன்ற வரிகள் வசூல் செய்யப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் திருவைகாவூர் கோயில் சுவற்றில், ஒய்சாளர்கள் காலத்திலிருந்து ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் மக்கள் கோயில் நிர்வாகத்திற்கு வரிசெலுத்தினர்; ஆனால் மன்னர்களுக்குச் செலுத்தவில்லை என்றும் கோயில் நிர்வாகம் வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்றிருந்தது என்றும் அறிய முடிகிறது.[21]

18 ARE No 368 of 1923

19 ARE No 133 of 1919, 270 of 1921

20 ARE No 92 of 1918, 216 of 1917

21 ARE No 59 of 1914

# 9

# இலக்கியம்

கல்வியை அனைவரும் கற்க வேண்டும் என்ற எண்ணம் காலப்போக்கில் ஏற்பட்டதே ஒழிய பழங்காலத்தில இலலை. ஆரம்பத்தில் கல்வியை ஒரு சிலரே கற்றனர். ஆரம்பக்காலத்தில் குருகுலக் கல்வியானது ஆசிரியரின் வீட்டுத் திண்ணையிலும், மரத்தடியிலும் நடை பெற்றது. கல்வி புகடடும் குருவிறகுப் பணிவிடை செய்வது கடமையெனக் கருதப்பட்டது. ஆசிரியர்களுக்கு ஊதியமாகப் பணமும், பொருளும், கொடுத்தனர். கிருத்துவ மதத்தைப் பரப்புவதற்காக இந்தியாவிற்கு வந்த செசூட் பாதிரிமாாகள் விஜய நகரப் பேரரசில் பலவிதமான பள்ளிகளை ஆரம்பித்தனர். அவர்கள் அநதந்தப் பகுதி மக்களின் மொழியிலேயே பாடங்களைக் கற்பித்தனர். மேலும் ஏராளமான இநது சமய ஆசிரியர்களை அப்பள்ளியில் பணிபுரிய அமர்த்தினர். அதே சமயம் பிராமணர்களும் ஆங்காஙகு கல்வி மையங்களை அமைத்தனர். அவை கிருத்துவப்பாதிரிமாாகள் அமைத்த பள்ளியினின்றும், மாறுபட்டவை. அங்கு வேதஙகளும், சமய இலக்கியங்களும் கற்பிக்கப்பட்டன. மேலும் காஞ்சிபுரம் போன்ற மடாலயங்களிலும் சமயக் கல்வி கற்பிக்கப்பட்டது.[1] அங்கு பணியாற்றிய ஆசிரியர்களுக்கு நிலங்கள் மானியமாக வழங்கபபட்டன. குமார கம்பணாவின் ஆட்சியின் போது நிலம் மானியமாக வழங்கப்பட்டதை வடாற்காடு மாவட்டம் வேப்பூரில் கிடைத்த கல்வெட்டு ஒன்று கூறுகிறது.[2]

ஒரு நாட்டின் வரலாற்றையோ அல்லது ஒரு அரசின் வரலாற்றையோ தெரிந்து கொள்வதற்கு இலக்கியங்கள் சிறப்பிடத்தைப் பெறுகின்றன மேலும் எந்த ஒரு சமூக ஆய்விற்கும் முதன்மைச் சான்றுகள் தேவைபபடுகின்றன. முதன்மைச் சான்றாகக் கருதப்படும்

1 ARE No 32 of 1890 S I I Vol IV No 355

2 ARE No 21 of 1890, X I I Vol IV No 344

இலக்கியம், கல்வெட்டு மற்றும் ஆவணங்கள் அத்தகைய சிறப்பைப் பெறுகின்றன. தொன்று தொடடு இலக்கியங்களின் வாயிலாக சில வரலாற்று உண்மைகளைக் கண்டறிந்துள்ளோம். சங்க இலக்கியங்கள் முதற் கொண்டு அரசின் பின்னணியில் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவை அனைதததும் காலக்கண்ணாடிகளாக அவ்வப் போதைய வரலாற்றை அறிவதற்கு உறுதுணையாக நிற்கின்றன.

அரசின் பின்னனியில் சமகாலத்துச் சான்றுகளாகத் தோன்றிய இலக்கியங்கள் அரசவையில் இடம் பெற்ற அரசவைக் கவிஞர்களாலும் ஆட்சியாளாகளாலும், மற்றவர்களாலும் படைக்கப்பெற்றன. ஆட்சியாளர்கள் மட்டுமல்லாது அரசியர்களும் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக இருந்து இலக்கியங்களைப் படைத்துள்ளனர். தமிழ்நாட்டைத் தமிழர் மட்டுமல்லாது பன்மொழியாளர்களும் ஆட்சி செய்ததால் தமிழ், வடமொழி, தெலுங்கு, கன்னடம் போன்ற பன்மொழி இலக்கியங்களும் வளர்வதற்கு ஏதுவாயின. விஜய நகர காலத்து இலக்கிய வளர்ச்சியை இவ்வத்தியாயத்தில் பார்ப்போம்.

*தமிழ்:* கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் நிலவிய அரசியல் குழப்ப நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொணடு டில்லியில் ஆட்சி செய்த முகமதியர்கள் தென்னிந்தியாவில் அடியெடுத்து வைத்தனர். பின்பு மதுரை வரை படையெடுத்துப் பாண்டிய அரசைப் பதவியிறக்கம் செய்து விட்டு முகமதிய அரசை ஏற்படுத்தினர். இவவாறு தமிழக அரசியலில் முகமதியர் தலையீடு காரணமாக தமிழுக்கும், இந்து சமயத்திற்கும் தலைக்குனிவு ஏற்பட்டது. எனவே தமிழகத்தில் ஏற்பட்ட விஜய நகர ஆட்சியாலும் அவர்களுக்குப் பின்வந்த தனி நாயக்கர்களின் ஆட்சியினாலும் தமிழுக்குப் புத்துயிா அளிக்கப்பட்டது. குறிப்பாக குமார கம்பணாவின் படையெடுப்பால் தமிழகம் விஜய நகர ஆட்சியின் கீழ் வந்தது. அதனால் மக்களிடையே அமைதியும், இலக்கிய வளர்ச்சியும் ஏற்பட்டது. விஜய நகர ஆட்சியில் தமிழ்ப் புலவர்கள் பாராட்டப் பெற்றனர். அவர்களுக்கு பொருள்களும், இனாம்களும் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. பெருவாரியான படைப்புகள் மதச்சார்புடையவையாக இருந்தன. அதிலும் குறிப்பாகச சைவ சமய நெறிகளை உணர்த்துபவைகளாக இருந்தன. இந்து சமயத்தின் இரு பெரும் பிரிவுகளான சைவ, வைணவ மறுமலர்சசியால் பல இலக்கிய நூல்கள் தோனறின. அவை சமயத்தைப் பற்றியும், பக்திப்பரவசத்தைப் பற்றியும் விளக்குபவைகளாக அமைந்தன.

பதினான்காம் நூற்றாண்டில் உமாபதி சிவாச்சாரியர் சைவ சமயத்தின ஒரு பிரிவான சைவ சித்தாந்தத்தின் வளர்ச்சிக்குப் பல நூல்களை இயற்றிப் பெருநதொணடற்றினர் இவருக்குப்பின்னால் தோன்றிய தமிழ்ப்புலவர் சிற்றம்பலாதி என்பவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் பணி செய்துள்ளார் விஜய நகர இரணடாவது மரபைச் சேர்ந்த சாளுவ திருமலை தேவா இலக்கியததிற்கு ஆதரவு நல்கினார். இவரின் தமிழ்ப் பணியைக் காளமேகப்புலவரும், இரடடைப்புலவர்களான முதுசூரியாரும், இளஞ்சூரியாரும், வியந்து பாராட்டியுள்ளனர். மேலும் பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சிவரூபானந்த தேசிகர் சிவப்பிரகாசப் பெருந்திரட்டை உருவாக்கினார. இவையாவும் சைவச்சித்தாந்தக் கருத்துக்களை வலியுறுத்தும் நூல்களாக விளங்கின. தத்துவ சாததிரத்தை அதிலும் குறிப்பாக சைவ சித்தாந்தத்தைப் பற்றி அமைந்த நூல்கள் தவிர அவ்வியக்கம் பற்றிய பக்திமயமான பாடல் நூல்கள் பலவும்படைக்கப் பெற்றன. அவை பொதுவாக இறைவனைப் பற்றியும் அங்கு காட்சியளித்த மூர்த்தியைப பற்றியும் கூறுவனவாக அமைந்தன. இவையனைத்தும் சமய வளர்ச்சிக்கும் பக்தி நெறிவழிபாட்டிற்கும் உறுதுணையாக அமைந்தன. பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பக்தி இசைபபாடலகளை அருளிய அடியார் அருணகிரி நாதர், முருகக் கடவுளின் பால் எல்லையற்ற இறையன்பராகி சைவ சித்தாந்தக் கருத்தக்களை உரைபபதில ஈடுபட்டார். தமிழகத்தில் பலவேறு இடங்களில் அமைந்த முருகன் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். பழனியாண்டவருடன இவருக்கிருநத பற்று எல்லையற்றது.[3] முருகப்பெருமானைப் பற்றிப் பல்வேறு பண்ணில் இசைத்துள்ள ஆயிரத்து முன்னூற்றி அறுபது பாடலகள் அடங்கிய திருப்புகழ் அனைவரது உள்ளத்தையும் கனிந்துருகச் செய்யும் பாடல் திரட்டாகும். இநதுமதப் புராணக்கருத்துக்களைத் தம்பாடல்களின் வழியே வெளிப்படுத்தியுள்ள இவருடைய சமயப்பணி அளப்பரிது.

தமிழ் அறிஞர் பெருமக்கள் தங்களுடைய அரும்பெரும் கருததுககளைச் செயயுள் வடிவிலேயும், புராண வடிவிலேயும் இயற்றினர். பதினைந்தாம் நூற்றாண்டில இயற்றப்பெற்ற வில்லிபுததூரார் பாரதம்

3. விமலானந்தம், மது, ச.'தமிழ் இலக்கிய வரலாறு' தொகுதி ஐ ப. 295

நல்ல எளிய மக்களையும் கவரக் கூடியதாக அமைந்தது. கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் சிதம்பரத்தில் வாழ்ந்த திருமலைநாதர் என்ற பன்மொழி அறிஞா வடமொழித் தல புராணத்தை ஒட்டி சிதம்பரம் கோயிலின் மாண்பை ஒரு நூலாக அமைத்துப் பாடினார். இது அக்கோயிலின் தலபுராண வரலாற்றை விளக்குவதாகும். மேலும் மதுரைச் சொக்கநாதா என்ற தலைப்பில் பாடிய கவிதையில் மதுரையம்பதியிலுள்ள பெருமானின் சிறப்பை வாணித்துள்ளார். கிருஷ்ணதேவராயரது ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் என்ற அறிஞர் கிருஷணதேவராயரின் ஆட்சியின் அருமை பெருமைகளைப் பாடியுள்ளார். மேலும் சிறந்த சமய மையமாக விளங்கிய காஞசியின் சிறப்பையும் மாண்பையும் போற்றும் கச்சிக் கலம்பகத்தை இயற்றினார். அறநெறியையும், சத்திய நெறிமுறைகளையும் உணர்த்தும் அரிசசந்திர புராணத்தை வீரகவிராசர் என்பவர் தமிழில் மொழி பெயர்த்தா. மேலும் பல அரிய நூல்களை தமிழில் மொழிப் பெயர்த்தார். கிருஷ்ண தேவராயருக்குப்பின் ஆட்சிக்கு வந்த அச்சுதராயரும், சதாசிவராயரும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவியாக இருந்தனர். இவர்கள் காலத்தில் வாழ்ந்த மறைஞான சம்மந்தர் என்ற அறிஞர் சைவநெறிகளையும் கருத்துக்களையும் பலநூல்கள் வாயிலாக வெளிப்படுத்தி, தமிழுக்கு அரும்பணி செய்துள்ளார். அவற்றுள் சைவ சமய ஆராயச்சி, முக்திநிலை, சிவதருமோத்திரம், ஆகியன சிறந்தவைகளாக் கருதபபடுகின்றன.

*தலபுராண நூல்கள்* : கோயிலின் பெருமைகளையும், அததெய்வத்தின் சிறப்பையும் பக்தி ரசம் சொட்டப் பாடப்பெற்ற நூலகள் நாளடைவில் அக்கோயிலின் வரலாற்றை விளக்கும் தல புராணங்களை இயற்றத் தூண்டின. வரலாறறில் பதிநாறாம் நூற்றாண்டு தலபுராண காலமாகக் கருதப்படுகிறது. கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் பக்திமயமான பல நூல்களை எழுதிய குமரகுருபரர் சில கோயில்களின் பக்தி மாண்பை விவரித்துள்ளார். இவரது கவிதைகள் முருகப் பெருமானின் பெருமைகளை விவரிப்பவைகளாக அமைந்தன. அவறறுள் கந்தர் கலிவெண்பா என்பது முருகனைப பறறிய முதல் நூலாகும். குமரகுருபரா பிறவியிலேயே ஊமையாகப் பிறந்து முருகப் பெருமானின் அருளால் பேசும் திறன் பெற்றதாக நம்பப்படுகிறது. இவா இயற்றிய மற்றைய சிறந்த நூல்களாவன; மதுரை ஈசனைப் போறறும் மதுரைக்கலம்பகம், மதுரை

மீனாட்சியம்மனைப் புகழும் இரட்டை மணிமாலை, திருவாரூரில் வீற்றிருக்கும் தியாகராசப் பெருமானின் புகழையும் சிறப்பையும் விளக்கும் திருவாரூர் நான்மணிமாலை, மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் முருகப் பெருமானைப் போற்றும் பிள்ளைத் தமிழ் போன்றவைகளாகும்.

*தெலுங்கு* : ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அது பல்துறைகளிலும் முழுமைப் பெற்ற நிலையைத்தான் குறிப்பிட முடியும். ஏனெனில் இலக்கிய வளர்ச்சி, இலக்கணப் பாங்கு, நாடக அமைப்பும் அதன் நுண்கருத்து விளக்கமும், இசைத்துறையின் வளர்ச்சி போன்ற அனைத்துத் துறைகளும் செழிப்புடன் வளர்ந்தால்தான் அது மேன்மை நிலையை அடைய முடியும். விஜய நகர ஆடசியின் காலம் தெலுங்கு மொழி வளாச்சியின் மறுமலர்ச்சிக் காலமாகக் கருதப்படுகிறது. கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாணடு வரை தெலுங்கு மொழி வளாச்சி பெறவிலலை. விஜய நகர காலத்தில் தெலுங்கு ஆட்சி மொழியாக மட்டுமன்றி பல்துறை அறிஞர்கள் அதன வளர்ச்சியிலும் பெரும் பங்கு கொண்டனர்.[4] இக்கால கட்டத்தில் வடமொழியிலிருந்தும், பிற மொழிகளிலிருந்தும் அரிய படைப்புகள் தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்ட போதிலும் கி.பி. பதினாறாம் நூற்றாண்டில்தான் தெலுங்கின் வளர்ச்சி உச்ச நிலையை அடைந்தது. மேலும் முகமதியத் தாக்குதலால் சீரழிந்த இந்துக்களின் தக்காண அரசில் வீற்றிருந்த அறிஞர் பெருமக்கள் விஜய நகர அரசிடம் தஞ்சம் அடைந்தனர். எனினும் இலக்கிய உள்ளம் படைத்த ஆட்சியாளர்கள் அவர்களைப் போற்றிய பாதுகாத்தனர்.

விஜய நகர காலத்தில் அறிஞர்கள் மட்டுமின்றி அரசர்களும், அரசிகளும் தெலுங்கில் புலமை பெற்றிருந்ததை அவர்களின் படைப்புகளிலிருந்து அறிய முடிகிறது. விஜய நகர மரபினர் அனைவரும் புலவர்களுக்கும், அறிஞர்களுக்கும் பாதுகாப்பாக இருந்து அவர்களை உற்சாகப்படுத்த பல விலை உயர்ந்த கொடைகளையும், கிராமங்களையும் வழங்கினா. சாளுவ மரபைச் சார்ந்த சாளுவ நரசிங்கரின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்ற புலவர் பிணவீரபத்ரர் தெலுங்கில் பல புகழ் பெற்ற நூல்களைப் படைத்தாா. பதினைந்தாம் நூற்றாண்டுடன் பிற மொழியின ஆதிக்கம் குறைந்து தெலுங்கிலேயே சுயமாகச் சிந்தனை

4 Basham, A L "The Wonder that was India" P 394

செயதும் கற்பனை செய்தும் வெளிவந்த நூல்களுக்கு மக்களிடையே வரவேற்பு இருந்தது பதினாறாம் நூற்றாண்டு முதல் பிரபந்தம் என்ற புதுவகை இலக்கியம் உருவானது. இது தலைவன், தலைவியின் கதையைச் செய்யுள் வடிவில் கூறும் முறையில் அமைந்தது. விஜய நகர ஆட்சியாளர்கள் ஒய்சாளர்களின் அடிச்சுவட்டை பின்பறறி கலைகளைப் பாதுகாத்து வளாத்தனர். விஜய நகர ஆட்சியாளர்கள் தங்களின் அறிவாற்றலாலும், திறமையாலும் பல நூல்களைப் படைத்ததன் வாயிலாக அவர்களின் இலக்கிய ஈடுபாடடை உணரமுடியும். கிருஷ்ணதேவராயரின் அரசவைப் புலவராக வீற்றிருநத நந்தி திம்மண்ணா என்பவர் பாரிசாத புகர்ணம் என்ற பிரபந்தத்தை உருவாக்கினார். அரசவைப் புலவர்களுள் சிறப்பான இடத்தைப் பெற்ற அல்லசானி பெத்தண்ணா, மார்க்கண்டேய புராணத்தைத் தழுவி இயற்றிய மனுசரிதா என்ற காப்பியம் சிறந்ததாகக் கருதப்படுகிறது மேலும், இவர் ஆந்திர கவிதா, பிதா மகன் என்ற பட்டத்தையும் பெற்றவராவார்.

வளரும் கலைகளுள் முதன்மையான இடத்தை வகிக்கும் நாடகக்கலை எனபது ஒரு கருத்தையோ பொருளையோ ஆண்களும், பெண்களும் சேர்ந்து நடிப்பின் வாயிலாக விளக்குவதாகும். அவாகள் நடிப்பில் சமுதாயத்தைப் பற்றியும், மதத்தைப் பற்றியும், வரலாற்று நிகழ்ச்சிகளைப் பற்றியும் தத்ரூபமாக வெளிப்படுத்தினா. இரணடாம் அரிகரனின் மகன் விருபாச்சா என்பவர் தனது திறமையால் நாறாயண விலாசமு என்ற நாடகத்தையும், கிருஷ்ண தேவராயர் சம்பாவதி கல்யாணம் என்ற நாடகத்தையும் படைதது தெலுங்கின் வளாச்சிக்கு உதவினர். மேலும், கிருஷண தேவராயரின காலத்தில் உத்தரராம சரிதம், மாலதி மாதவா போன்ற நாடகங்கள் அரங்கேறறப்பெற்றன. கிருஷண தேவராயர் தம் அரசவையில் நாடகத்துறையில் வல்லமை பெற்றிருந்த நாகய்யா என்பவரும் அவரது மகளும் தாய்குண்டா என்ற நாடகத்தைச் சிறப்பாக நடத்தியதற்காக வெகுமதி அளித்துக் கௌரவித்தார்.[5] கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் நன்கு தேர்சசி பெற்றவர் என்பதை அவரின் படைப்புகளினின்றும் அறியலாம். தெலுங்கு மொழியில் ஐம்பெரும்

5 ARE No 99 of 1916

காப்பியங்களுள் ஒன்றாக விளங்கும் "ஆமுக்த மால்யத" என்ற நூல் இவரது அரிய படைப்பாகும்.[6]

இக்காவியம் முழுக்க முழுக்க தெலுங்கு மொழியின் மரபிலே இயற்றப்பட்டதாகும். இதன் கருத்துக்கள் யாவும் உண்மை நிலையைக் கருப் பொருளாகக் கொண்டு அமைக்கப்பட்டவை. சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள சிறு, சிறு, நிகழ்ச்சிகளை விளக்கும் கருத்துக்களும் இவற்றில் அடங்கியுள்ளன. இந்நூல், கிருஷ்ணதேவராயர் வைணவ மதத்தில் சிறந்த ஈடுபாடு கொண்டவர் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறது. மேலும் திருப்பதி வெங்கடேசப் பெருமானைப் பற்றி புகழ்ந்துரைக்கும் இந்நூல், பெருமானிடம் உள்ள பக்திப் பரவசத்தை வெளிப்படுத்துகிறது. அரசவை மொழியாக இருந்த தெலுங்கு மொழியின் சிறப்பை விளக்குகிறது. ஏன் தெலுங்கை சிறந்த மொழியாகக் கருதினார் என்பதற்கும் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆழ்வார்களுள் ஆறாவது ஆழ்வாராகக் கருதப்படும் பெரியாழ்வாரைப் பற்றி விவரித்துக் கூறுகிறது. இவ்வாழ்வார் மதுரையாட்சியாளனை வைணவ சமயத்தில் ஈடுபடச்செய்தார். மேலும் இநநூல் கிருஷ்ண தேவராயரின படையெடுப்புகளைப் பற்றி செயதிகளையும் கூறுகிறது. ஆட்சியின் செயல்பாடுகளைப் பற்றியும் விளக்குகிறது. சிறந்த இலக்கிய ஞானியாகக் கருதப்பட்ட பெத்தண்ணா என்பவர் கிருஷ்ண தேவராயர் காலத்தில வாழ்ந்தவராவார். இவரின் அரிய படைப்புகளில் உள்ள சொல்வளத்தையும், நயத்தையும் மற்ற அறிஞர் பெருமக்கள் எளிதிலே கைக் கொள்ள முடியாது. ஆனால் கிருஷ்ண தேவராயர், இவரின் கருத்துக்கள் சிலவற்றைத் தம் படைப்பில் புகுத்தியுள்ளார். இவர் கிருஷ்ண தேவராயரின் அரசவைப் புலவராகவும் பணியாறறியுள்ளார்.

கிருஷண தேவராயருக்குப் பின் வநதோரும் குறிப்பாகத் தஞ்சையை ஆண்ட இரகுநாத நாயக்கர் போன்றோர் அரண்மனையில் நாடகக் கலையை வளர்க்க நாடக அரங்குகளை அமைத்து வளர்த்தனர். நாடக அரங்குகள் நன்கு அலங்கரிக்கப்பட்டு அணிகலன் செய்யப்பட்டன.

6 Mahalingam, T V "Administration and Social Life under Vijayanagar" P 375

அரசவை நாடகங்கள் இங்குதான்அரங்கேற்றம் பெற்றன. கிருஷ்ண தேவராயரின் இசைஞானத்தைப் பற்றி அவருடைய கிருஷ்ணாபுரக் கல்வெட்டு விளக்குகிறது.[7] விஜய நகர ஆட்சியின் கீழ் சிற்றரசர்களாக இருந்து தஞ்சையை ஆண்ட விஜயராகவ நாயக்கர் தனது தந்தை ரகுநாத நாயக்கரின் சாதனைகளை விளக்கவும் விழாவெடுக்கவும் ரகுநாதாப்யுதயமு என்ற நாடகத்தை எழுதினார்.[8]

*வடமொழி :* மொழியின் தொன்மையினாலும், வளத்தினாலும், ஆதிக்கத்தினாலும் அரசவைகளில் வடமொழி போற்றப்பட்டது. குறிப்பாக தென்னாட்டில் வடமொழியின் செல்வாக்கு பரந்து காணப்பட்டது. ஆட்சியாளர்களும்,அரசிகளும், அமைச்சர்களும் அறிஞர்களாக இருந்ததால் அரசவை அறிவுக் களஞ்சியமாக விளங்கிற்று. விஜய நகர காலத்தில் வடமொழி இலக்கியங்கள் மதத்தையோ, தத்துவக் கருத்துக்களையோ ஒட்டித்தான் எழுதப்பட்டன. சமய ஈடுபாட்டில் நாட்டம் கொண்ட ஆட்சியாளர்கள் பக்திப்பாடல்களையும் புராணக் கதைகளையும் வெளியிட்டனர். முதலாம் புக்கரின் அமைச்சர் மாதவரும், இரண்டாம் அரிகரனின் அமைச்சர் சாயணரும் பெரும் புலவர்களாவர். அமைச்சர் மாதவர் சைவ சமயத்தின் ஒரு பிரிவான அத்வைத தத்துவங்களை விளக்குவதில் திறமை வாய்ந்தவர். மேலும் சட்டம், இலக்கணம் போன்ற துறைகளிலும் போற்றுவதறகுரிய படைப்புக்களைப் படைத்துள்ளார். இவருடைய சகோதரர் சாயனர் ரிக் வேதத்தைப்பற்றி இயற்றிய தேவப் பிரகாசம் என்ற விரிவுரை புகழ் பெற்றது.

வைணவத்தில் பெரும் ஈடுபாடு கொண்ட விஜயநகர ஆட்சியாளர்கள் வடகலைக் கருத்தை நன்கு தெளிவுபடப் பல நூல்களில் விரித்துரைத்த வேதாந்த தேசிகரை அரசவைக்கு அழைத்துப் பாராட்டி தெனனகத்தில் சிறந்த வைணவ திருத்தலமான சீரங்கத்தில் அமர்ந்து வடமொழியிலும், தமிழிலும் அரிய நூல்களை எழுதப் பணித்தனர். கிருஷ்ண பெருமானின் வாழ்க்கை வரலாற்றைக் காப்பியமாக விளக்கும் யாதவாப்யுதயமும், சங்கல்ப சூரியோதயம் என்ற நாடகமும் அதவைதத்தின் குறைகளை

7 E I C,P 1592

8 E I C,P 1592

விளக்கும் சததூசனி போன்றவையும் அவரது சிறந்த படைப்புகளாகும். தமிழகத்தில் விஜய நகர ஆட்சியை அமைக்கக் காரணமாக இருந்த குமார கம்பணாவின் மனைவி கஙகாதேவி சிறந்த வடமொழிப் புலமை பெற்றவர்.

அவர் மதுரா விஜயம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க நூலை வடமொழியில் படைத்துள்ளார். இது விஜய நகர வரலாற்றை அறிய உதவும் சிறந்த இலக்கியச் சான்றாகும். குறிப்பாக தமிழகத்தில் விஜய நகர ஆட்சி ஏற்பட்டதை விரிவாக விளக்குகிறது. முகமதியர்களின் தென்னாட்டுப படையெடுப்பைப பற்றியும் அதனால் பாதிக்கப்பட்ட இந்து மக்களின் சமயம், கலாசசரம், பண்பாடு, பொருளாதாரம் போன்றவற்றைப் பற்றியும் தெளிவாக விளக்கியுள்ளார்.[9] கங்கா தேவியார் மட்டுமல்லாமல் மற்றும் ஏராளமான பெண்பால் புலவர்கள் வடமொழி இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணியை நாம் அறிய முடிகிறது. அச்சுதராயரின் அரசியார் திருமலாம்பா என்பவர் வரதாம்பிகா பரிணயம் என்ற நூலைப் படைத்துள்ளார். புகழ் பெற்ற விஜய நகர மூன்றாம் மரபைச் சேர்ந்த பேரரசர் கிருஷ்ண தேவராயர் வடமொழி இலக்கியத்தில் சிறந்த தேர்ச்சி பெற்றவர். இவரது சம்பாவதி கல்யாணம், உஷா பரிணயம் என்ற இரண்டு வடமொழிக் காப்பியங்கள் மட்டும் தற்போது கிடைக்கின்றன. அவரது மற்றைய படைப்புக்கள் தற்போது கிடைககவில்லை.[10]

க காலகட்டத்தில் எண்ணற்ற புராணக்கதைகளும் நாடகங்களும் தோன்றின. கிருஷ்ண தேவராயரும் அவருக்குப் பின் வந்த இரகுநாத ராயர், நீலகண்ட தீட்சிதர், ஆகியோர் இயற்றியுள்ள நூல்களைத் தவிர சீனிவாச தீட்சிதா போன்ற அறிஞர்களின் படைப்புகள் பல கிடைக்கவில்லையாயினும் சிலவே கிடைக்கின்றன. அவை வடமொழியின் வளத்திற்கு வனப்பூட்டுபவையாக அமைந்துள்ளது. ஆகவே விஜய நகர காலத்தில் தென்னாட்டில் வடமொழி இலக்கியம் ஓங்கி வளர்ந்தது. சமயம் மறறும் தத்துவம் பற்றிய நூல்களும், பகதிமயமான பாடல்கள், புராணக் கதைகளை ஒட்டிய கவிதைகள் நாடகங்கள், அழகுக்கலை பற்றிய நூல்களும் வடமொழி இலக்கியத்திற்கு வளமூட்டின எனில் மிகையாகாது.

9 Sastri K A N "Histroy of South India" p 350,

10. பிள்ளை, கே.கே. 'தென்னிந்திய வரலாறு' தொகுதி II ப. 69

வடமொழியின் தொன்மையினாலும், வளத்தினாலும் அரசவையில் அது தனியிடததைப் பெற்றது.ஆட்சியாளர்களும் வடமொழியைப் பின்பற்றியே நூல்களை எழுதப் பணித்தனர். குமார கம்பணாவின் மனைவி கங்காதேவி சிறந்த வடமொழிப் புலமைப் பெற்றவர். அவர் எழுதிய மதுரா விஜயம் விஜய நகர வரலாற்றை அறிய உதவும் சிறந்த சான்றாகவும் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

# 10

# கலைகள்

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் மத்திய காலம், தென்னிந்தியக் கட்டடக்கலையில் மாற்றமும், உயர்வும் மேம்பாடும் அடையத் தொடங்கிய காலமெனலாம். விஜய நகர அரசர்கள் கலை நுணுக்கங்களில் இருந்த விருப்பததாலும், ஈடுபாட்டாலும், அதற்குச் செயல் வடிவம் கொடுக்கத தொடங்கியதால் கட்டடக்கலை வளர்சசி மேன்மேலும் தழைக்கத் தொடங்கியது. இவர்களின் தெய்வ நெறி ஈடுபாடடாலும் பக்தியின் முக்தியாலும் தெய்வங்களுக்குக் கோயில் எடுத்தனர். இவற்றின் விளைவாக ஆங்காங்கே கட்டடக்கலை, சிற்பக்கலை வளரத் தொடங்கின. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் இந்துப் பேரரசை ஏற்படுத்திய விஜய நகர அரசு திராவிட நாட்டில் பரிபாலனம் செய்து கட்டடக்கலையில் திராவிடப்பாணி என்ற புதுமுறையை ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகவும் ஏற்புடையதே.[1]

விஜய நகர அரசின் தலைநகர் ஏழு அரண்களால் சூழப்பட்டிருந்ததாக அப்துர் ரசாக் என்ற அறிஞர் கூறுகிறார். இவற்றில் இருந்து முகமதியச் சாயல் பின்பறறப்பட்டிருப்பதை உணர முடிகிறது.[2] வாயில் வழிகளில் வளைசல் கட்டும் பீப்பாய் போன்ற முகமதிய முறையும் கோட்டைகளையும், அவற்றின் உறுபபுகளையும் அமைப்பதில் இந்து முகமதியக் கலைகளின் அம்சங்கள் காணப்படுகின்றன. கோயில்களைத் தவிர, அரண்மனைகள், அரசர் கொலுவிருக்கை, அரசு கட்டில்[3] மாளிகைகள், நீர்ப்பாசன வாயக்கால்கள் கலைத்திறனுடன் அமைக்கப்படட போதிலும் சிலவே தற்போது எஞ்சியுள்ளன. மதச்சார்பற்ற கட்டடங்களை

1 Percy Brown, Indian Architecture P 91

2. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி II ப. 101.

3 Saletore, R N "E I C" P 1521

நாம காணக் கிடைப்பனவாயிருப்பதால் அரசர்கள் எம்மதமும் சம்மதம் என்ற உயரிய கோட்பாட்டையுடையவர்களாயிருந்தனர் எனலாம். கலைகளின் ஒருங்கிணைப்பாகத் திகழந்த வெற்றி மாளிகைப் பற்றி பெர்சிபுரோன் என்ற அறிஞர் விரிவாகக் கூறியுள்ளார்.[4]

### *கோயில்கள்*

விஜய நகர காலத்தில், தலைநகரிலும் பேரரசின் மற்ற பகுதிகளிலும் அமைந்த கோயில்களில் புதிய நிர்மாண முறைகள் கையாளபபட்டன.[5] முதலாவதாக, கோயில்கள் அளவில் பெரிய மாளிகைகளையொததும், அழகிய மண்டபங்களையும், கூடங்களையும் கோயிலுக்குள் பெற்று அமைந்தன. மேலும் கல்யாண மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், சித்திர மண்டபம், சேஷாத்திரி மண்டபம், சேட்ட மண்டபம், சகஸ்ர மண்டபம், ஊஞ்சல் மண்டபம், வசந்த மண்டபம், வாகன மண்டபம், ராங்க மண்டபம், கண்ணாடி மண்டபம்[6] என்று கட்டடக் கலையை வளர்த்து ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறப்பை அளிததனர். திராவிடப் பாணி என்று சொல்லப்படும் விஜய நகரப் பாணியை (Vijaya Nagar Style) ஏற்படுத்திய இவர்களது பணி வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளது. மேலும், இந்திய வரலாற்றில் குறிப்பாகத் திராவிடப் பண்பாட்டில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய காலமாகும்.[7] கட்டடக்கலை என்பது இயந்திர வேலைப்பாடு போன்றல்லாது காலாகாலம் நிலைத்து நிற்கக் கூடிய தொலை நோக்குச் சிந்தனையில், கட்டடக் கலையைக் கையாண்டனர்.

சிறந்த வைணவர்களாக இருந்த விஜய நகர அரசர்கள் மற்ற மதங்களையும் போற்றினர். குறிபபாக, சிவன், முருகன், கணேசர் போன்ற தெய்வங்களுக்கும் கோயில்கள் வடித்துள்ளனர். முகமதியர்களின் தென்னகப் படையெடுப்பு குறிப்பாக கோயில்களைப பாதித்தது. கலை வளர்ச்சியைப் பாதித்ததுமல்லாமல் தென்னிந்தியக் கட்டடக்கலையைச் சீர்குலைத்ததென்றால் மிகையாகாது. அவ்வாறு பாதிக்கப்பட்ட கோயில்கள்,

4 Shukla, D N "Hindu Science of Architecture" P 517
5. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி II ப. 95
6 Ed H M Nayak & B R Gopal, "South Indian Studies" P 665
7 Shukla, D N "Hindu Science of Architecture" P 516

கட்டடங்களை இவர்கள் செபபனிட்டார்கள். பெர்சிபுரோன் என்ற அறிஞர் இந்தியக் கட்டடக்கலையைப் பற்றிக் குறிப்பிடும் போது முதிர்ச்சியடைந்த கட்டடக்கலை என்றும் இது எல்லாவற்றுக்கும் எடுத்துக்காட்டாக உள்ளது என்றும் குறிப்பிடுகிறார்.[8] முறைப்படி காலவழிபாடுகளும், தெய்வங்களுக்கு விழாக்களும் எடுக்கப்பட்டன. ஆண்டு தோறும் நடைபெறும் திருக்கல்யாண விழாவில் பெருமானையும் அம்மனையும் வீற்றிருக்கச் செய்ய நடுவில் ஓர் உயர்ந்த கலை நுட்பங்களடங்கிய மண்டபத்தைக் கட்டினர்.[9]

விஜய நகரக் கோயில்கள் நீண்ட சதுர வடிவமைப்பைப் பெற்றிருக்கின்றன. இவர்களது முன்னோர்களான கடம்பர்கள், மேற்குச் சாளுக்கியர்கள், இராட்டிரகூடர்கள், காகாத்தியர்கள், யாதவர்கள், பல்லவர்கள், ஒய்சாளர்கள் போன்றவர்களின் கட்டடக்கலையின் நுணுக்கங்களை ஏற்று விஜயநகரப் பாணியில் வடிவமைத்தனர்.[10] கோயிலின் முன்னணியில் மகாமண்டபத்தையும், நடுவில் அர்த்த மண்டபத்தையும், இறுதியில் மூலக்கோயில்களையும் அமைத்துக் கர்ப்பக்கிரகத்தில் கடவுளை (கருவறை) அமைத்து வழிபட்டனர்.

கருவறை அஜந்தாவில் உள்ள புத்தப் பள்ளியின் சாயலில் அமைக்கபபட்டது. முதலில் வெறுமனே அமைக்கப்பட்டாலும் காலப்போக்கில் அச்சுவர்களில் கலைநுணுக்கங்களையும் சித்திர வேலைப்பாடுகளையும் உட்புகுத்தினர்.கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இராட்டிரக்கூட அரசனான முதலாம் கிருஷ்ணா எல்லோராவில் அமைத்த கைலாசநாதர் கோயில் அமைப்பைத தங்களது கோயிலின் முகப்பு வாயிலில் பிரமாண்ட பாணியில் அமைத்தனர்.[11] சாஞ்சியில் உள்ள புத்தஸ்தூபியின் கலைப்பாணியை இராட்டிரகூடர்கள் கைலாசநாதர் கோயிலில் வடிவமைத்தனர்.

8 Shukla, D N "Hindu Science of Architecture" P 516
9 Ed H M Nayak & B R Gopal, "South Indian Studies" P 666
10 Saletore, R N "E I C" P 1589
11 Ibid P 1589

விஜய நகரக் கோயிலின் முகப்பு வாயில் கருவறை வரை நீண்டு அமைந்துள்ளது.[12] திராவிட தேசம் முழுவதும் திராவிடப்பாணி கட்டடக்கலையைப் பார்த்தாலும் இக்கலைக்குப் பொலிவூட்டும் வகையிலே புத்துயிர் அளித்தது. விஜய நகரத்திலுள்ள வித்தல சாமி கோயிலும் இராமசாமிக் கோயிலும் கலைகளின் இருப்பிடமாகவும் காட்சியிடமாகவும் விளங்குகின்றன.துங்கபத்திரை கரையின் தென்கரையில் அமைநதுள்ள விஜய நகரம், விஜய நகர அரசின் தலைநகரமாகவும் கட்டடக்கலையின் தலைநகரமாகவும் விளங்கியது.[13] இக்கோயில்கள் சிற்பம், ஓவியம் அவைகளை வடித்த, எழுதிய கலைஞர்கள், வாழ்வியல் நிழ்ச்சிகளை, கதைகளை அவ்வடிவிலே கண்டனர். மேலும் போர் வீரர்கள் யானை, குதிரை, மற்றும் பல உருவங்களைச் சிலையாக வாழ்வியல் நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர்.[14] விஜய நகரக் கட்டடக்கலைப் பாணியில் உள்ள கோயில்களை வேலூர், காஞ்சிபுரம், சீரங்கம், கும்பகோணம், விருஞ்சிபுரம், இராமேஸ்வரம், திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற இடங்களில் காணலாம்.

*அம்மன் கோயில் :* விஜய நகர அரசர்கள் பெண் தேவதைக்கும் கோயில் எடுத்தனர். அதனைக் கோயிலின் தென்மேற்கு மூலையில் கட்டினர். பிற்காலப் பாண்டியர்கள் காலத்திலும், சோழர்கள் காலத்திலும் இம்முறைதான் காணப்படுகிறது. காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள அம்மன் கோயிலில் மிகப் பிரமாண்டமான முறையிலே கட்டப்பட்டது. இக்கோயிலில் கட்டப்பட்ட விமானம் கல்யாண கோட்டி என்று அழைக்கபடுகிறது.[15] சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள வேதவல்லி நாச்சியார் கோயில் சதாசிவராயர் காலத்திலே கட்டப்பட்டது.

*துறவியர் கோயில்கள்* (Shrines for saints ). ஸ்ரீ வைணவக் கோயில்களில், ஆழ்வார்களுக்கும், ஆச்சாரியர்களுக்கும் தனித்தனியாகக்

12. Saletore, R N "E I C " P P 1589-90.
13 Shukla, D N "Hindu Science of Architecture" P.517
14 Aiyanagar, S K "Some Contributions of South India to Indian Culture" P 306
15 Ed H M Nayak & B R Gopal "South Indian Studies" P 667

கோயில்கள் கட்டப்பட்டன. பிற்கால விஜய நகர அரசர்கள் வைணவர்களாக இருந்ததால் அவர்கள் வைணவத் தலங்களை (ஆச்சார்யா கோயில்) அமைத்தும் அவற்றிற்கு தாராளமாகக் கொடை வழங்கியும், சிறந்த முறையில் விழாக்கள் எடுத்தனர். விழாக்கள் நடைபெறவும், தினகால வழிபாடுகள் முறையாக நடைபெறவும், கோயிலுக்கு நிலங்கள் வழங்கப்பட்டு அவற்றின் மூலம் வரும் வருவாயைக் கொண்டு இப்பணிகள் செய்யப்பட்டன. இவை காஞ்சி, சீரங்கம், திருப்பதி, ஸ்ரீபெரும்புதூர் போன்ற வைணவத் தலங்களிலே சிறப்பாக நடைபெற்றன.[16]

*விமானம் :* கோயில் கட்டடக்கலையில் இரண்டு முறையைப் பின்பற்றினர். ஒன்று கோயிலின் முகப்பு வாயிலில் கட்டப்படும் உயரமான பல அடுக்குக் கட்டடத்திற்குக் கோபுரம் என்றும், கருவறையின் மேல் பல தட்டுகளைக் கொண்டு உயரமாகக் கட்டப்பட்ட கட்டடத்திற்கு விமானம் என்றும் பெயரிட்டழைத்தனர். விமானம் சோழர்களால் கட்டப்பட்ட தஞ்சை இராஜராஜேஸ்வரம் போன்று பல அடுக்குக்களைக் கொண்டிருந்தாலும் அவை போன்று முற்றிலுமாகக் கற்களினால் கட்டப்படவில்லை. இருந்தாலும், ஆங்காங்கு கிடைத்த கற்களைக் கொண்டு சுண்ணாம்புக் காரையால் கட்டினர். கோபுரத்தின் மேல் சோழ, பாண்டியர்களைப் போலன்றி மிகப் பெரிய ஸ்தூபியை வைத்தனர்.[17]

*கோபுரங்கள் :* கிருஷ்ண தேவராயரால் காஞ்சிபுரத்தில் கட்டப்பட்ட ஏகாம்பர நாதர் கோயில் கோபுரம் மிகப் பெரியது. பத்துத் தட்டுகளடங்கிய இக்கோபுரத்தின் உயரம் 188 அடியாகும். கோபுரத்தின் வெளிச்சுவற்றில் பற்பல சிற்பங்கள் வடிக்கபபட்டன. அவை புராணங்களில் வரும் காட்சிகளை எடுத்துக்காட்டுபவைகளாகவும், தெய்வ வழிபாட்டின் நெறிகளை உணர்த்துபவைகளாகவும் அமைநதுள்ளன. அவற்றின் உருவங்களுக்கு நிகழச்சியின செயல்பாடுகளுக்கு உகந்தாற்போல் பல வணணஙகள் தீட்டப்பட்டன. காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலின் சில பகுதிகள் விஜய நகர மனனர்களால் கட்டப்பட்டன.[18]

16 I bid P 667

17 Saletore, R N "E I C " P 1590

**18. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி II ப. 100.**

ஒய்சாளர்களும் காகாத்தியர்களும் சாதாரணக் கற்களைத்தான் கட்டடக்கலையில் பயன்படுத்தினர். ஆனால் விஜய நகர அரசு சித்திர,சிற்ப வேலைப்பாடுகளையும் வடிக்க உகந்த உயர்ந்த நற்கற்களைக் கையாண்டு புதிய தொழில் நுட்பங்களின் மூலமாகக் கட்டடக் கலைக்குச் சிறப்பளித்தனர்.[19] மேலும் கரடு முரடான கற்களிலும் தங்களது கைவன்மையால் சிறப்பான கலை நுட்பத்தைக் கண்டனர்.விஜய நகர கோபுரத்தின் வெளிப்புரத்திலும் தெற்கத்திய மரபு முறையே (southern tradition) காணப்பட்டது. ஆனால் இவர்களின் சிற்ப வடிவங்களிலும், அவற்றின் ஆபரண அலங்கரிப்பிலும் வடக்கத்தியச் சாயல் காணப்படுகிறது.

*இராய கோபுரம் ( Raya Gopuram ) :* விஜய நகர காலத்தில் கோயில்களில் வாயில் கோபுரங்கள் பல அடுக்குகளைக் கொண்டதாகக் கட்டப்பட்டன. அவை பிரமாண்டமான அளவிலே உயர்ந்து காணப்பட்டதால் கிருஷ்ண தேவராயரின் நினைவாக அவற்றை இராய கோபுரம் என்று அழைப்பர்.[20] கி.பி. 1509 முதல் கி.பி. 1529 வரை ஆட்சி செய்த கிருஷ்ண தேவராயர் காஞ்சி, திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற கோயில்களின் கோபுரங்களைக் கட்டினார். காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில், திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில், சிதம்பரம் நடராஜர் காளகஸ்தி கோயில் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.கட்டக்கலையின் அணிகலனாக விளங்கும் விஜய நகர வித்தல சாமி கோயிலும் கசார இராமசாமி கோயிலும் கி.பி. 1513 இல் கிருஷ்ண தேவராயரால் ஆரம்பிக்கப்பட்டாலும் அதை அவருடைய சந்ததியினர் முடித்தனர். இக்கோயில் ஆறு கட்டுமான அமைப்புகளைக் கொண்ட தூண் மண்டபங்களைக் கொண்டது.[21]

கி.பி. 1327இல் முகமதியர்களின் தென்னகப் படையெடுப்பால் சீரங்கம் கோயில் விக்ரகத்திற்கு பாதிப்பு நிகழாமலிருக்க இந்து மத பக்தர்கள் சீரங்கநாதர் விக்ரகத்தைச் சித்தூர் மாவட்டத்திலுள்ள திருப்பதிக்கு எடுத்துச்

19 Ed H M Nayak & B R Gopal "South Indian Studies" P 665

20 Nagaswamy, R "The Art of Tamilnadu" P 8

21 Shukla, D N "Hindus Science of Architecture" P 517

சென்று பாதுகாப்பாக வைத்திருந்தனர். எனவே முகமதியர்களின் அட்டூழியங்களுக்கு முடிவு கட்ட புக்காவின் மகன குமார கம்பணா திட்டமிட்டார். அதன்படி அவர் கி.பி. 1372 இல் மதுரை வரை படையெடுத்துச் சென்று முகமதியர்களின் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைததார். அதன்பின் அவர் முகமதியத் தாக்குதலால் அழிவுற்ற கோயில்களில் திருப்பணியை மேற்கொண்டார. பெரும் தாக்குதலுக்கு உட்பட்ட சீரங்கம் கோயிலைச் செப்பனிட்டு சீரங்கநாதர் விக்ரகத்தை மீண்டும் அக்கோயிலிலே நிறுவித் திருப்பணி செய்தார்.[22]

*தூண்கள்*: கி.பி. 7-8 ஆம் நூற்றாண்டுப் பல்லவ காலத்துத் தூண்களைப் பார்க்கும்போது தூண்களில் அவவளவாகக் கலை நுணுக்கங்கள் தென்படவில்லை. மாறாக, தூண்களில் படிப்படியாகவும், வரந்தை வரந்தையாகவும் இவைகள் இலலாமலும் இருக்கின்றன. பல்லவர்களின் ரதக் கோயில் அமைந்துள்ள மாமல்லபுரத்தில் வட்ட வடிவத் தூண்களும் இரட்டை வடிவ விளிம்புகளைக் கொண்ட தூண்களும் காணப்படுகின்றன. இந்த முறையை விஜய நகர அரசரும் பின்பற்றினர்.[23] விஜய நகர, சதுரத் தூண்களைப் பறறி ஆராயும் போது பல்லவர்களின் மகாபலிபுரத்திலுள்ள மூன்றாவது கோயில் தூண்கள், எல்லோராவிலுள்ள தூணின் கலை நுணுக்கஙகளைப் பெற்று இருந்தது. பின்னாளில் அது விஜய நகரத்திலும் பின்பற்றபபட்டது. இதைப போன்ற அமைப்பை திருவானைக்கா ஜம்புகேஸ்வர கோயிலிலும் காணலாம். மேலும் சோழர்கள் காலத்தில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில தூண்களின் உச்சியில் இருபுறங்களிலும் சற்றே வளைந்த வேலைப்பாடுகள் காட்சியளிக்கின்றன. பாண்டியர்கள் காலத்தில உள்ள கி.பி. 13 ஆம் நூறறாண்டுத் தூண்களின் உச்சியில் இருபுறங்களிலும் வளர்ந்தும் அதன் கீழ் பூ போன்ற கும்ப அமைப்புகளும் செதுக்கப்பட்டுள்ளன.

கி.பி. 15ஆம் நூற்றாண்டில் விஜய நகரத் தூணகளில் இதுவரை இல்லாத கலை நுணுக்க சிற்ப வேலைபபாடுகளுடன் கூடிய தூண்கள் ஒரே

22 Calambur Sivaramamurti, "The Art of India" P 520
ARE No 55 of 1892 ARE No 18 of 1899 ARE No EI IV 322
ARE No ER 1903-4 P 12

23 Saletore, R N EIC P P 1589-90

மாதிரியாக இல்லாமல் பல்வேறு விதமாகக் காணப்படுகின்றன. பார்ப்பவர் கண்களைப் பிரமிக்க வைக்குமளவிற்கும், வர்ணிக்க முடியாத அளவுக்கும் உள்ளன. கற்பனைக்கெட்டாத விலங்குகளின் உருவங்களின் சிற்ப வேலைப்பாடுகள், போர்க்காட்சிகள், வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தத்துருவமாக எடுத்துக் காட்டும் காட்சிகளைக் கொண்ட சிற்பங்கள் ஆகியவை மடங்கிய தூண்களின் நாற்புரத்திலும் விசித்திர வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள விருஞ்சிபுரம் மார்க்கசாகேஸ்வர கோயில் கல்யாண மண்டபத்தில் வரிசை வரிசையாக மிக உயர்ந்த எடுப்பான தூண்கள், இத்தூண்களின் அடியில் மாறாத உருவங்களின் அமைப்புகள் ஆகியவை சித்தரிக்கப்பட்டுள்ளன. தூண் முழுவதும் பல்வேறு உருவங்களும், தூணின் உச்சியின் இருபுறங்களிலும் வளைந்த விளிம்புகளும் அவைகளில் பூ வேலைப்பாடுகளும் நிறைந்துள்ளன.[24]

காஞ்சிபுரத்தில் வரதராஜப் பெருமாள் கோயிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் விஜய நகரக் கலை வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு. மேலும் அங்கே ஏகாம்பரநாத சாமி கோயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம்[25] சிற்பக் கலையின் உன்னத மேம்பாட்டையும் இதற்கு முன் எக்காலத்திலும் இல்லாத அளவுக்கு சிற்ப வேலைப்பாட்டுத் தூண்களையும் கொண்டது. சீரங்கம் கோயிலில் உள்ள (Horse Court or Seshagiri Mandapam) சேஷகிரி மண்டபத்தில் உள்ள தூண்களில் சிற்ப வடிவிலேயுள்ள மிருகங்கள், குறிப்பாகக் குதிரைகள் முன்கால்களை ஒன்பது அடி உயரத்திற்கு உயர்த்திக் குதித்துப் போருக்குச் செல்வதைப் போல உள்ள காட்சி அக்காலப் போர் நடவடிக்கையைக் காட்டுகிறது.[26]

விஜய நகரத் தூண் அமைப்பு, சதுர வடிவமாகவும், வட்ட வடிவமாகவும் கலை நுட்பங்களைக் கொண்ட விளிம்புகளை உடையதாகவும் இருந்தன. கிருஷ்ண தேவராயர் சோழர்களின் கலைப்பாணியை பின்பற்றி சிதம்பரத்தில் அமைதத மண்டபத்தில் இரட்டை விளிம்புகள் கொண்ட கலை நுட்பத் தூண்களைக் காணலாம்.இது போன்ற

24 Percy Brown, "Indian Architecture" P 94

25 Ibid P 94

26 Ibid P 94

அமைப்பு திருச்சிராப்பள்ளியிலும் காணப்படுகிறது. தெயவங்களின் பல்வேறு நிலைகளைப பற்றியும், அவைகளை வழிபடும் முறையைப் பற்றியும் அத்தெய்வங்களின் வாகனங்களையும் தூணகளில் காணலாம். தூண்களில் போருக்குச செல்லும் போா வீரன் மிருகததின் மீது போர்க்கருவிகளுடன் அமாந்து கமபீரமாகக் காட்சியளிக்கும் சிற்ப ஒவியங்களும், அவற்றைப் பின் தொடர்ந்து பல்வேறு மிருகங்களும், படை வீரர்களும் போருக்கு ஆயததமான நிலையிலே செல்லும் காட்சிகளும், மெய் சிலிர்க்க வைக்கின்றன. வேலூர்க் கோயிலில் திருவிழா மண்டபம், அம்மண்டபத் தூண்களில் பலவேறு வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்ப ஓவியங்கள், சிவனைச் சித்தரித்து அவரைச் சுற்றிப் பல்வேறு வாததியங்களைக் கொண்ட கலைஞர்கள், அந்நிகழ்ச்சியில் எப்படி ஈடுபடுவார்களோ அந்தக் கோணததில காணப்படுகின்றன.

தூண்களில் நேர்த்தியான சிறப வேலைப்பாடுகள் செதுக்கப்பட்டன. தூணின் உச்சி மட்டத்திலுள்ள பொதிகைக் கட்டைகளில் தொங்கும் தாமரை மொட்டுப் போன்ற அமைப்புடைய சிற்பங்கள் பல்லவர்கள் காலத்தில் இல்லை.[27] விஜய நகர காலத்தில் திராவிடச் சிற்பமே உச்சநிலை அடைந்தது எனலாம். கோயில்கள், மண்டபங்களின் முகப்பு வாயில்களில் உள்ள பெரிய தூண்களைச் சுற்றி அழகிய சிற்ப வேலைப் பாடுகள் நிறைந்த சிறு சிறு தூணகள் இணைக்கப்பட்டன. தூண்கள் வெறுமனே இல்லாமல், காலை உயர்த்திக் குதித்துப் போகும் குதிரைகள், யானைகள் முதலியவை கல்லில் உருவாக்கப்பட்டுள்ளன. சிறு மாடங்களில் கூரை ஓரத்திலும் மண்டபங்களின் மூலைகளிலும் கூடுகள் சிங்கார வேலைப்பாடுகளுடன் அமைந்திருநதன. கோயில சுவர்களில் அமைந்த மாடங்கள் அளவில் பெரியனவாக ஸ்தூபிகளால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தன. புதுமுறையில் விஜய நகரம் அமைத்த கோயில்களில் சிறந்தது ஹசாரா ராமசாமி கோயிலும், வித்தலசாமி கோயிலுமாகும். விஜய நகரத்து எல்லாக் கோயில்களையும் விட இது நிர்மாணச் சிற்பத்தில் ஒப்பற்றதாய் விளங்குகிறது.[28]

**27. பிள்ளை, கே.கே. தென்னிந்திய வரலாறு தொகுதி II ப. 95.**
28 Saletore, R N "E I C " P 1581

அழகான வளைவு தாங்கிகளைக் கொண்ட அர்த்த மண்டபமும் அதன் கூரையைத் தாங்கி நிற்கும் நான்கு வளைவுத் தாங்கிகளும் சிறு கோயில்களின் வெளிச் சுவர்களைச் சிங்காரிக்கும் புடைப்புச் சிற்பங்களும் (Bas-relief) நுழைவு மாடங்களும் கண்ணைக் கவர்கின்றன. கோயிலின் உட்சுவர்களில் இராமாயணம், கிருஷ்ண லீலை போன்ற கதைகளைச் சித்தரிக்கும் சிற்பங்களும் வைணவக் கோயிலாக இருந்த போதிலும் கணேசர், முருகர் போன்ற சைவ மூர்த்திகளின் உருவங்களும் அமைக்கப் பட்டனவென்பது அரசர்களின் சமயப் பொறையுடைமையைக் காட்டுகிறது. மதுரை நாயக்கர்கள் விஜய நகர நாயக்கர்களின் வழித் தோன்றல்களாதலால் அவர்களின் கலையிலும் விஜய நகரச சாயல் மிளிர்கிறது. இவர்கள் சில வேற்றுமைகளைக் கடைப்பிடித்து விஜய நகர, பாண்டிய கட்டக்கலையின் சாயலை இணைத்தனர். பேரூர்க் (கோவை) கோயிலில் உள்ள மண்டபத்தில் விஜய நகர மண்டபக் கட்டக்கலையில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. அம்மண்டபத்தில் உள்ள அனைத்துத் தூண்களிலும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.[29]

*கல்யாண மண்டபம்* : தென் ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் உள்ள கோட்டை மத்திய கால இந்தியாவில் ஒழுங்கு செய்யப்பட்ட, பாதுகாக்கப்பட்ட கோட்டைகளில் ஒன்றாகும். பாதுகாப்புடன் ஒழுங்குபடுத்தப்பட்ட கோட்டை வாயில்கள், பாதுகாக்கப்பட்ட அகழி, உயர்ந்த கோபுரம் போன்றவற்றைக் கட்டுவித்தவர் விஜய நகர ஆதிக்கத்தின் கீழிருந்த சின்னப் பொம்ம நாயக்கராவார். கோட்டையினுள் இருக்கும் கோயில் விஜய நகரக் கட்டக்கலையின் மேன்மையைப் புலபடுத்தும் கவின்மிகு கோயிலாகும். அங்கே உள்ள மூலக் கோயிலும், மண்டபங்களும், சிறு சிறு கோயில்களும் பாங்குற அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டையிலுள்ள கல்யாண மண்டபம் எல்லாக் கலைத் திறனையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மண்டபத்தில் வரிசை வரிசையாகக் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தூண்கள், வழவழப்பாகவும் கலையைக் கற்றுத் தரும் காட்சியிடமாகவும் விளங்குகின்றன. அத்தூண்களில், பின்பக்க வடிவங்களைக் கொண்ட குதிரைகளின் அமைப்புகள், கற்பனை மிருகங்கள் (Mythical Animals)

29 Sivaramamurthy, C "Nataraja in Art, Thought and Literature" P 275

சாரை சாரையாக பவனி வருதல் போன்ற காட்சிகள் வியக்கதக்கதாகவும், போற்றக் தகுந்ததாகவும் அமைநதுள்ளன.[30]

தூண் சிற்பங்களிலும் ஓவியங்களிலும், போருக்கு எப்படிச் செல்வது, எந்தெநதப் படை முன் செல்வது, யார் தலைமைத் தாங்கிச் செல்வது, எப்படிப் போரிடுவது, போன்ற காட்சிகளும், போர் வீரர்களின் செயல்கள் எப்படி இருக்க வேண்டும், போர்ப்படைத் தளபதியின் உடை, அவனுடைய போர்க்கருவிகள், அவனைத் தொடர்நது செல்ல வேணடிய படை வீராகளின் அணி வகுப்பு, போரில் வெறறியின் நிலையைக் காட்டுவது, போரில் வீரர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைகள் போன்ற காட்சிகளும் காணப்படுகின்றன.

மேலும் வேட்டையாடுவதிலேயுள்ள பல்வேறு வித்தைகள் ஆங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன. குதித்துப் பாய்ந்தோடும் மிருகங்கள், அவற்றைத் தொடர்ந்து சுற்றி ஓடும் மிருகங்களின் ஓவியங்கள் ஆகியன வரையப்பட்டுள்ளன. கொடூரமாகக் காயம்பட்ட மிருகங்கள் ஒன்றை ஒன்று மிஞ்சுமளவுக்கு ஆயுதங்களுடன் ஓடும் மிருக உருவங்கள், இவையெல்லாம் தூண் மண்டபத்தை அழகூட்டும் சாதனங்களாக அமைந்துள்ளன.[31] கோயில்களில் கல்யாண மண்டபம் நல்லிடத்தே அமைக்கப்பட்டு, விழாக் காலங்களிலே அம்மண்டபம் பொலிவு பெறும். விஜய நகர காலத்தில் மிக்க விமரிசையாகக் கொண்டாடப்படும் நவராத்திரித் திருவிழாவின் போது அம்மண்டபத்தில் தெய்வங்களை அமர்த்தி நடன நாட்டிய இன்னிசை நிகழ்ச்சிகள் ஆயிரம் பக்தர்களைக் கொண்டு நடத்தப்படும் நிகழ்ச்சிகள் அவாகளது முன்னிலையிலேயே தான நடைபெற்றன. இவ்விழாவின் போதுதான் கலை வலலுநாகளுக்குப் பாராட்டுகளும், பரிசுகளும் வழங்கப்பட்டுக்கௌரவிக்கப் பட்டனர். ஹம்பி, திருப்பதி முதலிய கோயில்களில் துலாபார மண்டபங்கள் கட்டப்பட்டன. இவை கோயிலின் வடகிழக்கு மூலையில் கட்டப்படடன. நூற்றுக்கால் மண்டபம் மத்திய இடத்திலே கட்டப்பட்டது குதிரைத்தூண்களை உடைய குதிரைக் கூடத்தினை சீரங்கம், காஞ்சி , வேலூர் ஆகிய இடங்களில

30 Calambur Sivaramamurti, "The Art of India" P 528

31 Ed H M Nayak & B R Gopal "South Indian Studies" P 666

காணலாம்.[32] மேலும் ஊஞ்சல் மண்டபம், வசந்த மண்டபம், வாகன மண்டபம், ரங்க மண்டபம், கண்ணாடி மண்டபம் போன்றவை பாண்டியர்களின் கட்டடக்கலையை முன் மாதிரியாகக் கொண்டு விஜய நகர அரசர்கள் தங்களுக்கே உரிய பாணியில் கட்டினர். முகமதியப் படையெடுப்பால் சேதமடைந்த கோயில்களைக் குறிப்பாக, சீரங்கம் கோயிலைப் பழமை நிலையிலே மீண்டும் புதுப்பித்தனர்.[33]

*சிற்பக்கலை* : சோழ மண்டலத்தில் பணிகள் பல செய்த கிருஷ்ண தேவராயரின் திருவுருவச் சிலை, இவர் கட்டிய தில்லை நடராஜர் கோயிலின் வடக்கு இராச கோபுர வாயிலின் மேற்புறம் உள்ள மாடத்தில் காணப்படுகிறது.[34] மேலும் இக்கோபுரத்தைக் கட்டுவித்த சிற்பிகள் நால்வரின் உருவச் சிலைகளையும் இங்கு காண முடிகிறது.[35] கலையை வளர்க்கவும் அக்கலைக்கு உருவம் கொடுத்து கலையின் அம்சங்களை வெளிப்படுத்தும் கலைஞர்களுக்கும் அவருக்கும் உள்ள உறவையும், அனையும் அவை எடுத்துக்காட்டுபவைகளாக உள்ளன. தஞ்சையில் பெருவுடையார் கோயிலை கி.பி. 11 ஆம் நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் தென்னிந்தியக் கோயில் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டாகக் கட்டுவித்த சோழ மாமன்னன் இராஜராஜன் அக்கோயில் நிர்மாணப் பணிக்குத் தன்னை அர்பணித்த இராஜராஜப் பெரும் தச்சன் என்பவனை அங்கே உள்ள கல்வெட்டுகளில் குறித்து அவனது திறமையை வெளிக்காட்டுவது போலவே, கிருஷண தேவராயரும் செயல்பட்டார் என்பது இங்கே குறிப்பிடத் தகுந்த தொன்றாகும். சிதம்பரம் நடராஜர் கோயில் வடக்குக் கோபுரத்திலே பரதக் கலையின் நூற்று எட்டுக் கர்ண மூர்த்திகளையும், ஆடும், ஆரணங்குகளின் கலை நுணுக்கச் சிற்பங்களையும் கிருஷ்ண தேவராயர் கட்டடக் கலை வளர்ச்சிக்கு அர்பணித்துள்ளார்.[36]

...

32 Calambur Sivaramamurti, "The Art of India" P 520

33 Calambur Sivaramamurti, "The Art of India" P 503 & P 522

34 Ibid P 503

35 Basham, A L "The Wonder that was India" P 308.

36 Basham, A L "The Wonder that was India" P 528

சிதம்பரம் நடராஜர் கோயிலின் வடக்குக் கோபுரத்தின் உள்சுவர் கிருஷ்ண தேவராயரால் கட்டப்பட்டது.[37] மேலும் இவற்றைக் கட்டிய நான்கு கட்டடக் கலைஞர்களையும் அவர் குறித்து வைத்துள்ளார். அவர்கள் முறையே விருததாசலத்தைச சேர்ந்த சேவகப் பெருமாள், இவரது மகன் விசுவமுத்து. திருப்பிரைக் கோடை திருமருங்கன் இவரது சகோதரர் காரணாசசாரி முதலியோர் ஆவார்.[38] கோபுரம் பல வடிவங்களில் அமைந்திருந்தது. காஞ்சி, திருவண்ணாமலைக் கோபுரங்கள் நேரான அமைப்புடையன. ஆனால் விருபாச்சா, பாம்பா பட்டி கோயில்கள் புறப்பக்கமாகக் கவிந்திருக்கின்றன.[39] மிகப் பெரிய கோபுரங்கள் ஒன்பது அல்லது பதினொரு அடுக்குகளைக் கொண்டவையாகக் கட்டப்பட்டன.

*ஓவியக்கலை :* விஜய நகர காலத்தில் நுண்கலைகளும் செழித்துக் காணப்பட்டன. ஏன் என்றால், அரசர்கள் அவற்றை வளர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியால் கலைஞர்களையும். கைவினைஞர்களையும் போற்றி அவர்களின் திறமைக்கு வெகுமதிகள் அளித்துக் கௌரவித்தனர். இறையிலி நிலங்கள் , பரிசுகள் போன்றவை கலைஞர்களை உற்சாகப்படுத்தின. கி.பி. 1378 ஆம் ஆண்டு விஜய நகரக் கல்வெட்டு அரசர்கள் நுண்கலைகளைப் போற்றிப் பாதுகாத்து வளர்த்தனர் என்றும் பிரமாண வீடுகளின் சுவர்களில் ஓவியங்கள் பல வண்ண வடிவிலே வரையப்பட்டிருந்தன என்றும் கோயில்களின் கலைகளை அறங்கேற்றவும் பாதுகாக்கவும் சங்கீத மண்டபங்கள் அமைக்கப்பட்டன[40] என்றும் கூறுகிறது. கோயிலின் திருவிழா நிகழ்ச்சியிலே நுண்கலைகள் அரங்கேற்றப்பட்டன. அரசர்கள் முன்னிலையிலேயே வெகுமதிகள், பட்டங்கள் வழங்கப்பட்டன. கலைகளின காவலிடமாக விளங்குகிற விருபாச்சா கோயில் மண்டபத்தில் ஓவியப் பயிற்சி மையத்தை, ஓவிய வடிவில் காணலாம். வித்யாரண்ய முனிவர் பல்லக்கில் அமாந்திருப்பதைப் போன்ற ஓவியம் இந்துக்களின வாழ்க்கை நிலைகளைச் சித்தரித்துக்காட்டும் ஓவியம் போன்றவை மிக்க வனப்பு மிகுந்தவை. கி.பி.

37 ARE No 371 of 1913

38 South India Epigraphy Annual Report 1935-36

39 Saletore R N "E I C " P 1590

40 Saletore R N "E I C " P 1591

15 ஆம் நூற்றாண்டில் விஜய நகருக்கு வருகை புரிந்த பாரசீகத்தூதுவர் அப்துாரசாக், இரண்டாம் தேவராயரின அரசவையைப் பற்றியும், மகா நவமி திருவிழாவைப் பற்றியும் அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அரசரின் சிம்மாசனம் பல்வேறு ஓவியங்களால் பல வணணங்களிலே கண்ணைக் கவரும் விதத்திலே தீட்டப்பட்டிருப்பதைப் பற்றியும், நடன மகளிர் குடியிருந்த வீதிகளின் இரு வாயில்களும் சிஙகம், வேங்கை போன்ற மிருகஙகளின் வடிவிலே சித்திரங்களால் அலஙகரிக்கப்பட்டிருப்பதாகவும் கூறுகிறார்.

திருவாரூர் , சிதம்பரம், திருவலஞ்சுழி, கபாலீஸ்வரர் திருக்கோயில்களில் சிவன் நடன நிகழ்ச்சிகள் பல்வேறு இசைக் கருவிகள் சூழ வரையப்பட்டிருந்தன. மேலும் சமயச் சார்பற்ற சில சிற்ப ஓவியங்களையும் காணமுடிகிறது.[41] கோயில் சுவர்களில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன இந்துக்களின் புனித காவியமாக விளங்குகிற இராமயணம், மகாபாரதத்தில் வரும் காட்சிகள் ஓவியமாகச் சுவர்களில் வரையப்பட்டன.[42] மேலும் சுவர்களிலே யானை, குதிரை, காலாள் படைகளின் அணிவகுப்பு, யானை, குதிரைகளில் போர் வீரா, வில், அம்பு, போர்க்கருவிகளுடன் போருக்குச் செல்லும் காடசிகள் ஆகியன நெஞ்சையுருக்குவதாக அமைந்துள்ளன.[43] கோயிலில் அமைக்கபபட்டுள்ள தூண்கள் தெய்வங்களின் பல்வேறு நிலைகளைச சித்தரிப்பவைகளாக அமைந்துள்ளன. இதைப் போல விருஞ்சிபுரம், சீரங்கம் போன்ற கோயில்களில் சிங்கம், குதிரை, குரங்கு மற்றும் வன விலங்குகள் துள்ளிக்குதித்து ஓடுவதைப போன்ற சித்திரங்கள், மண்டபத்தின் கூரையிலும் தூணகளிலும் கல சஙகிலிகளால் ஒன்றுக்கொன்று இணைந்து வரைந்துள்ள தன்மையிலிருந்து,

41 Calambur Sivaramamurı, "The Art of Indıa" P 289
42 Ed H M Nayak & B K Gopal, South Indıa Studıes" P 672.
43 Ed H M Nayak & B K Gopal, South Indıa Studıes" P 672
Calambur Sıvaramamurı, "The Art of Indıa" P 287
Arıyangar S K., Some Contrıbutıons of South Indıa of Indıan Culture" P 306

கலைகளின் கைவண்மையைக் காணமுடிகிறது.[44] அரசர்களும்,அவர்களின் கீழ் ஆட்சி செலுத்திய ஆட்சியாளர்களும் கலைஞர்களைப் போற்றினர். அவர்களின் திறமையைப் பாராட்டும் விதத்திலே வெகுமதிகள் அளிக்கப்பட்டன. நிலங்கள் பரிசாக வழங்கப்பட்டன. கிராமங்கள் கொடையாகக் கொடுக்கப்பட்டன. தங்கம், பணமுடிப்புகள், பட்டங்கள் போன்றவற்றையளித்து கலைஞர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

கி.பி. 1447 இல் ஆதிதாரயா (Aditarya) என்ற அறிஞர் எழுதிய பாசிய புசனா (Bhasya-Bhusana) என்ற நூலின் முக்கியத்துவத்தையறிநது மல்லிகார்சுனா என்ற அரசர் அவரின் திறமையைச் சோதிக்கும் விதத்திலே அரண்மனை மணடபத்தில் பல்துறை அறிஞர் பெருமக்களையும் வரவழைத்து அவ்வறிஞரின் திறமையைச் சோதித்து, அனைவரும் பாராடட அரசரும் நல்லாஙகி (Nallangi) என்ற கிராமத்தைக் கொடையாக அளித்துப் பாராடடினாா்.[45]

அரசாகள் மட்டுமினறி அவரது புதல்வர்களும் பேரர்களும் (Grandson) அரசவைப் பிரபுக்களும் (Nobility) மண்டல ஆட்சியாளர்களும் பரிசு கொடுத்தனர். இனாம் தாரர்கள், மகாமண்டலேஸ்வரா, இராஜாதி ராஜா, மகாராஜா, வீரபிரதாபா போன்ற பட்டப் பெயர்களால அழைக்கப்படடனர்.[46]

கோயில்களுக்கு நிபந்தங்கள் பல்வேறு பெயரிலே கொடுக்கப்பட்டுள்ளன. சைவ, வைணவக் கோயில்களுக்கு இறையிலியாகக (வரியில்லாமல்) கொடுக்கபபட்ட நிலஙகள் தேவதானம் எனவும் சைன,பௌத்தக் கோயிலகளுக்குக கொடுக்கபபடடவை பள்ளிச் சந்தம் எனவும் மறையவருக்கு விடபபடடவை பிரமதேயம் பட்டவிருத்தி எனவும அறநிலையஙகளுக்கு விடபபடடவை சாலாபோகம எனவும் புலவர் பெருமக்களுககு அளிக்கப்படடவை முறறூடடு எனவும் வழங்கப்பட்டன.[47]

44 Calambur Sivaramamurti, "The Art of India" P 287-89

45 Saletore, R N EIC P 1594

46 Ed Narendranath Law "The Indian Historical Quarterly" Vol V P 116

47. 'பேராசிரியர் அறுவர் சொற்பொழிவுகள் தமிழக வரலாறு' ப. 167.

நாயக்கர்களின் அரசாட்சி பரிபாலனத்திற்கு பிறகு, தஞ்சையில் ஆட்சி செலுத்த வந்த மராட்டியர்கள் தங்களின் ஓவியத்தில் நாயக்கர்களின் சாயலையும் தக்காணக் கலைச் சாயலையும் ஒருங்கிணைத்து, மராட்டியர்களின் ஓவியப் பாணியை (Maratta School of Painting) உருவாக்கினர். இவ்வாறு மராட்டியப் பாணி ஓவியங்கள் உருவாக அடிப்படைக் காரணமாக அமைநதவை விஜயநகர கால நாயக்க மன்னர்களின் ஓவியங்களே.[48]

*நிகழ்கலை* ( ***Performing Art*** ) · நிகழ்கலை என்பது நாடகம், நடனம், இசை,மூன்றும் சேர்ந்ததேயாகும். சங்கீத மண்டபம் என்பது அக்கால அரணமனைகளிலும் கோயில்களிலும் நிகழ்கலையை ஊக்குவிக்கும் விதத்திலே அவற்றின் மேம்பாட்டிற்காவும் பாதுகாப்பிற்காகவும் அமைக்கபட்டது. நிகழ்கலைஅரங்கேற்றம் அங்குதான் நடைபெறும். சோழர்கள் காலத்தில் நாடகத்தை அரங்கேற்ற நாடகச் சாலைகள் அரண்மனையில் அமைக்கப்பட்டன. அரசவை நாடகங்கள் கலைச் சான்றோர்களின் முன்னிலையில் தான் நடைபெற்றன.இசையை வளர்ப்பதற்குச் சங்கீத மகால் என்ற இசை மண்டபம் இசைக்கருவிகளின் ஓசை நயங்களுக்குகேற்பக் கட்டப்பட்டு இசை, திருவிழாவின்போது அரங்கேற்றப்பட்டது. கிருஷ்ணதேவராயர் பல்கலை விதத்கராவார். இவர் அமுக்த மால்யத என்ற நாடகத்தை எழுதியுள்ளார். அரசர்களும், அரசிகளும், அரசவை மக்களும், படைத் தலைவர்களும்,மண்டல ஆளுநர்களும் பல்கலை வல்லுநர்களாயிருந்தனர். நாட்டியத்தைத் தொழிலாகக் கொணட சாக்கியர் என்பார் ஆரியக்கூத்து என்ற நாட்டியத்தில் வல்லமை பெற்றவர்கள். இவர்களுக்கு அரசர்களும் பிரபுக்களும் மேன்மக்களும் கொடையும் மானியமும் அளித்தனர்.[49] மேலும் அறக்கட்டளை என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, இசையையும், இசைக்கலைஞர்களையும் காத்தனர்.[50] இதைக் கடம்பர்கள், கங்கர்கள் காலச் சூரியர்கள், ஒயசாளர்கள் போன்றோர் கடைபிடித்தனர்.

48 Sivaramamurı, C "Nataraja ın Art, thought and Literature" P 281
49 Saletore, R N EIC P 1592
50 ARE No 1120 of 1925

கிருஷ்ண தேவராயர் மற்றும் அவரது இரண்டு அரசிகளின் சிலைகள் திருமலைக் கோயிலில் இன்றும் காட்சியளிக்கின்றன. இச்சிலை வடிபபிற்கு இவரே ஆலோசனை கொடுத்ததாகக் கூறுவர். இருகைககளையும் கூப்பிய வணணம் இச்சிலை காட்சி தருகிறது. கிருஷண தேவராயரின் கடவுள் வழிபாட்டைக் காட்டும் விதததில் அச்சிலை பாதிக்கண்களை மூடிய விதததில் பயபக்தியுடன இந்துக்களுககே உரிய பாணியில் அமைந்துளளது. எவரும் மதி மயங்கிப் பார்க்கும் விதத்தில் அமைநதுள்ள இச்சிலை சிற்பக்கலையின மேன்மைத தத்துவத்தைக் காட்டுகிறது இவை அக்கால சிற்ப மேமபாடடையும பக்தி வழிபாட்டையும் என்றும் கண்முன்னே காடடுவதால் விஜய நகரம் கலைத்துறையில கண்ட மேம்பாட்டைத் தெளிவாக்கிக் கொள்ள முடிகிறது.[51]

51 Basham, AL "The wonder that was India" P 375

# 11
# முடிவுரை

தென்னிந்திய வரலாற்றில் விஜய நகர பேரரசின் வரலாறு மிகவும் முக்கியமான பகுதியாகும். தென்னாடடுக் கலாச்சாரமும், சமயஙகளுைம, அரசியல் முறைகளும் அழியாமல் நிலைப் பெற்றிருககவே விஜய நகரப் பேரரசு தோன்றியது என்பதை இநநூலில் அவர்கள் செயத செயற்கறிய செயல்கள் மூலம் தெளிவுபடுத்துப்பட்டுள்ளது. கி.பி. 1336இல் அமைக்கப் பெற்ற அரசு படிபபடியாக கி.பி 1565 வரை பெரியதொரு பேரரசாக வளர்ந்தது. குறிப்பாக தென்னாட்டில் ஒய்சாளாகள், காகததியர்கள், சம்புவராயர்கள், சோழாகள், பாண்டியாகள் முதலிய அரச வமிசஙகளால் ஆளப்பெற்றப பகுதிகளைத் தன்னகத்தேக் கொண்டு பெரும் புகழுடன் விளங்கியது.

மேலும் ஆட்சியாளர்களின் அரும்பெரும் செயல்களால் எங்ஙனம் அரசியல் வரலாறு சிறப்பம்சம் பெறுகிறது என்பது விளக்கப்பட்டுள்ளது. ஆட்சியாளர்களின் சீரிய பணியாலதான் வரலாறு நிலை பெறுகிறது எனபதும் தெளிவாகிறது. விஜய நகர விததகன் முதலாம் அரிகரனின காலத்தில் வெளியிடப்பட்ட கோமல் மானியம் என்ற செபபேடு ஆரம்ப காலத்தில விஜய நகர மன்னர்கள் தமிழ்நாடடில் மேற்கொண்ட படையெடுப்பைப பறறிக் கூறுவதால, குமார கம்பணா காலத்திற்கு முன்பாகவே தமிழகப் படையெடுப்பு நடைபெற்றதைதத தெளிவாக உணரலாம். மேலும ஆட்சியின நிாவாகச் சீர்திருததஙகளில், விளை நிலங்களை விவசாயிகளுக்குக் குத்தகை முறையில் அளிக்கும் முறை, வரி வசூல் முறை ஆகியவற்றையும் அறிமுகப்படுத்தியுள்ளான்.

முதலாம் புக்கன் தன் ஆடசிக் காலத்தில் சங்கமரின் புதல்வாகளுக்குபபின் வந்த ஆட்சியாளர்களின் ஒற்றுமையின்மையை முடிவுக்குக் கொணடு வந்தான. திறமையும் செயலவேகமும கொண்ட ஆட்சியாளாகளை ஆங்காஙகு மாகாணப பொறுப்புகளை ஏறகப்

பணித்தான். அவனது பணிக்கு மெருகூட்டுவதாக கம்பணாவின் செயல்கள் அமைந்ததைக் கூறலாம். முதலாம் புக்கனின் மகனாகிய குமார கம்பணா விஜய நகர அரசியலில் பங்கு கொண்ட ஆரம்பக் காலம் தொட்டு மகாமணடலேசுவரான நியமிக்கப்பட்டது வரையிலும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மேலும் அவனது செயல்திட்டங்கள் விஜய நகர வரலாற்றில் நீங்கா இடம் பெற்றுள்ளன. காரணம் தென்னாட்டில் விஜய நகர ஆட்சி பரவுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்து மதுரையில் ஆட்சி செய்த முகமதிய ஆட்சிக்குச் சாவுமணி அடித்தான். இதற்குச் சான்றுகளாக மதுராவிஜயமும், கல்வெட்டுச் சான்றுகளும் மதுரைத் தல வரலாறும் அமைந்துள்ளன. கம்பணாவின் படையெடுப்பு, நிர்வாகப் பணிகள் குறிப்பாக கோயில் ஊழியர்களின் பிரச்சினைகளைச் செம்மையுறத் தீர்த்து வைத்ததும் அறியப்படுகிறது. இவனுக்குப்பின் வந்த ஆட்சியாளர்கள் இலங்கை போன்ற வெளிநாட்டுப் படையெடுப்பையும் மேற்கொண்டு அரசுக்கு பலத்தை ஏற்படுத்தித் தநதனர். முதலாம் தேவராயனுடைய ஆட்சியில் பல்துறை வல்லுனர்களை அரசவைக்கு அழைத்து உரையாடச் செய்து தன் தலைநகரைக் கலைமகளின் இருப்பிடமாகச் செய்தான். இவன் ஒரு சிறந்த போர்வீரனானதால் இராணுவத்தில் புதிய மாற்றங்களைக் கொண்டுவர வெளிநாட்டிலிருந்து போர்க்குதிரைகளை இறக்குமதி செய்து பயிற்சியளித்து படை பலததைப் பெருக்கி அரசின் செல்வாக்கை வளப்படுத்தினான்.

இரண்டாம் தேவராயாரின் ஆட்சிக்காலத்தில் சமூகத்தில் மலிந்து கிடந்த வலங்கை, இடங்கைப் பிரிவுப் பூசலகளையும், கோயில் நிர்வாகப் பூசலகளையும் தீர்த்து வைத்து சமூகத்தில் அமைதி ஏற்படுத்தினார். மல்லிகார்ஜுனாவின் ஆட்சி முதல வமிசமாகிய சங்கம வமிசத்தின் முடிவு எனறு சொல்லலாம். ஏனெனில் ஒரிசா போன்ற அயலாரின் தாக்குதல்களால விஜய நகருக்கு பலவீனம் ஏற்பட்டதைக் கூறலாம்.

முதல வமிசததின் இறுதியில் பேரரசுக்கு ஏற்பட்ட பலகீனத்தை சாளுவ வமிசத்தைச் சேர்நத சாளுவ நரசிம்மன் முனைப்புடன் செயலபட்டுக் காத்தான் எனபதை ஆங்காங்கு கிடைத்த பட்டயங்களிலிருந்து தெளிவாக்கிக் கொள்ளலாம. இவனுடைய செயலதிட்டங்களுக்கு பக்கபலமாக இருந்தவாகள் துளுவ வமிசத்தைச்

சேர்ந்த ஈசுவரனும், படைத் தளபதியாகச் செயல்பட்ட நாகம நாயக்கனுமாவான். இவர்கள் அரசர்களைப போல் சுதந்திரமாகச செயல்பட்டு கோயில்களுக்கு இனாம் வழங்கியுள்ளனர். மேலும் திருமலைய்யா தேவா, கோனேரி ராஜன் போன்ற உள்ளாட்சி நிர்வாகிகளைப் பற்றியும் அவர்களின் சாதனைகள் பறறியும் செய்திகள் பல தெரிவிக்கின்றன.

மூன்றாவது வமிசமாகிய துளுவ வமிசத்தை அரசாட்சியில் அமர்த்தியவன் முந்தைய வமிசத்தில் படைத்தலைவனாக இருந்த நரச நாயக்கனாவான. இவனது செயற்கரிய செயலினால் தென்பகுதிகளில் இருந்த பகுதிகளை ஒருங்கிணைப்புச் செயது நிரவாகத்தைச் செம்மைப்படுத்தினான். அதன்பிறகு நிர்வாகப பொறுப்பை ஏற்ற வீர நரசிம்மன் கோயில்களுக்குத் தாராளமாகக் கொடை வழங்கி தனது இறைப்பற்றினை மெய்ப்பித்துக் கொண்டான்.

ஆட்சியாளர்கள் நிர்வாகத்தைச் சீரான முறையில நிர்வகித்து சிறப்பான ஆட்சி முறையைக் கொண்டு வந்தனா. அதன்படி பேரரசு பல நிர்வாகக் கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. அதனை நிர்வகிக்க திறமை வாய்ந்த ஆட்சியாளர்களை அமர்த்தினர். இது மற்றைய பேரரசில் உள்ளது போன்ற அமைப்பாக இருநதாலும் உள்ளாட்சி அமைப்புக்களில் நாயன்காரா போன்ற புதிய முறைகளை விஜய நகரம் அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஏறத்தாழ இருநூறுக்கும் மேற்பட்ட நாயக்க ஆட்சியாளர்கள் விஜய நகருக்கு ஆண்டு தோறும் கப்பம் கட்டி வந்துள்ளனர். அரசின் வருவாயைக் கண்காணிக்க இரண்டு கருவூலஙகளை அமைதது அதன்மூலம் ஆடசி நிர்வாகச் செலவுகள் கட்டுப்படுத்துபபட்டன.

மக்களிடையே ஏற்படும் வழக்குகளை தீர்த்து நீதி வழங்க நீதிமன்றங்கள் செயல்பட்டன. எனினும் இறுதித்தீர்ப்பு அரசனுடையதாக இருந்தது. ஆனால் மக்கள் வழக்குகளை நேரிடையாக மேல முறையீடு செய்ய முடியாது. அதற்குரிய அதிகாரிகளின் வாயிலாகவே செய்ய முடியும்.

விஜய நகர ஆடசி மூன்றாவது வமிசத்தில உதித்த கிருஷ்ணதேவராயரால சிறப்புப் பெற்றது எனபது குறிப்பிடத்தக்க

ஒன்றாகும். அவரது திறமையினாலும் ஆற்றலினாலும் விஜய நகர ஆட்சி சிறப்புடன நிர்வகிக்கப்பட்டது. இவர் ஒரு சிறந்த ஆட்சியாளர், படைத்தளபதி மட்டுமல்லாமல் இலக்கியப் படைப்பாளியுமாவார். இவரது ஆட்சியின் மாடசிமையைப் பற்றி டோமிங்கோ பைஸ் போன்ற வெளிநாட்டறிஞர்கள் தமது கருத்துக்களை வெளியிட்டுள்ளது இவரது நல்லாட்சிக்குச் சிறந்த ஆதாரங்களாகும். பதவியேற்ற பத்தாணடுகளுக்குள் தென்னகம் முழுமைக்கும் சக்ரவர்த்தியானார். இறைபபற்றுமிக்க இவர் கோயில்களுக்கு தாராளமாகக் கொடை வழங்கியும் பல கோயில்களுக்குச் சென்று வழிபடடதையும் சான்றுகள் பகர்கின்றன. கட்டடக்கலை வல்லுநர் எனபதை நிரூபிக்க அவர் கட்டிய கோயில்கள் சிறந்த எடுததுக்காட்டுகளாகும். தனது ஆட்சிக் காலததில நிர்வாக அமைப்புகள் அனைத்தும் செம்மையாகச் செயல்படத துணை நினறார்.

அரசின் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு பல முனைப்புத் திட்டங்களைக் கொண்டு வந்து வளப்படுத்தினா வரி வசூல செய்யும் முறையிலும் செலவினத்திறகுமான திட்டங்கள் தீட்டி செம்மைப்படுததினார். இந்திய வரலாறறில் மததிய காலக் கட்டத்தில் சிறப்பாக ஆட்சி செய்த இந்து அரசர்களில கிருஷண தேவராயர் சிறப்பானவா என்ற முததிரையைப் பெற்றுள்ளார். கிருஷ்ணதேவராயரின் இறுதிக் காலத்திலதான் விஜய நகரின் ஆட்சி, நிாவாக வசதிக்காக செஞ்சியிலும், மதுரையிலும், தஞசையிலும் தனி நாயக்க அரசுகள் அமைக்கப்பட்டன. இது அவரின் சாதனைகளில ஒன்றாக அமைந்துள்ளது.

விஜய நரகச் சமூகம் பல சமயஙகளைப் பெற்றிருந்தது. சமயத்தாலும், மொழியாலும் மக்கள் வேறுபட்டிருநதனர். சாதி வேற்றுமை மக்களிடையே வலுவாக இருந்தது. அவரவாகள் குடியிருக்கும் இடம் சாதியின் பெயரைக் கொணடிருந்தது கீழ்சாதிக்காரர்கள் ஊரின் புற எல்லையில் குடியிருந்தனர். இதை ஆதாரபபடுத்தும் வகையில் ஆட்சியாளாகளுடைய கல்வெடடுகள அமைந்துள்ளன. மேலும் சமுதாயத்தில குழந்தைப் பருவ மணம், சீதனம் கொடுத்தல், பலதாரமணம் போனறவை இருந்தன. சமுதாயத்தில படித்த அறிவு சார்ந்த பெண்கள் இருநதாலும் அவர்கள் பெரும்பாலும் போகப பொருளாகவே கருதபபட்டனர். பெணகள் பல்வேறு அணிகலன்களை அணிந்து ஆடம்பர

வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர் என்று போர்ச்சுக்கீசிய அறிஞர் பார்போசா கூறுகிறார். மேலும் உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்ததை விஜய நகருக்கு வருகை புரிந்த இத்தாலிய அறிஞர் நிக்கலோ கொண்டி தனது பயணக் குறிப்பில் கூறுகிறார்.

விஜய நகர ஆட்சி செம்மையாக அமைந்ததற்கு ஆதாரமாக அவர்களின் பொருளாதார நிலை இருந்தது. மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு தங்களின் தொழில் நுணுக்கத்தின் வாயிலாகப் பேரரசின் பொருளாதார மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருந்தனர். எனினும் வறுமைக்கு வழியில்லையென்று கூறமுடியாது.

சமயம் சமுதாயத்தினின்று பிரிக்க முடியாத ஒரு கருவியாக இருந்தது. விஜய நகர ஆட்சியாளர்கள் சமயப் பொறையுடமையைக் கொண்டிருந்தாலும் சமயத்தை வலியுறுத்தியே தங்களது ஆட்சியை அமைத்தது ஆதாரங்களின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. எனினும் சமயப் பொறையுடமைத் தத்துவத்தின் மூலம் கோயில்களுக்கு பாரபட்சமற்ற நிலையில் கொடை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்து, சமணம், புத்தம், கிருத்தவம், இசுலாம் போன்ற பல்வேறு சமயங்கள் சமுதாயத்தில் இருந்தன.

சமூகம் பல்துறைகளிலும் வளர்ச்சியடைந்த நிலையைத்தான் பண்பாடு என்று கூறப்படுகிறது. இறுதியாகத்தான் இந்நிலையை அடைய முடியும். பண்பாட்டு நிலைக்கு அடிப்படையாக இருப்பது கல்வியாகும். கல்வியின் மூலமாகத்தான் ஒவ்வொரு துறையிலும் சமூகம் வளர்ச்சியடைகிறது என்பது வரலாறு கண்ட உண்மையாகும். அதற்கு விஜய நகர சமூகம் விதிவிலக்கல்ல. கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தென்னாட்டில் முகமதியர்களால் சமயத்திற்கு ஏற்பட்ட தலைக்குனிவை விஜய நகரம் மீட்டது. அதன் காரணமாக சமயச் சார்புடைய நூல்கள் வெளிவந்தன. அவை சமயத்தையும், பக்திப் பரவசத்தையும் போதித்தன. குறிப்பாக தமிழும் தெலுங்கும் செழிப்புற்று வளர்ந்தன. தெலுங்கு ஆட்சிமொழியாக விளங்கியது. கிருஷ்ணதேவராயர் போன்ற ஆட்சியாளர்கள் தெலுங்கில் நூல்களை வெளியிட்டனர். இவை மட்டுமல்லாது வடமொழி கன்னடம் போன்ற மொழிகளும் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்தன.

பண்பாடு அடைந்த மக்கள் கவின்மிகு கலைகளின் வளர்ச்சிக்குத் தங்களை அற்பணிததுக்கொண்டனர். அவற்றில் குறிப்பிடத்தக்க கட்டடக்கலையில் திராவிடப்பாணி என்ற புதுமுறையை புகுத்தினா். விஜய நகரக் கோயில்கள் பெரும்பாலானவை உயர்ந்த கோபுரஙகளை உடையதாகவும் பலவித மண்டபங்களை உள்ளடக்கியதாகவும் அமைநதுள்ளன. அம்மண்டபங்களிலும், கோயில்களிலும் வாழவியல் நிகழ்ச்சிகளோடு, கற்பனைக் கண்ணோட்டத்திலும் பலவித சிற்பங்கள் உள்ளதை இன்றும் அறியலாம். வண்ண வண்ண ஓவியங்கள் பலவும் கோயிலகளை அலஙகரிபபவை களாகவும், காணபோரை வியக்கத்தக்க வகையிலும் அமைந்தன இவர்களுடைய கலைகள் குறிப்பாக கட்டடக்லை பிறகால ஆட்சியாளர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். தென்னிந்திய வரலாற்றில் பல சோதனைகளை மீட்டு சாதனைப் படைத்த வரலாறு பல்துறைகளிலும் பல்கி பெருகி பலம் வாய்ந்த பேரரசாக விளங்கியதற்கு காரணம் அவ்வாட்சியாளாகளின் சீரிய பங்களிப்பே என்பது ஒரு வரலாற்று உண்மையாகும்.

# சங்கம வம்சத்து அரசர்கள்



2

சாளுவ வம்சத்து அரசர்கள்




3

துளுவ வம்சத்து அரசர்கள்



# துணை நூற்பட்டியல்

அப்பாத்துரை, கா., தென்னாட்டுப் போர்க்களங்கள்,

அலமேலு நிலையம், சென்னை, 1971.

இராச கணபதி , கஜினி முதல் சிவாஜி வரை, பாணடியன் பாசறை, சென்னை, 1999.

இராச சேகர தங்கமணி, ம., பாண்டியா வரலாறு, தமிழ்நாட்டுப பாடநூல் நிறுவனம்,

சென்னை, 1978

இராமமூர்த்தி., தென்னிந்திய கோட்டைகள், சுவாமி பதிபபகம், சென்னை, 1966.

குமார சரஸ்வதி., தமிழ் நாவலர் சரிதம், செனனை. (N d)

கோவிந்தசாமி, மா., செஞ்சியைப்பார், பாரி நிலையம், செனனை, 1957,

சந்திர சேகரன்,பி., தமிழக வரலாறு, (அரசு, சமூகம், பொருளாதாரம்

கி பி 1565 வரை) மஞ்சு பதிபபகம், இராஜபாளையம, 2001

சிவராம கிருஷ்ணன் T S , தஞ்சை நாயக்கர்கள்,ஜெயமங்கள பப்ளிகேஷன்ஸ்,

செனனை, 1949

செஞ்சிககோட்டையர் வரலாறு, முதது பதிப்பகம், விழுப்புரம், 1989.

திருமலை நாயககர் வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1973

தென்னிந்திய வரலாறு, தொகுதி-2, ஏசியன் பிரிணடர்ஸ், சென்னை, 1971.

தென்னிநதிய சைவ சித்தாந்த நூறபதிபபு கழகம, செனனை - 1973.

பரந்தாமனார், அ.கி., மதுரை நாயக்கர் வரலாறு, பாரி நிலையம், சென்னை, 1971.

பன்னீர் செல்வம, ஏடி.எம., சமபுவராயர்கள், அம்மா பதிபபகம,

திருவண்ணாமலை, 1989.

பிள்ளை, கே கே , தென்னிந்திய வரலாறு, தொகுதி-1, ஏசியன் பிரிணடாஸ்,

சென்னை, 1972.

புரட்சித தலைவன் கோனேரிராயன , 15வது கருத்தரங்க ஆய்வுக்கோவை,

தொகுதி-3, இந்திய பலகலைககழகத தமிழாசிரியர் மனறம், 1983.

பேராசிரியா அறுவா சொற்பொழிவுகள , தமிழக வரலாறு, திருநெலவேலி.

மகாலிஙகம, டி.வி., விஜய நகரில் பேரரசில நிலைப்பெற்றிருநத
பொருளாதார வாழககை வரலாறு, செனனை. (N d)

மாதவையா , தட்சிண சரித்திர வீரர், செனனை, 1925.

விமலானநதன, மது ச , தமிழ் இலககிய வரலாறறு களஞசியம்,
ஜநதிணைப பதிபபகம, செனனை, 1987

ஜகநநாத ராஜா, Ed , ஆமுக்த மாலயத, தெலுங்கு பலகலைக கழகம,
ஐதராபாத, 1988

# PRIMARY SOURCES

## INSCRIPTION

Annual Report on South Indian Epigrapghy for the years 1939-40; 1942-43 Govt of India press, Calcutta 1952.

Annual Report on Indian Epigraphy 1906-10, 1922-25 for the years 1926-29, 1930-34, Director General of Archaeological Survey of India, New Delhi, 1986

Epigraphia India, Vol.VII. 1902-3 Director General of Archaeological Survey of India, New Delhi, 1981

Epigraphia India, Vol VIII, 1905-06 Director General of Archaeological Survey of India, New Delhi, 1981

Epigraphia India, Vol XIII, 1915-16 Director General of Archaeological Survey of India, New Delhi, 1982

Indian Antiquary, IV & V Ed Jos Bursegs, Indological book Reprint Corporation, Delhi, 1971

South Indian Inscription, Vol I. Govt Press, Madras, 1890

South Indian Inscription Vol XVI, Director General Archaeological Survey of India, New Delhi, 1972

South Indian Inscription, Vol.XXIII, Director General Archaeological Survey of India, New Delhi, 1979

Tirumalai Tirupati Devasthanam Epigraphical Series, Vol.II Sri Mahant's Devasthanam press, Madras, 1933.

Tirumalai Tirupati Devasthanam Epigraphical Series, Vol III, Sri Mahant's Devasthanam Press, Madras, 1935

The Indian Historical Quarterly, Vol.V,VIII, IX, XII, XIII, XVII, Ed Narendranath Law, Caxton Publications, Delhi. 1985

## BOOKS IN ENGLISH


Abbe J.A. Dubois, Hindu Manners, Customs and Cermonis, Asian Education Services, New Delhi, 1983

Banerji, R D History of Irrisa Vijayanagar City of Victory,

Basham, A.L The wonder that was India, Orient Longman Limited, Bombay 1963

Historical Inscription of Southern India, Madras, 1932

Krishnaswamy, A., The Tamil Country under Vijayanagar, Annamalai University, Annamalainagar, 1964

Krishnaswami Aiyangar, S. A little known chapter of Vijayanagar History, S P C K Press, Madras, 1916

Mahalingam, T V Administration and Social Life Under Vijayanagar, University of Madras, Madras, 1940

Nagaswamy, R The Art of Tamil Nadu, State Department of Archaeology, Madras, 1972

Nayak, H M and gopal, B R South India Studies, Geetha Book House, Madras, 1990

Nilakanta Sastri, K A History of South India, Oxford University Press, Madras, 1966

Percy Brown, Indian Architecture, Bombay, 1971

Popular Culture in Ancient Tamilagam, Bharadhidasan University, Trichy, 2006.

Ramachandraia Aruganthi, Studies of Krishnadevaraya of Vijanagar, Andhra university, Waltair, 1953

Saletore, R N Encyclopaedia of Indian Culture, Sterling Publishers, New Delhi, 1985.

Sathyanatha aiyar, R History of the Nayaks of Madura, Oxford University press, New Delhi, 1924

Sewell robert, A forgotten Empire (Vijayanagar), Asian Educational Service, New Delhi, 1982

Shukla, D N. Hindu Science of Architecture, Vol I.
Punjab University, Chandigarh 1961.
Singaravel, A Socio Cultural History of Thanjavur District as Revealed by Tamil Literature, an unpublished Ph.D. Thesis, University of Madras, Madras, 1990
Sivaramamurti,C. Nataraja in Art, Thought and Literature, National Museum, New Delhi, 1974
Sivaramamurti, Calambur, The Art of India, New York. 1977
Srinivase Iyengar, M. Tamil Studies, Asian Educational Services, New Delhi, 1986.
Srinivasa Raghavaiyengar, Memorandum of the Progress of the Madras Presidency during last forty years, Govt Press, Madras, 1893.
Some Contribution of South India to Indian Culture, The University of Calcutta, Calcutta, 1923.
Source of Vijayanagar History, University of Madras, Madras. 1919
South India and her Mohammadan Invaders, Asian Educational Service, New Delhi, 1982
Suryanarain Row, A History of Vijayanagar, the never to be forgotten Empire, Asian Educational Services, New Delhi, Madras, 1993.
Syed M H India a Journey through the Ages, Kilaso Books, New Delhi, 2004.
Tantric Cult of South India, New Delhi, 1972
Venkasamy Rao, Manual of the Tanjore District, Madras, 1983
Venkata Ramanappa, M N Outlines of South Indian History, Vikas Publishing House, Delhi, 1975.
Venkata Ramanayya, Vijayanagar Origin of the City and the Empire, University of Madras, Madras, 1933
Vijayanagar City of Victory, Vijayanar Empire sixth Centenary Celebration at Hampi near Haspet Rly. Station, Hampi, 1936

## பொருட் குறிப்பகராதி


அகரம் - 8,4
அடிமல்லன் - 25, 27
அடைப்பம் - 38
அத்வைதம - 112,113
அதியாந்தன் - 27
அநதியூர் - 25
அப்பாமடம் - 66
அப்துர் ரசாக் - 130
அமரா - 89
அரசானிபாலை - 45
அல்லசானி -61, 143
அன்னமங்களபற்று - 31, 40
அனிகாத் - 45
அனிகொண்டி -11.43
ஆமுக்தமாலயத - 61, 73, 76, 80, 144
ஆயகர் - 83,93,96,97,99
ஆரியஆரணழித்த - 40
ஆலம்புண்டீப் - 49
இரகுதாமலலா - 64
இராயவாசகம் - 73, 87
இராஜராஜன் - 159
இராஜராஜப்பெருந்தசசன் - 159
இருகபபதன்னாதா - 119
உமையாளந்த - 35
உஷாபரிணயம் - 146
எலிச்பூர் - 13
ஒட்டியன் - 53,54,127
ஓராபாக்கம் - 94
ஓலக்கம்பட்டு - 116
ஓலைநாயகம் - 38
கச்சிக் - 141
கட்டாரி - 133
கண்டாரகுளி - 30,40, 41
கந்தர் - 141
கருடன் - 133
கருவேப்பம் - 94
கல்ணாயகோட்டீ - 151
கஜவேட்டைகார - 54
காடி - 110,132
காரணிக்கம் - 88, 101
கிருஷ்ணலீலை - 157
கிருஷ்ண தேவா - 133
குப்பம் - 21,30,132
குருசாடோ - 133
கூர்மாயி - 43
கொங்கராயா - 38,43
கொச்சி - 131
கொடடில் - 113
கோபறை - 47
கோபனா - 44, 45
கோபனாரீய கோபணாங்கா- 44,101
கோமல் - 22,24
கோமுட்டி - 102
கோயிலொழுகு - 46
கோலார் - 39
சங்கல்ப - 145
சததூசனி - 146

சம்பாவதி – 143, 146
சம்பிவராயஸமதாபனாசாரிய – 64
சாம்சி சிராஜ் அபிக் – 24
சாம்புகுமார் – 27
சாயணர் – 11,22,145
சாயனா – 31,101
சாளுவமங்கு – 30,46
சித்தமூர் – 22
சிரவணபெல்கோலா – 24
சிரிங்கேரி – 94
சிவதருமோத்திரம் – 141
சிலுப்பராசர் – 73
சிற்றம்பலாதி – 140
சுரைக்காவூர் – 49
சூரியகூத்து – 136
செங்கினி – 23
செசூர் – 100
சேஷகிரி – 130
சோமப்பன் – 30,38,39,44
டோமின்கோபைஸ் – 61,79, 80,90,91,101,127,130
தாய்குண்டா – 143
தார் – 132
திம்மரசுகாரு – 133
திருப்புலி – 94
துர்க்கூதனனாயகா – 85
நல்லாங்கி – 162
நாயக்கத்தனம் – 89, 90
நாராயணவிலாசம் – 49,143
நிக்கலோகொண்டி – 108
நிபந்தங்கள் – 92, 97
பகர்ணம் – 120
பகோடா – 132
படைவீடு – 26, 27,29,31
பத்துக்கட்டாரி – 57
பதியிலார் – 36
பஸ்பகிரி – 112
பாசுபதம் – 112, 113
பாசியபுசனா – 162
பாடம்பாக்கம் – 89
பார்டோ – 74
பார்போசா – 107,125,126,131
பிச்சுவாள் – 128
பிரதானிகோடி – 137
பிரபின்னாமிர்தம் – 46, 110
பூவைசியா – 124
பெர்தா – 110,132
பெல்கோலா – 99
போசிபிரோன் – 149,150
போசலீஸ்வரம் – 33
போளூர் – 27,116
மகாபிரதானி – 38,39,87
மகாமண்டலேசுவரன் – 25, 78,80,84,85,86,88
மகாராஜாதிராஜா – 22,48
மகேஸ்வரர் – 36
மதுரா விஜயம் – 26,32, 105,146
மதுரைக்கலம்பகம் – 141
மரகதங்கள் – 125
மலயம்பட்டு – 104
மலராயா – 133
மனுசரிதா – 143
மாடப்பாக்கம் – 35,40
மாமுனி – 116
மாலதிமாதவா – 120,143
முததாவலி – 38,46
முதுசூரியாரும் – 140

முல்பாகல் - 23,24,26,
31,39,47
முற்றூட்டு - 162
மூவராயகண்டன் - 41
ரகுநாதாப்புதயமு - 145
ராயவாசகமு - 66
ரியா - 68
வரதாம்பிகா - 146
வர்தேஷ்வரா - 57
வராகன் - 69,74,88,132
வல்லாளன் - 21, 30
வறசா - 132
வஜ்ரகரூர் - 125,127
வாயகன்றும் - 128
வாளாளி - 79
வித்தலசாமி - 65,151
வித்யாரண்யர் - 112
விருஞ்சி - 27
விருபாச்சா - 48,53,94,110
விலாசமு - 143
வில்லாளி - 50, 79
வைடூரியம் - 132
ஜாகீர் - 44,52
ஸ்தூபி - 131
ஸ்ரீவீர - 133





சரசுவதி மகால் நூலக அச்சகம்